இனம்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்வு இதழ்

UAN.TN03D0061112

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019

Vol. 5 Issue : 18 August 2019

ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சி.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam *ISSN : 2455 - 0531*

UAN.TN03D0061112

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்

இனம் பதிப்பகம், கோவை

inameditor@gmail.com

www.inamtamil.com

9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18

August 2019 Volume V Issue 18

உள்ளே ...

தமிழ்ச் செவ்வியல்

பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

கீழ்க்கணக்கு நூல்களில் ‘இளிவரல்’ மெய்ப்பாடு
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும் (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

பத்துப்பாட்டில் உணவு
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

பக்தி இலக்கியம்

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

மீவியற் புனைவுகளுள் ‘கனவு’ பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

Chief Editors

Dr.M.Muneesmoorthy
Assistant Professor in Tamil
Bishop Heber College, Trichy - 17.

Dr.T.Sathiyaraj
Assistant Professor in Tamil
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.

ADVISORY TEAM

Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Salem)
Sri S.SriKantharasa (Australia)

Editorial Team

Dr.A.Mani (Pondichery)
Dr.G.Balaji (Coimbatore)
Dr.R.Gunaseelan (Coimbatore)
Dr.N.Rajendran (Coimbatore)
Dr.R.Raja (Trichy)
Dr.B.Sivamaruthi (Thailand)
Dr.S.Muthuselvam (Madurai)
Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)
Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)

சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்
Expressional Strategies on Cipher Discourse
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு
Question Structure of Periyavachan Pillai Commentary
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

தற்கால இலக்கியம்

தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்
The mother is the epitome of this (Imayam)
மு.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -
Multiculturalism, psychoanalysis (background and application)
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)
Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)
Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்
(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137

...

மதிப்பிடப்பெற்றது

பாட்டு – பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு

The history of the name change pattu to pathuppaattu

முனைவர் ஆ. சந்திரன்/Dr.A.Chandran[1]

Abstract: Amidst some thousands of songs in sangam literature, some songs have been compiled and titled with reason and logic. The meaning of the word thogai is 'compiling'. Since eight same kinds of songs were compiled together it is called 'ettu thogai'. Ten Longley songs have been compiled as 'pathuppaattu'. Why one collection is titled 'thogai' and another is titled 'paattu'? Can't 'ettu thogai' songs be song? Can all 'pathuppaattu' songs be song? What is the definition of the woer song? Can all sangam period poems be songs? Can only particular poems be songs? Why 'pathu paattu' is titled so? Is it for its logical nature? This paper attempts to research this difference.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-23
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: முனைவர் ஆ.சந்திரன்
Email: chandran@shctpt.edu

Keywords: compiling, pathuppaattu, ettu thogai, thogai, sangam literature, Dr.A.Chandran, பாட்டு, பத்துப்பாட்டு, பெயர்மாற்ற வரலாறு, அகம், புறம், ஆற்றுப்படை, எட்டுத்தொகை, சங்கப் பாடல்கள், .மு. 200, கி.பி.250, ஆ.சந்திரன்.

பண்டைத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புலவர்கள் பலரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு சங்கப் பாடல்கள். "ஏறத்தாழ கி.மு. 200 முதல் கி.பி.250 வரை"[1] என்ற கால இடைவெளியில் பாடப்பட்ட அப்பாடல்கள் திணை, பாவகை, அடிவரையறை போன்ற பண்புகளின் அடிப்படையில் பகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. புறநானூறு முதலிய எட்டுத் தனித்தனிப் பாடல்களின் தொகுப்பிற்குத் தொகை – எட்டுத்தொகை என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கு மாறான தனித்தனிப் பண்புகள் கொண்ட (அகம், புறம், ஆற்றுப்படை) பாடல்களுக்குப் பாட்டு – பத்துப்பாட்டு என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் பாடப்பட்ட பாடல்களில் (எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு) புறநானூறு முதலிய எட்டுப் பாடல்களைக் கொண்ட தொகுப்பிற்குத் (தொகுக்கப்பட்டதால்) தொகை– எட்டுத்தொகை (எண்ணிக்கையில் எட்டு என்பதால்) என்று காரணத்துடன் பெயரிடப்பட்டுள்ளது. ஆனால் திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப் பாடல்களைக் கொண்ட தொகுப்பிற்குப் பாட்டு – பத்துப்பாட்டு என்று பெயர் வைக்கக் காரணம் என்ன? 'பத்துப்பாட்டு' என்பதில் வரும் 'பாட்டு' என்பதன் பொருள் யாது? அது காரணப்பெயரா? என்பவற்றிற்கான விளக்கங்களை அறிய முயல்கின்றது இக்கட்டுரை.

---

1 உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், வேலூர். chandran@shctpt.edu

பெயர் – விளக்கம்

பெயர் என்பது இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இருவகைப்படும். இவை மேலும் இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்பு பெயர் எனவும், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்பு பெயர் எனவும் விரியும். இதனை,

"இடுகுறி காரணப் பொதுச் சிறப்பின" (நன்.62)

என்று நன்னூல் நூற்பா விளக்குகிறது. "பெயர்ச்சொல் இடுகுறி காரணப் பெயராய் மரபுவழிப்பட்டும் புதிதாக ஆக்கப்பட்டும் வரும். வினையாலணையும் பெயர் தவிர்த்த அனைத்துப் பெயர்களும் காலம் காடா. பெயர்கள் வேற்றுமை ஏற்று, இருதிணை ஐம்பால் மூவிடத்துள் ஏதேனும் ஒன்றை ஏற்றும் அல்லது பலவற்றை ஏற்றும் வரும்."[2] அவ்வாறே பண்டைக்காலம் முதல் பெயரிடும் முறையானது அமைந்துள்ளது. பண்டைய இலக்கிய இலக்கண நூல்களுக்குப் பெயரிடப்பட்டுள்ள முறையைப் பற்றிக் களவியல் உரையிலும்[3], நன்னூல் விருத்தியுரையிலும்[4] விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் வைத்துப்பார்க்க, பாட்டு – பத்துப்பாட்டு என்பன இடுகுறித்தன்மை உடையவையாக இருக்காது என்று தெளிவாகத் தெரிகின்றது. அப்படியெனில் அவை காரணப்பெயர்கள் என்பது உறுதியாகிறது. அப்பெயர்கள் ஏன் வந்தன என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது.

பா – பாட்டு – செய்யுள் : விளக்கம்

பொதுவாகப் பாட்டு என்பது பா, செய்யுள் என்ற பொருட்களில் அழைக்கப்படுகின்றது. அதாவது பா, பாட்டு, செய்யுள் என்பன பல பொருள்களைத் தரக்கூடிய சொற்களாகும். எனவே அவை மூன்றிற்கிடையே உள்ள உறவினை அல்லது இவை மூன்றிற்கும் உள்ள தொடா்பினைப் பற்றிய தெளிவினை நாம் முதற்கண் அறிதல் அவசியமாகும்.

பா – பொருள் விளக்கம்

"தூக்கு, யாப்பு, செய்யுள், கவி, பாட்டு, கவிதை ஆகியவை பா" [5] என்ற பொருளில் அழைக்கப்படும் என்கிறது திவாகர நிகண்டு. "பா என்ப பனுவல் "[6] என்கிறது சூடாமணி நிகண்டு. இலக்கியங்களில் பா என்பதற்குப் 'பகுத்தல்',[7] 'ஆடைநெய் பாவு'[8] 'கைம்மரம்'[9] 'பரந்த'[10] 'பரவு'[11] 'பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை'[12] என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளன. செய்யுள்களின் உறுப்புகளைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம் செய்யுளியலின் முதல் நூற்பா, செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கு என்றும், அம்முப்பத்து நான்கினுள் ஒன்று பா என்றும் கூறுகின்றது. அதற்கு உரை எழுதிய பேராசிரியர், "பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணா்வதற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை"[13] என்று விளக்கமளித்துள்ளார்.

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பா என்பதற்குப் பல பொருட்கள் இருப்பினும், தொலைவிலிருந்து பாடப்படும் ஒரு பாடலின் எழுத்தையும், சொல்லையும் கேட்க இயலாவிடினும் அந்த ஓசையை மட்டுமே உணா்ந்த நிலையிலேயே அது இன்ன ஓசை என்று வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய ஓசையே பா எனப் பொருள்படும் என்பது தெளிவாகப் புலனாகிறது.

பாட்டு – பொருள் விளக்கம்

பாட்டு என்பதற்குத் தமிழ் லெக்சிகன், "பாடுகை, இசைப்பாடல், சொல், வசைமொழி"[14] என்ற பொருள்களையும், கழகத் தமிழ் அகராதி "இசைப்பாட்டு, செய்யுள், சொல், வசைமொழி"[15] என்ற பொருள்களையும், திருமகள் அகராதி "பாடுவது, இசை, செய்யுள், வசைமொழி, சொல்"[16] என்ற பொருள்களையும் தருகின்றன.

இலக்கியங்களில் – பாட்டு என்பதற்கு,

1. பாடல் – "அகவன் மகளே பாடுக பாட்டே" (குறு.23.3)
2. ஒலி – "நெடுநீர் படும் பாட்டு ஆங்கணி" (நற்.25.1)
3. போக்கு – "ஊர்பாட்டு எண்இல் கைபந்தலை துமிய" (பதி.46.9)
4. இசை – "கூத்தும் பாட்டும்" (மணி.46.9)
5. தோத்திரம் – "செம்பொன் செய் மாலையும் வாசிகையும் திருந்து புகையும் அவியும் பாட்டும்" (சம்ப.தேவா.1:7.5)
6. பாட– "புறவு பாட்டு எடுப்ப பசுந்தழை பரப்பிக் கண மயில் அலாவ" (கல்.15:17–18)
7. பாட்டைப்பாட – "ஒரு பால் பசுங்கொடி நிறை பாட்டு அயர" (கல்.7:32)
8. இசையொடு பாடி – "பாவித்தும் பாராண்டும் பாட்டும் இசைத்துப் போவிப்போம்" (ஔ.நல்.19)
9. பாட்டு எழுதல் – "சூடாகுழையார் பாட்டும் எழவு கேட்டு மடக்கிளிகள்" (நக்.2.22)
10. இயற்பாவும் இசைப்பாவும் – "பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகைகள்" (திரு.மு.56)

என்ற பொருட்களில் கையாளப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" (தொ.செ.34) என்கிறது. அதற்கு உரை எழுதிய இளம்பூரணர் "அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப்படு மென்றவாறு. எனவே, பாட்டென்னுஞ் செய்யுட்கு அடியின்றியமையாதென்று கொள்க"[17] என்று விளக்கம் கூறியுள்ளார். மேலும் அவர் "பல சொல் தொடர்ந்து பொருள் காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்கிறார்" என்றும் விளக்கமளித்துள்ளார். எனவே ஓசையுடன் கூடியது பாட்டு என்றும் அதற்கு அடியளவு முக்கியமான கூறு என்றும் அறியமுடிகிறது.

செய்யுள் – பொருள் விளக்கம்

"மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ ….. (தொ.பொ.செ.1) என்ற தொல்காப்பியச் செய்யுளியலின் முதல் நூற்பா செய்யுள் உறுப்புகளைப் பற்றிக் கூறுகிறது. இதற்கு உரையெழுதிய இளம்பூரணர் "இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின் செய்யுளென்னும் பெயர்த்து"[18] என்று விளக்கம் கூறியுள்ளார். அத்துடன்,

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்" (தொ.பொ.செ.75:1,2)

மற்றும்,

"எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை இல்லன ஆறுஎன மொழிப" (தொ.பொ.செ.157)

என்று செய்யுளுக்கு விளக்கம் அளிக்கின்றது தொல்காப்பியம். அதாவது, செய்யுள் என்பது பாட்டு, உரை, நூல் வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பனவாகும். அவற்றை அகம் – புறம் எனப் பிரித்து ஏழு நிலத்தினரும் செய்யுள் செய்தனர். அதனைப் "பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், சொல்லும் என்று சொல்லப்பட்ட அவ்வேழ் நிலத்தும் நாட்டார் நடத்துகின்ற செய்யுள்களின் பெயரே"[19] என்ற பேராசிரியரின் கூற்றும் உறுதிப்படுத்துகிறது.

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பண்டைத் தமிழர்கள் மேற்கண்ட ஏழு வகையான நூல்களை / இலக்கியங்களைப் படைத்துள்ளனர் என்பது புலனாகிறது. அத்துடன் செய்யுளின் அடிச்சொல்லான 'செய்' என்பது செய்க, செய்கு, செய்ய, செய்தல், செய்யப்படுவது என்ற பல சொற்களுக்கான அடிச்சொற்களாக அமைவதும் இங்கு நினைக்கத்தக்கது. எனவே செய்யுள் என்பது செய்யப்படுவது எனப் பொருள்படும்.

இவ்வாறு புலவனால் செய்யப்படுகின்ற / பாடப்படுகின்ற பாடல்கள் செய்யுள் என்றும் அழைக்கப்படுகின்றது. "பாட்டு செய்யுளுக்கு மாறானது அன்று. உணர்ச்சியும் கற்பனையும் பொருந்திய செய்யுள் (verse) எல்லாம் பாட்டு (poetry) எனத்தகும். உணர்ச்சியும் கற்பனையும் இல்லாமல் சோதிடம், மருத்துவம், நீதி முதலியவற்றை எடுத்துரைக்கும் செய்யுள் எல்லாம் பாட்டு அல்ல."[20]

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பா – பாட்டு – செய்யுள் போன்றன ஒன்றுள் ஒன்று உறழ்ந்து அமைந்துள்ளதை அறியமுடிகிறது. எனினும் அவை பின்வரும் உண்மைப் பொருளில் பிரிந்து அமைந்துள்ளதையும் அறியமுடிகிறது. அவை,

பா – என்பது பிரித்தறியக் கூடிய ஓசை
பாட்டு – பாடப்படுவது, ஓர் இலக்கியவகை (ஏழு வகைச் செய்யுளுள் ஒன்று)

செய்யுள் – பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்ற ஏழு வகையான இலக்கியங்களைக் குறிக்கும் பொதுச் சொல். ஆக, பாட்டு என்பது பா என்ற பிரித்தறியக் கூடிய ஓசையைக் கொண்டதாகும். அத்துடன் இது ஏழு வகையான செய்யுள்களில் ஒன்றாகும் என்பது தெளிவு.

பா (ஓசை) – வகைகள்

பா என்று அழைக்கப்படும் ஓசை என்பது பற்றியும் அதன் வகைகளைப் பற்றியும் தொல்காப்பியம், யாப்பருங்கலம் ஆகியவற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அகவல், செப்பல், (அகவல் அல்லாதது) துள்ளல், தூங்கல் என்று 'பா' (ஓசை) நான்கு வகைப்படும் என்று கூறும் தொல்காப்பியம் (செ.77–80). அவ்வோசைகளினால் பாடப்படும் பாடல்கள் முறையே ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்றும் வரையறுத்துக் கூறுகின்றது. நான்கு வகையான பாக்களைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம்,

"பரிபாடல்லே தொகை நிலை வகையின்
இதுபா என்னும் இயல் நெறியன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்துஎன மொழிப" (தொ.செ.106)

என்று 'பரிபாடல்' என்ற ஒரு பாவகையினைப் பற்றியும் கூறுகின்றது. பரிபாடலுக்கான விளக்கத்தைக் கூறுகின்ற தொல்காப்பியர் தன் கூற்றாகக் கூறாமல் 'மொழிப' என்று தன் முன்னோர் இவ்வாறு வழங்குவர் எனக் கூறியுள்ளார். எனவே, இந்தப் பா மேற்கண்ட

நான்கு பாக்களுக்கு முன்னா் இருந்த ஒரு பா ஆகும். "ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்று நான்கு வகைப்பாக்களின் தன்மையும் கொண்ட பொதுப்பாவாய் இங்குச் சுட்டப் பெறும் இவ்வகை பரிபாடலே ஆதிப்பா எனல் வேண்டும். இது ஆசிரியமா? வஞ்சியா? கலியா? எனப் பிரித்தறிய முடியாத வண்ணம் நால்வகைப் பாக்களின் எல்லா அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு பொதுவாய் நிற்கும். இதுவே மூலப்பா என்பதாம்"[21].

மேற்கண்ட விளக்கங்களின்படி பார்த்தோமேயானால் தொல்காப்பியர் காலத்தில் ஓசையைப் பிரித்தறியக்கூடிய பாக்களாக ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு பாக்கள் மட்டுமே இருந்துள்ளமை புலனாகிறது.

யாப்பருங்கலம் குறிப்பிடும் – பா (ஓசை), பாவினங்கள்

தொல்காப்பியத்தைத் தொடா்ந்து கி.பி 10–ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய யாப்பருங்கலம் என்ற நூலும் பாக்களின் வகைகளைப் பற்றிக் கூறியுள்ளது. தொல்காப்பியம் பா என்ற ஒன்றினை மட்டுமே கூற, அந்நூல் தன் காலத்தில் வளா்ந்த வளா்ச்சியைப் பற்றியும் கூறியுள்ளது. அந்நூலின் கருத்துப்படி பா என்பது, பா – பாவினம் என இரண்டு வகைப்படும். அதாவது, "அறம், பொருள், இன்பம், வீடு என இவற்றைப் பாவி நடத்தலின் பா என்பதூஉ ம் காரணக்குறி, ஒருபுடையார் பாவினொடு ஒத்த இனத்தவாய் நடத்தலின் பாவினம் என்பதூஉம் காரணக்குறி. இவற்றை இடுகுறி எனினும் இழுக்காகாது."[22] என்கிறது. அந்த நூல் 'பா'வைப் பற்றிக் கூறும்போது தொல்காப்பியத்தில் உள்ளவற்றை இது வழிமொழிவதாகவே அமைந்துள்ளது. ஆனால், தொல்காப்பியம் கூறாத பாவினம் என்ற ஒன்றைப் பற்றியும் (தம் காலத்துப் புதிய வளர்ச்சி) பற்றியும் கூறுகிறது.

"தாழிசை துறையே விருத்தம் என்றிவை
பாவினம் பாவொடு பாற்பாட் டியலும்" (யா.வி.56)

என்ற சூத்திரத்தின் கருத்துப்படி "தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்றும் பாவினம் எனப்படும். இவை பாவினோடும் கூடிப் பெயர் பெற்று நடக்கும்"[23] என்பதை அறிய முடிகிறது. அத்துடன் "தாழிசை, துறை, விருத்தம் என்ற இம்மூன்று ஓசைகளும் மேற்சொல்லப்பட்ட நான்கு 'பா'வகைகளுடன் இணைந்து வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் எனவும், ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் எனவும், வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் எனவும் வழங்கப்படும்"[24] என்கிறது யாப்பருங்கலம்.

அத்துடன் இந்நூலில் "காக்கைப் பாடினியார், சிறுகாக்கைப் பாடினியார், அவிநயனார், மியேச்சுரா் போன்றோரும் பாவினங்களை மேற்கண்டவாறே கூறியுள்ளனா்"[25]. என்று தனக்கு முன்னர் இருந்தவர்களின் கருத்துக்களும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. "யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலாய நூல்கள் காக்கைப்பாடினியார் வழியே மேற்கொண்டன"[26]. மேலும், "இவ்விரண்டு நூலும் தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய பல்வேறு வடிவங்களையும், பா இனங்களையும் ஆராய்ந்து அறிந்திருப்பதன் மூலம், செய்யுள் வகைகளின் வரலாற்றையும் மாற்றங்களையும் அறிந்துகொள்வதற்கான ஆவணமாக விளங்குகின்றன."[27] பாவினங்கள் அவா்கள் கால வளா்ச்சி என்று கொண்டாலும் அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகைப் பாக்களில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

இந்த விளக்கங்களிலிருந்து தொல்காப்பியர் காலம் முதல் உரையாசிரியர்களின் காலம் வரையில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு மட்டுமே பா– (ஓசை) என்று அழைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

அடி அளவு

பாட்டிற்குப் பா(ஓசை)வுடன் அவ்வோசைக்குரிய அடி அளவும் இன்றியமையாததாகும். இதனை "அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப்படு மென்றவாறு. எனவே பாட்டென்னுஞ் செய்யுட்கு அடி யின்றியமையாதென்று கொள்க"[28] என்ற பேராசிரியரின் தொல்காப்பியத்திற்கான உரை நமக்கு உறுதிப்படுத்துகிறது.

"ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிர மாகும் இழிபு மூன்றடி" (தொ.செ.50)

என்ற தொல்காப்பிய நூற்பா "ஆசிரியப்பா என்பது மூன்றடி முதல் ஆயிரம் அடி வரை நீண்டு அமையும் என்று அடிஎல்லையை வரையறுத்துக் கூறுகிறது. அதற்கு உரை எழுதிய இளம்பூரணா "பெரிய பாட்டு பத்துப்பாட்டினுள்ளும், சிலப்பதிகாரத்தினுள்ளும், மணிமேகலையினுள்ளும் கண்டுகொள்க. ஆசிரிய நடைத்தே வஞ்சி என்றதனான் வஞ்சிப்பாவிற்கும் ஆயிரமடிப் பெருமையாகக் கொள்க"[29] என்று விளக்கமளித்துள்ளார். அவரது கூற்றின்படி ஆசிரியப்பாவின் அளவு வஞ்சிப்பாவிற்கும் பொருந்தும் என்பதாகும். எனவே வஞ்சிப்பாவிற்கும் எல்லை ஆயிரம் அடியாகும் என்பதும் புலனாகிறது.

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பாட்டு என்பதற்கு ஓசை, அடியளவு என்ற கூறுகள் இன்றியமையாதது என்பதை அறிய முடிகிறது. ஓசை என்ற கூறின் அடிப்படையில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று நான்கு பாக்கள் உள்ளன. அடி அளவு என்ற கூறின் அடிப்படையில் அவற்றின் அளவு இரண்டடியிலிருந்து ஆயிரம் அடிவரை அமையும் என்பது புலனாகிறது.

பாட்டு எனக் கொள்ளத்தக்கன

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பாட்டு – பத்துப்பாட்டு என்ற சொல்வழக்கு ஏற்பட்ட காலத்தில் பத்துப்பாட்டுடன் கீழ்க்காணும் பாடல்களும் பாட்டு என்று அழைக்கத்தக்க தகுதியைப் பெற்றிருந்துள்ளன என்பது புலனாகிறது. அவை,

எட்டுத்தொகைப் பாடல்கள் (பரிபாடல் நீங்கலாக), பதினெண் கீழ்க்கணக்கு நூலிலுள்ள பாடல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன.

இவ்வாறு பாட்டு என்று அழைக்கப்படும் தகுதியைப் பெற்ற பல பாடல்கள் இருக்கும்பொழுது பத்துப்பாட்டினை மட்டும் பாட்டு என்று அழைக்கக் காரணம் என்ன? என்பதனை அறிய வேண்டும். அதற்கு முதற்கண் பத்துப்பாட்டு என்ற சொல்வழக்கு எப்போது ஏற்பட்டது என்பதைப் பற்றி அறிவது அவசியமாகும்.

பத்துப்பாட்டு – பற்றிய சொல்வழக்கு

மூன்று சங்கங்களைப் பற்றியும் அவற்றில் இருந்த புலவா்கள் மற்றும் அவா்களால் பாடப்பட்ட பாடல்கள் பற்றிய செய்திகளும் இறையனார் களவியல் உரையில் கூறப்பட்டுள்ளன. அதில் கடைச்சங்க நூல்களாக நெடுந்தொகை நானூறு,

குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் ஆகிய எட்டுத்தொகைப் பாடல்களைப் பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளன. பத்துப்பாட்டிலுள்ள பாடல்கள் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. எனவே பத்துப்பாட்டு என்ற சொல்வழக்கு அக்காலத்தில் ஏற்படவில்லை என்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களுள் ஒருவரான பேராசிரியர், தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பா 48, 76இன் உரைகளில் "பாட்டினுந் தொகையினும்"[30] என்று பத்துப்பாட்டினைப் பற்றிக் கூறியுள்ளார். எனவே பேராசிரியர்தான் முதன்முதலில் 'பத்துப்பாட்டு' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடிகிறது. வையாபுரிப்பிள்ளையும்[31] டாக்டர் மா.இராசமாணிக்கனாரும்[32] இக்கருத்துடையவர்களே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

நன்னூல் நூற்பா 387-இற்கு உரை எழுதிய மயிலைநாதர், "ஐம்பெருங்காப்பியம், எண்பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கென்னும்...."[33] என்று பத்துப்பாட்டுடன் பிற பாடல்களின் தொகுப்புப் பற்றிய செய்தியைக் கூறியுள்ளார். "பன்னிரு பாட்டியல்"[34] என்ற நூலில் பத்துப்பாட்டினைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. அதனைப் பின்வரும் சூத்திரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

"நூறு அடிச்சிறுமை நூற்றுப்பத்து அளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொகுப்பது பத்துப்பாட்டு எனப்படுமே" (சூ.353)

"அதுவே அகவலின் வரும் என அறைகுவர் புலவர்" (சூ.354)

அந்த இரு சூத்திரங்களும் பத்துப்பாட்டு என்னும் வழக்குப் பெருகிய காலகட்டத்தில் உருவாகியிருக்கலாம் எனத் தெரிகிறது. பத்துப்பாட்டினைப் பற்றிய செய்தியை ஒரு பழம்பாடல் குறிப்பிடுகிறது. அப்பாடல் வருமாறு,

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி- மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

அப்பாடல் பத்துப்பாட்டுப் பாடல்களைப் 'பத்து' என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அப்பாடலைப் போன்றே எட்டுத்தொகைப் பாடல்களையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள பாடல்களையும் பற்றிக் கூறும் பாடல்களும் உள்ளன. அப்பாடல்கள் எப்போது பாடப்பட்டன என்பது தெளிவாக அறியப்படாத ஒன்றாகும். இருப்பினும் அவை அப்பாடல்களின் தொகுப்பினைப் பற்றிய செய்திகளை நமக்குத் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ளதை அறியமுடிகிறது. இவற்றிலிருந்து பத்துப்பாட்டு என்ற சொல்வழக்கு களவியல் உரைக்குப் பின்பும் பேராசிரியர் காலத்திலோ அல்லது அவருக்குச் சற்று முன்னரோ உருவாகியிருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

பாடல்களின் சிறப்பினால் பத்துப்பாட்டு – பாட்டு என்று சிறப்பித்து அழைக்கப்பட்டதா?

இதுவரை பார்த்த விளக்கங்களிலிருந்து பாட்டு என்ற சொல்வழக்கு ஏற்பட்ட அக்காலகட்டத்தில் அப்பாடல்கள் அறிஞர்களால் சிறந்த பாடல்களாகக் கருதப்பட்டுள்ளன என்ற செய்தியையும் அறியமுடிகிறது. எனவே பாடல்களின்

சிறப்பினால் பாட்டு என்று அழைக்கப்பட்டிருக்கலாமா? என்ற ஒரு கேள்வியும் இங்கு எழுகிறது. அதனைப் பற்றி அறியப் பத்துப்பாட்டிலுள்ள பாடல்களின் தனிச்சிறப்புகளைப் பற்றிய செய்திகளை முதலில் காண்போம். பத்துப்பாட்டிலுள்ள பாடல்களின் சிறப்புகளைப் பற்றிய செய்திகளைத் தொல்காப்பிய உரைகளிலும், கல்வெட்டுகளிலும், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களிலும் காணமுடிகின்றது.

"ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிரமாகும் இழிபு மூன்றடியே" (தொ.பொ.செ.50)

என்ற தொல்காப்பிய நூற்பா ஆசிரியப்பாவிற்கான அடி எல்லையைப் பற்றிக் கூறுகின்றது. இதற்கு உரை எழுதிய இளம்பூரணா "பெரியபாட்டு பத்துப்பாட்டினுள்ளும் சிலப்பதிகாரத்துள்ளும், மணிமேகலையுள்ளுங் கண்டு கொள்க"[35] என்று ஆசிரியப்பாவின் அளவிற்கு எல்லையாகப் பத்துப்பாட்டினைச் சான்று காட்டியுள்ளார். அத்துடன் ஆசிரியத்தின் பேரெல்லையைக் குறிக்கப் 'பெரிய பாட்டு' என்று கூறியுள்ளதும் நாம் இங்குக் கவனிக்கவேண்டிய ஒன்றாகும்.

மேற்கண்ட நூற்பாவிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியரும் "கூத்தராற்றுப்படை தலையளவிற்கெல்லை. மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் ஒழிந்த பாட்டேழும், பரிபாடலும், கலியும் ஒழிந்த தொகை ஆறும் இடையளவிற்கெல்லை. பாட்டினெல்லையென்னாது அளவென்றதனான் அதனியற்றாகிய வஞ்சிக்கும் இவ்வாறே கொள்க"[36] என்று ஆசிரியப்பாவின் அளவிற்கு எல்லையாகப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகைப் பாடல்களைச் (பரிபாடல், கலித்தொகை நீங்கலாக) சான்று காட்டியுள்ளார். அதில் தலையளவிற்கும், இடையளவிற்கும் பத்துப்பாட்டுப் பாடல்களைச் சான்று காட்டியுள்ளது கவனிக்கத்தக்கது. அத்துடன் அந்தக் குறிப்பில் திருமுருகாற்றுப்படையின் பெயர் இடம்பெறாமையும் கவனிக்கத்தக்க ஒன்று.

இவற்றுடன் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள "ஒவ்வொரு காதையினையும் தனித்தனிச் செய்யுளாகக் கொள்ளும் வகையில் சிலப்பதிகாரக் காப்பியத்தின் புதுப் போக்கு"[37] கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

மங்கல வாழ்த்துப் பாடல், கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ் வரி, குன்றக் குரவை என்ற எட்டுக் காதைகள் நீங்கலான பிற 22 காதைகள் காதை என்றே பெயர் பெறுகின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டும் தெ.பொ. மீ "காதை என்பது பாட்டு என்ற பொருளில் வழங்கியது என்பதற்கு எஞ்சிய எட்டுச் செய்யுட்களின் பெயர்களே சான்றாம்"[38] என்று விளக்குகின்றார். "காதையென்னும் சொல் காதா (gatha) என்ற சொல்லிலிருந்தே வந்திருக்க வேண்டும். கதா என்பது பாடல் என்ற கருத்துடைய சொல்"[39] சிலம்பு மேகலையில் காதை என்பது இடம்பெற்றுள்ளதும் அதன் பிறகான காப்பியங்களில் அச்சொல் இடம்பெறாமையும் இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவற்றுடன் திருவெள்ளறைக் கல்லெழுத்தில்,

"வெறிஆர் தளவத் தொடைச் செயமாறன் வெகுண்டது ஒன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமித்துப்
பரியாத தூண் இல்லை கண்ணன் செய்பட்டினப்பாலைக்கு அன்று
நெறியில் விடும் தூண் பதினாறுமே அங்கு நின்றனவே"

(சாசனச்செய்யுள் மஞ்சரி 71)

என்று பட்டினப்பாலையின் சிறப்பினைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"தத்துநீர் வரால் குரமி வென்றதும் தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணா் பொன்

பத்தொடு ஆறுநூறாயிரம் பெறப்பண்டு பட்டினப்பாலைகொண்டதும்" (கலிங்.199)

என்ற கலிங்கத்துப்பரணிப் பாடல் பட்டினப்பாலைப் பாடலைப் பாடிய உருத்திரங்கண்ணனாருக்கு அரசன் பதினாறாயிரம் பொன் கொடுத்தான் என்று கூறுகின்றது. இச்செய்தியை,

"சேய தொரு பாடிய பாக்கொண்டு பதினாறு
கோடி பசும்பொன் கொடுத் தோனும்" (ச.சோ.உ.10)

என்ற சங்கரன் சோழன் உலாவும்,

"பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு
கோடி பொன் கொண்டது நின் கொற்றமே"(தமிழ்.தூ.193)

என்ற தமிழ்விடு தூதும் கூறுகின்றன.

"பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே"[40]

என்று மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை கூறுவதும் கவனிக்கத்தக்கன. இவையெல்லாம் பத்துப்பாட்டினைத் தொடர்ந்து படித்தவர்கள் அவற்றைச் சிறந்த பாடல்களாகக் கருதியுள்ளனர் என்பதைப் புலப்படுத்துகின்றன. அதிலும் குறிப்பாக, பத்துப்பாட்டிலுள்ள பாடல்கள் 11–13ஆம் நூற்றாண்டு அறிஞா்களால் சிறந்த பாடல்களாகக் கருதப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையின் பிரதிகள்

பத்துப்பாட்டிலுள்ள பாடல்கள் பாடப்பட்ட காலத்திற்கும் உரையெழுதப்பட்ட காலத்திற்கும் சில நூற்றாண்டுக் கால இடைவெளி உள்ளது. அதுபோல உரையெழுதப்பட்ட காலத்திற்கும் பதிப்பிக்கப்பட்ட காலத்திற்கும் இடையிலும் சில நூற்றாண்டுக் கால இடைவெளி உள்ளது. இவ்வாறு பல நூற்றாண்டுக் கால இடைவெளியில் அப்பத்துப்பாடல்களும் பலதள வாசிப்புகளுக்கு உட்பட்டுள்ளன. வாசிப்பின் வழி உரைகளும் விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் பத்துப்பாட்டு முழுமைக்குமான உரைகளில் நச்சினார்க்கினியர் உரை மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது.

பத்துப்பாட்டு நச்சினார்க்கினியர் உரையை உ.வே.சாமிநாதையர் 1889இல் பதிப்பித்தார். ஆனால் அதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரே சரவணப்பெருமாளையரால் 1834 இல் திருமுருகாற்றுப்படை மட்டும் தனிநூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பின்னர் வேதகிரி முதலியார் (1850), சுப்பராய முதலியார் (1852), ஆறுமுகநாவலர் (1853), சண்முக ஐயர் (1864), அ. இராமசாமி (1886) முதலானோரும் தனிநூலாகவே பதிப்பித்துள்ளனர். அத்துடன் "ஆறுமுக நாவலர் பதிப்புகள் வரை திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் ஒன்று என்ற விபரத்துடனோ, பதினோராம் திருமுறையில் ஒன்று என்ற தகவலோடோ பதிப்பிக்கப்படவில்லை. 1870 இல் சுப்பராய செட்டியார் பதிப்பித்த 'பதினொராந் திருமுறை' எனும் நூலிலும் நக்கீரர் தோத்திரங்களுள் திருமுருகாற்றுப்படையும்

இடம்பெற்றிருக்கிறது"[41]. இது ஒருபுறமிருக்க திருமுருகாற்றுப்படைக்கு "நச்சினார்க்கினியர் (கி.பி.14), உரையாசிரியர் (கி.பி.15), பரிமேலழகர் (கி.பி.13) கவிப்பெருமாள், பரிதியார் (கி.பி.15) ஆகியோர்"[42] உரையெழுதியுள்ளனர்.

இதுவரை கிடைத்திருக்கும் திருமுருகாற்றுப்படை என்ற பிரதி (text) "மூலமாகவும், நச்சினார்க்கினியர் உரையுடனும், தோத்திரப் பாடலாகவும், பதினோராம் திருமுறையில் ஒன்றாகவும்"[43] எனப் பலவாறு விரவி நிற்கிறது. இதற்கு என்ன காரணம் என்று ஆராயந்தால் இரண்டு செய்திகள் நம்முன் நிற்கின்றன.

ஒன்று – நக்கீரர் என்ற பெயர் "1.சங்க நக்கீரர்: கி.பி.250 நெடுநல்வாடை, எட்டுத் தொகையில் சில பாடல்களைப் பாடியவர், 2. முருகாற்றுப்படை– நக்கீரர்:கி.பி.450 சைவ சமயத்தைச் சார்ந்தவர். 3.இறையனார் களவியலுரை கி.பி.650 (அடிநூல், களவியலுரை, நாலடிநானூறு), 4. நக்கீரதேவ நாயனார் கி.பி. 850, 11ஆம் திருமுறைப் பிரபந்தங்கள், சைவசமயத்தைச் சேர்ந்தவர். இவ்வாறு நம் வசதிக்கு ஏற்பப் பிரித்து அறிவதோடு 'நக்கீரர்' எனும் பெயர் தொன்மைத் தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றில் ஆதிக்கம் செலுத்தியிருப்பது"[44]

இரண்டு – சமகாலத்தில் நச்சினார்க்கினியர் உரை மட்டும் 19ஆம் நூற்றாண்டில் இருந்து பல முறை பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிற உரையாசிரியர்களின் உரைகள் பதிப்பிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. கால எல்லைகளைத் தாண்டித் தொடரும் இந்த இடைவெளியில்தான் பாட்டு – ஒன்பது + ஒன்று = பத்துப்பாட்டு என்ற சொல்மாற்றம் நிகழ்ந்துள்ளது.

பாட்டு – பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு

கிடைக்கும் தரவுகளை வைத்துப் பார்க்கும்போது பாட்டு – பத்துப்பாட்டு என்று பெயர்மாற்றம் பின்வருமாறு நிகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது.

- பத்துப்பாட்டிலுள்ள எல்லாப் பாடல்களும் ஆசிரியப்பாவினால் பாடப்பட்ட நெடும்பாடல்களாகும்.
- பத்துப்பாட்டிலுள்ள முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை (வஞ்சி நெடும்பாட்டு) ஆகியன பாட்டு என்றே அழைக்கப்படுகின்றன.
- காதை, பாட்டு என்பன ஒரே பொருளைக் கொண்டவை என்பது குறிப்பிடத் தக்கது.
- 30 காதைகள் கொண்டவை சிலப்பதிகாரமும், மணிமேகலையும்.
- தொகுக்கப்பட்ட காலத்தில் இப்பாடல்களைப் பிற பாடல்களைவிடச் சிறந்த பாடல்களாக அக்கால அறிஞர்கள் கருதியிருக்கின்றனர். அதற்குக் காரணம் ஆசிரியப்பாவினால் பாடப்பட்ட பெரிய பாட்டு என்பதே. எனவே பாட்டு என்பது காரணப்பெயராகும்.
- பாட்டு என்று அழைக்கத் தொடங்கிய காலத்திற்கும் பத்து + பாட்டு= பத்துப்பாட்டு என்ற எண்ணிக்கையைச் சேர்த்து வழங்கத் தொடங்கிய காலத்திற்கும் இடையே சில நூற்றாண்டு இடைவெளி இருப்பது தெளிவாகத் தெரிகின்றது.
- இந்தக் கால இடைவெளியில்தான் பாட்டு என்பது ஒன்பது (ஒன்பது பாட்டு) என்பதிலிருந்து பத்து (பத்துப்பாட்டு) என்ற இலக்கத்திற்கு மாறியுள்ளது.

சான்றெண் விளக்கங்கள்

1. சிவத்தம்பி. கா., தமிழின் கவிதையியல், 2007 (முதற்பதிப்பு), குமரன் புத்தக இல்லம், சென்னை, ப.56.
2. தமிழண்ணல், நன்னூல் சொல்லதிகாரம் எளிய உரை, 2004 (மூன்றாம் பதிப்பு), தமிழ்மொழிப் பயிலகம், 4/585 சதாசிவநகர், முதன்மைச்சாலை, மதுரை, ப.53.
3. இறையனார் அகப்பொருள், 1964, கழக வெளியீடு, சென்னை, ப.9.
4. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், 1995 (மூன்றாம் பதிப்பு), உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, ப.212.
5. திவாரக நிகண்டு, 1993, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப.84.
6. சூடாமணி நிகண்டு, 1998 (முதல் பதிப்பு, 11 தொகுதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.155.
7. கலித்தொகை, பா.17:1.
8. பெருங்கதை, பா.103:39.
9. கலிங்கத்துப் பரணி, பா. 4, 5.
10. பெரும்பாணாற்றுப்படை, பா.190.
11. குறுந்தொகை, பா.89:1.
12. சம்பந்தர் தேவாரம், பா.1.8:4.
13. தொல்காப்பியம் செய்யுளியல், (உரைவளம்), 1989, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, ப.5.
14. தமிழ் லெக்சிகன், 1982, (பகுதி-5, பாகம்- 2) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப.2590.
15. கழகத் தமிழ் அகராதி, 1964, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூல் பதிப்புக் கழகம், சென்னை, ப.669.
16. திருமகள் அகராதி, 2001, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை, ப.169.
17. தொல்காப்பியம் செய்யுளியல், (உரைவளம்), 1989, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, ப.233.
18. மேலது, ப.1
19. மேலது, ப.359
20. வரதராசனார். மு., இலக்கியத் திறனாய்வு, சென்னை, ப.63
21. மெய்கண்டான், சி., *"நால்வகைப் பாக்களின் தோற்றம்"*, தொல்காப்பியப் பாவியல் கோட்பாடு, 1999, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.26.
22. அமிதசாகரனார், யாப்பருங்கலம் விருத்தியுரை, 1998 (மறுபதிப்பு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.223.
23. மேலது, ப.233
24. மேலது
25. மேலது,ப.234
26. இளங்குமரன். இரா., காக்கைப்பாடினியம், 1974, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூல் பதிப்புக்கழகம், சென்னை, ப.17.
27. பஞ்சாங்கம், க., புதிய வெளிச்சத்தில் தமிழ் இலக்கிய வரலாறு, அன்னம், தஞ்சாவூர், ப.196.
28. தொல்காப்பியம் செய்யுளியல், (உரைவளம்), 1989, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, ப.177.
29. மேலது, ப.816.
30. தொல்காப்பியம் செய்யுளியல் – பேராசிரியர் உரை,, (உரைவளம்), 1989, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, ப.233. மற்றும் ப. 365

31. வையாபுரிப்பிள்ளை. எஸ்., இலக்கியச் சிந்தனைகள் (முதல் தொகுதி), 1989, சென்னை, பக்.163,164.
32. இராசமாணிக்கனார். மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப.33.
33. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், 1995 (மூன்றாம் பதிப்பு), உ.வே.சா.நூல் நிலையம், சென்னை, ப.212.
34. இராகவையங்கார். ரா., பன்னிருபாட்டியல், 1951 (இரண்டாம் பதிப்பு), மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, ப.53.
35. தொல்காப்பியம் செய்யுளியல், (உரைவளம்), 1989, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, ப.816.
36. மேலது, ப.818.
37. மீனாட்சி சுந்தரனார்.தெ.பொ., சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் 4, 2005, காவ்யா, சென்னை, ப.28
38. மேலது, ப.17
39. சிவத்தம்பி.கா., தமிழின் கவிதையியல், 2007, குமரன் புத்தக இல்லம், சென்னை, ப.121
40. சுந்தரம்பிள்ளை, பெ., மனோன்மணீயம், 2000 (இருபத்தைந்தாம் பதிப்பு), வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை, ப.18.
41. http://www.keetru.com/visai/apr09/aiyyappan.php
42. மேலது
43. மேலது
44. மேலது

ஆய்வுக் கட்டுரை எழுதுவோர் கவனத்திற்கு

- ஆக்கம் தங்களுடையதாக மட்டுமே அமைதல் வேண்டும்.
- தங்களின் கட்டுரையின் முதல் பக்கத்தில் முழு முகவரியும் இடம்பெறல் வேண்டும்.
- கருத்துத் திருட்டு எனப் பின்னர் அறிந்தால், வலைதளப் பக்கத்திலிருந்து உடனே நீக்கப்பெறும்.
- கட்டுரைகள் ஒருங்குகுறி எழுத்துருவில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்பப் பெறுதல் வேண்டும்.
- தங்களின் ஆய்வுக் கருத்துக்கள் தரமுடையதாகவும், புதிய நோக்குடனும் அமையப் பெறுதல் வேண்டும்.
- பழம்பாடலுக்கு விளக்கம் அளித்தல் போன்று இருத்தல் கூடாது.
- சொல்லாய்வி (Word) கோப்பும், சொல்லாய்விக் (PDF) கோப்பும் அனுப்பப் பெறுதல் வேண்டும்.
- மேற்கோள் தனித்துக் காட்டப்பெறுதல் வேண்டும்.
- தங்களின் கருத்துப் போன்று காட்டுதல் கூடாது.
- inameditor@gmail.com எனும் மின்னஞ்சலுக்குத் தங்களின் கட்டுரைகள் அனுப்பப் பெறுதல் வேண்டும்.
- நாட்டுடைமை ஆக்கப்பெற்ற மூத்த தமிழறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூலின் தேர்ந்தெடுத்த சில பகுதிகள், இதழின் ஒவ்வொரு பதிப்பிலும் வெளியிடப் பெறும்.
- ஒவ்வொரு இதழ்ப் பதிப்பிலும் நூல்மதிப்புரை எனும் பகுதி இடம்பெறும். நூல்மதிப்புரைக்கு நூலாசிரியர் நூலின் இரண்டுபடிகளை அஞ்சல்வழி அனுப்புதல் வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரிக்குத் தொடர்புக்கு எனும் பகுதியை நோக்குக.
- கட்டுரைகள் ஒவ்வொரு காலாண்டின் முதல் வாரத்தில் வெளியிடப்பெறும்.
- கட்டுரைகளுடன் தங்களின் ஒளிப்படத்தையும் அனுப்புதல் வேண்டும்.

மதிப்பிடப்பெற்றது

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்

Jurisprudence of Evidence existed in Sangam Age

எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan[2]

Abstract: Sangam Age is one of the pinnacles of the Great Tamil Civilization. Sangam Literatures are the only & primary research sources to understand the various & vibrant life styles of people of Sangam Age. Ettu Thogai & Paththu Paattu had given enormous and significant proofs to develop the ideology concerning Jurisprudence of Evidence. This article deals with Jurisprudence of Evidence that existed in Sangam Polity. It also explains the clarity that possessed by the general public regarding the Evidence in their day to day life events.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-23
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: எஸ்.கலைச்செல்வம்
Email: contact.asks@gmail.com

Keywords: Sangam Age, pathuppaattu, ettu thogai, thogai, sangam literature, Tamil Civilization, Jurisprudence, ideology, Sangam Polity, Evidence, S.Kalaiselvan, பாட்டு, பத்துப்பாட்டு, பெயர்மாற்ற வரலாறு, அகம், புறம், ஆற்றுப்படை, எட்டுத்தொகை, சங்க காலத்தில், சாட்சியச் சட்டவியல், எஸ்.கலைச்செல்வம்.

இலக்கியங்களைக் காலக்கண்ணாடிகள் என்பர். வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாக இல்லாதபோது இலக்கியங்களே பெரிதும் துணைபுரிகின்றன என்பது பன்னாட்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு நெறிமுறைகளுள் ஒன்றாகும். சங்க காலத்தின் சட்டவியல் எனும் பெரும்பார்வையில் சிறு கீற்றே சாட்சியச் சட்டவியல் குறித்த இவ்வாய்வு.

சட்டவியலின் இன்றியமையாத பகுதிகளுள் ஒன்று தண்டனை. மக்களுக்கோ அரசுக்கோ இடையூறு ஏற்படுத்தும் வகையில் குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப் படுகிறார்கள். தண்டனையின் நோக்கம் இரண்டெனச் சட்டவியல் அறிஞர்களின் கருத்து. குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் அவரை மேலும் தவறு செய்ய விடாமல் தடுத்தல் முதல் நோக்கமாகும். குற்றவாளிக்கு வழங்கும் தண்டனையைப் பார்க்கும்போது, தவறு செய்தால் தங்களுக்கும் இதுபோன்றே நடைபெறும் எனும் அச்சத்தைப் பொதுமக்களுக்கும் பிறர்க்கும் ஏற்படுத்துதல் இரண்டாவது நோக்கமாகும்.

தண்டனை வழங்கும்போது கவனமாக வழங்குதல் வேண்டும். குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கவில்லை எனினும் எக்காரணம் கொண்டும் குற்றம் செய்யாதவர் களுக்குத் தண்டனை வழங்கிவிடக் கூடாது என்பதெல்லாம் இன்றைய வளர்ச்சி பெற்ற சட்டவியல் கருத்தாக்கங்கள் ஆகும். ஒருவருக்குத் தண்டனை வழங்குவதெனின் அவர் புரிந்த குற்றம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். குற்றத்தை உறுதி செய்வதற்குச் சான்றுகளும் சாட்சிகளும் மிக இன்றியமையாதவையாகும்.

---

[2] Ph.D. Research Sholar, Dept. of History, Pachaiyappa's College, Chennai – 30. e-mail : contact.asks@gmail.com, Mobile : 8608899008

தண்டனை மட்டுமன்றிப் பாதிக்கப்பட்ட ஒருவர்க்கு உரிய நீதி கிடைக்க வேண்டுமெனினும் சான்றுகளும் சாட்சிகளும் தேவையாகின்றன. ஒருவர் தானுற்ற பாதிப்பை உறுதி செய்வதற்கு இவை இன்றியமையாதவை ஆகும்.

மேலும், ஒரு தனிமனிதனின் உரிமையை நிலைநாட்டுவதற்கும் சான்றுகளும் சாட்சியங்களும் தேவைப்படுகின்றன. இவ்வாறு குற்றவியல், உரிமையியல், இழப்பீடு முதலிய எல்லாச் சட்டவியல் சூழல்களிலும் ஒரு மனிதனின் நிலைப்பாட்டை உறுதி செய்யச் சான்றுகளையும் சாட்சியங்களையும் முதன்மைக் குறிப்புகளாக இன்றைய சட்டவியல் நோக்குகிறது. இந்தத் தெளிவு பழங்காலத் தமிழ்நாட்டில் செறிவாகவே இருந்துள்ளது என்பதை இலக்கியக் குறிப்புகள் உறுதி செய்கின்றன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரியபுராணத்தில் சான்று சாட்சியம் குறித்த தெளிவாக விளக்கம் இடம்பெற்றுள்ளது. திருமலைச் சருக்கத்தில் தடுத்தாட் கொண்ட புராணத்தில் கீழ்வரும் செய்யுள் இடம்பெறுகிறது. இச்செய்யுள் சாட்சியத்தை மூன்று வகையாகப் பகுத்து விரிவான சட்டவியல் அறிவைப் பதிவு செய்துள்ளது.

ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற்று அயலார் தங்கள்
காட்சியில் மூன்றிலொன்று காட்டுவாய் என்ன 'முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூலஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்' என்றனன் மாயை வல்லான் - பெரிய.202

எனும் பெரியபுராணச் செய்யுள் சான்றுகளை மூன்றாகப் பகுத்துப் பதிவு செய்துள்ளது. அவற்றை உலகவழக்கு, ஆவணம் மற்றும் அயலார் காட்சி எனப் பெயரிட்டுள்ளார் சேக்கிழார். உலக வழக்கு என்பது குறிப்பிட்ட நிலப்பகுதியில் அல்லது நாட்டில் நிலவிவரும் பழக்கவழக்கங்களைக் குறிப்பிடுவதாகும். ஆவணம் என்பது எழுத்து வடிவிலானது; எழுதிக் கொடுப்பவர் பற்றிய தகவல்கள், எழுதிப் பெறுபவர் பற்றிய தகவல்கள், கைச்சாத்து (கையெழுத்து) போன்ற 'நபரை உறுதிபடுத்தும் அடையாளம்' எனப் பல பகுதிகள் அதில் இடம்பெற்றிருக்கும். மூன்றாவதாய்க் குறிப்பிட்டிருக்கும் அயலார் காட்சி என்பது தமக்கு எவ்விதத்திலும் தொடர்பற்றவர் நேரில் பார்த்ததைக் குறிப்பிடுகிறது. இத்தகைய செறிவான சாட்சியம் குறித்த சட்டவியல் அறிவுக்குச் சங்க இலக்கிய நூல்கள் முன்னோடியாய் அமைந்துள்ளன எனக் கூறின் அது மிகையன்றாம். இப்பகுதி சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சாட்சியம் குறித்த பகுதிகளைத் தொகுத்து ஆய்வு செய்ய முற்படுகிறது.

வெறிஅயர் களத்தினின் தோன்றும் துறைவன்
குறியா னாயினும் குறிப்பினும் பிறிதொன்று
அறியாற்கு உரைப்பவோ யானே? எய்த்த இப்
பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
கள்வனும் கடவனும் புணைவனும் தானே - குறுந்.318:3-8

இச்செய்யுளின் கடைசி அடிக்கு, "கள்வன் கடவன் புணைவன் முறையே குற்றவாளி விசாரிப்பவன் அல்லது வழக்குத் தொடுப்பவன், சான்று(புணை) கூறுபவன். மூவரும் ஒருவனேயாதலால், அவன் வழங்கினாலன்றி, நீதி கிடைக்காதென்பது குறிப்பு. அக்கால வழக்காடுமுறை காண்க"[1] என உரை எழுதப்பட்டுள்ளது. இச்செய்யுள் முறைமன்றத்தின்(நீதிமன்றம்) செயல்பாட்டினை மிகச் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளது.

இச்செய்யுளின் இறுதி அடி முழுமையும் சட்டவியல் பார்வை கொண்டுள்ளது. இதன்மூலம் சங்க இலக்கியம் அடையாளப்படுத்தியுள்ள தமிழகத்திலிருந்த சட்டவியல் விழிப்புணர்வு நிலையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒரு மனிதரைக் குற்றவாளி எனத் தீர்மானிப்பதற்கு முன்பு உரிய வகையில் உசாவி அறிவது சட்டக் கடமையாகும். உசாவுகையின்போது அவரைக் குற்றம் சுமத்தப்பட்டவர் என்று அழைப்பது இன்றைய சட்டவியல் நாகரிகமாகும். உசாவுகிறபோது தக்க சான்றுகளின்வழி அவரது குற்றம் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே அவரைக் குற்றவாளி என்பது சட்டவியல் வழக்கமாகும். எனவே குற்றவாளி என ஒருவரைத் தீர்மானிப்பதற்கு உசாவுகையும், சான்றுகளும் இன்றியமையாதவையாகத் திகழ்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இந்தச் சட்டவியல் தெளிவு சங்க இலக்கியத் தமிழகத்தில் செறிவாகத் திகழ்ந்துள்ளது என்பதை மேற்குறிப்பிட்டுள்ள குறுந்தொகைச் செய்யுளின் மூலம் உறுதியாகிறது.

பெரியபுராணம் சான்றுகளை மூன்று வகையாகப் பகுத்துப் பதிவு செய்துள்ளது என முன்னர்க் கண்டோம். அதுபோலச் சங்க இலக்கியங்கள், 'சான்றுகளை' எவ்வாறு பதிவு செய்துள்ளன எனும் ஆய்வு வினா எழுகிறது.

யாரும் இல்லைத் தானே கள்வன்
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே – குறுந். 25

இச்செய்யுள் முழுவதும் சட்டவியல் சான்று குறித்து மறைமுகமாக ஆனால் தெளிவாகப் பதிவு செய்துள்ளது எனலாம். இச்செய்யுளின் பின்புலம் வருமாறு: களவொழுக்கத்தின் படி தலைவன் – தலைவி புணர்ச்சி நடைபெறுகிறது. புணர்ந்துவிட்டுச் சென்ற தலைவன் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்தி வருகிற சூழலில் இச்செய்யுள் எழுந்துள்ளது. தலைவன் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்துதல் தலைவி நெஞ்சில் ஐயத்தை உண்டாக்கியுள்ளது. இதனால் தன்னுடைய தோழியிடம் தன் நிலையைப் பற்றிக் கூறுவதாகச் செய்யுள் நடையிடுகிறது. தலைவன் தலைவியைப் புணர்ந்தபோது யாரும் இல்லை; தலைவன் மட்டுமே இருந்துள்ளான் எனத் தலைவி வருத்தப்படுவதிலிருந்தே தன் நிலையை உறுதிசெய்யத் தன்னிடம் எந்தச் சான்றும் இல்லையே என வருந்துவதும் தெரிய வருகிறது. இதன்மூலம் சான்றுகள் குறித்த விழிப்புணர்வு அக்காலக்கட்டத்தில் நிலவியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும் சான்று குறித்த இன்னொரு செய்தியும் இச்செய்யுளில் புதைந்திருப்பதை உணரலாம். புணர்ச்சி நடைபெற்றபோது யாரும் இல்லை என வருத்தம் தெரிவித்த பின்னர் அவ்விடத்தில் குருகு இருந்ததைத் தலைவி சுட்டிக் காட்டுகிறாள். அங்குக் குருகு இருந்தாலும் அது சான்றாகும் தகுதியைப் பெறவில்லை என்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறாள். குருகு, தகுதி பெறாததற்கு அவள் சுட்டுகிற காரணம் சட்டவியல் நோக்கம் கொண்டுள்ளதாக அமைகிறது. அக்காரணம் வருமாறு: 'அவ்விடத்தில் குருகு இருந்தது எனினும் அது நீரோட்டத்தில் ஆரல்மீன்களின் வரவைப் பார்த்துக் கொண்டிருந்ததே தவிர எங்களை – அதாவது எங்கள் கூட்டத்தை – நோக்கவில்லை. அதனால் சான்றாகும் தகுதி அதற்கில்லை' எனச் சுட்டி வருந்துகிறாள்.

"(அவன் என்னை மணந்தபோது) ஓடுகின்ற நீரில் ஆரல்மீனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் தினையின் அடிபோற் கரிய சிறு கால்களை உடைய

நாரை மட்டும் அங்கே இருந்தது! (அதுவும் மீன்மீது குறியாக இருந்ததால், சான்றாகும் தகுதி இல்லை என்பது குறிப்பு)"[2] என உரை காணப்படுகிறது.

ஒருவன் அல்லது ஒருத்தி சான்றாகத் திகழ வேண்டுமெனின், அவர்க்கெனச் சில அடிப்படைத் தகுதிகளை இன்றைய 'இந்திய சாட்சியச் சட்டம்' வரையறுத்துள்ளது. அதுபோலச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் தமிழகத்திலும் சான்றாக ஒருவன் இருக்க வேண்டுமெனின் சில வரையறைகள் இருந்திருக்க வேண்டுமெனக் கருத இடமளிக்கிறது இச்செய்யுள். அதாவது அச்செய்யுளில் இடம்பெற்றிருக்கும் குருகு நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திலேயே இருந்தும்கூட சான்றாகும் தகுதியை அது பெறவில்லை. ஏனெனின், குருகு ஆரல்மீன்களின் வரவைப் பார்த்துக் கொண்டு நிகழ்ச்சியைத் தன் கண்ணால் பார்க்கவில்லையாம். அதனால் அதற்குச் சான்றாகும் தகுதி கிடையாதாம். இதிலிருந்து, சான்றாகும் தகுதியை ஒருவர் பெற வேண்டுமெனின் அவர் நிகழ்ச்சியைத் தன் கண்ணால் கண்டிருக்க வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. எனவே குருகைக் கொண்ட இந்தக் காட்சி அமைப்பு, 'சான்றாகும் தகுதியையும்' 'சான்றின் ஒரு வகையையும்' சுட்டிக் காட்டுகிறது.

பூக்கொய் மகளிரில் தோன்றும் நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே
தேக்கொக்கு அருந்தும் முள்ளயிற்றுத் துவர்வாய்
வரைஆடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும்அக் கொடியோ னையே – குறுந். 26:3–8

குறுந்தொகையின் இச்செய்யுளும் கண்ணால் காணும் சாட்சியத்தின் அழுத்தத்தைப் பதிவு செய்துள்ளது எனலாம். செய்யுளின் பொருள் வருமாறு: "பூக்கொய்யும் மகளிரைப் போலத் தோன்றும் மலைநாடன், களவிற் கூடிவிட்டுத் தகுதியில்லாதவன் போலப் பொய்கூறித் தீயவற்றைக் கூறுகின்றான். அதாவது களவிற் கூடியதை மறுக்கின்றான். அங்ஙனம் மொழியினும் தேமாம்பழங்களைத் தின்னும் முள் போன்ற பற்களையும் சிவந்த வாயையும் உடையதும், மலைமீது விளையாடும் வலிமை வாய்ந்த குட்டிக்குத் தந்தையுமாகிய ஆண்குரங்கும் (நான் மட்டுமன்றிக் குரங்கும்) அக் கொடியவனை அறியும். அது தன் கண்ணால் கண்டதை, இல்லையென்று மறுத்துப் பொய் கூறாதல்லவா?"[3] என உரை காணப்படுகிறது.

முன்னர்க் கூறியவாறு கண்ணால் காணும் மனிதர்களின் கூற்றையே சாட்சியாக எடுத்துக்கொள்ள வேண்டுமெனும் கருத்தை இச்செய்யுள் மிக ஆழமாகப் பதிவாக்கி யுள்ளது. அதாவது, தந்தைக் கடுவன் அவ்விடத்தில் இருந்துள்ளது. அது குருகினைப் போல நிகழ்ச்சியைப் பாராமல் இருக்கவில்லை. தன்னுடைய கண்ணால் பார்த்துள்ளது. எனவே அதன் சான்று பொய்யாகாது எனத் தோழி உறுதியாகக் கூறுகிறாள். இங்கு நோக்கத்தக்கது காட்சியமைப்பும் அதன்மூலம் வெளிப்படும் சட்டவியல் பார்வையும் ஆகும். இந்தக் காட்சியமைப்பின் மூலம், சான்றாகும் தகுதி தம் கண்ணால் நேரடியாகப் பார்ப்பவர்க்கே உண்டு எனும் கருத்தியல் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதை உணரலாம்.

அலரும் சாட்சியும்

தலைவன் தலைவி ஆகியோரின் காதல் ஒழுக்கம், உறவு குறித்து ஊர்மக்கள் பொதுப்பட உரைப்பது அலர் எனப்படும். இது அகச்செய்யுள்களில் இடம்பெறும். தலைவன் தலைவி கூடுவது, அவர்கள் பிரிவது, தலைவனின் பரத்தமை ஒழுக்கம்

முதலியவை அலராகப் பரவுவது உண்டு. களவொழுக்கம் கற்பொழுக்கம் ஆகிய இரு ஒழுக்கத்திலும் அலர் எழுவது உண்டு. பொதுவாக, இதனை இலக்கியச் சுவைக்காகப் புலவர்கள் பெரிதும் பயன்படுத்துவது வழக்கம். இலக்கியச் சுவையைத் தாண்டிச் சட்டவியல் எல்லைக்கு உட்பட்டு நிற்கிறது அலர் எனும் கருத்தியல் எனலாம். இதனைப் பின்வரும் செய்யுள்கள் உறுதி செய்கின்றன.

சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
ஆடினை என்ப புனலே அலரே
மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்று ஒளியே – ஐங்குறு. 71

அலர் பரவியுள்ளதால் நீ உண்மையை மறைக்கவியலாது எனத் தலைவி கூறுவதாக இச்செய்யுள் அமைந்துள்ளது. அலர் எவ்வாறு பரவியது என ஆய்வு செய்ய வேண்டி உள்ளது. இதற்கும் இச்செய்யுளே ஒருவாறு பதிலுரைக்கிறது. தலைவனும் பரத்தையும் புனலாடியதை ஒருவர் பார்த்துப் பிறரிடம் சொல்ல, பார்த்தவர் சொன்னதையே இன்னொருவரும் பார்க்க இப்படியே சொல்லும் காட்சியும் ஊரில் அலராகப் பரவியிருக்க வேண்டுமெனத் தீர்மானிக்க இயல்கிறது. அலராகப் பரவியதில் கண்வழிச் செய்திகளைக் காட்டிலும் செவிவழிச்செய்தியே மிகுதியாக இருக்கும் என்பதிலும் ஐயம் இல்லை. என்றாலும் அக்காலத்தில் வேறு உறுதியான சான்றுகள் கிடைக்காதபோது அலரையும் சாட்சியாக ஏற்கும் வழக்கம் இருந்துள்ளது எனக் கருத இச்செய்யுள் இடமளிக்கிறது.

பலர்இவண் ஒவ்வாய் மகிழ்ந அதனால்
***அலர்தொடங் கின்றால்** ஊரே மலர*
தொல்நிலை மருதத்துப் பெருந்துறை
நின்னொடு ஆடினள் தண்புனல் அதுவே – ஐங்குறு. 75

அலரை அடிப்படையாகக் கொண்டு தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள் தோழி. தலைவன் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்திருக்க வேண்டும். ஆதலால்தான் 'ஒவ்வாய் மகிழ்ந' எனக் குறிப்பிட்டிருக்கிறார் புலவர். குற்றச்சாட்டைத் தலைவன் மறுக்கிறபோது அதனை ஊர்மக்களின் அலர் கொண்டு பொய்யாக்குகிறாள் தோழி. எனவே அலரையும் சான்றாக அதாவது சாட்சியாகப் பயன்படுத்தியிருக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளதை இதன்மூலம் அறிய முடிகிறது. மேலும், சாட்சி கொண்டு தன்தரப்பை மெய்ப்பித்தல் குறித்த விழிப்புணர்வும் இருந்துள்ளது எனலாம்.

அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புனல் ஆடக் கண்டோர்
ஒருவரும் இருவரும் அல்லர்
பலரே தெய்ய எம் மறையா தீமே – ஐங்குறு. 64

அலர் எழுவதற்கான அடிப்படைக் காரணத்தையும், அலரின் உறுதித் தன்மையும் இச்செய்யுள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. ஒருவர், இருவர் என்கிற நிலையை எல்லாம் கடந்து பலர் பார்க்கும் அளவுக்குத் தலைவன் பரத்தையரோடு நெடுநாளாக இருந்துள்ளான் போலும். சிலர் பார்த்து அலர் எழுந்து அது பலரால் உறுதி செய்யப் பட்ட நிலையை இச்செய்யுள் விளக்குகிறது. மேற்சுட்டிய அலர் குறித்த மூன்று செய்யுள்களிலும் ஒன்றை அடிப்படையாகக் காணலாம். அது என்னவெனில், அலரைச் சாட்சியாக அக்காலத்து மக்கள் பயன்படுத்தத் தவறியதில்லை என்பதாம்.

தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பை, பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன், அறியேன் என்றி
*திறனில் வெஞ்சூள், **அறிகரி கடாஅய்***
முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி
நீறு தலைப்பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே – அகநா. 256:14–21

எனும் செய்யுள் நோக்கத்தக்கது. தலைவியின் பெண்மை நலத்தைத் துய்த்த பிறகு தலைவியை ஏற்க மறுத்துள்ளான் ஒருவன். அவனுக்குத் தண்டனை கொடுத்துள்ளனர். சுண்ணாம்பு நீற்றைத் தலையில் ஊற்றியுள்ளனர் என அறிந்து கொள்ள முடிகிறது. இங்கு நோக்கத்தக்கது என்னவெனில் தண்டனை வழங்குவதற்கு முன்னர் அவையத்தார் சாட்சிகளை உசாவியுள்ளனர். இதனை 'அறிகரி கடாஅய்' எனும் தொடர் மூலம் அறிய முடிகிறது.

மேற்சுட்டியவை அனைத்தும் அகத்துறை சார்ந்த தவறுகள் ஆகும். அகத்துறை அக்காலத்தில் செழுமையான அறநெறிகளுக்கு உட்பட்டே பெரிதும் இருந்தது. எனினும் சில தடுமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மேற்சுட்டிய செய்யுள்கள் காட்டுகின்றன. இதனை, "இப்பாடலும் இதற்கு முந்திய பாடலும் போல்வன, அன்று களவொழுக்கத்தில் தடுமாற்றம் இருந்ததைப் புலப்படுத்துகின்றன. அடிக்குறிப்பாளர்களும் உரையாசிரியர்களும் அதை மாற்றி உரைகூறி விளக்கி நயப்படுத்த முயல்கின்றமையும் அவர்கள் எழுத்தில் புலனாகிறது"[4] எனத் தமிழண்ணல் அவர்களும் குறுந்தொகை26-ஆம் செய்யுளுக்கு உரை காணும்போது குறிப்பிட்டுள்ளார். இனி, இவ்வாறான அகத்துறை வழக்குகளின் முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு முன்னரே குறிப்பிட்டவாறு கண்ணால் பார்த்த சாட்சிகள், (அலர் மூலமாகச்) செவிவழிச் செய்தி அறிந்த சாட்சிகள் உதவியிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு.

பொய்ச்சாட்சி

வழக்குகளைத் தீர்மானித்து முடிவு செய்வதற்குச் சாட்சிகள் பெரிதும் உதவியது போலவே வழக்குகளைத் திசைதிருப்பப் பொய்ச்சாட்சிகள் துணை போயிருக்கின்றன. சங்க இலக்கியம் அறிமுகப்படுத்தும் தமிழகத்தில் பொய்ச்சாட்சியம் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. அதேநேரம் பொய்ச்சாட்சிகளை மிகக் கடுமையாகப் புறக் கணித்துள்ளனர். பொய்ச்சாட்சி கூறுவோர்களைக் கடுமையான பழிக்கு உள்ளாக்கி யுள்ளனர். சான்றோர் பொய்ச்சாட்சி கூறுவதில்லை எனும் கருத்தியல் அக்காலத்தில் நிலவியுள்ளது.

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை – குறுந். 184:1

எனும் செய்யுளடி அதனை உறுதிபடுத்துகிறது. பொய்ச்சாட்சி கூறுதல் ஆன்றோரின் இயல்புக்கு உகந்தது இல்லை எனப் பதிவு செய்கிறது. அவ்வாறெனின், அறிகரி பொய்த்தல் பிறர்க்கு உண்டோ? எனும் வினா இத்தொடருள் மறைந்துள்ளது. 'உண்டு' என்றுதான் இவ்வினாவிற்குப் பதிலுரைக்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியத்தில் பல சான்றுகள் 'உண்டு' எனக்கூறும் விடைக்கு ஆதரவாகவே அமைந்துள்ளன.

விரிகாஞ்சித் தாதுஆடி இரும்குயில் விளிப்பவும்
பிரிவு அஞ்சாதவர் தீமை மறைப்பென்மன் மறைப்பவும்

கரிபொய்த்தான் கீழ்இருந்த மரம்போலக் கவின்வாடி
எரிபொத்தி என்நெஞ்சம் சுடும்ஆயின் எவன்செய்கோ? – கலித். 34:8–11

இச்செய்யுள் பொய்ச்சாட்சி கூறுபவனை அக்காலச் சமூகம் எவ்வாறு நோக்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. பொய்ச்சாட்சி கூறுபவன் தங்கி இருந்த மரம் வாடி விடுமாம். அந்தளவுக்குப் பொய்ச்சாட்சி கூறுபவன் நச்சுத் தன்மை கொண்டவன் என உருவகப்படுத்தியுள்ளது கலித்தொகை.

மேலும், சிலப்பதிகாரத்திலும் பொய்ச்சாட்சி கூறுபவர்களைப் பற்றிய செய்தி உண்டு. ஒருவர் பொய்ச்சாட்சி சொல்லுகிறபோது பாவை மன்றத்தில் இருக்கும் பாவை தன் நாவால் கூறாது கண்ணீர் உகுக்கும் என அறிகிறோம். பாவை எனும் கருத்தியல் உண்மையா கற்பனையா எனும் ஆய்வுக்குச் செல்லாமல், பாவைக் காட்சி அமைப்பை அணுகும்போது பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வு அக்காலத்தில் நிலவியுள்ளது என்பது விளங்கும். சங்க காலத்தைத் தொடர்ந்து சங்கம் மருவிய காலத்திலும் பொய்ச் சாட்சியம் குறித்த அறிதல் இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

பொய்ச்சாட்சியம் குறித்த தெளிவும் விழிப்புணர்வும் எச்சரிப்பும் பின்னாளில் எழுந்த இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இதனை 'மன்றோரம்' எனும் வழக்கால் குறித்துள்ளனர்.

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே – மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை – நல்வழி 23

எனச் செய்யுள் இயற்றப்பட்டுள்ளது. மன்று என்பது முறைமன்றத்தைக் குறிக்கிறது. 'ஓர்ந்து நடவாமை'க்கு எதிர்ப்பதமாக ஓரம் என்பது அமைந்துள்ளது. மன்று + ஓரம் = மன்றோரம். அதாவது முறைமன்றத்தில் ஒருவருக்குச் சார்பாகப் பொய் சொல்லுவது எனப் பொருளாகும். இதனால் தமிழகத்தில் பழங்காலம் முதல் பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வும், பொய்ச்சாட்சி கூறுபவர்கள் மீதான வெறுப்புணர்வும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றன.

தடயங்களும் சாட்சிகளும்

குற்றவியல் சார்ந்த குற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் சாட்சிகள் தேவைப்படும். குற்றத்தைக் கண்ணால் பார்த்த சாட்சி, குற்றம் புரிவதற்குத் திட்டமிடலை அறிந்த சாட்சி எனச் சாட்சிகளை இன்றைய முறைமன்றம் ஏற்றுக் கொள்ளும். இதுபோன்ற நேரடிச் சாட்சிகள் கிடைக்காத சூழலிலும் கூட தடயங்களை வைத்துக் கொண்டு குற்ற வாளியைத் தீர்மானிப்பது வழக்கத்தில் உள்ளது. இவ்வாறு தடயங்களைக் கொண்டு குற்றத்தை உறுதிபடுத்தும் வழக்கம் சங்க இலக்கியம் காட்டியுள்ள தமிழகத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

நீங்கும்கால் நிறம்சாய்ந்து புணரும்கால் புகழ்பூத்து
நாம்கொண்ட குறிப்பு இவள்நலம் என்னும் தகையோதான்
எரிஇதழ் சோர்ந்துஉக ஏதிலார்ப் புணர்ந்தமை
***கரிகூறும் கண்ணி**யை ஈங்கு எம்இல் வருவதை?* – கலித். 78:11–14

என்கிற கலித்தொகைச் செய்யுளில் தலைவன் பரத்தையைப் புணர்ந்ததை மறுத்துக் கூறுகிறான். ஆனால் தலைவியோ அவன் வேறொரு பெண்ணைத் தழுவியுள்ளான்

என்பதை உறுதிபடக் கூறுகிறாள். தலைவியின் உறுதிக்குக் காரணமாக அமைந்தது தலைவன் கழுத்திலிருந்த மாலையாகும். வேறொரு பெண்ணைப் புணர்ந்ததால் அந்த மாலை கசங்கிப் போய் இருந்துள்ளது போலும். எனவே அந்த மாலையே சாட்சியாக அமைந்துவிட்டது எனச் செய்யுள் பதிவு செய்துள்ளது.

இந்தக் காட்சி அமைப்பின் மூலம், சங்க இலக்கியம் காட்டியுள்ள தமிழகத்தில் தடயங்களைக் கொண்டும் குற்றத்தைக் கண்டறியும் விழிப்புணர்வு இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

ஆய்வு முடிவு

இவற்றின் மூலம் அன்றைய காலக்கட்டத்தில் மக்களிடையே ஏதேனும் காரணம் பற்றி வழக்குகள் வந்துள்ளன என அறிய முடிகிறது. *அவ்வழக்கில் சரியான முடிவுகளைக் கொடுக்கச் சாட்சிகளைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்துள்ளது எனவும் அறியலாம். தரமான சாட்சிகள் எனச் சுட்டுவதற்குச் சில தகுதிகளை வரையறை செய்துள்ளனர் எனவும் அறியமுடிகிறது. மேலும், சாட்சிகள் அனைத்தையும் அப்படியே நம்பாமல் சாட்சிகளையும் ஆய்வு செய்து பொய்ச்சாட்சி எனக் கண்டறியும் தன்மையும் இருந்துள்ளது. மேலும், தடயங்களையும் சாட்சியாகக் கொள்ளும் தன்மையும் அறிவும் அக்காலத்தில் இருந்துள்ளது என்பதற்கும் இலக்கியச் சான்றுகள் கிடைக்கின்றன. எனவே, சங்ககாலத் தமிழகத்தில் வழக்கு உசாவுகை நடைமுறைகள் மிகச் சிறப்பாக இருந்துள்ளன எனவும் சாட்சியச் சட்டவியல் செறிவான நடைமுறையில் நிலவியது எனவும் தீர்மானிக்க முடிகிறது.*

அடிக்குறிப்புகள்

1. குறுந்தொகை (தமிழண்ணல் உரை), கோவிலூரர் மடாலயம், கோவிலூரர், 2002 (முதற்பதிப்பு), பக். 378
2. மேலது, பக்.52
3. மேலது, பக்.53
4. மேலது, பக்.54

மதிப்பிடப்பெற்றது

கீழ்க்கணக்கு நூல்களில் 'இளிவரல்' மெய்ப்பாடு

The emotion of disgust in keezhkanakku

ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin[3]

Abstarct: The first ever Tamizh grammatical book, Tholkaappiayam (Porulathikaaram) indicates the eight types of emotions in brief and explains that each emotion occur in four different elements. By the way, the emotion of disgust occurs by the following elements namely; Oldness, Sickness, Sadness and Softness. These elements are clearly explained by the poetic lines found in the Keezhkanakku in a detailed manner. Thus, this study reveals the lines which are exposing the emotion of disgust in Keezhkanakku by applying the Tholkappiyar words.

Date of submission: 2019-05-26
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: ஷா.முஹம்மது அஸ்ரின்
Email: smdazrin1998@gmail.com

Keyword: Tholkaappiyam, Keezhkanakku, Emotion of Disgust, Oldness, Sickness, Sadness, Softness, பாட்டு, பத்துப்பாட்டு, பதினெண் மேற்கணக்கு நூல்கள், அகம், புறம், ஆற்றுப்படை, எட்டுத்தொகை, சங்க காலத்தில், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காதலையும் வீரத்தையும், ஷா.முஹம்மது அஸ்ரின்.

சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களையும் பத்துப்பாட்டு நூல்களையும் "பதினெண் மேற்கணக்கு நூல்கள்" என அழைத்தனர். இவை காதலையும் வீரத்தையும் முதன்மையாக எடுத்தியம்பின. மக்களுக்கு அறத்தையும் அறம் தவறுவதால் ஏற்படும் விளைவுகளையும் வலியுறுத்த எழுந்த 18 நூல்களைப் "பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்" என வழங்கினர். இதனை

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி யென்பதூஉ ம்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு."[1]

என்ற வாய்மொழிப் பாடல் வழியாக அறிய முடிகிறது. இந்நூல்களில் வெளிப்படும் ஒல்காப் புகழ்த் தொல்காப்பியனார் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றான 'இளிவரல்' என்னும் மெய்ப்பாடு ஆய்வுப் பொருளாகின்றது.

---

[3] முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி–620020. smdazrin1998@gmail.com, 8122508520

மெய்ப்பாடு:

'மெய்ப்பாடு' என்னும் சொல்லுக்குப் 'பொருட்பாடு', 'வெளிப்பாடு', 'புலப்பாடு' எனப் பல விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. மெய்ப்பாடு என்பது "உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சி, சோகம் போன்ற உணர்ச்சிகளின் உடல் வழியான வெளிப்பாடு"[2]. எனவே, மெய்ப்பாடு என்றால் உடலால் வெளிப்படுத்தும் உள்ளத்து உணர்ச்சி என்பது தெளிவாகிறது. இதனை,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப."   (தொல்.1194)

என்ற தொல்காப்பிய நூற்பா தெளிவாக உணர்த்துகிறது.

இளிவரல்:

'இளிவரல்' என்னும் சொல்லை இளி + வரல் என்றும் இளிவு + அரல் என்றும் பகுக்கலாம். 'இளி' என்பதற்கு 'கலகலவெனச் சிரி', 'பரிகாசஞ் செய்', 'அவமதி' போன்ற பொருள்களும் 'இளிவு' என்பதற்கு 'இழிவு', 'நிந்தை' போன்ற பொருள்களும் அகராதியில்[3] கிடைக்கப்பெறுகிறது. 'இளிவரல்' என்பது 'இகழ்ச்சியிற் பிறப்பது' என இளம்பூரணர் உரையில் காணப்படுகிறது. இளிவரல் என்னும் மெய்ப்பாடு தனது பொருளைக் கொண்டு நான்கு நிலைகளில் தோன்றுமென்பதை,

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே." (தொல். 1197)

என்ற தொல்காப்பிய நூற்பா இளிவரல் என்னும் மெய்ப்பாடு தோன்றும் நிலைகளை விளக்குகிறது.

1. மூப்பு

'மூப்பு' என்னும் சொல்லுக்கு 'முதுமை', 'தலைமை' எனப் பல பொருள்களை அகராதியில்[4] காண முடிகிறது. இம்மெய்ப்பாடானது, இளமை நிலையாமையை மக்களுக்கு எடுத்தியம்பும் நோக்கில் கையாளப்பட்டுள்ளது. இதனை,

"தோற்றம் அரிதுஆய மக்கட் பிறப்பினால்,
ஆற்றும் துணையும் அறம்செய்க! – மாற்றுஇன்றி,
அஞ்சும் பிணிமூப்பு, அருங்கூற்றுடன் இயைந்து
துஞ்ச வருமே துயக்கு   (பழமொழி. 137)

என்ற பாடலில் முதிய வயதில் துயக்கு (அறிவின் மயக்கம்), நோய் போன்றவை தோன்றி இழிவுபடும் முன்னரே இளமை வயதில் அறத்தினைச் செய்திடுமாறு வழியுறுத்தப்பட்டுள்ளது.

மறுபிறப்பில் இழிநிலையை அடையாதிருக்க முதிய வயதிலும் நல்லொழுக்கத்தில் இருந்து வழுவாது வாழ வேண்டும் என்பதை,

"மறுபிறப்பு அறியாதது மூப்பு அன்று." *(முதுமொழிக்காஞ்சி. 50)*

என்ற பாடலடி உணர்த்துகிறது. மேலும், வாழ்நாள் முழுவதையும் நூல்களைக் கற்கச் செலவிட்டு, இழிவு தரக்கூடிய முதுமைத் தன்மையை அடையும் முன்னரே கொடுமையான உலக வாழ்க்கையைத் துறக்க வேண்டும் என்பதை

"நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு, என்று எண்ணி,
தலையாயார் தம் கருமம் செய்வார்." (நாலடி.52)

என்ற பாடலானது இளமையிலேயே செல்வத்தைச் சேர்த்து இழித்தற்குரிய முதுமையை அடையுமுன்னரே நல்வழியில் பயன்படுத்த வேண்டும் என எடுத்துரைக்கிறது.

"முன்னரே சாம்நாள் முனிதக்க மூப்புஉள,
பின்னரும் பீடுஅழிக்கும் நோய்உள – கொன்னே
பரவன்மின் பற்றன்மின்,பாத்துஉண்மின் யாதும்
கரவன்மின் கத்து உண்டாம் போழ்து." *(நாலடி.92)*

என்ற வெண்பா வாயிலாக விளக்குகிறது. கபிலர் தனது நூலில்,

"இளமையை மூப்புஎன்று உணர்தல் இனிதே" *(இனியவை நாற்பது.37)*

என்ற அடியில் முதிய வயதில் மூப்பை உணர்வதைக் காட்டிலும் இளமை வயதில் மூப்பை உணர்வது நன்று என்கிறார்.

2. பிணி

'பிணி' என்னும் சொல்லுக்கு 'நோய்', 'துன்பம்' ஆகிய பொருள்கள் அகராதியில்[5] காணப்படுகிறது. நோயும் துன்பமும் உலக உயிரினங்களின் இளமை வயதிலோ அல்லது முதுமை வயதிலோ தோன்றி இழிவை உண்டாக்கும் என்பதை,

"மூத்த இடத்துப்பிணி இன்னா" (இன்னா நாற்பது. 21)
"குழவிகள் உற்றபிணி இன்னா" (இன்னா நாற்பது. 35)
"குழவி பிணிஇன்றி வாழ்தல் இனிதே" (இனியவை நாற்பது. 12)

ஆகிய பாடலடிகளில் மூத்தோர் அடையும் பிணியும் குழந்தைகள் அடையும் பிணியும் துன்பத்தை உண்டாக்கும் எனக் கபிலர் உரைக்கிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருத்துவ நூல்களாகத் திகழும் ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் ஆகிய மூன்றும் பிணியைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளன.

"பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்" (திரிகடுகம்.88)

என்ற பாடலடியில் பிணி ஒருவனுக்கு வருத்தத்தை உண்டாக்கவல்லது என நல்லாதனார் கூறுகிறார். மேலும், கணிமேதாவியார் தனது நூலில்,

"இளமை கழியும் பிணிமூப்பு இயையும்" *(ஏலாதி. 21)*

என இளமை திரிந்து முதுமையும் பிணியும் இயைந்து நீங்காத வருத்ததை உண்டாக்கும் என்கிறார்.

"காத்து உண்பான் காணான் பிணி." *(சிறுபஞ்சமூலம், 7)*

என்ற அடி வாயிலாக குற்றமற்ற செல்வத்தினால் கிடைக்கப்படும் உணவை உண்பவன் பிணியின்றி வாழ்வான் எனக் காரியாசான் கூறுகிறார். இக்கருத்தையே கூடலூரர்க்கிழாரும் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"உண்டி வெய்யோர்க்கு உறு பிணி எளிது" *(முதுமொழிக்காஞ்சி.77)*

நாலடி நானூறும் நான்மணிக்கடிகையும் பெண்களின் சில குணங்களும் செயல்களும் பிணியை உண்டாக்கும் எனக் கூறுகிறது. இதனை விளம்பிநாகனார், வருவதறியாத பெண்டிர் நோய்க்கு ஒப்பாவர் என்கிறார்.

"பிணிஅன்னர் பின்நோக்காப் பெண்டிர்" *(நான்மணிக்கடிகை. 32)*

"...சிறுகாலை

அட்டில் புகாதாள் அரும்பிணி." *(நாலடியார். 363)*

என்ற பாடல் காலை நேரத்தில் அடுக்களையிற் சென்று உணவு சமைக்காதவள் தன் கணவனுக்குக் கொடிய பிணியாவாள் என்கிறது.

3. வருத்தம்

'வருத்தம்' என்னும் சொல்லுக்கு 'துன்பம்', 'களைப்பு', 'நோயாளியின் அபாய நிலை' எனப் பல பொருள்களைச் சங்க **இலக்கியச்** சொல்லடைவு குறிப்பிடுகிறது. மனிதனை அடையும் முதுமையும் பிணியும் அவனுக்கு நீங்காத வருத்தத்தை ஏற்படுத்தி இளிநிலையை ஏற்படுத்தும். பலரைத் துணையாகக் கொண்டு முறை அறியாது செய்யப்படும் செயல் வருத்தத்தை தரும் என்பதைத் திருவள்ளுவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்,

"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்." *(குறள். 468)*

பழமொழி ஆசிரியரான முன்றுரையரையனார் குற்றமற்ற செயலைச் செய்யும் மனிதருக்கு வருத்தம் விளைவதில்லை என்பதை நயமிக்க அடிகளால் விளக்கியுள்ளார்.

"ஒடுந்தார்க்கு இல்லை பெருக்கம்; வடுந்து அற
வல்லதற்கு இல்லை, வருத்தம்;" *(பழமொழி. 319)*

ஒருவனுக்குத் தன் வாழ்வில் பல வழிகளில் பலவற்றை எண்ணி வருத்தம் ஏற்படலாம். ஆனால், பிற உயிர்கள் இன்புற்று வாழத் தன்னை வருத்தி வாழ்பவர் அடைவது வருத்தமில்லை என்கிறார்.

"வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று." *(முதுமொழிக்காஞ்சி.47)*

4. மென்மை

'மென்மை' என்னும் சொல்லுக்கு 'மிருதுத்தன்மை' என்ற பொருளை "சங்கச் சொல்லடைவு அகராதி" தருகிறது. தெய்வப்புலவர்,

"நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து." *(குறள். 877)*

என்னும் குறளடியில் ஒருவன் தனது பலவீனத்தை(மென்மையை) பகைவர்க்கு வெளிப்படுத்தினால் துன்பத்தை உண்டாக்குமெனக் கூறுகிறார். சமணர்களால் இயற்றப்பட்ட நாலடிநானூறும் மென்மையைப் பின்வரும் பாடலடியால் விளக்குகிறது.

"மெல்லிய நல்லாருள் மென்மை" (நாலடி.188)

என்ற அடி, மென்மைத் தன்மையுடைய பெண்களிடம் மென்மையாக நடந்து கொள்ளாவிடின் நீங்காத வருத்தத்தை உண்டாக்கும் என்கிறது..

முடிவுரை

மனிதன் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளை மெய்ப்பாடு என்பர். அதனை எட்டு வகையாகப் பகுத்துள்ளனர் பழந்தமிழர். அத்தகு மெய்ப்பாடுகளுள் இளிவரல் என்னும் மெய்ப்பாட்டை நான்கு நிலைக்களனாகப் பகுத்து விளக்கியுள்ளது தொல்காப்பியம். இளிவரல் மெய்ப்பாட்டுணர்வைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள பல பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. தி.வை.சதாசிவ பண்டாரத்தார்,(1977), பக்கம்.29, தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.250-600), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
2. Tamil Oxford Living Dictionary
3. திவான்பஹதூர் ச.பவானந்தம் பிள்ளை, (1925), பக்கம்.66, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட், சென்னை.
4. மேலது. பக்கம்.96.
5. மேலது. பக்கம்.346.

பயன்பட்ட நூல்கள்

- சதாசிவ பண்டாரத்தார் தி.வை., 1977, *தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.250-600)*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
- சுப்பிரமணியன் ச.வே., 1998, *தொல்காப்பியம் தெளிவுரை*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- ..., 2008, *தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- தமிழ்த்துறை ஆசிரியர்கள், 2012, *தமிழ் இலக்கிய வரலாறு*, ஜமால் முகமது கல்லூரி வெளியீடு, திருச்சி.
- பவானந்தம் பிள்ளை ச.(தொ.ஆ.), 1925, *தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி*, மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்

Tolkippian way internal Mankind

ப.ராகசுதா/B.Ragasudha[4] & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar[5]

Abstract : Tolkippiar describes the sense of coexistence of one and the other as an ingredient, and all other things as a substance. Nachinarkarni also points out that in the field of Economics in Tolkappiyam, internal physics, geometry, physics, and sciences are directly related to the literature of Coimbatore. Intuitive grammar describes the thoughts that arise within the life course.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: ப.ராகசுதா & முனைவர் ம.செந்தில்குமார்
Email: malaisenthilptp@gmail.com

Keywords: Economics in Tolkappiyam, internal physics, Geometry, physics, sciences, Internal Mankind, ப.ராகசுதா, P.Ragasudha, Dr.M.Senthilkumar, தொல்காப்பியர், பொருளதிகாரம், அகத்திணை இயல், களவியல், கற்பியல், செய்யுளியல், முனைவர் ம.செந்தில்குமார்.

முன்னுரை

தொல்காப்பியர் ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற உள்ள உணர்வை அகப்பொருள் என்றும், அஃதொழிந்த ஏனையெல்லாவற்றையும் புறப்பொருள் என்றும் பகுத்துள்ளார். தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரம் என்ற பிரிவில் உள்ள அகத்திணை இயல், களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகியன கோவை இலக்கியத்திற்கு நேரடியாகத் தொடர்பு உடையன எனவும் நச்சினார்க்கியரும் சுட்டுகின்றனர். உயிர்கட்குஅகத்தே எழுகின்ற எண்ணங்களை அகப்பொருள் இலக்கணமாக விளக்குகின்றார்.

அகத்திணை இயல் கூறுகளை,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"(அகத்திணை, நூற்பா.1

என்று விளக்கம் தரும் தொல்காப்பியர் அகத்திணை கூறுபாடுகளாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழாக பகுத்துள்ளார்.

---

[4] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : ragasudhamphil@gmail.com

[5] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

அகம் என்பது ஒத்த பண்பு கொண்ட ஒருவனும் ஒருத்தியும் தம்முள் கொள்ளும் அன்பு முறையாகும். அது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைவது. அது தனித்த ஒருவருக்கு என்று சுட்டிக் கூறாத தன்மையைக் கொண்டது. உலகமக்கள் யாவர்க்கும் பொதுவானது எனலாம்.

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்க் கொளப் பெறார்"

என்ற நூற்பா விளக்கம் அளிக்கின்றது.

அன்பின் ஐந்திணை என்பது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உள்ளம் ஒத்த தூய காதல் வாழ்க்கையாகும். தலைவன் தலைவி தொடர்பு முறையில் இடம்பெறுகின்ற மாந்தர்களை அகத்திணை மாந்தர் என்பர். அந்த வகையில்தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி என்ற ஐவரின் பண்புகள் பற்றிய கருத்துக்களை எடுத்தியம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

தலைவன்

தலைவனும் தலைவியும் தொல்காப்பியர் கூறும் 'பால் வரைத் தெய்வம்' என்ற ஊழின் துணையால் எதிர்ப்பட்டு மற்றோர் அறியாமல் மறைவில் சேர்தல் களவாகும்.

ஒருவனும் ஒருத்தியுமாக எதிர்ப்பட்டார் இருவர் புனலாடு புல்சாய்ந்ததாற்போலத் தம் தலைமைக் குணங்களை இழந்து மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழ்வது இயல்பு. இங்ஙனம் கூடியவர்களை தம் வாழ்நாள் முழுவதும் கூடி வாழ்வர் என்ற கட்டாயம் இல்லை.

ஐயம்

களவு காலத்தில் தலைவியை முதன் முதலாகக் காணும் போது இவள் தெய்வ மகளோ என்று ஐயுற்ற தலைவனுக்கு கூற்று நிகழும்.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"(குறள். 1081)

என்று தலைவன் தலைவியின் புறத்தோற்றத்தைக் கண்டு ஐயப்படுவான். பிறகு ஐயுற்றத் தலைவன் ஐயங்களைந்து துணிதற்குரிய கருவிகளாக தலைவியிடம் காணப்படும் நிகழ்வுகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

"வண்டே இழையே வள்ளி பு+வே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (களவியல்.நூற்பா. 4)

இவையெல்லாம் தலைவன் உள்ளத்தில் ஏற்பட்ட ஐயத்தை களையும் கருவிகளாக அமைந்தன. இதனை புறப்பொருள் வெண்பாமாலையும் எடுத்துரைக்கின்றது.

"திருநுதல் வேர;வரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலத் சேவடியும் தோயும் அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
அகுமற்றிவள் அகலிடத் தணங்கே" (புறப்பொருள்வெண்பாமாலை.)

என்பன தலைவனுக்கு தணிவு ஏற்பட காரணமாய் அமைந்தன.

ஊர்தி

களவுக்காலத்தில் தலைவியைக் காணச்செல்லும் போதும் சென்று திரும்பும் போதும் தேர், யானை, குதிரை என்ற ஊர்திகளைப் பயன்படுத்தும் இயல்புடையவன்.

"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்

ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப"(பொருளியல். நூற்பா. 17)

களவொழுக்கத்தில் தேர் முதலியவற்றையும் பிறவூர்திகளையும் ஏறிச்சென்று கூடுதலையும் உரியவன் தலைவன் என்று உரையாசிரியர் நச்சினார;க்கினியர் விளக்கம் தருகின்றார்.

இதனை,

'நிலவு மணற் கொட்குமோர; தேருண்டெனவே" (அகநானூறு, பாடல் எண். 20)

என்ற அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

They say that lovers will gave car, elephant, house and such others as conveyances of riding for their journey. இலக்குவனார். களவொழுக்கத்தில் தலைவனுக்கு உள்ள மனநிகழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

பொருள்வயிற் பிரிதல்

தலைவியைத் தமரினின்று பெறுதற்கரிய காலத்தில் தலைவன் அனபும் அறனும் இன்பமும் என்பனவற்றை நினைக்காமல் வரைவிடை வைத்து பொருள்வயிற் பிரிவான். அல்லது நாணத்தை விட்டு தமரிடம் முதியோரை அனுப்பி தலைவியை மணம்புரிந்து கொள்ளத் துணிவான்.

"பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக் கைம் மிகுதல் உண்மையான
அன்பே யறனே யின்ப நாணாடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்
ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே" (பொருளதிகாரம். நூற்பா. 19)

தலைவன் களவுக்காலத்தில் பொருள்வயிற் பிரிய விரும்பகிறென் என்று தலைவியிடம் கூறும்போது அன்பையும், அறத்தையும், இன்பத்தையும் நினைத்து வருத்தபப் படமாட்டான் .ஏனென்றால் இல்வாழ்க்கைக்கு பொருள் இன்றியமையாதவை என்பதை நன்கு உணர்ந்தவன். மேலும்,

"சுறமென மொழிதலும் வரைநிலையின்றே" (பொருளதிகாரம். நூற்பா. 20)

தலைவன் பொருள்வயிற் பிரியும்வழி உடன்போக்கு செல்லத் துணிந்த தலைவிக்குத் தான் போகிறவழி கல்லும் கரடுமாகிய சுறம் என்று கூறி தலைவியைத் தன்னுடன் உடன்னோப்பு அழத்துச் செல்லமாட்டான். ஏனென்றால் தலைவன் பாலைநிலத்தின் கொடுமையை எண்ணி மெல்லயளாகியத் தலைவியால் பாலையின் கொடுமையை தாங்கிக் கொள்ள இயலாது என்று எண்ணும் மனப்பாங்குடையவனாகத் திகழ்கிறான். இதன் மூலம் தலைவன் தலைவி மீது கொண்ட அன்பையும் பொருள் மீது கொண்டப் பற்றையும் உணரமுடிகின்றது.

தலைவி

தலைவனைக் களவுக் காலத்தில் முதன்முதலாகக் காணும் போது இவன் மரனோ, குமரனோ என்று ஐயுறுதல் தலைவியிடம் நிகழ்வதில்லை என்பதை தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. தலைவிக்கு அதாவது பெண்களுக்கே உரிய இயல்பான குணங்களாக,

"செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பாலான"(பொருளதிகாரம். நூற்பா. 14)

எனும் நூற்பா பெண்களுக்குரித்தான இயல்புகளை எடுத்துரைக்கின்றது. தலைவி அடக்கம், அமைதி, மனம்கோடாமை, எடுத்துரைத்தல், அறிவு, அருமை, அச்சம் போன்ற குணங்களைக் கொண்டவள்.

பெண்களுக்குரிய பண்புகள்

தலைவன் தனது பரத்தமையை மறைக்கும் போது தலைவி மடனின்றித் தான் அறிந்ததாகப் பேசுவாள். பெண்களுக்காண பண்புகளாக அச்சம், மடம், நாணம் ஆகிய மூன்றினையும் தொல்காப்பியம் சுட்டுகின்றது.

"அச்சமும் நாணும் மடனுந் துறுத்த

நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"(களவியல் நூற்பா. 8)

என்ற நூற்பா பெண்களுக்குரிய பண்புகளாக குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. இதனை தொல்காப்பியர்

"கற்புங் காமமும் நற்பால ஒழுக்கமும்
மெல்லி;யற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்" (கற்பியல் நூற்பா. 11)

கற்பும் காமமுமாகிய இரண்டும் தாய்த்தன்மைக்குரிய குணங்களாகும். கணவன் துன்பத்தால் வருந்துகின்ற போது அவனுக்கு அமைதி மொழி கூறுவதும், நல்லாற்றுப் படுத்துவதும் இன்னோரன்ன பண்புகளுக்கும் இலக்கணமாக அமைபவள் தலைவி என்பதை அறிய முடிகின்றது.

ஊடல்

தலைவன் தான் பரத்தையிடம் சென்றுவந்த புறத்தொழுக்கத்தை மறைத்த யான் புது யானை காண்பதற்காகச் சென்று தங்கினென் என்று கூறுவான். அதற்கு தலைவி அந்த யானை நல்ல அழகுடையதாயிருந்தது. (பரத்தை) என்பதை உணர்ந்து பேசுவாள். தலைவனுடைய பரத்தை ஒழுக்கத்தை தான் அறிந்தும் அறியாதாள் போல் அவனிடம் கூடியிருக்கும் போதே அறிந்தவளாகப் பேசும் இயல்புடைய மனப்பக்குவம் உடையவள் என்பதை உணரமுடிகின்றது.

"உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர;தல் கிழத்திக்கில்லை"(பொருளதிகாரம். நூற்பா. 8)

தலைவன் பிரிவால் உடலுறுப்பும் உயிரும் பொலிவிழந்து துன்பத்தால் வாட்டமுற்ற போதும் தலைவன் இருக்கும் இடம் சென்று சேர வேண்டும் என்று தலைவி எண்ணமாட்டாள். துலைவன் வருவதாகக் கூறிச்சென்ற பருவம் தொடங்கும் போதே அப்பருவம் முடிந்துவிமட்டது போல தலைவி பேசுவாள். அவ்வாறு கூறுவது தலைவியின் மடன், வருத்தம், மருட்கை போன்ற காரணங்களால் ஏற்படுவதுண்டு. இதனை தலைவன் பிரிவு உணர்ந்த வழி அவனிடம் தான் உயிர் வாழ முடியாது என்று தலைவி கூறுகிறாள்

முடிவுரை

தொல்காப்பியர் இயற்றிய பொருளதிகாரத்தில் அகத்திணை, களவியல், கற்பியல், பொருளியல் போன்ற இயல் பகுப்புகள் அமைந்துள்ளன. அவ்வியல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என அகத்திணை மாந்தர;களைப் படைத்து அவர்களுடைய பண்புகளை படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

பார்வை நூல்கள்

- அருணாசலம் பிள்ளை மு. (1994), தொல்காப்பியம் – பொருளதிகாரம் *(உரைவளம்) அகத்திணையியல். மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.*
- பரிமேலழகர் (உரை), (2010) திருக்குறள், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- வேங்கடசாமிநாட்டார், ந. வ. (1969). அகநானூறு (தொகுதி.1,2,3). சென்னை: கழகவெளியீடு.

மதிப்பிடப்பெற்றது

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும்

Food Economy of Paanar is Political Tradition

ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar[6]
முனைவர் ம.செந்தில்குமார்/ Dr.M.Senthilkumar[7]

Abstract: What is the basis of the food economy of paanar. Music, singing and singing is a profession of fashion. They do not produce food for themselves. They spend their entire lives playing music. They praise the ruler of the country, sing his talents and sing their gifts and fulfill their food needs. They share their wealth without having to pay for themselves. Trafficking in the poverty of paanar is inherited by the king and the donor of the rich. It is the duty of the king to protect the country and to protect the citizens. It is a political tradition to enrich the lives of the people who seek it and enrich their lives and lives.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: ல.கு.சு.இராஜ்குமார் & முனைவர் ம.செந்தில்குமார்
Email: malaisenthilptp@gmail.com

Keywords: Food, Politics, Economy, Counseling, Attributed to the poverty of the scholars, Poverty level of Paanar, Paanar life, Donor, The king's hospitable legacy, L.K.S.Rajkumar, Dr.M.Senthilkumar, The tradition of greeting the king, பாணர், உணவுப்பொருளாதாரம், இசைத்தலும், பாடல் பாடி, பண், அரசியல், மரபு, ல.கு.சு.இராஜ்குமார், முனைவர் ம.செந்தில்குமார்.

பாணர்களின் உணவு பொருளாதாரம் எதை அடிப்படையாக வைத்து செயல்படுகிறது. இசைத்தலும், பாடல் பாடி, பண் அமைத்தலும் பாணர்களின் தொழிலாகும். தாமாக முயன்று தங்களுக்குத் தேவையான உணவு பொருட்களை உற்பத்தி செய்வதில்லை. முழுநேரத்தையும் இசைக்காகவே செலவழிக்கின்றனர். நாட்டை ஆளும் அரசனை புகழ்ந்து அவனுடை ஆற்றல்களை பாடலாகப் பாடி பரிசுகளை பெற்று தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். கொடையாகப் பெற்ற பெரும் செல்வத்தை தமக்கென முழுவதும் வைத்துக் கொள்ளாமல் தம் சுற்றத்துடன் பகிர்ந்து வாழ்கின்றனர். பாணர்களின் வறுமையைப் போக்குவது அரசர் மற்றும் வள்ளல்களின் கொடை மரபுபாகிறது.

[6] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : lksrkumar@gmail.com

[7] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

நாட்டை காப்பதும் குடிமக்களை தம் கண்போல் காப்பதும் அரசனின் கடமையாகிறது. இதில் தன்னை நாடிவரும் மக்களின் குறைகளைக் களைந்து அவர்களின் வளத்தையும் வாழ்வையும் செம்மையாக்குவது அரசியல் மரபாகும்.

உணவு

மனிதன் உயிர்வாழ மூன்று இன்றியமையாத பொருள்கள் தேவைப்படுகிறது. அவை, 1. உணவு, 2. உடை, 3. உறையுள். இவற்றில் முதன்மையாக விளங்குவது உணவேயாகும். பசி வந்தாள் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவேம் என்றான் பாரதி. எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் இல்லையேனில் இந்நாடு அழிய வேண்டும் என்றவர் கண்ணதாசன்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம்.18:19-20)

என்ற பாடலடிகள் மூலம் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் எனும் புலவர் உணவின் இன்றியமையாதத் தன்மையை விளக்குகிறார்.

அரசியல்

ஒரு நாட்டினுடைய ஆட்சி முறைகள், அவர்கள் செய்யும் செயல்கள், போடும் சட்டங்கள் அனைத்தும் அரசியல் எனப்படும். எத்தகைய அரசியல் முறை இருந்தாலும் அவை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்படும் விதத்தில் அமைய வேண்டும்.

"உறுபொருளும் உல்கு பொருளும் தன்ஒன்னார;த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்.756)

அரசனின் தலையாயக் கடமை, தனக்குப் பொருள் வரும் வழிகளை அதிகரிக்கவேண்டும். வந்த பொருள்களை காப்பாற்றவும், அவ்வாறு காப்பாற்றிய பொருள்களை பிறர; கவராத வண்ணம் பாதுகாக்கவும் வல்லவனாக அரசன் திகழவேண்டும். சேகரித்த பொருட்களை அறம், பொருள் வழியே செலவு செய்யவேண்டும். இதனை,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள்.385)

என்னும் குறட்பாவில் வள்ளுவர; கூறியுள்ளார;.

பொருளாதாரம்

"மானுட வாழ்க்கையின் அடிப்படையே பொருள்தான். வாழ்க்கை ஆதாரம் பொருள். ஆதனால்தான் பொருளாதாரம் என்று பெயர் வைத்தார்கள் என்று எல்.கே.அக்னிபுத்ரன் தம்முடைய செம்மொழி இலக்கியமும் சமூகவியல் கோட்பாடும், ப.6, என்னும் நூலில் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் உயர்வுக்கும், ஒரு தனிமனிதனின் உயர்வுக்கும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உயர்வுக்கும் பொருள் இன்றியமையாததாகத் திகழ்கிறது.

உயிர்கள் மேல் அருள் இல்லாதார்க்கு வீட்டுலகத்து இன்பம் இல்லை. பொருள் இல்லாத்தார்க்கு இவ்வுலக இன்பம் இல்லை,

"அருள்இல்லாருக்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள்.247)

என்பதை வள்ளுவரின் குறள் வழியே அறியலாம்.

பாணர் – பொருள் விளக்கம்

பண் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்து முதல் நீண்டதுதலான் 'பாண்' என்பதாகும். பாண் என்பது பாண்குடி, பாண்சேரி பாண் கடன் எனப் பல சொற்களின் வேர்ச் சொல்லாகும். பாண் என்பது அர் என்னும் பலர் பால் ஈறு பெற்றுப் பாணர் என்றாயிற்று. பண் இசைப்போர் பாணர் எனத் தொழிலாலகு பெயராகவோ பண்பாகு பெறராகவோ அமைந்துள்ளது.

பாணர்களில் ஆடவரைச் சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைகாரர், பாணரென்ப என பிங்கல நிகண்டு பொருள் தருகிறது. பேண்டிரைப் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ பாண்மளாகும் எனத் திவாகரமும் கூறுகின்றன.

பாணர் என்னும் சொல் பொதுநிலையில் பண்ணிசைத்துப் பாவோரைக் குறிக்கும். பண் இசைத்துப் பாடுவதால், பண்ணுக்கு ஏற்றப் பாடல்களைப் பாடுவதால் அவர்கள் பாணர்கள் எனப்பட்டார்கள். இவர்கள் பாட்டு அறிந்தவர்கள்இ கற்பனையும், கவித்துவமும் கொண்டவர்களாக விளங்கினர்.

ஆற்றுப்படுத்துதல்

வள்ளலை நாடிச் சொன்று வாழ்த்திப் பாடி பொருள் பெற்று வறுமையைப் போக்கிக் கொள்வது பாணர்களின் மரபாகும். ஒரு புரவலனிடம் சென்று பொரும்பொரும் பரிசிலாகப் பொற்றுவந்த பொருநர், பாணர், விறலியர், கூத்தர், புலவர் ஆகியோருள் ஒருவர் பரிசில் பெறாதார் ஒருவர்க்குத் தாம் பெற்ற பெருவளத்தைச் சுட்டிக்காட்டி, அதனை நல்கிய தலைவன்பால் செல்வதற்குரிய வழிகளை எடுத்துரைப்பது ஆற்றுப்படை எனப்படும். இதனை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (தொல்.புறத்.நூ.36)

என்னும் தொல்காப்பிய புறத்திணை நூற்பாவில் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

புலவர்களின் வறுமைக்கு காரணம்

1. புலவர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்து உழைத்து பொருள் தேடுவதில் காலம் கழிக்காமல், எண்ணி எண்ணிப் புலமை தேடி வாழ்ந்த வாழ்வு.

2. புலவர்களின் பெருமை உணர;ந்த புரவலர;கள் நல்கிய பெரும் பொருள்களை வைத்துக் காக்கும் வன்நெஞ்சம் இன்றி தம்மிடம் இருக்கும் பொருட்களை பிறருக்கு கொடுத்து வாழ்ந்த எளிமை.

3. இவற்றால் ஏற்பட்ட வறுமையின் காரணமாக புலவர்கள் பழுமரம் தேடும் பறவைபோல வழங்கும் புரவலர;களை நாடிச்சென்றனர;.

4. எனவே பாணர்கள் கலைவாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதாலும், கலையின் வளர்ச்சிக்கு தம்மை அர்பணித்துக் கொண்டதாலும் கலைக்கே முக்கியத்துவம் அளித்தனர். வாழ்வில் பொருள் சேர்த்தலுக்கு பாணர்கள் முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பது சங்க பாடல் உணர;த்தும் உண்மையாகும்.

பாணர்களின் வறுமை நிலை

குப்பையில் கிடக்கும் வேளைக் கீரையை விரும்புவார் பிறர் இன்மையால் அது கிடைத்தது. அவ்வாறு எளிதில் கிடைத்த கீரைக்கு உப்பு இட்டுச் சமைத்தற்கும் இயலாத வறுமை நிலையில் உள்ளனர். உப்பு இல்லாமல் சமைத்த அக்கீரையை பிறர் காணதபடி கதவடைத்து தம் சுற்றத்துடன் உண்டனர். இதனை,

"வளைக்கை கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேலை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி கடைஅடைத்து" (சிறுபாண். 136-138)

என்னும் சிறுபாணாற்றுப்படையில் வறுமையின் பொருட்டு உண்ணும் உணவின் சிறுமையை ஊரார் காணதவாறு கதவடைத்து உண்ட நிலையை அறியமுடிகிறது.

"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒழுக்கலொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின் நீடுஇன்று
எழுமதி வாழி எழின் கிழவ" (பொருநராற்றுப்படை.61 - 63)

கொள்வது போன்ற பசியாலே பாணனும் அவனுடைய சுற்றத்தாரும் பெரிதும்; வாடியிருக்கின்றனர். பாணன் தன் சுற்றத்துடன் நெடுநாட்களாக பசியால் துன்புற்றிருக்கின்றனர். அத்தகைய துன்பத்திலிருந்து நீங்கி வாழ உடனே எழுந்து வா என பாணனை ஆற்றுப்படுத்துவதிலிருந்து நாம் பாணருடைய வறுமையும் பசி துயரையும் அறியமுடிகிறது.

பாணர் வாழ்வு

சில பாணர்கள் தாம் துய்ப்பதற்கு மட்டுமின்றிப் பிறருக்குக் கொடுப்பதற்காவும் பொருளை இரந்தனர். இதனை,

"கட்கேள்விக் கவை நாவின்
நிறன் உற்ற அராஅப் போலும்
வறன் ஒரீஇ-வழங்கு வாய்ப்ப
வடுமதி அத்தை கடுமான் தோன்றல்!" (புறம்.352:14-16)

என்ற வரிகளில் நிறம் பொருந்திய பாம்பு தன் தோலை உரித்து நீக்கிளாற் போல வறுமை நீங்கிப் பிறருக்கும் யாம் வழங்கும் வண்ணம். எமக்கு வேண்டுவன தந்து விடை தருக என வேண்டுவதை அறியலாம்.

கொடை

பொருள் வேண்டி வருபவர்க்கு அவர்களின் வறுமை போக்க கொடை வழங்கும் முறையினை புறப்பொருள் வெண்பாமாலை,

"ஈண்டிய நிரை ஒழிவின்றி
வேண்டி யோர்க்கு விரும்பி வீசின்று"
"அங்கட் கிணையன் துடியன் விறலிபாண்
வேங்கட்கு வழசஉ ர் விலையாகும் - செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையால் தந்த வளம்" (புற.வெ.16)

இவ்வாறு குறிப்பிடுகிறது. மேலும், பொருள் உள்ளவரையே உலகம் மதிக்கும், பொருள் இல்லாதவரை இவ்வுலகம் எள்ளும்,

"பொருளல்ல வரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" (குறள்.751)

யாரிடத்தில் அதிகமாகப் பொருள் இருக்கிறதோ அவர்களுக்கே இவ்வுலகத்தில் மதிப்பு உயர்கிறது.

அரசனின் விருந்தோம்பும் மரபு

கரிகாற் பெருவளத்தான் தன்னை நாடி வரும் இரவலர்க்கு வேண்டியவற்றை தந்து காத்து ஓம்பினான்;. இரவலரின் வறுமை நிலையினைப் பிறர் அறியக் காரணமாகவும், செல்வம் உடையவரிடம் இருந்து தன்னைப் பெரிதும் வேறுபடுத்திக் காட்டுவனவும் கந்தலாடைகளே ஆதலின், அவற்றைப் போக்கிச் சிறந்த ஆடைகளை உடுக்கச் செய்தவழி, இரவலன் தன் கேளிரொடு கேளிராய் நாணமின்றிப் பழக ஏதுவாகலான் இரவலனின் ஏழ்மை உணர்ச்சியை மாற்றப் பண்புடைய வள்ளல்கள் இம்முறையை பின்பற்றினர். இச்செய்திகளை,

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கிந்து
அரவுஉரி அன்ன அறுவை நல்கி
மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து
இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறைய பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட

ஆர உண்டு பேரஞர் போக்கி
செருக்கொடு நின்ற காலை" (பொருநராற்றுப்படை. 82-89)

மேலும், ஒருவனுடைய வறுமை நிலையினை பிறர் அறிய வெளிப்படுத்துவது அவன் உடுத்திய கந்தல் ஆடையேயாம். எனவே மான உணர;ச்சி மிக்க பரிசிலன் மனத்தை மகிழ்விக்க, முதலில் அவனது ஆடையை அகற்றி, அவனுக்குச் செல்லச் சிறப்புடைய ஆடை அணிவித்தலையே வள்ளல்கள் தம் முதற் கடமையாகக் கொண்டனர். இதனை,

"நீசில மொழியா அளவை மாசில்
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ" (சிறுபாண்.235-236)

என்னும் பாடல் வரிகளில் காணமுடிகிறது. மேலும்,

"அந்நிலை அணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
அவியன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்போர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ" (பெரும்பாண்.467-470)

புலவர்க்கு வழங்கும் நன்னனது கொடைச் சிறப்பு கார்மேங்கள் மழை சொரிந்தாற் போல, ஆடை, உணவு, அணிகலன்கள், தேர், யானை, குதிரை, பசு, பொருட்குவை ஆகியவற்றைக் கூத்தர்க்கும், விறலியர்க்கும், புலவர்க்கும் அவர் தம் சுற்றத்தார்க்கும் வழங்குவான். இதனை,

"உவந்த உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி
இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவல் தந்த பைந்திணைத் தடியொடு
நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது"(மலைபடு.560-564)

என்னும் மலைபடுகடாம் பாடலில் நன்னனது கொடை தன்மையை அறியலாம்.

பாணர்களின் கொடும் பசி வறுமைத் தீர மதம் பொழிகின்ற கதுப்பினை உடைய, கொலைத்தொழில் புரியும் சிறுகண் யானையோடு, பெரிய தேரினையும் பரிசாக வழங்கினான் நல்லியக்கோடன் என்னும் செய்தியை,

"அழிபசி வருத்தம் வீட பொழிகவுள்
தறுகண் பூட்கை தயங்கமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவன் நின்றும் வருதும்" (சிறுபாண். 140-143)

இப்பாடல் வரிகள் வாயிலாக அறியமுடிகிறது.

அரசரை வாழ்த்தி பாடும் மரபு

முழவு, பெருவங்கியம், யாழ் என்னும் இசைக்கருவிகளின் ஒலியோடு இயைந்து விறலியர; பாடுவர். அவர்கள் அரசனை வாழ்த்திப் போற்றும் மரபு

அறிந்தவர். அவர்கள் முதலில் கடவுளை வாழ்த்திப் பாடிப் பின்னர் அரசனைப் போற்றுவர். புதியதாகப் பாடப்படும் பாடல்களைப் பாடி, வாழ்த்தும் மரபு பின்வரும் பாடலில்,

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்றா நல்லிசைச் சென்றோ ரும்ப" (மலைபடு.534-540)

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தொகுப்புரை

சங்க காலத்தில் நாட்டையும் மக்களையும் காக்க ஒரு தலைமைப் பண்பு கொண்ட அரசன் தேவைப்பட்டான். வீரமும் கொடைத்தனமையும் தன்னுடைய இரண்டு கண்களாக போற்றும் பண்புடையவனே அரசனாவான். மக்கள் ஈட்டும் வருவாயில் ஒரு பகுதியை அரசனுக்கு வரியாக செலுத்தினர். அதைக் கொண்டு கொடைகள் பல வழங்கினான். யாழ், இசை, பண் கொண்டு பாடி, ஆடி அரசனை மகிழ்விக்கும் தொழிலை மேற்கொண்ட பாணர், விறலியர், கூத்தர், போன்றோர் தங்களுக்கான வேறு எந்த தொழிலையும் மேற்கொண்டதில்லை. இடம்விட்டு இடம் பெயர்ந்துக் கொண்டே இருந்தனர். ஆரசர் வள்ளல்களை வாழ்த்தி பாடி பரிசுகளைப் பெற்று அதைக்கொண்டு உணவுப்பொருள் ஆதார தேவையை பூர்த்தி செய்தனர். பாணர்களின் வறுமையை களைந்து வளமையை சேர்ப்பது அரசனின் கடமையயாகிறது.

பார்வை நூல்கள்

- இளம்பூரணர் (உ. ஆ.), (1969), தொல்காப்பியம் பொருளதிகாரம், சென்னை: கழக வெளியீடு.
- சுப்பிரமணியன் ச.வே. (உரை), (2004), பத்துப்பாட்டு, கோவிலூர்: கோவிலூர் மடாலயம்.
- நாகராசன் வி, (உரை), (2017), பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- பரிமேலழகர் (உரை). (2010), திருக்குறள், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- புலியூர்க்கேசிகன் (உரை), (2015), புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம்.

மதிப்பிடப்பெற்றது

பத்துப்பாட்டில் உணவு

Food in Paththuppattu

சி.விஜயன்/ C.Vijayan[8] & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar[9]

Abstract: In Tamil literature alone, it has got food. Food is considered an essential part of everyday life. In the Sangam literature of the ten books, various stories are reported in the hill country, but the food is mentioned in great detail. In this way, the study of the diets of the ancient inhabitants of the respective land dwellings found in the book is studied.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: சி.விஜயன் & முனைவர் ம.செந்தில்குமார்
Email: malaisenthilptp@gmail.com

Keywords: Foxtail millet, Kodo millet, little millet, Bamboo Rice, Rye, Rice, White Rice, Fermented Rice, Flakes, Jack fruit. Mango, Banana, Meats, C.Vijayan, முனைவர் ம.செந்தில்குமார், பத்துப்பாட்டில் உணவு, உணவு, பத்துப்பாட்டு, தினை, மூங்கிலரிசி, மா, பலா, இறைச்சி, காட்டுப்பன்றி இறைச்சி.

தமிழ் இலக்கியங்களில் உணவிற்கு என்று தனியிடம் பெற்றிருக்கிறது. உணவு அன்றாட வாழ்க்கையில் ஒரு அத்தியாவாசியமானதாக கருதப்படுகிறது. சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டு நூல்களுள் மலைபடுகடாமில் பல்வேறு செய்திகளை கூறியிருந்தாலும், உணவுகளைப் பற்றி அருமையாக வருனணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வகையில் இந்நூலில் காணலாகும் அந்தந்த நில குடியிருப்புகளின் பழங்கால மக்களின் உணவுகளை பற்றி ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

குறிஞ்சி நில மக்களின் உணவு

மலையும் மலை சார்ந்த இடமாக அமைவது குறிஞ்சி நிலமாகும். இந்நில மக்கள் தினை, மூங்கிலரிசி, மா, பலா, இறைச்சி, காட்டுப்பன்றி இறைச்சி போன்ற உணவுகளை இலக்கியத்தில் பயன்படுத்தியுள்ளனர். நன்னனது மலையின் அடிவாரத்தில் இருந்த சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் அன்றாட வாழ்க்கையில் தினமும் தினைச் சோற்றையும், நெய்யில் வெந்த இறைச்சியையும் உண்டனர;. இதையே விருந்தினர்க்கும் கொடுத்து மகிழ்ந்தனர். இதனை,

"பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு

---

[8] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : kurinji0807@gmail.com

[9] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

குருஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்"

– மலைபடுகடாம் 168-169

என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகிறது. இதை தவிர அருவியால் அடித்துவரப்பெற்ற பலாப் பழத்தின் கொட்டையுடன் மானின் கொழுத்த இறைச்சியையும், புளி, மா, பசு, எருமை இவற்றின் மோருடன் மூங்கில் அரிசி அனைத்தையும் சேர்த்து வேகவைத்து உண்டனர் என்று மலைபடுகடாம் கூறுகின்றது. இந்த செய்தியை,

"அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லின் அரிஉலை ஊழ்ந்து
வழைஅமை சாரல் கமழத் துழைஇ
நறுமலர் அனிந்த நாறுஇரு முச்சிக்
குறமகள் ஆக்கிய வால்அவிழ் வல்சி
அகம்மலி உவகை ஆர்வமொடு அளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவீர்;"

– மலைபடுகடாம் 174-185

பாடடிகள் விளக்குவதை அறிய முடிகிறது. மேலும் தினைப்புனத்துக் காவலர்களால் கொள்ளப்பட்ட காட்டுப்பன்றியின் மயிரை நீக்கி மூங்கில் உரசுதலால் ஏற்பட்ட காட்டுத் தீயில் தசையை வாட்டித் தின்றனர். இதற்கு சான்றாக,

"கழுதின் சேணோன் ஏவொடு போகி
இழுதின் அன்ன வால்நிணம் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலம்தின் மருப்பின்
நெறிக்கெடக் கிடந்த இரும்பிணர்; எருத்தின்
இருள்துணிந் தன்ன ஏனம் காணின்
முளிகழை இழைந்த காடுபடு தீயின்
நளிபுகை கமழாது இறாயினிர் மிசைந்து"

– மலைபடுகடாம் 243-249

என்ற பாடலடிகளின் மூலம் நாம் அறியமுடிகிறது. கூத்தர்கள் நன்னனை காண செல்கின்ற போது வழியில் வேடர் கூட்டத்தை கண்டால் நாங்கள் நன்னனை காண செல்கிறோம் என்று கூறினால் உடனே வேடர் கூட்டத்தினர் தசையும், கிழங்குகளையும் சேர்த்து சமைத்த உணவினை தருவார்கள் என்று மலைபடுகடாம் கூறுகிறது. இதனை,

"தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ
ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை"

- மலைபடுகடாம் 425-426

வேடர்கள் கொடுத்த உணவாக பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது. இங்கு கூறப்பட்ட உணவினையே குறிஞ்சி நில மக்கள் உண்டனர் குறிப்பிடப்படுகின்றன.

முல்லை நில மக்களின் உணவு

காடும் காடு சார்ந்த இடமாக அமைவது முல்லை நிலமாகும். இந்நிலத்தில் மக்கள் உண்ணும் உணவாக தினை. வரகு, சாமை, அவரை, மூங்கிலரிசி, நெல் அரிசி, புளி, வெள்ளாட்டு இறைச்சி, தினைமாவு போன்றவற்றை இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. முல்லை நில மக்கள் வரகரிசி சோற்றையும், அவரைப் பருப்பையும் கலந்து செய்த உணவினையும், நண்டுகளின் சிறு பார்ப்பினைப் போன்ற தினைச்சோற்றையும் உணவாக உட்கொள்கின்றனர். இந்த செய்தியைப் பற்றி பாடல் வரிகளாக,

"இருங்கிளை ஞெண்டின் சிறுபார;ப்பு அன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்"

- பெரும்பாணாற்றுப்படை 167-168

"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன
குறுந்தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றி
புகர்இணர் வேங்கை வீ கண்டன்ன
அவரைவான் புழுக்கு அட்டி பயில்வுற்று"

- பெரும்பாணாற்றுப்படை 192-195

பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. மேலும் அரிசியும் வெள்ளாட்டு இறைச்சியுடனும் வெண்ணெய் உள்ளே இட்ட செய்த உணவையும், தினைமாவோடு வெண்ணெய் கலந்த உணவையும் உண்டனர் என்று கூத்தராற்றுப்படை கூறுகிறது. இதனை,

"பொன் அறைந் தன்ன நுண்நேர் அரிசி
வெண் எறிந்து இயற்றிய மாக்கண் அமலை
தண்ணென் நுண்இழுது உள்ளீடு ஆக
அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்
விசையம் கொழித்த பழி அன்ன
உண்ணுநர்த்தடுத்த நுண் இடிவணை"

- மலைபடுகடாம் 440-445

என்ற பாடலடிகளின் மூலம் நாம் அறியமுடிகிறது.

மருத நில மக்களின் உணவு

வயலும் வயல் சார்ந்த இடமாக அமைவது மருத நிலமாகும். சோழ நாட்டில் காவிரி பாய்வதால் எப்போதும் வளமுடையதாக இருக்கும் மருத நிலத்தில் கரும்பும் நெல்லும் மிகுதியாக உள்ளன. இதனால் சுவையான கரும்பையும், அவலையும் மற்ற நிலத்தாரிடம் கொடுத்து மானின் இறைச்சியையும் மதுவையும் பெற்று உண்டனர் என்று சான்றுடன் காட்டுகிறது பொருநராற்றுப்படை. இதனை,

"தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்"

– பொருநராற்றுப்படை 216-217

ஒய்மானாட்டு மருதநிலத்தார் வெண்சோற்றையும், நண்டும், பீர்க்கங்காயும் கலந்த கூட்டையும் சேர்த்துக்கொண்டு உண்டனர் என்று சிறுபாணாற்றுப்படையும், தொண்டைநாட்டு மருத நிலத்தில் உள்ள சிறு பிள்ளைகள் காலையில் பழையசோற்றை உண்டனர். பின்பு பழைய சோற்றின் மேல் வெறுப்பு ஏற்பட்டால் அவலை இடித்து உண்டனர் என்றும் நெல் சோற்றைப் பெட்டைக்கோழிப் பொரியலோடு சேர்த்து உண்டனர் என்றும் சோற்றோடு பலாபழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளிக்கிழங்கு போன்றவற்றையும் சேர்த்து உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படையும் கூறுகிறது. இந்த செய்தியை,

"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர;"

– சிறுபாணாற்றுப்படை 193-195

"கருங்கை வினைஞர் காதல் அம்சிறா அர்
பழஞ்சோற்று அமலை முனைஇ வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து அயல"

– பெரும்பாணாற்றுப்படை 223-226

"மல்லல் போர்ஊர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்"

– பெரும்பாணாற்றுப்படை 254-256

"தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழ்இல் தாழைக் குழவித் தீம்நீர்
கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பி ஏய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனிவெண் பழம்
திறள் அரைப்பெண்ணை நுங்கொடு பிறவும்

தீம்பல் தாரம் முன்னுயின் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவிர்"

- பெரும்பாணாற்றுப்படை 356-362

என்ற பாடலடிகளின் மூலம் நாம் அறியமுடிகிறது.

நெய்தல் நில மக்களின் உணவு

கடலும் கடல் சார;ந்த இடமாக அமைவது நெய்தல் நிலமாகும். பழங்காலத்தில் சோழநாட்டின் தலைநகரமாகிய காவிரி பூம்பட்டினத்தினைத்தான் நெய்தல் நிலமாக இலக்கியம் குறிக்கிறது. இந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் கடலில் பெற்ற இறால் மீனையும், வயல் ஆமையையும் பக்குவம் செய்து உண்டனடர். அத்துடன் பனங்கள்ளையும், நெல் அரிசியும், கள்ளையும் பருகினர் என்றும் கள்ளுக்கடைகளில் மீன் இறைச்சியும், விலங்கு இறைச்சியும் விற்கப்பட்டன என்றும் அதையே உணவாக உண்டனர் என்று பட்டினப்பாலை தெளிவாக எடுத்தியம்புகிறது. இதற்கு சான்றாக,

"கடல்இறவின் சூடுதின்றும்
வயல்ஆமைப் புழுக்கும் உண்டும்"- பட்டினப்பாலை 63-64
"பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்"

- பட்டினப்பாலை 89

"உவமடிந்து உண்டு ஆடியும்" - பட்டினப்பாலை 93
"மீன்தடிந்து விடக்கு அறுத்து
ஊன்பொரிக்கும் ஒலிமுன்றில்
மணற்குவைஇ மலர்சிதறிப்"- பட்டினப்பாலை 176-178

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது. மேலும் சிறுபாணாற்றுப்படையில் நுளைச்சியர் அரித்த கள்ளையும், உலர்ந்த சூழல் மீனின் சூட்டு இறைச்சியும் உண்டனர் என்றும் நெல்லை இடித்து மாவாக்கிய உணவை ஆண்பன்றிக்கு இட்டு கொழுக்க வைத்து கொழுத்த பன்றியின் இறைச்சியைத் சமைத்து உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படையும் கூறுகிறது. இதனை,

"கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதிஏக் கறாஉம் மாசு அறு திருமுகத்து
நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் முடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்
தளைஅவிழ் தெரியல் தகையோன் பாடி
அறல்குழல் பாணி தூங்கி அவரொடு
வறல்குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவிர்"

- சிறுபாணாற்றுப்படை 156-163

"கள்அடு மகளிர் வள்ளம் நுடங்கிய
வார்ந்துஉகு சிலநீர்வழிந்த குழம்பின்
ஈர்ஞ்சோறு ஆடிய இரும்பல் குட்டிப்
பல்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெல்மா வல்சி தீற்றி பல்நாள்
குழிநிறுத்து ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்"

– பெரும்பாணாற்றுப்படை 339-445

என்ற பாடலடிகளின் மூலம் நெய்தல் நில மக்களின் உனவுகளை எடுத்துக்காட்டப்படுகிறது.

பாலை நில மக்களின் உணவு

மணலும் மணல் சார்ந்த இடமாக அமைவது பாலை நிலமாகும். இந்த பாலை நில மக்களாகிய வேட்டுவர் புளிக்கறி இடப்பட்ட சோற்றையும், ஆமாவின் சூட்டு இறைச்சியையும் உண்டனர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. புல் அரிசியைச் சேர்த்து நிலத்தில் உள்ள உரலில் குற்றி சமைத்த உணவை உப்புக்கண்டத்தோடும் மற்றும் நெல் அரிசிச் சோற்றையும், நாய் பிடித்து வந்த உடும்பின் பொரியலையும் சேர்த்து உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படையும் கூறுகிறது. இதனை,

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்"

– சிறுபாணாற்றுப்படை 175-177

"பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழல் முன்றில் நிலஉரல் பெய்து
குறுங்காழ் உலக்கை ஒச்சி நெடுங்கிணற்று
வல்ஊற்று உவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி
வாராது அட்ட வாடுஊன் புழுக்கல்"

– பெரும்பாணாற்றுப்படை 95-100

"களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ் இவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்"

– பெரும்பாணாற்றுப்படை 130-133

என்ற பாடலடிகளின் மூலம் பாலை நில மக்களின் உணவினை தெளிவாக எடுத்துகாட்டப்படுகிறது.

முடிவுரை

உலகில் மக்கள் அனைவருக்கும் உணவு முக்கியமானதாக விளங்குகிறது. அந்த வகையில் மக்கள் இன்றைய நிலையில் பலவிதமான உணவுகளைப் பயன்படுத்துகின்றனர். இயற்கையான உணவுகள் மட்டுமல்லாது செயற்கையான உணவு முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்டு வாழ்கின்றனர். இன்று பலவிதமான உணவுகளை அருந்துகின்றபோது பலவிதமான நோய்களால் துன்பப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலைக்கு முக்கிய காரணம் சரியான உணவுகளை எடுத்துக்கொள்ளாததே! ஆனால் பழங்காலத்தில் மக்கள் அனைவரும் அவரவர் இடத்திற்கு ஏற்றவாறு இயற்கை முறையில் உணவுகளை உற்பத்தி செய்து உண்டு உடல்நலத்தோடு வாழ்ந்தார்கள். இதற்கு காரணம் அவர்கள் பயன்படுத்திய தினை, வரகு, சாமை, மூங்கிலரிசி, புல்லரிசி, நெல்லரிசி, வெண்சோறு, பழையசோறு, தினைமாவு, அவல், கரும்பு, மா, பலா, வாழை, புளி, அவரை, நண்டு கூட்டு, பீர்க்கங்காய் கூட்டு, பெட்டைக்கோழி பொரியல், உடும்பு பொரியல், வயல் ஆமை, இறைச்சி, மீன் இறைச்சி, விலங்குகளின் இறைச்சி (வெள்ளாடு, பன்றி, மான்) போன்ற சத்துக்கள் நிறைந்த உணவை உண்டதேயாகும். இங்கு குறிப்பிட்ட உணவுகள் அனைத்தும் பத்துப்பாட்டு இலக்கியத்தில் பழங்கால மக்கள் பயன்படுத்திய உணவு வகைகள் ஆகும்.

பார்வை நூல்கள்

1. சுப்பிரமணியன் ச.வே. (உரை), (2004), பத்துப்பாட்டு, கோவிலூர்: கோவிலூர் மடாலயம்.
2. நாகராசன் வி, (உரை), (2017), பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

மதிப்பிடப்பெற்றது

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்

Aṭiyārait teyvamākkiya maturakaviyā̲lvāri̲n amuta mo̲likaḷ

முனைவர் ஆ.மணி/Dr.A.Mani[10]

Abstract: In the Tolkappiyam, the cruel target of Tamils, Mayon is regarded as the substance of the venerated Maliyam, the myth of Vaishnavism, and the significance of its existence in Tamil soil. See Mayon, the goddess of the warring bishops of Ahab, is said to have been the deity of the Tamils. See the popularity of the Sangam literature as the head of the mantra. Mullaitivu, considered by many to be the land of civilization, is also the land of the Maoists. One of the philosophies of the Tamil land, Vaishnava began to grow and flourish in time. The religious ideas, the metaphor of the Lord, the plurality of the deities of the Vaishnava Adivasis were sung in the Nalaiyara Divya Prabandha (A.Mani. 2018: XVI). The purpose of this essay is to highlight the unique features of the songs of Madurakaviyavar, the sixth of the twelve souls.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-21
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: முனைவர் ஆ.மணி
Email: manikurunthogai@gmail.com

Keywords: Indian literature, Tolkappiyam, Mayon, civilization, metaphor of the Lord, Dr.A.Mani, Madurakaviyavar, தமிழின் கொடுமுடி, மாலியம், மதுரகவியாழ்வார், அமுத மொழிகள், தலைவி, ஆ.மணி.

உரைக்களம்

தமிழின் கொடுமுடி இலக்கணமாகிய தொல்காப்பியத்திலேயே, மாலியம் எனப் போற்றப்பட்ட வைணவத்தின் பரம்பொருளாகக் கருதப்படும் மாயோன் குறிக்கப்பட்டுள்ளதைக் காணும்போது, வைணவத்தின் தொன்மையும், தமிழ் மண்ணில் அக்கொள்கை நிலவிய சிறப்பையும் உணர முடிகின்றது. "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். அகத்.5) என்னும் தொடர், ஆ காப்போராகிய ஆயர்களின் தெய்வமாகக் கருதப்படும் மாயோன், தமிழர்களின் மேனி நிறமாகிய மாமையுடையராகக் கூறப்படுவதைக் காண்க. மாமை நிறத்தழகி எனத் தலைவியைப் பலகாலும் சங்க இலக்கியங்கள் புகழ்வதையும் காண்க. நாகரிகம் தோன்றிய நிலமாகப் பலராலும் கருதப்படும் முல்லை நிலமே, மாமை நிறத்தழகர்களின் நிலமாகவும் திகழ்கின்றது. தமிழ் நிலத்தின் தத்துவங்களில் ஒன்றாகிய வைணவம் காலப்போக்கில் பன்முகமாகக் கிளைத்து வளரத்

[10] துணைப்பேராசிரியர் – தமிழ் & இணைத் தேர்வாணையர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி – 605 003, பேச: 9443927141, மின்னஞ்சல்: manikurunthogai@gmail.com

தொடங்கியது. வைணவ அடியார்களாகிய ஆழ்வார்களால் சமயக் கருத்துக்களும், இறைவனின் வடிவழகும், பன்முகத் தன்மையும் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பாடப்பட்டன என்பர் (ஆ. மணி 2018: XVI). இவை மட்டுமல்லாது, திராவிட வேதம் என்றழைக்கப்படும் பாடல்களைப் பாடிய நம்மாழ்வாரின் பெருமைகளும் சிறப்புக்களும் நாலாயிரத்தின் பாடுபொருளாக விளங்குவதைக் காணமுடிகின்றது. பன்னிரு ஆழ்வார்களில் ஆறாம் ஆழ்வாராகிய மதுரகவியாழ்வாரின் பாடல்களில் இடம்பெற்றுள்ள தனித்தன்மையுடைய கருத்துக்களை எடுத்துரைப்பது இவ்வுரையின் நோக்கமாகும்.

மதுரகவியாழ்வாரின் தனித்தன்மை

பன்னிரு ஆழ்வார்களில் ஆறாமவராகக் குறிக்கப்பட்டுள்ள மதுரகவியாழ்வாரின் இயற்பெயர் தெரியவில்லை. எனினும், தம் பாடல்களின் இனிமையால் மதுரகவி என்னும் காரணப்பெயர் அவர்தம் இயற்பெயராகவே விளங்குவதைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியத்தில் பாடலால் பெயர் பெற்ற புலவர்களைப் போலப் பாடல்களின் சிறப்பால் பெயர் பெற்ற புலவராக மதுரகவியாழ்வர் திகழ்வது குறிப்பிடத்தக்கது. மதுரகவியாழ்வாரின் பாடல்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் 937-947ஆம் எண்ணுள்ள பாடல்களாக நாதமுனிகளால் தொகுக்கப்பட்டுள்ளன. நாலாயிர திவ்யப் பிரபந்தத் தொகுப்பு, ஆழ்வார்களின் காலமுறையையொட்டித் தொகுக்கப்படவில்லை என்பதை மதுரகவியாழ்வாரின் ஆசிரியராகிய நம்மாழ்வாரின் பாடல்கள் நான்காமாயிரத்தில் (பாடல்எண் 2899முதல் 4000வரை) தொகுக்கப்பட்டுள்ளதன் மூலம் உணரமுடிகின்றது. இதற்கான காரணங்களை அறிவதும், நாலாயிரத்தின் தொகுப்பமைதியை விளக்குவதும் தனித்த ஆய்வாகும். இது நிற்க.

ஆழ்வார்களில் மிகக் குறைந்த பாடல்களைப் பாடியவர் அமலனாதிபிரான் பாடிய திருப்பாணாழ்வார் ஆவார் (10 பாடல்கள் மட்டும் பாடல் 927 முதல் - 936 வரை). அவருக்கு அடுத்த நிலையில் 11 பாடல்களைப் பாடியவராக மதுரகவியாழ்வார் திகழ்கின்றார். இவ்விருவர் பாடல்களும் அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளன. பிற ஆழ்வார்கள் அனைவரும் இறைவனையே பாடியிருக்க, மதுரகவியாழ்வார் மட்டும் தன்னைவிட வயதில் குறைந்தவராகிய நம்மாழ்வாரையே (https://www.vikatan.com/news/spirituality/91251-madurakavi-aalwar-accepted-younger-person-as-his-guru.html) தெய்வமாகப் பாடிய பெருமைக்கும் தனித்தன்மைக்கும் உரியவராகத் திகழ்கின்றார். மற்றொரு தனித்தன்மையும் இவண் குறிக்கத்தக்கது. அந்தணர் குலத்தவராகிய மதுரகவியாழ்வார், வேளாளர் குலத்தில் பிறந்த நம்மாழ்வாரை ஆசிரியராகவும், தெய்வமாகவும் கொண்டது குறிக்கத்தக்கது. சைவத்திலும் வேளாளர் குலத்தவராகிய திருநாவுக்கரசரை, அந்தணர் குலத்தவராகிய அப்பூதியடிகள் ஆசிரியராகக் கொண்டு போற்றியது மேற்செய்தியோடு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

மதுரகவியாழ்வாரின் வாழ்விக்கும் மொழிகள்

அமுதம் என்பது, இறப்பில்லாப் பெருவாழ்வளிக்கும் அருமருந்து என்பது ஒரு மரபு. வான்மழையே அமுதம் என்பது திருவள்ளுவ மரபு. எவ்வாறாயினும், உயிர்களை வாழ்விக்கவும் உய்விக்கவும் உதவும் கருத்துக்களையும் அமுதம் என்பதில் பிழையில்லை. அவ்வகையில் பதினொரு பாடல்களே

பாடியிருப்பினும், மதுகவியாழ்வார் தம் பாடல்கள் அமுதமொழிகளாகத் திகழ்வனவாகும். தெய்வத்தினும் உயர்ந்தவர் குரு என்னும் கருத்து, மதுரகவியாழ்வார்தம் பாடல்களின் அடிநாதமாக அமைந்த கருத்தாகும். இதன்மூலம் மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் மரபுத் தொடரின் வரிசைமுறைக்குக் காரணமானவர்களுள் மதுரகவியாழ்வாரும் ஒருவர் என்றே சொல்லலாம். அவர்தம் பாடல்களின் கருத்துக்களை இனித் தொகுத்துக் காணலாம்.

அமுதூறும் நாவுகள்

கண்ணிபோலும் நுண்ணிய சிறுதாம்பினால் யசோதை தன்னைக் கட்டிப்போட்டபோது, அதற்குக் கட்டுப்பட்டதுபோல நடித்த எம்பெருமானைக் காட்டிலும், தென்திசையிலுள்ள ஆழ்வார்திருநகரியை அடைந்து நம்மாழ்வார் என்னும் திருநாமத்தைச் சொன்னாலே, என் நாவில் அமுதம் ஊறித் தித்திக்கின்றது என்கின்றார் மதுரகவியாழ்வார். நம்மாழ்வார் என்னும் பெயரே அமுதம் என்பது அவர்தம் கருத்து. திருப்பாற்கடலைக் கடைந்தபோது கிடைத்தது அமுதம்; வான்மழையே அமுதம் ஆகிய கருத்துக்களை விட்டுவிட்டு நம்மாழ்வார் பெயரே அமுதம் என்ற மதுரகவியாழ்வாரின் கருத்தானது புதுமை சான்றது. பாடலடிகள் வருமாறு:

".. .. .. தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே" (நாலா. 937).

வேறு தெய்வமில்லை

தான் வணங்கும் தெய்வமின்றி, வேறு தெய்வமில்லை என்பது சமயப் பெரியோர்தம் நம்பிக்கை. அதனை மதுரகவியாழ்வாரும் ஓதுகின்றார். நாவினால் சொல்லிச் சொல்லி இன்புற்றேன். அவர்தம் திருவடிகளைப் போற்றிப் பரவினேன். அவரன்றி வேறு தெய்வம் நானறியேன். திருக்குருகூர் நம்பியின் பாடல்களைப் புகழ்பாடித் திரிவதே என் பணி என்கின்றார் மதுரகவியாழ்வார்.

"மேவினன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன் .. .. " (நாலா. 938)

என்னும் பாடலடிகளில் மெய்ம்மையே என்னும் சொல்லை 'அவன் பொன்னடி மேவினன் மெய்ம்மையே' எனக் கூட்டிப் பொருள் கொள்கின்றனர் (ராமசுப்பிரமணிய சர்மா & ஆர். பொன்னம்மாள் 2016: 386). இதனை இவ்வாறு கொள்வதைவிட 'தேவு மற்றறியேன் மெய்மையே' எனக் கூட்டிப் பொருள் கொள்வதே மதுரகவியாழ்வாரின் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் என்று சொல்லத் தோன்றுகின்றது.

தொண்டனாக இருப்பதே பாக்கியம்

எம் பெருமானின் அழகிய கரிய திருமேனியைத் தரிசிக்க வேண்டுமெனில், ஆழ்வாரை விட்டு மீண்டால்தான் இயலும். பெருமையும் கருணையும் கொண்ட நம்மாழ்வாரின் தொண்டனாய் இருப்பதே நான் பெற்ற பாக்கியம். ஆதலால், அவரை விட்டுச் சிறிது நேரம்கூட என்னால் விலக முடியவில்லை என்கின்றார் மதுரகவியாழ்வார் (நாலா. 939).

தொண்டனாக இருப்பது இழிவன்று

எம் பெருமானுக்குத் தொண்டு செய்வதே பெருமை. நம்மாழ்வாருக்குத் தொண்டனாக இருப்பது இழிவென்று நான்கு வேதங்களும் கற்ற அந்தணர்கள்

கூறுகின்றனர். என் தாயாக, அப்பனாக, எனையாளும் தலைவனாக சடகோபரையே நான் எண்ணுகின்றேன் என மதுரகவியாழ்வார் கூறுவதிலிருந்து, ஆழ்வாருக்குத் தொண்டு செய்வதும் தாசனாக இருப்பதும் அக்காலத்தில் இருந்த வேதம் கற்ற அந்தணர்களால் கடிந்துரைக்கப்பட்டுள்ளது, அதனையும் மீறித் தனக்குத் தாயாகவும் தந்தையாகவும் தலைவ்னாகவும் இருப்பவர் சடகோபரே என மதுரகவியாழ்வார் நிலைநாட்டியுள்ளார் என்பதை உணரமுடிகின்றது. பாடலடிகள் வருமாறு:

"நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவா ராதலின்
அன்னையாய் அத்தனாய் என்னை யாண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே"
(நாலா. 940).

நம்பிக்குத் தாசன் நான்

ஆட்கொள்ளப்படுவதற்கு முன்னர், பிறர் பொருட்களையும் மடமைத் தன்மையுடைய பெண்களையும் கண்டால் ஆசைப்படுவேன். நம்பிக்கு அன்பனாக இருப்பதையே நான் பெருமையாகக் கருதுகின்றேன் என்பது மதுரகவியாழ்வார் கருத்து (நாலா.941). முற்பாடலில் (940) சொன்ன செய்தியே இப்பாடலிலும் சொல்லப்பட்ட போதிலும், முன்னைய கருத்தின் வலியுறுத்தலாகவே இதனைக் கொள்ளத் தோன்றுகின்றது.

எழுமைக்கும் எண்திசைக்கும் இயம்புவேன்

இன்று முதல் எழுபிறப்புக்கும் தன் பெருமைகளைத் துதிக்கும்படித் திருக்குருகூர் நம்பி அருள் செய்துள்ளார். இனி எக்காலத்திலும் அவர் அதை மாற்ற மாட்டார் என்பதைக் காண்பீர்கள் (நாலா. 942).

Inam: International E_Journal of Tamil Studies is a quarterly, bi-lingual journal in Tamil and English that publishes research articles, reviews and new manuscripts in the month of May, August, November and February.

Thank you, friends! Scholars! You are most welcome to send articles for the Tamil Journal from India, Inam //www.inamtamil.com. Our members are prominent to the article, which related to Tamilology, Philosophy, Linguistics, Folklore, Literature, Grammar, Archaeology, Religion, Arts, Science and Computer. Each publication is evaluated by outside Scholar who is a specialist in the related field.

காரியாரின் குமாரராகிய நம்மாழ்வார், அவருடைய மகிமையை நான் அறியாதபோதும் என்னைக் குளிரப் பார்த்து என் பாவங்களை அழித்தருளினார். அழகிய தமிழ்ப் புலமைக்கு இடமாகிய சடகோபரின் அருளை நான் எண்திசைக்கும் இயம்புவேன் என மொழிகின்றார் மதுகவியாழ்வார் (நாலா. 943).

அருமறையின் பொருளே அவர்தம் பாடல்கள்

நம்மாழ்வார் பாடல்கள் வேதங்களே என அழைக்கப்படுவதற்கான வித்தினை இட்டவர் மதுரகவியாழ்வாரே எனலாம். இதற்குச் சான்றாக இப்பாடல் அமைகின்றது. பாடல் வருமாறு:

"அருள்கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வருமறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" (நாலா. 944).

அடுத்த பாடலிலும் வேதத்தின் உட்பொருளைத் திருவாய்மொழி படிப்பவர் நெஞ்சில் உறையும்படிப் பாடியவர் சடகோபர். அவருக்குத் தொண்டு செய்வதே என் வாழ்வின் பயன் என்பது மதுரகவியாழ்வார் கருத்து (நாலா. 945).

பிறரையும் தொண்டராக்குவதே என் பணி

பிறரைத் திருத்துவதால் பயனில்லையாயினும், சடகோபரின் அன்பராக்கவே நான் முயலுவேன் (நாலா. 946) என்னும் பாடல் முன்னைய பாடல்களில் (நாலா. 939 – 941) சொல்லப்பட்ட கருத்தினின்று ஒருபடி மேற்சென்று, நான் மட்டும் சடகோபருக்கு அன்பரல்லன்; பிறரையும் ஆக்குவேன் என மொழிவதாக அமைவது குறிக்கத்தக்கது.

நிறைவுரை

பிற ஆழ்வார்கள் அனைவரும் இறைவனையே பாடியிருக்க, மதுரகவியாழ்வார் மட்டும் நம்மாழ்வாரையே தெய்வமாகப் பாடிய பெருமைக்கும் தனித்தன்மைக்கும் உரியவராவார். அந்தணர் குலத்தவராகிய மதுரகவியாழ்வார், வேளாளர் குலத்தில் பிறந்த நம்மாழ்வாரை ஆசிரியராகவும், தெய்வமாகவும் கொண்டது குறிக்கத்தக்கது. சைவத்திலும் வேளாளர் குலத்தவராகிய திருநாவுக்கரசரை, அந்தணர் குலத்தவராகிய அப்பூதியடிகள் ஆசிரியராகக் கொண்டு போற்றியது மேற்செய்தியோடு ஒப்புநோக்கத்தக்கதாகும். அமுதம் என்பது, இறப்பில்லாப் பெருவாழ்வளிக்கும் அருமருந்து என்பது ஒரு மரபு. வான்மழையே அமுதம் என்பது திருவள்ளுவ மரபு. எவ்வாறாயினும், உயிர்களை வாழ்விக்கவும் உய்விக்கவும் உதவும் கருத்துக்களையும் அமுதம் என்பதில் பிழையில்லை. அவ்வகையில் பதினொரு பாடல்களே பாடியிருப்பினும், மதுகவியாழ்வார்தம் பாடல்கள் அமுதமொழிகளாகத் திகழ்வனவாகும். தெய்வத்தினும் உயர்ந்தவர் குரு என்னும் கருத்து, மதுரகவியாழ்வார்தம் பாடல்களின் அடிநாதமாக அமைந்த கருத்தாகும். இதன்மூலம் மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் மரபுத்தொடரின் வரிசைமுறைக்குக் காரணமானவர்களுள் மதுரகவியாழ்வாரும் ஒருவர் என்றே சொல்லலாம்.

துணைநூல்கள்

- மணி. ஆ. (பதி.ஆ.). 2018 (முதல் பதிப்பு). *பெரியவாச்சான் பிள்ளையின் திருவாய்மொழி வியாக்கியானம் – ஓர் ஆய்வு*. சென்னை: லாவண்யா பதிப்பகம்.
- ராமக்ருஷ்ணபிள்ளை. ரா. (பதி.ஆ.). *1879* (முதற்பதிப்பு). *கண்ணி நுண்சிறுத்தாம்பு* – இதற்கு ஸ்ரீ உ.வே. பெரியவாச்சன்பிள்ளை யருளிச் செய்த வ்யாக்யாநமும் பின்புள்ளாரருளிச் செய்த அரும்பதமும். சென்னை: ஆதிகலாநிதி அச்சுக்கூடம்.

❖ ராமசுப்பிரமணிய சர்மா & ஆர். பொன்னம்மாள் (உ.ஆ.). 2016 (பத்தாம் பதிப்பு). *ஸ்ரீநாலாயிர திவ்வியப் பிரபந்தம் – முதலாயிரம் – பாடல்கள் 1 to 947*. சென்னை: கங்கை புத்தக நிலையம்.

❖ ஸ்ரீகிருஷ்ணசாமி அய்யங்கார் (பதி.ஆ.). 1993 (இரண்டாம் பதிப்பு). *கண்ணி நுண்சிறுத்தாம்பு வ்யாக்யானங்கள்* (நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் ஆகிய பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்களும், தம்பிரான்படியும், பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டும் கூடியது). .. .. ..: ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸையங்கார் குடும்ப தர்ம சொத்துகளின் ஆதரவில் வெளியிடப் பெற்றது.

This is an International E-journal. It should be intended to move the Tamil research into world Level Reading. Therefore, we believe that, it lends a hand to the readers and researchers can be easily read the articles and to make use the ideas of quotation from published articles.

....

Assure that, your research will be in a standard form after it was evaluated. Points to remember the following:

- Manuscript must be in the original.
- Must include your complete address and e-mail address on the first page of your article.
- Your article should be eliminated from the website page, if it knows as the ideas of other.
- Article should be in Unicode format.
- Your research ideas must be standard and innovate one.
- It should not be written as a note for classical Literature.
- Your article must be in word and PDF format.
- Quotation must be displayed in a special manner and not as a post as your own ideas.
- Your article must submit through e-mail: **inameditor@gmail.com.**
- Research articles of elderly Tamil scholars and selected segments of research books must be published in each journal.
- A book review must be placed as a division of e-publication in each journal. Author must send two copies of book through post for a book review. For address cited the contacts sector.
- Article may be published within the first week of quarterly.
- Must send a passport size photo along with your article.

மதிப்பிடப்பெற்றது

மீவியற் புனைவுகளுள் 'கனவு' பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)

Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)

முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan[11]

Abstract: Among the Epic literatures, there are lot of general characteristics between the two Epics Silappathikaram and Periyapuranam. The first one was written based on the human and the second on the God. This also applies to the mythologies which were written afterward. One of the strategies used by the author of epics is called Supernatural or the incidents where the natural does not exist, i.e. unnatural thing. This technique is not only used to praise the characters but also for the many reasons such as the flow of the story, the incidents which needs to be taken to the next stage and to give the good turning points. For an instance, In the Manimegalai Epic, the story of which moves to the next stage when the Goddess Manimegala takes the heroin Manimegala to the Manipallava island. So the 'supernatural thing' is essential in the component of the epics. This happens in the form of divine command (voice from the sky), dream and transformation. Hence, the aim of the study is to know how the scenes related to the dream when it comes within the supernatural incidents in Thiruvilaiyadal Puranam, were written by the author Paranjothi for the flow of the story.

Date of submission: 2019-06-21
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's Name: முனைவர் ச.கண்ணதாசன்
Email: sendoordasan@gmail.com

Keywords: Manimegala, Thiruvilaiyadal, dream and transformation, supernatural thing, Epic, S.Kannadasan, Thiruvilaiyadal Puranam, மீவியற்புனைவு, புராணம், கனவு, இயற்கை இகந்த நிகழ்வு, உத்தி, ச.கண்ணதாசன்.

ஆய்வுச்சுருக்கம்

காப்பிய இலக்கியங்களுள் மனிதனை முன்னிலைப்படுத்தி இயற்றப்பட்ட சிலப்பதிகாரமாக இருந்தாலும் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட பெரியபுராணமாக இருந்தாலும் இருவகைக் காப்பியங்களுக்கும் பொதுத்தன்மைகள் பல உண்டு. பிற்காலத்தில் தோன்றிய புராணங்களுக்கும் இவை பொருந்தும். அவற்றுள் ஒன்று காப்பிய ஆசிரியர்களால் பின்பற்றப்படும் 'மீவியற்புனைவு (அ) இயற்கை இகந்த நிகழ்வு' எனும் உத்தி. அதாவது இயல்பு நிலைக்கு, இயற்கைக்கு மாறான நிகழ்வு. இவ்வுத்தி கதைமாந்தரின் பெருமையைப்

---

[11] தமிழ் – உதவிப்பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை- 625004, அலைபேசி – 9600484338, 8122270710, மின்னஞ்சல் – sendoordasan@gmail.com

பேசுவதற்காக மட்டும் படைப்பாளர்களால் படைக்கப்படவில்லை. கதைப்போக்கிற்கும், நிகழ்வை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், நல்ல திருப்பத்தைக் கொடுப்பதற்கும் எனப் பல காரணங்களுக்காக இவ்வுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. சான்றாக மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவ தீவிற்குத் தூக்கிச் சென்ற பிறகுதான் மணிமேகலைக் காப்பியம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கிறது. எனவே காப்பியக் கூறுகளுள் இன்றியமையாத ஒன்றாக 'இயற்கை இகந்த நிகழ்வு' அமைகின்றது. இந்நிகழ்வு அசரீரி (வானிலிருந்து கேட்கும் ஒலி), கனவு, உருமாற்ற நிலை எனப் பல்வடிவங்களில் நிகழ்கிறது. அவ்வகையில் திருவிளையாடற்புராணத்தில் இடம்பெறும் இயற்கை இகந்த நிகழ்வுகளுள் ஒன்றாக வரும் கனவு தொடர்பான காட்சிகள் அக்கதைநகர்விற்கு எங்ஙனம் பரஞ்சோதி முனிவரால் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதைக் காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

முன்னுரை

மனித ஆற்றலுக்கும் இயற்கைக்கும் உட்பட்டு நடக்கும் நிகழ்வுகளை இயல்புத் தன்மையுடையவை, இயற்கையானவை என்றெல்லாம் கூறுவர். அவையே மனித சக்திக்கும் இயற்கைக்கும் அப்பாற்பட்டு நடக்கும்பொழுது இவை சாத்தியமற்றவை, நடைமுறைக்கு ஒவ்வாதவை என்பர். ஆனால் இப்படி மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டு நடக்கும் நிகழ்வுகள் இயல்பு வாழ்க்கைக்கு இயலாததாயினும் இலக்கியக் கொள்கைக்குப் பொருந்தும். குறிப்பாகக் காப்பியங்களிலும் புராணங்களிலும் மிகுந்து காணப்படும் இத்தன்மையை மீவியற்புனைவுகள் (அ) இயற்கை இறந்த நிகழ்வுகள் என்பர். அதாவது இயல்பு நிலைக்கு, இயற்கைக்கு மாறான இப்போக்கு கதைமாந்தரின் பெருமையைப் பேசுவதற்காக மட்டும் படைப்பாளர்களால் படைக்கப்படவில்லை. கதைப்போக்கிற்கும், கதையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், நல்ல திருப்பத்தைக் கொடுப்பதற்கும் எனப் பல காரணங்களுக்காக எடுத்தாளப்பட்டுள்ளது. காப்பியங்களிலும் புராணங்களிலும் இம்மீவியற்புனைவு கதையை நகர்த்திச் செல்லும் ஓர் உத்தியாகவே அமைந்துவிட்டது எனலாம். அதிலும் இறைவனைத் தலைவனாகக் கொண்டு உருவாகும் படைப்புகளுள் இவ்வுத்தி பல்வேறு வகைகளில் அதிகமாக இடம்பெறுகின்றது. சைவ சமயத்தின் தலைமைக் கடவுளான சிவனைக் கதைநாயகனாக வைத்து பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணத்தில் காணப்படும் மீவியற்கூறுகளுள் கனவுநிலையும் ஒன்று. இக்கனவுநிலை எவ்வாறு காப்பியப் போக்கிற்கு உறுதுணையாக அமைந்து கதைக்கு உயிரூட்டம் கொடுத்துக் கதையை நகர்த்திச் செல்கிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மீவியற்புனைவுகள் பற்றிக் கருத்துரைக்கும் ந.இராமலிங்கம்,

"மனித ஆற்றலுக்கு மேம்பட்டும், அப்பாற்பட்டும் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை மீவியல் நிகழ்ச்சிகள் என்கின்றோம். இத்தகைய நிகழ்ச்சிக்குரிய காரண காரியங்கள் இயல்பு நிலைக்கு மாறுபட்டும், அறிவாராய்ச்சிக்கு

> அப்பாற்பட்டதாகவும் இருப்பதால் இவற்றை மீவியல்நிலை எனக் குறிக்கின்றோம். மனித நிலையைக் கடந்த அனைத்தையும் மீவியல் நிலை எனக் கொள்வதில் தவறில்லை. புராணங்களில் காணப்படும் கதைமாந்தர்கள் பெரும்பாலும் மீவியல்பு உடையவராகவே படைக்கப் பெறுவர். மீவியல்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் மரபையும் வெளியிடவும், கற்போரைக் கவரவும் மக்கள் மனவுணர்வுக்கேற்பப் படைப்பாளர்கள் இவ்விலக்கியக் கூற்றினைப் பயன்படுத்துவர்." (1988:145)

என்று கூறுவார். அவர் குறிப்பிட்டுள்ளதைப் போல படைப்பிலக்கியங்களில் காணப்படும் இக்கூறுகள் இன்று மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையாகவே நிலைத்து நிற்கின்றன எனலாம். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

> "நாடகங்களைவிடக் காப்பியங்களில்தான் இவ்வற்புதங்கள் அமைவதற்கு வாய்ப்பு மிகுதி. அற்புதத்தை விளைவிக்கும் கூறுகளில் 'நிகழவியலாதது' என்னும் கூறு மிகவும் சிறப்பானது" என்று அரிஸ்டாட்டிலின் கவிதையியல் மொழிவதால் மீவியற்கை காப்பியக் கூறுகளுள் ஒன்றெனஉணர்கின்றோம். உலகக் காப்பியங்களில் காணப்படுவது போல் மீவியற் கூறுகள் தமிழ்க்காப்பியங்களில் பயின்றுவரினும், பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த தண்டி போன்ற இலக்கணங்களில் இவற்றை விளக்காது சென்றமை வியப்பாகவே உள்ளது." (1988:145)

என்று இயற்கை இறந்த நிகழ்வு குறித்து விரிவான விளக்கம் கொடுக்கிறார்.

சிலம்பிலும் மணிமேகலையிலும்

தமிழ்க்காப்பியங்கள் என்றவுடன் முதலில் நினைவுக்கு வருவது சிலப்பதிகாரம். சிலம்பில் காய்கதிர்ச் செல்வன் கண்ணகியின் கேள்விக்கு விடையளித்தல், கண்ணகி மதுரையை எரித்தல், கண்ணகி புட்பக விமானத்தில் வான்வழிச் செல்லுதல் முதலான மீவியற்புனைவுகள் காணப்படுகின்றன. இந்நிகழ்வுகள் எல்லாம் கண்ணகியின் பத்தினித் தன்மையைப் பறைசாற்றுவதற்கே இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

இதைப்போல் மணிமேகலையில் "மணிமேகலா தெய்வம் மணிமேகலையை எடுத்துச்சென்று மணிபல்லவத் தீவில் சேர்த்தல், மணிமேகலையின் முற்பிறவியைத் தெரிவித்தல், தீவதிலகையின் வரவு, நினைத்தவுருவெடுக்க மணிமேகலை வரம் பெறல்" முதலானவை காப்பியத் தலைவியை மையமிட்டே நடக்கின்றன எனலாம். பெரியபுராணத்தில் ஒவ்வோர் அடியார்களின் வாழ்விலும் நடக்கும் அற்புதங்கள் இறைவனின் அருட்செயல் என்றாலும் அவை மீவியற்புனைவுகளாகவே பயில்வோரால் பார்க்கப்படுகின்றன.

திருவிளையாடற்புராணத்தில் மீவியற்புனைவுகள்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களில் மனிதர்கள் மிகுதியாகவும், தெய்வங்கள் குறைவாகவும் இடம்பெறுவதால்

அவற்றுள் மீவியற் கூறுகள் அருகியே காணப்படுகின்றன. ஆனால் அவற்றிற்கு மாறாக இறைவனே மனிதனாகவும், மன்னனாகவும், இறைத்தன்மையிலும் வரும் திருவிளையாடற் புராணத்தில் இம்மீவியற் கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. திருவிளையாடற் புராணத்தில் அனைத்து மீவியற்புனைவுகளும் ஆண்டவன் மூலமாகவே நடக்கின்றன. இதன்மூலம் இறைவன் காப்பியத் தலைவன் எனும் கரு வலுப்பெற்று, ஆண்டவனை அணுகுகிறவர்களுக்கு எப்போதும் ஒரு குறையும் நேராது என்ற பரஞ்சோதியாரின் கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது.

திருவிளையாடற் புராணத்தில் காணப்படும் மீவியற் கூறுகள் கனவுநிலை, அசரீரி நிலை(வானிலிருந்து கேட்கும் ஒலி), இறைவனின் பல்வடிவநிலை முதலான தலைப்புகளின்கீழ் அமைகின்றன. இங்குக் கனவுநிலையில் இடம்பெறும் மீவியற்புனைவுகள் குறித்தே ஆராயப்படுகின்றன.

கனவுநிலை

'கனவு' என்பது காப்பியத்தில் ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்படுவதைச் சிலப்பதிகாரத்தின்வழி அறியலாம். கண்ணகிக்கு வரும் கனவு காப்பியத்தின் பிற்பகுதியில் நிகழப்போகும் அனைத்து நிகழ்வையும் சொல்லும் முன்னோக்கு உத்தியாக அமையும் என்பதை,

"கடுக்கும்என் நெஞ்சம் கனவினால் என்கை
பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுள் பட்டேம்
பட்ட பதியில் படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார் இடுதேள் இட்டு என்தன்மேல்
கோவலற்கு உற்றதுஓர் தீங்குஎன்று அதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோடு

ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்றுஉண்டால் உரையாடேன் (கனாத்திறமுரைத்த காதை) என்ற அடிகளின் வாயிலாக அறியலாம். கண்ணகிக்கு மட்டுமல்லாமல் கோவலன், பாண்டிமாதேவி ஆகியோருக்கும் கனவு வரச்செய்து, கனவைக் காப்பியத்தில் அடுத்து நிகழவிருப்பதைச் சொல்லும் ஒரு கருவியாக இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

திருவிளையாடற் புராணத்தில் இறையருளையே இதயத்தில் நிறைத்து, அவன் திருவடியை அடைதலே பெரும்பேறு என எண்ணி வாழும் அடியார்களுக்கு அருள்புரியும் இறைவன் கனவுகளைத் தன் அருள் வெளிப்பாட்டு வாயில்களாகக் கொள்கிறான்.

"உமையொரு பாகத்தான் உள்ளக் கனவுகளில் எழுந்தருளி அவர்தம் உள்ளக் கவலைகளைப் போக்குகிறான். அடியாரின் மனத்தே நிறையும் ஐயக் கணைகளை அறவே அகற்றுகிறான். வாழ்வின் புறத்தேவைகளுக்குப் போராடும் நிலை ஏற்படும்போது நல்கிச் சேவை செய்கிறான். ஆம். உள்ளங்கவர் கள்வனாகிய சிவபிரான் அடியவர்

உள்ளத்தில் தான் நீக்கமற நிறைந்திருந்திருப்பதைச் சாற்றும் பறையாகக் கனவுகளைக் காட்டுகின்றான்."(2009,ப.9)

என்று பெரியபுராணத்தில் வரும் மீவியற்புனைவுகள் குறித்துக் கூறப்படும் கூற்று திருவிளையாடற் புராணத்திற்கும் பொருந்தும்.

திருவிளையாடற்புராணத்தில் திருநகரங் கண்ட படலம், மேருவைச் செண்டாலடித்த படலம், உலவாக்கிழி யருளிய படலம், திருமுகங் கொடுத்த படலம், பன்றிக்குட்டிகளை அமைச்சர்களாக்கிய படலம், கடல் சுவற வேல்விட்ட படலம் ஆகிய படலங்களில் கதைத் தலைவனான சிவன் கனவில் வந்து காட்சி தருகிறான். இக்கனவில் நடக்கும் மீவியற் காட்சிகளை,

1. பொருள் வழங்குதல்
2. ஒன்றைச் செய்யுமாறு பணித்தல்

எனும் இரு தலைப்புகளின்கீழ்ப் பகுத்துக் காணலாம்.

பொருள் வழங்குதல்

ஒரு நாட்டின் மன்னன் என்பவன் மக்கள் மகிழும் வண்ணம் நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டும். அவர்களுள்ளும் அந்தணர்களை அல்லல் படாமல் பாதுகாக்க வேண்டும் என்பது அக்கால நியதி. ஆனால் திருவிளையாடல் புராணத்தின் 'உலவாக்கிழி அருளிய படலத்தில்' வரும் குலபூடண பாண்டியன் அந்தணர்களை மதிக்காது ஒதுக்கினான். எனவே அவர்கள் வேதம் ஓதாது, வேள்வி இயற்றாது வேற்று நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். ஆகையால் பாண்டியநாடு மழையின்றிப் பஞ்சத்தின் வசப்பட்டது. அரசரின் செல்வமும் தீர்ந்தது. இந்நிலையைப் பரஞ்சோதியார்,

"வள்ளல் குலபூ டணன்திங்கள் வாரந் தொடுத்துச் சிவதருமம்
உள்ள வெல்லாம் வாழாதுநோற் றொழுகும் வலியால் தன்னாட்டில்
எள்ள லில்லா வேதியரை இகழ்ந்தா னாதனான் மழைமறுத்து
வெள்ளம் அருக வளங்குன்றி விளைவஃகியது நாடெல்லாம்"

(தி.வி.பு.31;பா.2)

எனும் பாடலில் பாடுகிறார். மன்னன் அடைந்த வேதனையை உணர்ந்த இறைவன் பாண்டியனின் கனவில் தோன்றி "மறையே நமது பாதுகையாம், மறையே நமது பீடிகையாம்" என வேதத்தின் பெருமையைக் கூறி அள்ள அள்ளக் குறையாத உலவாக்கிழி (பொன் முட்டை) ஒன்றைத் தந்தருள்கின்றான். விழித்து எழுந்த பாண்டியன் தன் கையில் உண்மையிலேயே பொற்கிழி இருப்பதைக் கண்டு வியந்தான். பல நாடுகளிலும் இருந்து மறையோரை வரவழைத்து வேதம் ஓதுவித்தான், யாகம் இயற்றினான், பொன்னை வாரி வழங்கினான். பாண்டிய நாட்டில் மழைபெய்து வளம் பெருகி நலம் நிலவிற்று. பாண்டியன் கனவில் இறைவன் வந்ததைப் பரஞ்சோதியார்,

"அங்கண் வெள்ளி யம்பலத்து ளாடுமடிக ளவன்கனவிற்

சங்கக் குழையும் வெண்ணீறுஞ் சரிகோவணமும் தயங்கஉரன்
சிங்க நாதங் கிடைந்தசையச் சித்தவடிவா யெழுந்தருளி
வெங்கண் யானைத் தென்னவர்கோன் முன்நின்றிதனை விளம்புவார்"

(தி.வி.பு.31;பா.3)

என்ற பாடலின் வழியாகப் புலப்படுத்துகிறார்.

அந்தணர்களுக்கு ஓர் ஆபத்து என்றால் அதை ஆண்டவன் தானே முன்வந்து தீர்த்து வைப்பான் எனும் பார்ப்பன ஆதிக்கம் இங்கு வெளிப்படுகிறது. அக்காலச் சூழலில் அந்தணர்கள் சமூகத்தில் உயந்த இடத்தில் மன்னனையும் ஆட்டிவைக்கும் இடத்தில் இருந்துள்ளனர் என்ற சமூகப்பார்வையைத் தாண்டி, கனவில் வந்த பொருள் நனவிலும் கிடைக்கப் பெற்றதே இங்கு மீவியற்கை. மன்னனின் ஆணவத்தை அடக்க நினைத்த இறைவன் திருவிளையாடலை நிகழ்த்தி அவனுக்கு அறிவுரை வழங்கும் வகையில் இக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

ஒன்றைச் செய்யுமாறு பணித்தல்

அடியார்கள் இடுக்கண் அடையும் பொழுது கனவில் தோன்றிப் பொருள் வழங்கும் இறைவன், இங்குக் கனவில் தோன்றினாலும் இவ்வாறு செய்தால் இன்னலிலிருந்து விடுபடலாம் என அறிவுறுத்தவும் செய்கிறார். திருநகரங் கண்ட படலம், மேருவைச் செண்டாலடித்த படலம், திருமுகங்கொடுத்த படலம், பன்றிக்குட்டிகளை அமைச்சர்களாக்கிய படலம், கடல் சுவற வேல்விட்ட படலம் ஆகிய படலங்களில் இப்போக்குக் காணப்படுகின்றது.

திருநகரங் கண்ட படலத்தில் இறைவன் கனவினில் வந்த அருள்பாலித்த திறம் பின்வருமாறு:

மதுரை தோன்றுவதற்கு முன் பாண்டிய மன்னன் 'மணவூர்' என்னும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். அவ்வூரில் வாழ்ந்த வியாபாரிகளில் ஒருவன் தனஞ்செயன் என்பவன் சிறந்த சிவபக்தன். ஒருநாள் மேற்குத் திசையில் உள்ள பல ஊர்களுக்குச் சென்று வியாபாரம் செய்து திரும்பிக் கொண்டிருந்தான். அவன் கடம்பவனத்தை அடையும்போது இருட்டிவிட்டது. அச்சமயம் விண்ணில் இருந்த விமானம் ஒன்று இறங்கி வருவதைப் பார்த்தான். இவ்விமானத்தில் சிவலிங்கமும் இருப்பதைக் கண்டவுடன் வணங்கினான். அன்று திங்கட்கிழமை நடுஇரவு, தேவர்கள் வந்து நான்கு யாமங்களிலும் சொக்கலிங்கருக்குப் பூசை செய்தனர்.

மறுநாள் பொழுது விடிந்ததும் தேவர்களைக் காணவில்லை. விமானமும் சிவலிங்கமும் மட்டுமே இருந்ததைப் பார்த்தான். ஊர் திரும்பிப் பாண்டிய அரசனிடம் தான் கண்டவற்றை,

"………வெந்திகிரியாய்
அக்க டம்பமா வனத்திலோ ரதிசயங் கண்டேன்" (தி.வி.பு.3;பா.13;3-4)

"வல்லை வாணிகஞ் செய்துநான் வருவழி மேலைக்
கல்ல டைந்து வெங்கதிர் கண்டனன் இரவிமண் டலம்போல்
அல்ல ருஞ்சுடர் விமானமு மதிற்சிவக் குறியும்" (தி.வி.பு.3;பா.14;1-2)

என்று எடுத்துரைத்தான். மகிழ்ச்சி அடைந்த பாண்டியன் அதே நினைப்புடன் உறங்கச் சென்றான். அப்பொழுது சிவன் சித்தராகப் பாண்டியன் கனவில் தோன்றி, "குலசேகரப் பாண்டியா! கடம்பவனக் காட்டைத் திருத்தி அழகிய நகரை உண்டாக்குக" என்றார்.

"வடிகொள் வேலினாய் கடம்பமா வனத்தினைத் திருந்தக
கடிகொள் காடகழ்ந்த தணிநகர் காண்கென உணர்த்தி
அடிக ளேகினார் கவுரியர் ஆண்டகை கங்குல்
விடியும் வேலைகண் விழித்தனன் பரிதியும் விழித்தனன்" (தி.வி.பு.3;பா.18)

இவ்வாறு கனவில் வந்து இறைவன் கூறியவுடனேயே மறுநாளே அமைச்சர்களுடன் கடம்பவனக் காட்டிற்குச் சென்றான் பாண்டியன். பலநாள், பலரின் உழைப்பில் கடம்பவனக் காட்டை ஓர் அழகிய நகராக மாற்றி அமைத்தான். நகரம் பூர்த்தியானதும் சாந்தி செய்ய நினைத்தான் மன்னன். இதை அறிந்த சொக்கலிங்கக் கடவுள் தம் சடையில் உள்ள சந்திரனிலிருந்து அமுதத்தைச் சிந்தினான். சிவனின் மதியிலிருந்து மதுரமான துளிகள் சிந்தியதால் 'மதுராநகர்' எனப் பெயர் பெற்று நாளடைவில் 'மதுரை' என மருவிற்று. நான்மாடக்கூடல், கடம்பவனம், ஆலவாய் எனப் பெயர்கொண்ட ஊருக்கு 'மதுரை' எனப் பெயர் வந்ததற்குப் புராணம் வாயிலாகச் சொல்லப்படும் காரணம் இதுவே.

மனிதப் பிறப்பில், மனிதன் ஒன்றைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்து அதே நினைப்போடு படுக்கைக்குச் செல்லும்போது அவன் மனத்தில் நினைத்தது நடந்தேறியதாகவோ, நடக்காமல் போனதாகவோ கனவு வருவது இயற்கை. மகிழ்ச்சியான தருணமாக இருந்தால் கனவும் மகிழ்ச்சியாகவே இருக்கும் எனலாம். ஆனால் இதைப் பரஞ்சோதியார் ஓர் உத்தியாகப் பயன்படுத்தித் தான் இட்ட திருநகரங் கண்ட படலம் எனும் தலைப்பிற்கு வலுவூட்டுவதற்கு அமைத்துக் கொண்டார் எனலாம்.

"மனம் அடங்கிய நிலையோடு நெருங்கிய தொடர்பு கனவுக்கு உண்டு. இது உண்மை போன்ற போராட்டம் உடையது. சில சமயங்களில் கனவு நம் இயக்கங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது." (2009:9)

எனும் கருத்தும் கவனிக்கத்தக்கது.

மதுரைக் காண்டத்தில் இடம்பெறும் மேருவைச் செண்டால் அடித்த படலமும் இதே பொருண்மையில் அமைகிறது. உக்கிரபாண்டியன் காலத்தில் பாண்டியநாடு வளமுற்று இருந்தது. பின் பல ஆண்டுகள் கழித்து மீண்டும் வளம் குன்றியது. ஓராண்டு மழையே பெய்யாத நிலை ஏற்பட்டு மதுரை நகர் பஞ்சத்தின் வசப்பட்டது. துன்பம் அடைந்த உக்கிரபாண்டியன் இறைவனைத் தொழுது, அழுது வேண்டினான். இரவில் பாண்டியன் கனவில், சித்த மூர்த்தியாய் வந்த

இறைவன் "பாண்டியா! மேருமலையில் அருகில் உள்ள குகையில் ஏராளமான பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. நீ உன் செண்டால் அடித்து, மேருவின் கர்வத்தை அடக்கி, வேண்டிய பொருட்களை எடுத்துக் கொள். குகைக்கு முத்திரையிட்டு மூடி வா! என்றார். இதனைப் பரஞ்சோதியார்,

" கிடைத்தமற் றனைய மேரு கிரிசெருக் கடங்கச் செண்டாற்
புடைத்துநின் ஆணைத்து ஆக்கிப் பொன்னறை பொதிந்த பாறை
துடைத்துநீ வேண்டும் காறுந் தொட்டெடுத் ததனை மீள
அடைத்துநின் குறியிட்டைய வருதிஎன் றடிகள் கூற" (தி.வி.பு.15;பா.11)

என்ற பாடலின்வழி இயம்புகின்றார். கனவில் சித்தராக வந்த சிவன், உக்கிரபாண்டியனுக்குத் தந்தையாக இருந்தாலும், அவனையும் ஓர் அடியவராக எண்ணிக்கொண்டு இவ்வாறு கட்டளையிடுகிறார். மேலும் இதன்மூலம் உக்கிரபாண்டியனின் வலிமையை உலகிற்குப் பறைசாற்றவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. எப்போதுமே தன் அடியவர்களைச் சோதிப்பது இறைவனின் பாங்கு. இங்கு மனைவி, மகன் என்று பாராமல் யாராக இருந்தாலும் ஆண்டவனின் சோதனைக்கு உட்பட்டவர்கள் என்பதைப் பரஞ்சோதியார் எடுத்துரைக்கிறார் எனலாம். சிவனின் முழுமுதற் தன்மையை உணர்த்தும் கருவியாகவும் இதைப் பார்க்கலாம்.

"கந்தபுராணத்தில் தலைமையும் முழுமுதற்றன்மையும் பெறும் கந்தக்கடவுளின் பேராற்றலைப் புலப்படுத்தும் வகையில் மீவியற் செய்திகள் கவிஞரால் விளம்பப்படும்" (1988:145)

என்பார் ந.இராமலிங்கம். இக்கருத்துத் திருவிளையாடற் புராணத்திற்கும் பொருந்தும் எனலாம்.

அடுத்து 'பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம். சுகலன் என்னும் வேளாளரின் பிள்ளைகள் பன்னிரண்டு பேர். இவர்கள் வியாழ பகவானின் சாபத்திற்கு ஆளாகி குருவித்துறைக்கு அருகே உள்ள காட்டில் பன்றி அரசரின் குழந்தைகளாகப் பிறந்தனர். இராசராச பாண்டியன் வேட்டையாட வந்தபோது பன்றி அரசனும் அவனது மனைவியும் பாண்டியனுடன் போரிட்டு இறந்தனர். பெற்றோரை இழந்த பன்றிக் குட்டிகள் துயர்தீரச் சோமசுந்தரக் கடவுளே தாய்ப்பன்றியின் வேடம் தாங்கி வந்து முலைப்பால் தந்து சாபவிமோசனம் அருளினார். சாபம் நீங்கி, மனித உடலும் பன்றியின் முகமும் கொண்ட சகோதரர்கள் பன்னிரண்டு பேரும் சகல கலைகளிலும் சிறந்தவர்களாய்ப் பன்றிமலையிலேயே வசித்து வந்தனர். தன் அருள் விளையாட்டால் சாபம் நீங்கப்பெற்ற பன்றிமுகச் சகோதரர்களைப் பாண்டியனின் அமைச்சர்களாக்க நினைத்த சொக்கநாதர் பாண்டியனின் கனவில் தோன்றி,

" ...... மீனவன் கனவில்வந் தரசபேள் பன்றிக்
குன்றி லேனமா முகத்தராய்ப் பன்னிரு குமரர்
வென்றி வீரராய் வைகுநர் மிக்கறி வுடையார்" (தி.வி.பு.45;பா.8;2-4)

என்றார். அதாவது "பாண்டியா! பன்றிமலையில் வாழும் பன்றிமுக வீரர் பன்னிருவரை உன் அமைச்சர்களாக்கிக் கொள்" என்று மன்னனிடம் எடுத்துரைத்தவுடன், மன்னன் தன் அமைச்சர்களுக்குக் கட்டளையிட்டு அப்பன்றிமுக இளைஞர்களை வரவழைத்து, அவர்களை அமைச்சர்களாக்கி மகிழ்ந்தான் மன்னன். உயர்திணை, அஃறிணை என எவ்வகை உயிர்களுக்கும் இறைவன் அருளும் தன்மையினன் என்பதைப் பரஞ்சோதியார் இக்கதையின் வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

இதுவரை பார்த்த கனவுசார் மீவியற்காட்சிகள் அரசர்களுக்காக நிகழ்ந்தவை. இனிக் காணப்போகும் திருமுகங்கொடுத்த படலத்தில் இடம்பெறும் கனவு அடியார்க்காக நிகழ்த்தப்பெற்றது. பாணபத்திரன் என்னும் புலவர் இறைவனைப் பாடுவதையே தொழிலாகக் கொண்டவர். இறைவனைப் பாடுவதையே முழுமுதற் தொழிலாகக் கொண்டதால் பிற வேலைகளையும் விட்டுவிட்டார். எனவே வருமானமின்றி அவர் வீட்டில் வறுமை நிலவியது. இறைவன் பாணபத்திரனின் கனவில் தோன்றி, "பாணனே உன்னைப் போலவே என்மீது தீராப் பக்தியுடைய சேரமானிடம் நான் கொடுக்கும் திருமுகத்தைக் (ஓலை) கொண்டு செல், அவனிடமும் நான் அறிவித்து விடுகிறேன். அவன் உனக்கு வேண்டியதைத் தருவான்" என்று சொல்லி,

" மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை
பண்பால் யாழ்வல பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
கனாண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே" (கூடற்காண்டம்)

என்ற பாடலை எழுதிப் பாணனிடம் கொடுத்து மறைந்தார். பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள இப்பாடலைப் பரஞ்சோதியார் தன்னுடைய படைப்பிற்குப் பயன்படுத்திகொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கனவில் கொடுத்ததை நனவில் பெற்ற பாணபத்திரனும் ஆண்டவனின் கட்டளைப்படி, மறுநாளே சேரநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். இறைவன் சேரமான் கனவிலும் தோன்றித் தன் திருமுகத்துடன் வரும் பாணபத்திரனுக்குப் பெருநிதியம் அளிக்குமாறு ஆணையிட்டார். அவ்வாறே பாணபத்திரனைச் சேரமான் எதிர்கொண்டு அழைத்து இறைவனின் திருமுகத்தைப் பெற்று, பெருமகிழ்ச்சியுடன் ஏராளமான பொருள்களைக் கொடுத்தனுப்பினார். குசேலனாய் மதுரையிலிருந்து புறப்பட்ட பாணபத்திரன், குபேரனாய் மதுரைக்கு வந்து சேர்ந்தான். பாணனின் கனவில் இறைவன் தோன்றியதைப் பரஞ்சோதியார் எடுத்துரைக்கும் பாங்கு பின்வருமாறு:

" மறைக்குரை செய்த வாக்கான் மதிமலி புரிசை என்னும்
சிறப்பியல் சீர்சால் செய்யுட் பாசுரம் செப்பித் தீட்டிப்
பிறைச் சடைப் பொருமா னல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வன்
றக்கநீத் தாடிப் பாடி உவகைமா கடலி லாழ்ந்தான்" (தி.வி.பு.42; பா.10)

இதைப் போலவே சேரமான் கனவிலும் இறைவன் தோன்றி, "நின்னிடத்து வந்துளேமாகிய யாம், பாண்டியனது மதுரையிலுள்ள சித்தராவோம். உன்னைப் பார்த்து நல்ல பொருள் வேண்டுதற் பொருட்டு நமது திருமுகம் பெற்றுக் கொண்டு இன்னிசை பாடும் பாணபத்திரன் இங்கு வந்தனன்" என்று கூறுவதாகப் பரஞ்சோதியார் செய்யுள் அமைத்திருக்கிறார்.

முடிபுகள்

தமிழ்க் காப்பியங்களில் சிலப்பதிகாரத்திலேயே தொடங்கிவிட்ட மீவியற்புனைவு பிற்காலக் காப்பியங்களுள் குறிப்பாகத் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்ட காப்பியங்களுள் ஓர் உத்தியாகவே பயன்படுத்தப்பட்டு, கதையை நகர்த்திச் செல்லும் ஒரு கருவியாக அமைந்துள்ளது.

குறிப்பாக தனித்தனிப் படலமாக அமைந்துள்ள திருவிளையாடற் புராணத்தில் அந்தந்தப் பகுதியில் இடம்பெறும் மீவியற் புனைவுகளே படலத்தினை நிறைவுசெய்வதற்கு அடிப்படைக் கருவியாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

கதை நெடுகிலும் மீவியற்புனைவுகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் சிவனின் பெருமைகளைப் பறைசாற்றுதற்கே என்ற பரஞ்சோதியாரின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றது.

இம்மீவியற்புனைவுகளின் வாயிலாகச் சிவனின் பெருமைகள் வெளிப்பட்டாலும், அறக்கருத்துக்களையும் எடுத்துரைக்கும் நிலையிலும் அவை அமைந்துள்ளமையும் புலப்படுகின்றது.

துணைநின்ற நூல்கள்

- இராமலிங்கம் ந., 1988, கந்தபுராண ஆராய்ச்சி, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
- கமலம் சங்கர், 2009, பெரியபுராணத்தில் இயற்கை இறந்த நிகழ்வுகள், மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
- சாமிநாதையர், உ.வே.,(ப.ஆ.) 2008(எ.ப.), சிலப்பதிகாரம் (மூலமும் அரும்பதஉரையும் அடியார்க்கு நல்லார் உரையும்) டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை.
- சுப்பிரமணிய பிள்ளை கா. (உ.ஆ), 2007, திருவாசகம் மூலமும் உரையும், பாரிநிலையம், 90,பிராட்வே, சென்னை.
- வேங்கடசாமி நாட்டார்,ந.மு. (உ.ஆ.), 2007(மு.ப.) பரஞ்சோதி முனிவர் அருளிச் செய்த திருவிளையாடல் புராணம் மூலமும் உரையும் (மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருஆலவாய்க்காண்டம்), முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல் தெரு, தி.நகர், சென்னை.
- ………., 1983 (மு.ப.), திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்

Expressional Strategies on Cipher Discourse



முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja[12]

Abstract: Poetic language is more aesthetic and artificial than the ordinary language. Especially, convocational function is the most interesting part of the poetry. It may be complex or unwilling one for some lazy readers. But, decoding the symbols, cheating simples and darkspots of the poetry is an efficient role of the smart readers. First of all, we should try to know the expressional strategies of the author. Thirumoolar is the most familiar name among the Tamil sidha tradition. Sooniya Sambaasana (Cipher Discourse) is one of the parts of his writing. It's more symbolic than the other parts. This paper attempts to generalise some expressional strategies on the thirumoolar's Cipher Discourse (Sooniya Sambaasana).

Date of submission: 2019-06-28
Date of acceptance: 2019-07-23
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name முனைவர் இரா. இராஜா
Email: sengolan84@gmail.com

Keywords: Expressional Strategies, Cipher Discourse, aesthetic and artificial, civilization, Thirumoolar, Tamil siddha, Sooniya Sambaasana, Dr.R.Raja, சூனிய சம்பாஷணை, புலப்பாடு, உத்திகள், கருத்துப் பரிமாற்றம், சூனிய சம்பாஷணை = சூனியம் + சம்பாஷணை, இரா. இராஜா.

கருத்துப் பரிமாற்றம் மானுட வளர்ச்சியின் அடிப்படைக்கூறு. அன்றாடப் பேச்சிலும் எழுத்திலும் இது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இலக்கிய ஆக்கங்கள் இதன் சீரிய வடிவங்களாக விளங்குகின்றன. இத்தகு இலக்கியங்களின் புலப்பாட்டு நெறிகள் தனித்துவம் கொண்டவை; இயல்பான மொழிப்புலப்பாட்டினைவிட, அழகியலும் செயற்கைத்தன்மையும் மிக்கவை; சில வேளைகளில் சிக்கல் நிறைந்ததாகவும் அமைபவை. இங்குத் திருமந்திரத்தில் அமைந்த 'சூனிய சம்பாஷணை'யின் புலப்பாட்டு உத்திகள் ஆராயப்படுகின்றன.

சூனிய சம்பாஷணை

இது திருமந்திரத்தின் இறுதிப்பகுதியான ஒன்பதாம் தந்திரத்தில் அமைந்துள்ளது. இதன்கண் எழுபது (70) பாடல்கள் (2866 – 2935) உள்ளன. சூனிய சம்பாஷணை = சூனியம் + சம்பாஷணை. சூனியம் என்பதற்கு வெறுமை அல்லது மாயை எனப் பொருள். சம்பாஷணை என்றால் உரையாடல். அதாவது, வெற்று உரையாடல் அல்லது மாய உரையாடலே சூனிய சம்பாஷணை எனப்படுகின்றது. திருமந்திரத்திற்குப் பின்னர் எழுந்த பல சித்தர் பாடல்களிலும்

12 உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 001. sengolan84@gmail.com

(இதே தலைப்பின்கீழ் இல்லாவிட்டாலும்), இதே அமைப்பில் பல பாடல்கள் காணப்படுகின்றன. அதாவது, சித்தர்களின் பேசுபொருளான ஆன்ம விசாரணைக்கு அப்பாற்பட்டுப் புறநிலையில் வெற்று அல்லது மாய உரையாடல்களாகத் தோன்றும்படி சில பாடல்கள் அமைந்துள்ளன. இவை குறித்துத் தமிழ்ச்சூழலில் சில ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நவீனத் தமிழ்த்திறனாய்வு முன்னோடிகளில் ஒருவரான தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்,

> *இவர்கள் (சித்தர்கள்) பாடல்களில் வல்நடை, மெல்நடை என இரண்டு நடைகள் உண்டு. வன்மையாகப் பாடியவை எளிதில் பொருளாவதில்லை..... தங்களுடைய கொள்கையை மறைவாக வைத்துக்கொள்வதற்கு இவர்கள் ஒரு குழூஉக்குறியினைப் படைத்துக்கொண்டனர். திருமந்திரத்தில் சூனிய சம்பாஷணை என்னும் பகுதிகளில் இதனைக் காணலாம் (ம.ரா.போ. குருசாமி,1980:218, மேற்கோள்).*

எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு சித்தர்கள் மறைத்துப் பாடியது குறித்து இருவேறு கருத்துக்கள் உண்டு. ஒன்று அவர்களுக்கு ஆதரவானது. பல வைத்திய, வாதக் குறிப்புகளைச் சித்தர்கள் பாடி வைத்துள்ளனர். அவற்றை மருத்துவப் பயிற்சியற்றோர் சோதனைசெய்து பார்ப்பது பல விபரீதங்களுக்கு வழிவகுத்துவிடும் என்ற அச்சத்தில் மறைத்துப் பாடினர் என்பது ஒருசாரார் கருத்து. மற்றொன்று அவர்களுக்கு எதிரானது. சித்தர்கள் மருத்துவத்தை மட்டுமல்லால், யோக, ஞானக் கருத்துக்களையும் எல்லோருக்குமான எளிய நடைமுறை வாழ்க்கை சார்ந்த மெய்ம்மைகள், அறங்களையும் கூடப் பூடகமாகவே பாடி வைத்துள்ளனர் என்பது மறுசாரார் கருத்து. சூனிய சம்பாஷணையைப் பொறுத்தவரையில் வைத்திய, வாதக் கருத்துக்களின்றி, யோக, ஞானக் கருத்துக்களே மறைத்துப் பாடப்பட்டுள்ளன. சித்தர்கள் இப்படிப் பாடியதற்கான மூலகாரணங்களை ஆராய்வது ஒருபுறமிருக்க, அவர்கள் கருத்தை மறைபொருளாக வைத்துப் பாடிய முறைமையை ஆய்விற்கு உட்படுத்தும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

பழந்தமிழ்க் குறிப்புப்பொருட் கொள்கையும் சித்தர் மரபும்

சங்க அகக்கவிதை மரபில் உள்ளுறை உவமமும் இறைச்சியும் சிறந்த குறிப்புப்பொருள் உத்திகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை ஐந்நிலங்களுக்குரிய கருப்பொருட்களை இடனாகக்கொண்டு பாடப்பட்டன. குறிப்பாக, சங்கப் பாடல்களில் இறைச்சியைவிட, உள்ளுறையின் பயன்பாடு மிகுதியாகக் காணப்படுகின்றது. உரிப்பொருள் செய்தியைக் கருப்பொருளுக்குள் மறைத்து வைத்துப் பாடுவதே உள்ளுறையின் சிறப்பியல்பு. உள்ளுறையில் இயங்கும் கருப்பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் நிகரான உரிப்பொருட்கள், வாசகர்களால் உய்த்துணரப்பட்டுப் பொருள் கொள்ளப்படும். இவ்வாறு உவமை, உவமேயம் என்ற (சமன்பாட்டு) அடிப்படையில் அமைந்ததால்தான் அதனை உவம வகைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இந்த உள்ளுறை உவமைகளைச் சரியாகக் கண்டறிய ஆழ்ந்த அகத்திணை இலக்கியப்

பயிற்சி வேண்டும். இவ்வாறே சித்தர்களின் குறியீட்டு மொழியை நன்கு தெளிவதற்குச் சித்தர்கள் தொடர்பும் ஆன்மிகப் பயிற்சியும் அடிப்படையாகின்றன.

பொதுநிலையில் உள்ளுறை உவமத்தையும் சித்தர்களின் மறைபொருள் குறியீடுகளையும் ஒருவாறு ஒப்பிட முடியும். கருப்பொருட்களை,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப" (தொல். 966)

எனத் தொல்காப்பியம் பட்டியலிடுகின்றது. இவற்றின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளுறை உவமம் தோன்றும். சித்தர்களின் மறைமொழியும் இந்தக் கருப்பொருட்களின் அடிப்படையில்தான் அமைகின்றது. இவற்றுள் செய்தி எனப்படும் தொழிலை மையமாகக் கொண்டே பல குறிப்புப்பொருள் பாடல்களைச் சித்தர்கள் பாடியுள்ளனர். அதாவது, இயற்கைப் பொருட்களைவிட, சமூக உற்பத்தி மற்றும் பரிவர்த்தனை சார்ந்த தொழிற்குறியீடுகளே சித்தர் பாடல்களில் மிகுந்து காணப்படுகின்றன.

திருமந்திரத்தின் சூனிய சம்பாஷணையில் நிலவுடைமை சார்ந்த வேளாண் உற்பத்தி முறைகள் பல பாடல்களில் (2870, 2871, 2872, 2873, 2877, 2878, 2879, 2880, 2890, 2913, 2916, 2920, 2922) குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மையுடன் தொடர்புடைய கால்நடை வளர்ப்பு அல்லது மேய்ச்சல் தொழிலும் (2874, 2875, 2883, 2889, 2903) பாடப்பட்டுள்ளன. கொல்லன் தொழில் (2882), மருத்துவம் (2888) தச்சுத் தொழிற்குறிப்பு (2881) போன்றவையும் இடம்பெற்றுள்ளன. வணிகத் தொழில் சார்ந்த குறியீட்டுப் பாடல்களும் (2915, 2918, 2929, 2930) பல காணப்படுகின்றன. சூனிய சம்பாஷணையில் மலைவாழ் மக்கட்தொழிற் குறியீடுகள் எங்கும் இடம்பெறவில்லை. சித்தர்களின் குறியீடுகள் பலவும் நிலவுடைமைச் சமூக வாழ்வியலின் பிரதிபிம்பங்களாகவே காட்சியளிக்கின்றன.

அகத்திணை மாந்தர்களும் நிகழ்வுகளும் ஒரு வரையறைக்கு உட்பட்டவை. அவை பற்றிய பொருளிலக்கண வரம்புகளையும் சான்றுப் பாடல்களையும் கற்றால், உள்ளுறை உவமப் பயிற்சியில் ஒரு தெளிவை எட்டுவது எளிது. ஆனால், சித்தர்களின் குறியீட்டைத் தெளிதல் அவ்வளவு எளிதன்று. காரணம், அவர்கள் அண்டப் பெருவெளிமுதல், மானுட உடற்கூறு, வைத்தியம், வாதம், யோகம், ஞானம் எனப் பல நிலைகளில் பாடியுள்ளனர். ஒப்புமை கருதி உள்ளுறை அமைந்த ஒரு சங்கப் பாடலையும் அதே சாயல் கொண்ட ஒரு சித்தர் பாடலையும் இங்குக் காணலாம்.

"நெய்தல் இருங்கழி நெய்தல் நீக்கி
மீன்உண் குருகினம் கானல் அல்கும்
கடல்அணிந் தன்று அவர்ஊரே
கடலினும் பெரிதுஎமக்கு அவருடை நட்பே" (ஐங்.184)

தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டி, வாயில் மறுக்கும் தலைவிகூற்றுப் பாடல் இது. முன்னிரண்டு அடிகள் உள்ளுறையாக அமைகின்றன. நெய்தல் நிலத்துக் கழியிடத்தில் நெய்தல் செடிகளை விலக்கி மீனை உண்ணும் குருகினம் என்பது உள்ளுறையாக அமைந்த கருப்பொருள் நிகழ்வு. இங்குக் கழியிடம் = பரத்தையர் சேரி; நெய்தல் செடிகளை நீக்குதல் = ஊடல்களை அகற்றல்; மீன் = பரத்தை; குருகு = தலைவன்; உண்ணுதல் = துய்த்தல் என்னும் அடிப்படையில் உள்ளுறைப் பொருள் அமைகின்றது.

"பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி இருக்கும் குருகுஇரை தேர்ந்துஉண்ணும்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசம் கிடந்து பதைக்கின்ற வாறே" (திருமந். 2917)

என்பது சூனிய சம்பாஷணையில் அமைந்த ஒரு பாடல். இதன் முன்னிரு அடிகளும் மேற்காட்டிய சங்கப்பாடல் உள்ளுறைப் பகுதியுடன் ஒப்பிடத்தக்கவை. ஆனால், குறியீட்டுப் பொருளை அறிதல் கடுமையானது. இந்தக் கருப்பொருள் நிகழ்விற்கு இணையாக எந்த உரிப்பொருளைச் சமன்படுத்துவது என்பதற்குச் சரியான வரையறை இல்லை. காரணம், சித்தர் இலக்கியங்களின் உரிப்பொருளுக்கு என்று கட்டுப்பாடுகள் ஏதுமில்லை. இருந்தும், குரு உபதேச முறையில், ஆன்மிகப் பயிற்சியில் ஒரு தற்காலிகப் பொருளமைதியைக் காண முற்படுகின்றனர். அதனடிப்படையில் பாசி = காமம், குரோதம் முதலிய ஆறு அழுக்குகள்; குளம் = சித்தம்; கூசி இருக்கும் குருகு = பாசத்தில் பற்றுக்கொண்டிருக்கும் சீவன்; இரை = விடய அனுபவம்; உண்ணுதல் = நுகர்தல் என உரைக்கின்றனர். இது மேற்கண்ட சங்க இலக்கிய உள்ளுறையைப் போன்று எளிய குறியீடு அன்று. இஃது ஒருவகையான முடிவற்ற குறியீடு. சித்தாந்த அறிவு முற்றமுற்ற உட்பொருள் விளக்க வியாக்கியானங்கள் வளர்ந்துகொண்டும் போகலாம்.

விடுகதை அமைப்பும் சித்தர் குறியீடும்

ஆகச் சிறந்த வாய்மொழி இலக்கிய மரபு தமிழுக்கு உண்டு. பாணர்களின் வாய்மொழிப்பாடல் மரபின் எச்ச வடிவங்களே சங்க இலக்கியங்கள் என்பது அறிஞர்கள் முடிபு (க.கைலாசபதி, 2006:193-259). பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்திலேயே விடுகதை பற்றிய குறிப்புகள் பல உண்டு (தொல். 1330, 1412, 1413, 1424, 1429). சங்க இலக்கியங்களிலும் சில விடுகதைகள் இடம்பெற்றுள்ளன.

"ஐதேய்ந் தன்று பிறையும் அன்று
மைதீர்ந் தன்று மதியும் அன்று
வேய்அமன் றன்று மலையும் அன்று
பூஅமன் றன்று சுனையும் அன்று
மெல்ல இயலும் மயிலும் அன்று
சொல்லத் தளரும் கிளியும் அன்று" (கலி.55: 9-14)

என்னும் பாடற்பகுதியில் தலைவியின் உறுப்புநலன்கள், விடுகதை அமைப்பில் இடம்பெற்றுள்ளதை இரா. குணசீலன் எடுத்துரைக்கின்றார். www.varalaaru.com

சித்தர் பாடல்கள் சிலவற்றிலும் இந்த விடுகதைச் சாயல் இருப்பதைக் கூறவந்த இரா. மாணிக்கவாசகம்,

விடுகதைகளில் பெரும்பாலானவை சித்தர்கள் பாடல்களைப் போலவே ஏமாற்றும் எளிமை (Deceptive simplicity) மிக்கவை (1995:2)

எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றில் ஒரு முரண் உண்டு. சித்தர்களது பாடல்கள் பெரும்பாலானவை விடுகதைகளைப் போல உள்ளன என்பதற்கு மாறாக, விடுகதைகள் பல சித்தர்களது பாடல்களைப் போல உள்ளன என்பது பொருந்துமாறு இல்லை. சமுகத்தில் தொன்றுதொட்டு இருந்துவந்த நாட்டார் வாய்மொழி இலக்கிய வடிவங்களையே சமய, தத்துவ அறிஞர்கள், தம் கருத்துப் பரப்புரைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டமையை வரலாற்று நெடுகிலும் காணமுடிகின்றது. இங்கு இரா. மாணிக்கவாசகம் குறிப்பிடும் 'ஏமாற்றும் எளிமை' (Deceptive simplicity) என்பதற்கு,

மேற்போக்கான தோற்றத்தில் ஒரு பொருளும், ஆழ்ந்து நோக்கினால் புதிர் பொதிந்த சுவைமிக்க உட்பொருளும் (மேலது)

எனப் பொருள் கொள்ளலாம். இப்பண்பு, விடுகதைக்கும் அதன் சாயல் பெற்ற சில சித்தர் பாடல்களுக்கும் பொது.

"இலை உண்டு கிளை இல்லை
பூ உண்டு மணம் இல்லை
காய் உண்டு விதை இல்லை
பட்டை உண்டு கட்டை இல்லை
கன்று உண்டு பசு இல்லை - அது என்ன?" www.thamaraikulam-theni.blogspot.com

என்பது ஒரு விடுகதை. இதற்கு வாழை என்பது விடை. இதே சாயலில் திருமந்திரத்தின் சூனிய சம்பாஷணையில்,

"இலைஇல்லை பூஉண்டு இனவண்டுஇங்கு இல்லை
தலைஇல்லை வேர்உண்டு தாள்இல்லை பூவின்
குலைஇல்லை கொய்யும் மலர்உண்டு சூடும்
தலைஇல்லை தாழ்ந்த கிளைபுல ராதே" (திருமந். 2898)

என்னும் பாடல் இடம்பெறுகின்றது. இது நிர்க்குண பிரம்மத்தின் இயல்பைச் சித்திரிக்கின்றது. இங்குப் புலப்பாட்டு உத்திகளை ஆராய்வதே முதன்மை நோக்கமாக அமைவதால், சித்தாந்த விளக்கங்கள் தவிர்க்கப்படுகின்றன.

தலையில்லாத் தலையேறி மகள், அடியில்லாக் குடம் எடுத்து, கரையில்லா ஆற்றுக்குத் தண்ணீருக்குச் செல்ல, அங்கே வேரில்லாத புல்லை, உடலில்லாத மான் மேய்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ணில்லாத வேடன், அம்பில்லாத வில்லால் எய்ய, அது மான் மீது படாமல், மான்

வயிற்றில் இருந்த குட்டி இறந்துபோனது. அதைச் சமைத்து உண்டுவிட்டு, அதன் தோலை எடுத்துச் சென்று, இருபத்தாறு தேசத்திற்கும், கால் இல்லாத பந்தல் போட்டு, விருந்து வைத்தனர். இதைச் சொல்வோர்க்கு எழும்பொன் ஆயிரம் பரிசு. (நன்றி : வி. செந்தில் ராணி, அ. பாலகிருஷ்ணன் மற்றும் இரா. சுப்பிரமணியன்)

என்றொரு நெடிய விடுகதை உண்டு. நீர் ஆவியாகி, மேகமாகத் திரண்டு, வான் நோக்கிச் செல்வதும், இடி மின்னலுடன் மழைபொழிந்து, மீண்டும் நிலத்தில் நீராகப் பெருகுவதுமே இவ்விடுகதைக்கான விடை. புறநிலையில் இவ்விடுகதை, இயற்கைக்கு மாறான எதிர்மறை அடுக்குகளாகத் தொடுக்கப்பட்டுள்ளது. இதே அமைப்பில்,

"எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்துஇருந்து ஓத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணம்உண்ட வாறே"(திருமந். 2885)

என்னும் திருமந்திரப் பாடல் காணப்படுகின்றது. சகசிர தளத்து நாதத்தில் ஆன்மா திளைத்திருக்கும் என்னும் சித்தாந்த உண்மையை இப்பாடல் சித்திரித்துக் காட்டுகின்றது. இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி இலக்கிய மரபின் புலப்பாட்டு நெறி நோக்கத்தக்கது. விடுகதை வடிவத்தைப் போலவே வாய்மொழி இலக்கியங்களுக்குப் பொதுவான திருப்புரை உத்தியும் (Repetational Technic) திருமந்திரத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, பேசுபொருள் சார்ந்த ஒரு சொற்றொடர் அடுத்தடுத்து மீண்டு வருவது.

"தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகைஅறிவார் இல்லை
மாறிக் கிடக்கும் வகைஅறி வாளர்க்கு
ஊறிக் கிடந்ததுஎன் உள்அன்பு தானே" (திருமந். 2867)

என்னும் பாடலில் இரண்டு மற்றும் மூன்றாம் அடிகள் திருப்புரையாக அமைகின்றன. இது நாட்டார் வாய்மொழி இலக்கிய உத்திகளுள் ஒன்று. இதனை இடைமடக்கு என யாப்பருங்கலக் காரிகை (30) சுட்டும்.

தொகைக்குறிப்பும் உருவகமும்

பேசுபொருளுக்குரிய தொகைக்குறிப்புகளைப் பழம்புலவர்கள் ஆங்காங்கு விட்டுச்செல்வர். அவற்றுக்குரிய விரிவை வாசகர்கள் கண்டுணராவிட்டால் பொருள்கோடல் முற்றுபெறாது. இதனால்தான் மொழியின் குறிப்புப்பொருட் கூறுகளைப் பட்டியலிட்ட பவணந்தியார், தொகை என்பதையும் அடக்கிக் கூறுகின்றார் (நன். 269). இதன் இலக்கியப் பயில்வு தொன்மையானது என்பதற்கு,

"உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து" (குறள் – 24)

போன்ற வள்ளுவர் வாக்கே பதச்சோறு. இங்குத் திண்மை என்னும் தோட்டியால் கட்டுப்படுத்தற்கு உரியனவாக ஐம்பொறிகளும், தொகைக்குறிப்பில், ஏகதேசமாக (ஒருபுடை) உருவகம் செய்யப்பட்டுள்ளன. இப்படி ஐம்பொறிகளைத் தொகைக்குறிப்பில் உருவகப்படுத்திக் கூறும் போக்குத் திருமந்திரத்திலும் பிற சித்தர் பாடல்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துஉண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே" (திருமந். 2883)

என்னும் திருமந்திரப் பாடலில், பார்ப்பான் = ஆன்மா; பாற்பசுகள் ஐந்து = ஐம்பொறிகள்; வெறித்துத் திரிதல் = புலன்களில் போதல்; மேய்ப்பார் = சிவம்; பாலாச் சொறிதல் = பேரின்பம் தருதல் என்னும் அடிப்படையில் குறிப்புப்பொருள் பொதிந்துள்ளது.

"ஒன்பது வாயில்கொள் கோட்டைஉண் டேஅதில்
உள்ளே நிலைக்காரர் அஞ்சு பேராம்
அன்புட னேபரி காரர்கள் ஆறுபேர்
அடக்கம் தானடி வாலைப் பெண்ணே" (மீ.ப.சோமசுந்தரம்,2009: 272)

"பட்டணத்தை ஆளுகின்ற பஞ்சவர்கள் ராசாக்கள்
விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தாம்பேசி
விட்டுப் பிரிந்தவரே வேறு படுங்காலம்
பட்டமும் தான்பறிபோய் என்கண்ணம்மா
படைமன்னர் மாண்டது என்ன" (மேலது, ப.296)

என்பவை முறையே கொங்கண சித்தர் மற்றும் அழுகணிச் சித்தர் பாடல்கள். இவற்றுள் ஐம்பொறி உருவகங்கள் குறிப்புமொழியாக இடம்பெற்றுள்ளன.

சித்தரியக் குறியியல் ஆய்வுக்களம்

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான கால இடைவெளியில் சைவ சமயத்தின் ஒரு கிளையாகச் சித்தர் மரபு நிலவியதை உணரமுடிகின்றது (வீ.அரசு, 2012:4). இதில் பற்பல குறியீடுகள் கையாளப்பட்டுள்ளன. அவற்றைச் சித்தர்களின் பரிபாஷை (குழூஉக்குறி) என்பர். இத்தகு சித்தர் குறியீடுகளைத் தொகுத்து இரா. மாணிக்கவாசகம், 'பதினெண் சித்தர்கள் பரிபாஷை அகராதி' (1982 மு.ப.) என்னும் பெயரில் 327 பக்கங்களில் ஒரு நூலை எழுதியுள்ளார். இஃது இத்துறை சார்ந்த ஆய்விற்கு ஒரு முன்னோட்டப் பணி. இதனைச் சீராய்ந்து பார்த்துச் செப்பனிட்டு வளர்ப்பதும், நவீனமுறையில் ஆய்விற்கு உட்படுத்துவதும் சித்தர் இலக்கியப் பரப்பிற்குப் புத்தொளியைத் தரும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்குலகில் நவீன அமைப்பியத்துடன் (Structuralism), நவீன குறியியலும் (Semiotics / Semiology) வளர்ச்சியடையத்

தொடங்கியது. உளப்பகுப்பாய்வு, மொழியியல், மானுடவியல் போன்ற துறைகளில் முறையே சிக்மண்ட் பிராய்டு (1856 – 1939), ஃபெர்தினென்ட் தெ சசூர் (1857 – 1913), கிளாட் லெவி–ஸ்ட்ராஸ் (1908 – 2009) போன்றோர் குறியியலைச் சிறப்பான முறையில் பயன்படுத்திய / வளர்த்தெடுத்த பெருமக்கள். அவ்வகையில் தமிழ்ச்சித்தர்களின் பாடல்களையும் குறியியல் நோக்கில் ஆராய்வது பல தத்துவ, சமய மற்றும் சமூக மறைபொருளை வெளிக்கொணர உதவும்.

சைவ சித்தாந்த அடிப்படையில் ஆன்மா என்பது பல இடங்களில் பசுவாக உருவகம் செய்யப்படுகின்றது. குதிரை, பிராணனுக்குக்(மூச்சுக்காற்றுக்கு) குறியீடாக்கப்படுகின்றது. மலர் / பூ என்பது சகசிர தளத்தைக்(சகஸ்ராரம்) குறிக்கின்றது. விளைச்சல், பால், கனி, இரை போன்ற விளைபொருட் பண்டங்கள் ஆன்மப் பயன்களுக்கான குறியீடுகளாகக் காட்டப்படுகின்றன. ஊர், கரை போன்றவை முக்திக்கு அடையாளமாகச் சொல்லப்படுகின்றன. இவற்றை விரிவான நிலையில் ஆராய இடமுண்டு.

குறிப்புதவி நூல்கள், தளங்கள், தகவலாளர்கள்

- www.thamaraikulam-theni.blogspot.com
- www.varalaaru.com
- அ. பாலகிருஷ்ணன், தமிழாசிரியர், ஆர்.வி. மேனிலைப்பள்ளி, நரிப்பள்ளி, அரூர், தர்மபுரி.
- அரசு. வீ, 2012 (மு.ப.), *சித்தர் மரபு : நவீன சித்து விளையாட்டுகள்,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- இரா. சுப்பிரமணியன், வெற்றிலை விவசாயி, மீனாட்சிபுரம், தஞ்சாவூர் மாவட்டம்.
- குருசாமி, ம.ரா.போ., 1980 (மு.ப.), *தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள்,* நரேந்திரசிவம் பதிப்பகம், கோவை.
- கைலாசபதி, க., 2006 (மு.ப.), *தமிழ் வீரநிலைக் கவிதை,* குமரன் புத்தக இல்லம், சென்னை.
- கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), 2002 (மு.ப.), *திருக்குறள் பரிமேலழகர் உரை,* சாரதா பதிப்பகம், சென்னை.
- சிங்காரவேலன், சொ. (உ.ஆ.), 1998 (மு.ப.), *தொல்காப்பியம்,* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சோமசுந்தரம், மீ.ப., 2009 (மு.ப.), *சித்தர் இலக்கியம் – 6,* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
- தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ.), 2004 (மு.ப.), *ஐங்குறுநூறு,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- தமிழவன், 2008 (இ.ப.), *அமைப்பியலும் அதன் பிறகும்,* அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.
- நோயல் ஜோசப் இருதயராஜ், 2013 (மு.ப.), *கோட்பாட்டு விமர்சன யுகம் விமர்சனக் கோட்பாட்டு யுகம்,* அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.
- மாணிக்கம், அ. (உ.ஆ.), 2003 (ஆ.ப.), *திருமந்திரம் மூலமும் உரையும் – மூன்றாம் தொகுதி,* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- மாணிக்கவாசகம், இரா., 1995 (மு.ப.), *பதினெண் சித்தர்கள் பரிபாஷை அகராதி,* திருமகள் நிலையம், சென்னை.
- வி. செந்தில் ராணி, தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீகைலாஷ் மகளிர் கல்லூரி, தலைவாசல், சேலம்.
- விசுவநாதன், அ. (உ.ஆ.), 2007 (மு.அ.), *கலித்தொகை,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு

Question Structure of Periyavachan Pillai Commentary

வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan[13]

Abstract: Question and Answer strategy is there in commentary writings. This strategy appears in the initial stage commenter onwards. In that way the Question and Answer strategy is available in the commentary of Periyavaachan Pillai who wrote full commentary for the vaishanava text Naalaayira Thivya Brapandham. We can find this strategy through the commentary of Thiruvaaciriam and Periya Thiruvanthaathi. Periyavaachan Pillai has used the question types in his commentary which was mention in 13th century Tamil Grammer Nanool. Three type of question are appears in his commentary known as, known question, unknown question, doubtful question. This is good to trace the strategy of Question and Answer in devotional commentary. Because, it is wonder that the using of question and answer strategy for simplifying the unknown things which are difficult to understand. In his commentary we can find that somewhere question-answer method and somewhere only question method this method is to understand the things readers them self. This is best skill of Periyavaachan Pillai. That is why he is called king of commentary. This article tries to justify the above quotation.

Date of submission: 2019-06-19
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: வ.கோபாலகிருஷ்ணன்
Email: rasaigopi@gmail.com

Keywords: Types of Question, Known Question, Unknown Question, Doubtful Question, V.Gopalakrishnan, வினா வகை, அறிவினா, அறியாவினா, ஐயவினா, வ.கோபாலகிருஷ்ணன்.

முன்னுரை

இலக்கண மற்றும் இலக்கிய உரையாசிரியர்கள் போல வைணவ உரையாசிரியர் பெரியவாச்சான்பிள்ளையும் ஈடு இணையற்றவராகத் திகழ்கின்றார். இவர் தன்னுடை உரையில் ஒரு கருத்தினை ஆழப்பதிய வைப்பதற்காகச் சொல்நயம், பொருள் நயம், மேற்கோள்களைக் கையாளுதல், உவமையைப் பயன்படுத்துதல், சிற்றிலக்கிய வகைமைகளைப் போற்றுதல், புராணக் கூறுகளை இடையிடையே புகுத்துதல் போன்ற எண்ணிறந்த உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் வினா அமைப்பும் ஒன்று. தன் உரை விளக்கத்திற்கு மேலும் மெருகேற்ற வேண்டும் என்ற நோக்கில் வினா

---

[13]தமிழ் உதவிப்பேராசிரியர், எம்.ஜி.ஆர் கல்லூரி, ஒசூர் - 635130, கைபேசி : 9488181733, மின்னஞ்சல்: rasaigopi@gmail.com

அமைப்பினைக் கையாண்டுள்ளார். அவர் கையாண்டுள்ள அவ்வினா அமைப்புமுறையின் நெறிமுறைகளை விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

வினா வகை

> வினா வகைக் குறித்து நன்னூலில்,
> "அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
> ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்"[1]

எனக் கூறப்பட்டுள்ளது. இதில் அறிவினா, அறியாவினா, ஐயவினா எனும் மூவகை வினாவிற்குள் பெரியவாச்சான்பிள்ளையின் திருவாசிரியம், பெரியதிருவந்தாதி ஆகிய உரையினை அடக்கலாம்.

அறிவினா

தான் ஒருபொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும் பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா ஆகும். இவ்வினா வகையைத் திருவாசிரியம்(5) பாசுரத்தில் திருமாலின் வாமனவதாரத்தைக் குறிப்பிட்டு உரையெழுதும்போது பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

திருமால் குள்ளமான வடிவத்தோடு வருகின்றபோது அவருடைய மேன்மையை எவரும் அறியாமல் இருக்கின்றனர். இவ்வவதாரம் ஒருவருக்காக மட்டும் எடுக்காமல் உலக மக்களின் நன்மைக்காக எடுத்த அவதாரமாகும். இச்சூழ்நிலையில்தான் திருமால் விண்ணுயர வளர்ந்து நிற்பார். அப்போது அவருடைய திருவடியானது தாமரைப்பூப் போன்று விளங்குவதைக் குறித்து உரையாசிரியர் அறிவினாத் தன்மையில் விளக்கம் அளிப்பதைக் காணலாம். 'திருவடியாகிற அன்றலர்ந்த பூவை என்ன செய்தான்?' எனும் வினாவிற்கான விடையை உரையாசிரியர் மிகத்தெளிவாக அறிந்திருக்கிறார் என்பதை அடுத்ததாகக் கேட்கின்ற வினாவினை வைத்து நன்கறியலாம். 'திருவடியின் கீழே பட்ட பொருள்கள் துன்படையவில்லையோ?' எனத் தொடுக்கின்றார். அதாவது, புதியதாக மலர்ந்த தாமரைப்பூவின் இதழ்களை விரித்துத் தரையில் தலைகீழாகக் கவிழ்த்து வைத்தால் அதற்குள் இருக்கும் மகரந்தங்கள் எத்தகைய துன்பத்தையும் அடையாமலிருக்கும். அதுபோல திருமாலின் வாமனவதாரத்தின்போது அவருடைய பாதத்திற்குக் கீழே உள்ள மானிடர் முதல் பொருட்கள் வரை பாதுகாப்பாக இருந்ததைப் பெரியவாச்சான்பிள்ளை தன் உரை வாயிலாக விளக்குகிறார். இதனை, "திருவடியாகிற அன்றலர்ந்த பூவை என்ன செய்தான்? எனில் 'திருவடியை வியாபிக்கச் செய்து எல்லாவற்றையும் அளந்துகொள்ளும்போது சிறிய பொருள்களின் மேலே பெரியபொருளான திருவடி அழுத்தினால் அச்சிறிய பொருள்கள் துன்பமடையும். அப்படியே திருவடியின் கீழே பட்ட பொருள்கள் துன்பமடையவில்லையோ? எனில் அன்று பூத்த தாமரைப் பூவைக் கவிழ்த்து அதன் இதழ்களை விலக்கி அலரச் செய்தால் அத்தாமரையினுள் இருக்கும் அல்லி தாது முதலானவை எப்படி நெருக்குப் படாமலிருக்குமோ அப்படியே இந்தத் திருவடித்தாமரையின் கீழ்பட்ட

பொருள்களுக்கும் எத்துன்பமும் விளையவில்லை"[2] என்று அறிவினா நோக்கில் தொடுத்து அதற்கு அனைவரும் அறிந்துகொள்ளும் விதத்தில் சீரிய விடையையும் தருவது இவருடைய உரையாற்றலைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

திருவாசிரியம்(6) பாசுரத்திற்கு உரை எழுதும்போது வினாக் கேட்டு விடையளிக்கும் விதத்தை, "நீர் இங்ஙனே ஓ! என்றிட்டு நெடுவாசிபடக் கூப்பிடுகைக்கு லோகமாகத்தான் செய்த தென்னென்னில்? இரா நின்றார்கள். உற்பத்திக்கு முன்னே உண்டாக்குகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணி, பின்னை கர்ப்பத்திலே தரித்து, ப்ரஸவவேதனையை அனுபவித்து அநந்தரம் தண்ணிய தரையிலே இட்டுக்கொடு துவண்டு நோக்கினால், அறிவு பிறந்து பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்குமளவானவாறே அவளைவிட்டு ஒரு உபகாரமும் பண்ணவுமறியாதே இவன் பண்ணின உபசாரத்தை ஸ்மரிக்கவுமறியாதே இருப்பதொரு அசித்பதார்த்தத்தைக் கொண்டாடுவாரைப் போலே, வகுத்த விஷயத்தை விட்டு அப்ராப்த விஷயத்தை ஆதரியா நின்றார்கள். நீர் ஈன்றோள் என்று தாயாக நினைக்கிறது தான் ஆரை? என்னில்; படைத்திடந்துண் டுமிழ்ந்தளந்து தேர்ந்துல களிக்கும் முதற்பெருங் கடவுள்."[3] என்று உரை எழுதியுள்ளார். இதில், இரண்டு விதமான கேள்விகளைக் கேட்கின்றார். ஒன்று, 'நீர் இப்படி ஓ என்று பெருங்குரலெடுத்துக் கதறும்படி இந்த உலகம் என்ன செய்துவிட்டது?' என்பதும், மற்றொன்று 'நீர் ஈன்றோள் என்று தாயாக நினைப்பது யாரை?' என்ற இருவிதமான வினாக்களை முன்வைக்கிறார். அதற்கும் தன் உரையினுள்ளே விடையையும் குறிப்பிட்டுள்ளார்.

நீர் இப்படி ஓ என்று பெருங்குரலெடுத்துக் கதறும்படி இந்த உலகம் என்ன செய்துவிட்டது? என்பதற்கு ஒரு தாயானவள் உன்னைப் பெற்றெடுப்பதற்கு விரதமிருந்து பத்துமாதம் தன் வயிற்றில் தாங்கியிருந்து, அதன் பின் பெற்றெடுத்து தரையில் விடாமல் மடியில்கிடத்தி ஆறறிவையும் ஊட்டி வளர்த்து ஆளாக்கிவிடுவாள். பின் அத்தாயை மதிக்காமல் இருப்பதுபோல திருமாலை விட்டுவிட்டு மற்ற தெய்வங்களை வணங்குவதை வலியுறுத்திக் கூறுவதற்காக இத்தகைய ஒரு வினாவைத்தொடுத்து வைணவ சமயத்தின் மாண்பை நிறுவிக்காட்டும் நோக்கில் விடையையும் முன்வைக்கின்றார் உரையாசிரியர்.

நீர் ஈன்றோள் என்று தாயாக நினைப்பது யாரை? என்பதற்கு நம்மாழ்வாரின் பாசுரவரியினைப் பதிலாக எடுத்துக் கூறுகின்றார். அதாவது, 'படைத்திடந் துண்டுமிழ்ந் தளந்து தேர்ந்துல களிக்கும் முதற்பெருங் கடவுள்' என்று திருமாலைக் குறித்து விடையும் தருகின்றார் உரையாசிரியர்.

திருவாசிரியத்தை ஒப்பிடும்போது பெரிய திருவந்தாதியில் வினாத்தொடுக்கும் இடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. பெரிய திருவந்தாதியின் இரண்டாம் பாசுரத்தில், "புகழ்வோம் பழிப்போம் அவ்விஷயத்தைப் புகழப் பார்த்தோமாகில் பழித்தோமாவோம். புகழோம் பழியோம் 'புகழ்வோம்' என்றதினாலே இவ்வர்த்தம் ஸித்தியாதோவென்னில்: அந்வயத்திற் காட்டில் வ்யதிரேகத்தாலே சொன்னால் அர்த்தத்துக்கு ஒரு ஸ்தைர்யமுண்டென்று சொன்னார்."[4] இதில் 'புகழ்வோம் பழிப்போம்'

என்றதனாலேயே அர்த்தம் கிடைக்காதோ? என வினாக் கேட்டு விடையும் உரைக்கிறார். அதாவது, பகவத் கீதையைப் புகழ்ந்தோமானால், உண்மையில் அதைப் பழித்தவர்களாகவே ஆகின்றோம். திருமாலைப் புகழாமலிருந்தோமானால் அதுவே அவனைப் பழிக்காமல் இருந்ததாகும் என்று விடையளித்துக் காரணத்தையும் கூறுகின்றார். பழிப்போம், புகழ்வோம் என மாற்றிக் கூறினாலும் மேற்கண்ட பதிலும் கேள்வியும் சரியாகப் பொருந்தும் என்ற காரணமும் இவ்விடத்தே வைத்து நோக்கத்தக்கதாகும். இதன் மூலம் உரையாசிரியரின் அறிவினா ஆற்றலின் தன்மையை அறிந்துகொள்ள முடிகின்றது.

திருமாலை நம்முடைய கண் எப்பொழுது, எவ்வாறு கண்டுணரும் என்பதற்குப் பெரிய திருவந்தாதி(28) பாசுரத்திற்கு எழுதிய உரை வாயிலாக அறியலாம். இதில், "ஸர்வேஸ்வரன் கறுத்த திருமேனியை நம்முடைய கண் அன்றே காணும். ஒரு நாளும் பகவத் விஷயத்தைக் காணாமையாலே 'பீலிக்கண்' என்றவோபாதி கண்ணென்று பேரான கண்ணால் காணப்போகாத அவனுடைய திருமேனியை நெஞ்சாகிற உட்கண் உணர்ந்து காணுமாகில் நம் கண் காணுமாழியான் காருருவம்."[5] எனும் உரைவாயிலாகத் திருமாலை எவ்வாறு காணவேண்டும் என்பதற்கு வினாவினை எழுப்பி, காரண காரியத்தையும் விளக்கி நிற்கின்றார். இதில் கருமை நிறத்தில் இருக்கின்ற திருமாலின் திருமேனியை நம்முடைய புறக்கண் என்று காணும்? என்றால், ஒரு நாளும் திருமாலை காணாமலிருக்கின்ற புறக்கண்ணானது மயிலின் பீலிக்கண்போலே 'கண்' பெயர்பெற்ற ஓர் உறுப்பானது காணமுடியாமல், மனம் எனும் நமது உட்கண் உணர்ந்து காணுமாகில் அன்றுதான் நம்முடைய புறக்கண் ஆழி அரசன் கருமைநிறத் திருமாலைக் காணும் என்று தகுந்த விடையளித்து அறிவினாத் தன்மையைத் தன் உரைவாயிலாக வெளிப்படுத்திச் செல்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

பெரியதிருவந்தாதி(13) பாசுரத்திற்கு உரை கூறும்போது, "நீர் அடியாராக வேணுமேயென்ன, என்பக்கலுள்ளது அழிந்ததாகிலும், உன்பக்கலுள்ளது அழியாதிரே: உன் ஸ்வாமித்வம் உண்டாக என் சேஷத்வம் தன்னடையே கிடவாதோ? நாட்டடியார்க்கு இழப்புண்டாகிலும் உன்னடியார்க்கு இழப்புண்டோ?"[6] என இரு வினாக்களை முன்வைத்து உரை எழுதிச் செல்கிறார். இதில், திருமாலை எவராலும் அழிக்க முடியாது. அப்படி உறுதியாக இருக்கின்றவனை அழிக்க முடியாதது போல் அவனை வழிபடுகின்றவர்களுக்கும் அழிவு உண்டோ? என்கிறார். மேலும், உலகில் மற்றவர்களுக்கு அடியவர்களாக இருந்தால் விரும்பிய பலனை அடைய முடியாமல் போகும். அதுபோல திருமாலிடம் அடியவர்களாக உள்ளவர்களுக்கு இழப்புகளும் உண்டோ? என்று வினாவினைத் தொடுத்து உரையின் பொருள் விளக்கத்தை எடுத்தியம்புகின்றார்.

அறியாவினா

தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினாவுவது அறியா வினாவாகும். இவ்வினாவகை உரையாசிரியரின் உரையில்

மிகுதியான இடங்களில் விரவிக் காணப்படுகின்றது. குறிப்பாக, அறிவினா இடம்பெறும் இடங்களில் விடைகளைக் காணமுடிகிறது. இவ்வகை வினாப் பயின்று வரும் இடங்களில் விடையைக் காண இயலவில்லை. அதேசமயத்தில் அறியா வினாக்களுக்கு விடைகள் இல்லை என எண்ணுவதும் தவறாகும். இப்போக்கு பெரியவாச்சான் பிள்ளையின் வைணவப் பற்றினைப் புலப்படுத்தும் நோக்கில் அமைந்திருப்பதை அறியலாம்.

பெரிய திருவந்தாதி(12) பாசுரத்திற்கு "ஸர்வேஸ்வரனுக்கு ஐஸ்வர்யமேயன்று காண் விஞ்சியிருப்பது: நீர்மையும் விஞ்சியிருக்குங்காண் என்று நான் சொன்னாலும் அழன்று அத்தைக் கொள்ளாய். 'ஆகில் இனிச் செய்வதென்?' என்று நெஞ்சு கேட்க, அவன் அபிமுக்யம் பண்ணிநிற்க நாம் வைமுக்யம் பண்ணலாகாதுகாண்: அவன் திருவடிகளுக்கு மங்களாஸாஸநம் பண்ணுகை ந்யாயம்"[7] என்று மனம் வினாக் கேட்பதாக எழுதிச்செல்கிறார். இவ்வினா அறியாவினாவாக அமைந்தாலும், திருமால் மீது பற்றுக்கொண்டு பல்லாண்டு பாடிக்கொண்டிருந்தால் நம்முடைய சித்தம் சிறப்பாக அமையும் என்பதை மேற்கண்ட வினாவினை வைத்து நாமாகவே அறிந்து கொள்ளலாம்.

ஐயவினா

தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒரு பொருளினைக் குறித்து ஐயத்தினைப் போக்கிக்கொள்வதற்காக வினவப்படுவதாகும். மற்ற வினாவகைகளைப் போலவே இவ்வினாவையும் உரையில் எளிமையாகக் காணமுடிகின்றது.

பெரியதிருவந்தாதி(36) பாசுரத்தில், "எம்பெருமான் திருப்பாற்கடல் நாதனாயிருந்து அணுகுவதற்கு அரியவனாய் இருப்பனோ?"[8] என வினா எழ உரை எழுதுகின்றார். அதாவது, கடல் நாயகனாக இருக்கின்ற திருமால் நான் அணுகுவதற்கு எளியவனாக இருப்பானோ? எட்டாதவனாக இருப்பானோ? என்று பாசுரத்தின் தொடக்கத்திலே வினாவினைக் கேட்டு விளக்குகின்ற தன்மையினையும் உரையாசிரியரிடம் காணமுடிகின்றது. அடுத்துவரும் பாசுரத்திற்கும் தொடக்கத்திலே வினாக் கேட்பதைக் காணலாம். இதனை, "ஆமாறு (ஆறு வழியாய்) வழியான அறிவுடையா ராவதரிதன்றே?"[9] என்பதன் மூலமாக, ஆறறிவு கொண்டவர்களைக் காண்பது மிகவும் அரிதல்லவா? என்று வினாக் கேட்டு, உலகில் அறிவுடையவர்களைக் காணமுடியவில்லையே என்கிற ஆதங்கத்தைத் தன் வினாவின் மூலம் உரையாசிரியர் வெளிக்காட்டுவதை உணர முடிகின்றது.

பெரிய திருவந்தாதி நாற்பத்து மூன்றாம் பாசுரத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட வினாக்களைத் தொடுத்து நிற்பதைக் காணலாம். இவற்றில் மட்டுமே வினாக்கள் அதிகம் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. இதனை, "அபயம் என்று நினைத்து வந்த தேவதைகளை அந்தத் துக்கத்தை நடுங்கப்பண்ணிப் போக்குமவன் தன்னை நவையென்று துக்கஹேதுவான குற்றமாகவுமாம். இவ்விஷயங்களைப் பற்றுவோமோ? ஈஸ்வரனைப் பற்றுவோமோ? அயோக்ய ரென்றகலு வோமோ? அகலாதொழி வோமோ? என்று இரண்டு மின்றிக்கேயிருக்கிற மநஸ்ஸிலே இவனை உயர வைத்து மங்களாஸாஸனம் பண்ணாதார்க்கு முண்டோ மனத்துயர் மாய்க்கும் ப்ரகாரம்?"[10] என்று மேலான வினாக்களை எழுப்பி பாசுரத்திற்கு

பொருளாழம் சேர்க்கின்றார். இவற்றில், திருமாலை மனதில் உயர்ந்த இடத்தில் வைத்து நிலையாயிருந்து பல்லாண்டு பாடாதவர்களுக்கு மனத்துன்பத்தைப் போக்குவதற்கு வழியுண்டோ? என்றும், ஈஸ்வரனைப் பற்றுவோமோ? அல்லது திருமாலிடம் சேர நமக்குத் தகுதியில்லை என்று அகல்வோமோ? அல்லது அகலாதிருப்போமோ? முதலான வினாக்களைக் கேட்டு, திருமாலின் மேன்மையினைப் பாசுரத்தில் பொருத்தி உரையினைச் சிறப்பாக்கிக் காட்டுகின்றார் பெரியவாச்சான் பிள்ளை.

முடிவுரை

ஆழ்வார்களின் எண்ணத்தை, உள்ளதை உள்ளவாறு தன் உரையில் எடுத்துரைத்துள்ளார். இவற்றிற்கு வினாஅமைப்பு என்னும் உத்தி முறையினை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். உரையாசிரியர் தனக்கு நன்றாகத் தெரிந்த கருத்தினைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் அறிவினாவும், தான் அறியாதவற்றைத் தன் உரையாற்றல் மூலமாக பிறர் தாங்களாகவே அறிந்துகொள்ளும் நோக்கில் அறியாவினாவும், தனக்கு உண்டான ஐயத்தை வெளிப்படுத்தும் தன்மையில் ஐயவினாவும் அமைந்திருக்கும் வண்ணம் உரையெழுதியுள்ளார் எனலாம்.

சான்றெண் விளக்கம்

a. சோம.இளவரசு, நன்னூல் – சொல்லதிகாரம், மூலமும் விளக்கவுரையும், நூற்பா 385.
b. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த திருவாசிரிய வ்யாக்கியானம், ப.57.
c. மேலது, பக்.69–70.
d. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த பெரியதிருவந்தாதி வ்யாக்கியானம், ப.25.
e. மேலது, ப.108.
f. மேலது, ப.69.
g. மேலது, ப.66.
h. மேலது, ப.129.
i. மேலது, ப.132.
j. மேலது, ப.146–147.

துணைநின்றவை

❖ இளவரசு,சோம.(உ.ஆ.), 2004, நன்னூல் (சொல்லதிகாரம்), மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
❖ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,எஸ்.(பதி.), 1947, பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த திருவாசிரிய வ்யாக்யானம், ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.
❖ ……………(பதி.), 1947, பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த பெரியதிருவந்தாதி வ்யாக்யானம், ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

மதிப்பிடப்பெற்றது

தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்

The mother is the epitome of this (Imayam)

மு.அகல்யா / M. Ahalya[14] & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar[15]

Abstract: After the 19th century, prose grew, and the proliferation of enthusiastic creators of writing and writing was forced to address social needs. The role of modern writers in demanding to date the myriad biological issues, such as male-female dominance, upper-class social division, upper-class and lower class. The writer is one of those who postulate social divisions in it. The Bethavan novel of the satirical atrocity has established a new identity in the Tamil literary world. A potent narrator of the epic poem, the novel is a masterpiece and can be asserted to be the most important of the long stories in Tamil. While most of his work is centered around women, this is a story about a daughter, Bethavan.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's Name: மு.அகல்யா & முனைவர் ம.செந்தில்குமார்
Email: malaisenthilptp@gmail.com

Keywords: Satirical atrocity has established, Masterpiece, Work is centered around women, Story about a daughter, M. Ahalya, Dr.M.Senthilkumar, மு.அகல்யா, முனைவர் ம.செந்தில்குமார், உரைநடை வளர்ச்சி, ஆண் - பெண் எனும் ஆதிக்கம், மேலோர் - கீழோர் எனும் சமுகப்பிளவு, உயர்ந்தோர் - தாழ்ந்தோர், பெத்தவன் நாவல், வர்க்கப்பாகுபாடு.

19-ஆம் நூற்றாண்டிற்குப் பின் உரைநடை வளர்ச்சியும், எழுத்தின் மீது ஆவல் கொண்ட படைப்பாளர்களின் பெருக்கமும் உயர்வு கண்டதால் சமூகத் தேவைகளைப் பற்றி பேசும் கட்டாயம் ஏற்பட்டது. ஆண் - பெண் எனும் ஆதிக்கம், மேலோர் - கீழோர் எனும் சமுகப்பிளவு, உயர்ந்தோர் - தாழ்ந்தோர் என்ற வர்க்கப்பாகுபாடு போன்ற எண்ணற்ற வாழ்வியல் சிக்கல்களுக்கு அவசியத்தீர்வை இன்றுவரை கோரிவருவதில் நவீன எழுத்தாளர்களின் பங்கு மிகப்பெரியது. அதில் சமூகப் பிரிவினைகளை முன்வைத்து எழுதுபவர்களில் எழுத்தாளர் இமையம் குறிப்பிடத் தக்கவர். சாதிக் கொடுமையை அலசும் இமையத்தின் பெத்தவன் நாவல் தமிழ் இலக்கிய உலகில் புதிய அடையாளத்தை ஏற்படுத்தித் தந்தது. வலுவாகக் கதை சொல்லும் எழுத்தாளரான இமையத்தின் பெத்தவன் நாவல் சிறப்பான படைப்புகளாக இருப்பதோடு மட்டுமல்லாமல் தமிழில் வந்த நெடுங்கதைகளில் மிகவும் முக்கியமானது என்று உறுதியாகக் கூற

14 முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் - 632 115.

15 இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் - 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

முடியும். இவரது பெரும்பாலான படைப்புகள் பெண்களை மையப்படுத்தியே நகர்ந்தாலும் இது ஒரு மகளை பெற்ற பெத்தவன் பற்றிய கதை.

பெத்தவன் படித்தவுடன் கிறங்கடிக்கிற கதையல்ல நெஞ்சம் பதை பதைக்கும் கதை. சமுதாயத்தில் அரங்கேரிய உண்மை நிகழ்வுகளை அப்பட்டமாகச் செல்பவர். இவரது எழுத்து எளிய மக்களின் மீது படிகிறது. நாம் கடந்து வந்த வாழ்க்கையைத் தீண்டி நம் மனதை பதறவைக்கிறது. நாம் வாழும் சமுதாயத்தில் நிகழும் சாதியக் குரூரத்தை அப்பட்டமாகக் கூறுவதோடு மட்டுமல்லாமல் இன்றைய வாழ்வோடும், சமூக கட்டமைப் போடும் பொருந்துகிறது. கதை நெடுவும் சாதிக் கொடுமைகள் நிரம்பி வழிகிறது.

கவித்துவமான அழகியல் மொழி நடைக்கு சிறிதும் இடம் தராமல் விழுப்புரம் வட்டார மக்களின் எளிமையான மொழிநடைதான் இவரது படைப்பாண்மையின் வெற்றிக்கான அடையாளமாகும். தனித்துவமான நாட்டுப்புற பேச்சு நடையில் எழுதும் இவர் ஜாதி, வகுப்பு, பால் ஆகியவை உணர்த்தும் அனுபவங்களைக் காவு கொடுக்காமல் எளிய மக்களின் வாழ்க்கையை முழுமையாகப் படைக்கிறார். மக்களின் மொழியிலேயே அவர்களின் பேச்சு வழக்கு மொழியிலேயே தனது படைப்புகள் அனைத்தையும் நகர்த்துகின்றார். பாத்திரப் படைப்புகள் அனைத்தும் யதார்த்தமாகவே உள்ளது.

சாதி, வர்க்கம், இனம் போன்றவை மையப்படுத்தும் அளவுக்கு பெண் பாலின ஒடுக்கு முறை என்பது ஒரு மிகமுக்கியமான பிரச்சனையாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் இப்படைப்பு சாதிக் கொடுமைகளையும், பெண் உரிமை மறுப்பையும் கலந்து இலக்கியமாக்கி இருக்கும் அற்புதபடைப்பு. பாலின வேறுபாடு காரணமாக பெண் கடுமையான ஒதுக்குதலுக்குள்ளாகிறாள் என தனது படைப்புகளில் முன் வைக்கின்றார். பெண்மை பற்றி ஆண் எழுதுவதற்கும் பெண் எழுதுவதற்குமான வேறுபாடு நுண்ணியது. பெண்களின் துயரங்களை ஆண்களால் சொல்லில் வடிக்க முடியாது என்ற பழைய கருதுகோளை உடைத்து எரிந்தவர்.

தமிழ்கூறும் நல்லுலகில் பெண்மையையும், தாய்மையையும் கொண்டாடுகின்ற படைப்பாளிகளுக்கு மத்தியில் பெத்தவன் என்ற தலைப்பே நாவலின் மொத்த சாரத்தையும் விளக்கிவிட்டது. மாலையில் இருந்து காலை வரை ஓர் இரவில் நிகழ்வதை நாவலாக்கியிருக்கிறார். இருவேறு சாதிகளைச் சார்ந்த பெரியசாமி, பாக்கியம் இருவருக்கும் கல்லூரயில் படிக்கும் போது காதல் ஏற்படுகிறது. பெரியசாமி கீழ்சாதி என்பதால் பாக்கியம் வீட்டில் எதிர்ப்பு தெரிவித்தனர். ஊர்க்காரர்கள் பாக்கியத்தை சாகடிக்கச் சொல்கிறார்கள். பாக்கியத்தின் தந்தை பழனியின் முடிவு மகளை பெற்ற தாயுமானவராகிய ஒரு தந்தையின் மனநிலையை விளக்குகிறது இந்நாவல்.

இந்நாவலின் முக்கிய கதாப்பாத்திரம் பழனி. **"சரம் சரமான கேள்விகள் பழனிக்கு செக்கில் போட்டு ஆட்டுவது மாதிரி இருந்தது"**. இவ்வாறு நாவலின் தொடக்கத்தில் ஊர் மக்களின் காரசாரமான பேச்சே நாவலின் அதிர்வை முன்கூட்டியே உணர்த்துகிறது. **"எனக்கு திருமணமான போது இருபத்தி மூணு**

வயது. இருபது வருசம் கயிச்சி நீ பொறந்த இருவது வருசமா ஊரு பேசுச்சு உலகம் பேசிச்சு நீ பொறந்த உனக்கு ஊருல இல்லாத பேரா பாக்கியமுனு பேரு வச்சன். இப்பியும் தான் சனங்க பேசுறாங்க நாக்கப் புடுங்கிக்கிட்டு சாவுறாப்பல" என்ற வரிகளில் பழனியின் குரல் துக்கம் தோய்த்த ஈரத்தோடு வாசிப்பில் தொடர்ந்து ஒலிக்கிறது. இந்தக் குரலின் ஓசை வாசகர் இதயத்தில் கலந்து விடுகிறது.

"சனியன் சனியன் கால வுடு. நீயும் எதுக்கு என்னெ சாவடிக்கிற கெட்ட வார்த்தையில் திட்டிடுவேன்" என்று கூறும் பழனியின் வார்தைகள் மூலம் ஆணின் பொது மனநிலையை அதாவது கோவமான நேரங்களில் மனைவியையும், தாயையும் மட்டுமே திட்டித் தனது கோவத்தை ஆசுவாசப்படுத்திக் கொள்பவன் என்ற ஆணின் மனநிலையை புட்டுபுட்டு வைக்கிறார். அறுபத்தி மூன்று வயதான பழனி பஞ்சாயத்தில் தன்னை விட வயதில் மிக குறைவானவர்களின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளாகி அமைதியாக இருந்தார். ஆனால் வீட்டில் தனது தாயிடம் தனது ஆதங்கத்தை கோபமாக வெளிப்படுத்துகிறார். பெண் பாலினம் எவ்வாறு இரண்டாம் நிலை உயிரியாகக் கருதப்படுகிறது என்ற பார்வையைக் காண முடிகிறது.

"இப்ப அயிது என்னாப் பண்றது? ஒங்கூடத்தான் அந்தப் பயலும் படிச்சான் வேலைக்கும் போயிட்டான் அவனப் பாத்து ஊரே பயப்படுது. கட்சிக்காரனே அஞ்சுறான். ஆனா ஒன்னெ பாத்து ஊரே சிரிக்குது". இவ்வரிகள் கல்வி அனைத்து விதமான ஏற்றத்தாழ்வுகளையும் சமன்செய்து சீர்தூக்கும் என்பதற்கான முதல் படி. **"இந்த காசி பணமெல்லாம், நக நட்டெல்லாம் கொடுத்தது நீ கறிச் சோறு ஆக்கித் திங்கிறதுக்கில்ல. அதே வச்சி நீ மேம்படுப்பு படிக்கணும். வாத்தியாரா ஆவணும்"**. இவ்வரிகள் கதையின் திருப்புமுனை. சாதி, மத, இன, அரசியர் காழ்ப்பு, பழிவாங்கல் என்று நடக்கும் அழித்தொழிப்புகளிலிருந்து தப்பித்து உயிரோடு இருப்பதற்காக தன் மகளை பிறந்த இடத்தை விட்டு அனுப்பவில்லை. தான் வாழும் சமுகத்தால் இழிவுபடுத்தப்பட்ட தன் மகள் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது ஒரு பெத்தவனின் விருப்பமாகும்.

"மானம் உள்ளவன் தான் உசுரோட இருக்கனும், இது வீம்புக்கு சூரிக்கத்திய முழுங்கிறசாதி, கட்டுறதுக்குக் கோமணம் இல்லன்னாலும் சாதிய வுட மாட்டானுவ" என்று பழனி தன் மகளோடு உரையாடுகிற இடம் வேதனையின் பெருவலி.

நல்லுர் கதை, பாலூரு கதை, முட்லூரு கதை என மூன்று கதைகள் இந்நாவலில் இடம்பெறுகிறது. மூன்று நிகழ்வுகளுமே ஆணவக் கொலை பற்றியது. இம்மூன்று நிகழ்வுகளையும் படிக்கும் போது உள்ளம் பதைபதைத்து கண்களில் நீர் ததும்பாமல் படித்து முடிக்க முடியாது. இச்சம்பவங்கள் அவலத்தின் உச்சம். இவை என்றும் மறையா வடுவாக உறைந்துவிட்டன இதயத்தில். சமிபத்தில் அரங்கேரிய தர்மபுரி அழித்தொழிப்பு நிகழ்வுகளை முன்கூட்டியே யூகித்து எழுதிய ஓர் தீர்க்கதரிசி என்றால் மிகையல்ல. பல மனித

உரிமை மீறல்களை அப்படியே அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகிறார். வரலாறு சுட்டாத பதிவு செய்யாத சாதிச் சாடல்களையும், சொல்லில் வடிக்க முடியாத அவலத்தையும் தன் படைப்பில் படைத்திருக்கிறார். இம்மாதிரியான கதைகள் தமிழில் மிகக் குறைவு. இந்த பின்னணியில் தலித் இலக்கியம், பாலின அரசியல், பெண்ணியம் என்ற முப்பரிமான நோக்கில் இந்நாவல் நகர்கிறது.

இந்நாவலில் வரும் மற்றுமொரு முக்கியப் பாத்திரம் பாக்கியம் B.SC வரை படித்தவள். தனக்கானவனைத் தேர்ந்தெடுத்த குற்றத்திற்காக அவள் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். இருமுறை தற்கொலைக்கும், மூன்று முறை தப்பிச் செல்லவும் முயற்சிக்கிறாள் அனைத்தும் தேல்வியில் முடிகின்றன. அன்றிரவு விளக்குமாற்றாலும் செருப்பாலும் சாமியம்மா அடித்தாள். எவ்வளவு அடித்தாலும் பாக்கியம் வாய்விட்டு அழுதவளில்லை. ஓடிப்போன மூன்று முறையும் ஊரே கூடி அடித்தது. சாணியைக் கரைத்துக் குடிக்க வைத்தது. மயிரையும் அறுத்தது. அப்போதும் அவள் அழவில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் அவளுடைய மனம் இறுகிக்கொண்டே போய்ப் பாறையாகிவிட்டது. பழனி **"சாப்புடு"** என்று சொன்ன ஒரு வார்த்தை அவளை உழுக்கிவிட்டது.

"எலி மருந்து வாங்கிக் கொடுத்தார். பாலிடாயிலும் வாங்கிக் கொடுத்தார். தூக்கில் தொங்குவதற்கு சௌகரியமாக மாட்டுக் கயிற்றைக் கொண்டுவந்து இரண்டு நாள் நடுவீட்டிலேயே வைத்துவிட்டுப் போனார். பகலிலாவது சாகட்டும் என்பதற்காகப் புது வழக்கமாக செல்வராணியையும் காட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் வைத்தார்" என்ற வரிகளினூடே இன்றளவும் பழமை மாறாத கட்டுப்பாடுகளையும் கொடூரங்களையும் காட்சிப்படுத்தியுள்ளார்.

அந்தப் பயலக் கூப்புட்டு ரெண்டு தட்டுவுட்டா சரியாப்போயிடுது. இல்லன்னா அவனோட தாயி தவப்பனக் கூப்புட்டு நாலு சாத்து சாத்துங்க. ஊர வுட்டு துரத்திப்புடுவன்னு வாய் மிரட்டலா மிரட்டுங்க. அதுக்கும் கட்டுப்படலியா மூணு பேத்தயும் புடிச்சி கரண்டு கம்பத்தில கட்டிவச்சித் தோல உரிங்க. நிர் முண்டமா தெருவுல நாலு சுத்து சுத்தி வரச் சொல்லுங்க, ரெண்டு வாட்டி பொணமா பொரட்டி எடுத்தச்சு, தானா பத்திக்கிட்டமாரி அவன் ஊட்ட ரெண்டு வாட்டி கொளுத்தியாச்சி. ராவோட ராவா அவன் ஊட்டுல கட்டியிருந்த ஆடு மாடுவுள அவுத்துவுட்டாச்சி ஒருவாட்டி ரெண்டு ஆட்ட அறுத்தும் தின்னாச்சி என்ற உரையாடல்கள் கொடுரத்தின் உச்சம். மேல் சாதி மக்களின் திமிர்த்தனங்களை பறைசாற்றுகிறார். பாலின வேறுபாட்டலும், சாதி வேறுபாட்டலும் ஒடுக்கப்படும் இரட்டை ஒதுக்குதலை எதார்த்தப் படைப்புகளாக உருவாக்கியுள்ளார்.

அடுத்து அந்நாவலில் வரும் மற்றுமொரு முக்கியக் கதாப்பாத்திரம் துளசி. பழனியின் தாய் நம்ப ஊட்டு வாய மரத்த வெட்டாத சாமி. ஒண்ணு நூறு ஆவும். நூறு ஆயிரமாவும் எம் பேச்ச கேளு, நீ மகராசனா இருப்ப பொட்டச்சியக் கொன்னபாவம் ஒனக்கு வாணம்சாமி. **"ஊருல ஒரு தரும நியாயம் இல்லியே"** என்று துளசி புலம்புற உரையாடல்கள் சில நேரங்களில் மறைமுகமாக சமூக

விமர்சனங்களாகவும் செயல்படுவதை துளசி என்ற பாத்திரப்படைப்பில் காணலாம்.

கதைகளில் ஆங்காங்கே இருக்கும் செலவடைகள் கதைக்கு மேலும் வலுவூட்டுகிறது. **'இருட்டு ஊட்டுக்கு போனாலும் திருட்டுக் கை சும்மாயிருக்காது, 'பஞ்சு வெடிக்கிறமாரி என் நெஞ்சு வெடிக்குதே', 'கொட புடிச்சா மழ நின்னுடுமா? கடலுக்கு அணக் கட்ட முடியுமா?'** என்ற பழமொழியினூடே ஒரு படைப்பாளன் தான் சொல்ல வேண்டிய கருத்தை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

பெத்தவன் நாவலில் காதலுக்கு எதிராக ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் செய்யும் கொடுமையால் மகளை பெத்த தாயுமானவராகிய ஒரு தந்தையின் மனப் போராட்டத்திணை நாவல் நெடுவும் காட்சிப்படுத்தியிருக்கிறார். நாவலில் ஓரளவேனும் யூகிக்க முடியாத திருப்பங்களுடன் முடித்திருக்கிறார்.

துணையன்கள்

இமையம், (2013), பெத்தவன், சென்னை: பாரதி புத்தகாலயம்.

Announcements

The next publication will be released in November 2019. Send their Research articles within the 20th of September. Please, note that, the researcher compulsory follows research methodology and given your address with email Id, Whats up mobile number and Abstract in English script.

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் காலாண்டுக்கு ஒருமுறை மே, ஆகட்டு, நவம்பர், பிப்புருவரி ஆகிய திங்கள்களில் வெளிவரும்.
அருமைத் தமிழ்ச் சொந்தங்களே! ஆய்வு நண்பர்களே! இந்தியாவிலிருந்து வெளிவரும் இனம் //www.inamtamil.com தமிழாய்விதழில் கட்டுரைகள் வெளியிடுவதற்குத் தங்களை அன்புடன் வரவேற்கிறோம். எங்கள் குழு தமிழியல், மானுடம், மொழியியல், சமயம், நாட்டுப்புறவியல், தொல்லியல், இலக்கியம், இலக்கணம், கலை, கணினி தொடர்பான தொழில் நுட்பம் போன்ற துறைசார் ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கும். ஒவ்வொரு கட்டுரைகளும் ஆசிரியர் குழுவினரால் துறைசார் வல்லுநர் குழுவால் மதிப்பீடு செய்யப் பெற்ற பின்னரே இதழில் வெளியிடப் பெறும்.
இவ்விதழ் ஒரு பன்னாட்டு ஆராய்ச்சி இதழ் ஆகும். இவ்விதழின் மூலம் தமிழாய்வுகளை உலகளாவிய வாசிப்புக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது நோக்கம். எனவே, தங்களின் ஆய்வுச் சிந்தனைகளை அனைவரும் வாசிக்கவும் மேற்கோள் காட்டவும் இவ்விதழ் உறுதுணை நல்கும் என உறுதியளிக்கின்றோம்.

மதிப்பிடப்பெற்றது

பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி

– பின்னணியும் பிரயோகமும் –

Multiple intelligence, Emotional intelligence – Background and Application

எம்.என்.இக்ராம்/M.N. IKRAM M.Ed (OUSL)[16]

Abstract: Now Intelligence is described in a wider meaning. The theory of multiple intelligences begins to diverge from traditional points of view. In the classic psychometric view, intelligence is defined operationally as the ability to answer items on tests of intelligence. The inference from the test scores to some underlying ability is supported by statistical techniques. Does not change much with age, training, or experience. It is an inborn attribute or faculty of the individual. Multiple intelligences theory, on the other hand, pluralizes the traditional concept. Howard Gardner defined the intelligence as a bio psychological potential to process information that can be activated in a cultural setting to solve problems or create products that are of value in a culture. Research in developmental and neuropsychology, which led to the theory of multiple intelligences (MI), began in the early 1970s. The main lines of the theory had been completed by 1980, and The Father of Multiple intelligences Howard Gardner's first book 'Frames of Mind: The Theory of Multiple Intelligences' appeared in the fall of 1983. He was the first person pluralized the term of intelligence to indicate spectrum of human potential. To identify multiple potential of human Gardner introduces eight criteria. In the frame of that criteria seven basics intelligences are discovered and it is now continuing by adding more kind of intelligences. One of basic Human potential identified as personal intelligence by Gardner called as Emotional intelligence by many others. Also, it was received a wider popularity by the book of Science journalist Daniel Goleman 'Emotional Intelligence – Why it can matter more than IQ'. Multiple Intelligences (MI) theories open the door to a wide variety of teaching strategies. Gardner suggests two principal to educational implications of multiple intelligences: Individuation and Pluralization. As his prediction of Application of Multiple Intelligences theories in education is Possible in family more than classroom.

Date of submission: 2019-06-22
Date of acceptance: 2019-07-03
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: எம்.என்.இக்ராம்
Email: ikrammn@gmail.com

Keywords: Multiple intelligence, Emotional intelligence, neuropsychology, IQ, Gardner, Goleman, Cognitive Development,Human potential,Human Faculty. பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி, நரம்பியல் உளவியல், நுண்மதி, கார்டனர், கோல்மன்,

---

[16] Visiting Lecturer, Fathih institute - Srilanka

மானிட அறிவு விருத்தி,மனித ஆற்றல், மனித ஆற்றலின் துறைகள், எம்.என்.இக்ராம்.

நுண்மதி அறிமுகம்

நுண்மதி என்ற விடயம் பரந்து பட்ட ஒன்றாக இன்று வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. காரணம் காணுதல், புரிந்து கொள்ளல், சுய விழிப்பு, கற்றல், மனவெழுச்சிகளை அறிதல், தர்க்கரீதியாக சிந்தித்தல், திட்டமிடல், புத்தாக்கம் செய்தல், பிரச்சினை தீர்த்தல் போன்றவற்றிற்கான இயலுமையாக அது அடையாளம் காணப்படுகிது. இதனை ஒரு சூழல் அல்லது நிலை, விடயம், மனவெழுச்சி குறித்து விளங்கி அதற்கு ஏற்ற வகையில் கருமமாற்றுவதற்கான இயலுமை என்றும் சுருக்கமாக குறிப்பிடலாம். (Wikipedia) நுண்மதி என்ற விடயம் பரந்துபட்ட அளவில் மனிதனில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போதும் அது மிருகங்கள் மற்றும் தாவரங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. மாத்திரமல்ல கருவிகளில் காணப்படும் நுண்மதி குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கனிணி போன்ற கருவிகளில் காணப்படுகின்ற நுண்மதி செயற்கை நுண்மதி அல்லது ஆக்க நுண்மதி(Artificial Intelligence) என வழங்கப்படுகிறது.

நுண்மதி குறித்த விடயம் கிரேக்க காலம் முதலே கவனம் குவிக்கப்பட்டு வந்துள்ளது. இது குறித்து Plato (428 B.C.) முதல் Thomas Aquinas (1225), Immanuel Kant (1724) என பலரதும் கவனத்தை ஈர்த்த விடயமாகக் காணப்பட்டது. அந்த வகையில் பெரும்பாலான அறவியற் துறைகள் போலவே இதனது மூலமும் தத்துவமாகவே காணப்பட்டது. இது பின்னர்தான் உளவியல் ஆய்வுப் பரப்புக்களில் ஒன்றாக பார்க்கப்பட்டது. (Cianciolo & Sternberg, 2011) நுண்மதி என்கின்ற போதே நுண்மதி ஈவு (IQ) மதிப்பீடு குறித்த கவனமே அதிகமானோருக்கு ஏற்படுவதுண்டு. பிரான்ஸிய உளவியலாளரான Alfred Binet (1857-1911). தான் நுண்மதி ஈவினை அளவீடு செய்வதற்கான முறைமை குறித்த ஆய்வுகளின் முன்னோடியாக கருதப்படுபவர். (Cherry, 2018) பிரான்ஸிய அரசின் வேண்டுதலுக்கேற்ப முதலில் கற்பதற்கு மேலதிக உதவி தேவையானோரை இனம் காண்பதற்காகவே நுண்மதி ஈவு குறித்த மதிப்பீட்டு முறை உருவாக்கப்பட்டது. பின்னர் இது பல்வேறு அறிஞர்களாளும் பல்வேறு காலகட்டத்தில் விருத்தியடையச் செய்யப்பட்டது. (Plucker, 2016)

இந்த தொடரின் வளர்ச்சிப் படியில்தான் பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி போன்ற விடயங்கள் ஆய்வுப் பரப்புக்குள் வந்தன. நுண்மதி ஈவு குறித்த மதிப்பீடு 20ம் நூற்றாண்டில் கல்வியில் வர்க்க பேதத்தையும் நிற பேதத்தையும் பேணுவதற்கான காரணியாக பயன்படுத்தப்படும் போக்கு மேல் எழ ஆரம்பித்தது. Cyril Lodowic Burt (1883 -1971), Arthur Robert Jensen (1923 - 2012) பேன்றோர் பொது நுண்மதி ஈவு என்பதுதான் ஒருவரது திறமையை தீர்மானிக்கும் ஏக வழிமுறை, அது பரம்பரைக் காரணிகளிலேயே தங்கியுள்ளது. அது பயிற்சியால் வளர்க்கப்பட முடியாதது என்று ஆய்வுகளின் ஊடாக நிறுவினர். ஆனால் இந்த ஆய்வுகள், குறிப்பாக இது குறித்த Cyril L. Burt உடைய

ஆய்வு விஞ்ஞானபூர்வமான ஏமாற்றுத்தனம் என பேராசிரியர் Leslie s. Hearnshaw (1907-1991) வெளிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து நுண்மதி தொடர்பாக இருந்த ஒற்றைப் பார்வை தகர்ப்புக்குள்ளானது. (ஜெயராசா, 2009) அதனோடு இணைந்த வகையில் மனிதனது அறிகைத் திறன்கள் (Cognitive Ability) குறித்த விடயத்தில் பல்வேறு முன்னேற்றகரமான திருப்பு முனைகள் ஏற்பட்டன. இதில் ஏற்பட்ட வளர்ச்சிதான் இன்றைய உளவியல் பரப்பில் நுண்மதி தொடர்பாக கவனத்தைப் பெற்ற பன்முக நுண்மதி மற்றும் மன எழுச்சி நுண்மதி பற்றிய எண்ணக் கருக்களுக்கு வித்திட்டது.

பன்முக நுண்மதி (MI) கோட்பாட்டின் அடிப்படைகளும் அதன் கூறுகளும்

பன்முக நுண்மதி பற்றிய கோட்பாடு மானிட அறிவு விருத்தி (Cognitive Development) வரலாற்றில் ஏற்பட்ட ஒரு தளமாற்றம் என்பதை விடவும் அது மனித இன வரலாற்றில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனதும் பிறரதும் தனித்தன்மையை (Uniqueness) அடையாளம் கண்டு கருமமாற்ற வாய்ப்பளித்த நிகழ்வு என்று கூறுவது மிகையான ஒரு கூற்றல்ல.

பன்முக நுண்மதி குறித்த கோட்பாடு 1983 ம் ஆண்டு Howard Earl Gardner (1943) என்ற அமெரிக்க விருத்தி உளவியலாளரால் தனது Frames of Mind: The Theory of Multiple Intelligences என்ற நூலின் ஊடாக முன்வைக்கப்பட்டது. உண்மையில் இந்த நூல் ஐந்து வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு குழு ஆய்வின் ஒரு பகுதியாகும்.

இந்த ஆய்விக்கான பிரச்சினை ஹவார்ட் கார்ட்னர் இனுடைய வாழ்நாள் தேடலாக இருந்திருக்கிறது. எப்போதும் மானிட அறிவு விருத்தியின் உச்ச எல்லை என்பது விஞ்ஞானியாதல் அல்லது விஞ்ஞான ரீதியான சிந்தனை என்ற ஒற்றைக் கூம்பப் பார்வை சரியானதா என்பது குறித்த கேள்வி கார்ட்னரிடம் இருந்து வந்தது. இசையின் மீது கார்ட்னருக்கு இருந்த ஈடுபாட்டின் காரணமாக இசை, வரைதல், எழுத்து... போன்ற துறைகளில் உச்சத்தை தொடுதல் என்பது அறிவின் விருத்தியாகப் பார்க்கப்பட முடியாதா என்ற கேள்வி அவரில் எழுந்து கொண்டே இருந்தது. பியாஜே ஒருவர் தனது இளமைப் பருவத்தில் ஒரு விஞ்ஞானியைப் போன்று தர்க்க ரீதியாக சிந்திக்க முடியும் என்று பேசுகின்றார். அப்படியாயின் ஏன் இளமைப் பருவத்தில் ஒருவர் ஒரு கலைஞராக சிந்திக்கவும் அதனை நோக்கி தன்னை வளர்க்கவும் முடியாது என்று தேடத் துவங்கினார். 1969 களில் அமெரிக்காவின் முன்னணி நரம்பியலாளரான Norman Geschwind (1924-1984). இனுடைய Project Zero (a Harvard Graduate School of Education research group) ஆய்வுச் செயற்திட்டத்தின் கீழ் மூளையின் செயற்பாடு சம்பந்தமான ஆய்வு உரைகளை செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் கார்ட்னருக்கு கிடைக்கப் பெற்றது. அவர் அதில் இருந்து தன்னிடம் ஏற்கனவே இருந்த கருதுகோளை பரீட்சிப்பதற்குத் துவங்கினார். அதற்காக நரம்பியல் குறித்து கற்றார்.

பின்னர் Boston University இன் Aphasia Research Center இல் ஒரு investigator ஆக பணியாற்றினார். அதே நேரம் Project Zero இல் மானிட அறிவியல் விருத்தி

சம்பந்தமான ஆய்வு செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். 1974 இல் Neuropsychology துறையில் The Shattered Mind என்ற ஒரு நூலை வெளியிட்டார். அடுத்ததாக Kinds of Minds என்ற ஒரு நூலை எழுதுவதற்கான உள்ளடக்கங்களை தயார்படுத்தினார். உண்மையில் அதுதான் பல் நுண்மதி குறித்த அவரது கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நூல். ஆனால் அதனை அவர் வெளியிடவில்லை. அதற்கான போதிய வரையறைகள், ஆதாரங்கள் இன்னும் திரட்டப்பட வேண்டி இருந்தமையால் அது பிற்போடப்பட்டது. அதன் பின்னர் 1979 இல் Netherland இனுடைய Bernard Van Leer Foundation இனால் Nature and realization of human potential என்ற ஆய்வு திட்டத்திற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதில் கார்ட்னரும் ஒருவராக இருந்தார். Project on Human Potential என்ற திட்டம் ஐந்து வருடங்கள் கொண்ட ஒரு திட்டமாக இருந்தது. (Gardner, Intelligence reframed: Multiple intelligences for the 21st century, 2009)

மனிதனிடம் காணப்படுகின்ற இயலுமை ஆற்றல் (Human Potential) குறித்த இந்த ஆய்வு நடவடிக்கையின் முதற் பாகமாகத்தான் கார்ட்னருடைய பன்முக நுண்மதி குறித்த நூல் காணப்படுகிறது. இது மானிட இயலுமை ஆற்றல் குறித்த உளவியல் பார்வை. இது தவிர தத்துவம், மானிடவியல், கலாச்சாரம் என்ற இன்னும் மூன்று கோணங்களில் நின்று மானிட இயலுமை ஆற்றல் குறித்த ஆய்வு இந்த திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டு ஒரு சர்வதேச மாநாட்டில் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. (Gardner, Frames of mind: The theory of multiple intelligences, 1993)

பன்முக நுண்மதி குறித்த அடிப்படை நூலாக கார்ட்னருடைய Frames of mind: The theory of multiple intelligences என்ற நூலே காணப்படுகிறது. அவர் இந்த நூலிலே நுண்மதி குறித்து ஏற்கனவே காணப்பட்ட ஒற்றைக் கூம்பப் பார்வையை தகர்த்துவிடுகிறார். நுண்மதி என்பது ஒருவருடைய மொழியாற்றலையும், கணித, தர்க்க ஆற்றலையும் பரீட்சிப்பதாகவே இருந்தது. இதிலிருந்து மாறுபட்டு நுண்மதி என்பதற்கு சமாந்தரமான பல் கோணப் பார்வையை கார்ட்னர் வழங்கினார். அவர் நுண்மதி என்பதற்கு ஆங்கில மொழி மரபிற்கு மாற்றமாக தான் Intelligences (நுண்மதிகள்) என்று பன்மையில் நுண்மதியை பாவித்திருப்பதே இங்கு தான் செய்த புரட்சிகரமான மாற்றம் என்று அவர் குறிப்பிடுகிறார். ஏனெனில் ஒரு தனிமனிதனிடம் இருக்கின்ற பன்முக ஆற்றல்கள் குறித்து உளவியல் பரப்பில் ஏற்கனவே பலரால் கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. Louis Leon Thurstone (1887-1955) போன்றோர் அடிப்படை மனித ஆற்றல்கள் (Primary Mental Abilities) என ஏழு வகையான ஆற்றல்களை ஆடையாளப்படுத்துகிறார். இவர் போன்று இன்னும் பலர் இவருக்கு முன்னரும் பின்னரும் உளவியல் துறையில் மனித ஆற்றல்களின் பன்முகத் தன்மை குறித்து கவனம் செலுத்தியுள்ளனர். அத்தோடு உளவியல் அல்லாது மானிடவியல் மற்றும் நரம்பியல் துறை சார்ந்த பலர் இது குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர். (Gardner, Intelligence reframed: Multiple intelligences for the 21st century, 2009) இந்த இரண்டு பரப்பையும் இணைத்து உயிரியல் உளவியல் பின்னணியுடன் கலாச்சாரப் பின்னணிகளையும் சேர்த்து மனித

ஆற்றலின் பல்வகைத்தன்மையை முன்வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியே காட்னருடைய பன்முக நுண்மதிக் கோட்பாடு.

கார்ட்னர் நுண்மதி என்பதை "நுண்மதி என்பது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இயலுமை அல்லது புத்தாக்கங்களை செய்வதற்கான இயலுமையாகும். அது ஒரு கலாச்சார அமைப்பில் அல்லது பல கலாச்சார அமைப்புக்களில் பெறுமானத்தைப் பெற்ற ஒன்றாக காணப்படும்". (The ability to solve problems or to create products that are valued within one or more cultural settings.) என பல் நுண்மதிகள் குறித்த தனது முதல் நூலிலே வரைவிலக்கணப்படுத்தினார். (Gardner, Frames of mind: The theory of multiple intelligences, 1993) பின்னர் பன்முக நுண்மதி குறித்து மறு பரிசீலனை செய்த நூலில் நுண்மதி என்பதை "நுண்மதி என்பது ஒரு கலாச்சார அமைப்பிற்குள் செயற்படுத்தப்படுகின்ற, தகவல்களை செயன்முறைக்குற்படுத்தும் உயிர் உளவியல் சக்தியாகும். அது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக, ஒன்றை புத்தாக்கம் செய்வதற்காக பயன்படுத்தப்படும். அது ஒரு கலாச்சாரத்தில் பெறுமானம் கொடுத்து நோக்கப்படுகின்ற ஒன்றாகும்". (Intelligence is a bio psychological potential to process information that can be activated in a cultural setting to solve problems or create products that are of value in a culture). என வரைவிலக்கணப்படுத்துகிறார். Intelligences (நுண்மதிகள்) என்ற சொல் மனிதனிடம் காணப்படுகின்ற உயிரியல் ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான பல் தன்மை கொண்ட மனித ஆற்றலை (Human potential) மனித ஆற்றலின் துறைகளை, (Human Faculty) குறிக்கவே பயன்படுத்துவதாக விளக்குகிறார். (Gardner, Intelligence reframed: Multiple intelligences for the 21st century, 2009) இதிலிருந்து இங்கு நுண்மதிகள் என்பதன் ஊடாக என்ன நாடப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. எனவேதான் காரட்னர் Artificial intelligence (செயற்கை நுண்மதி-இதனை தமிழ் பரப்பில் ஆக்க நுண்மதி என சிலர் மொழி பெயர்ப்பர் உண்மையில் அம் மொழிபெயர்ப்பு குறித்த விடயத்தின் உள்ளடக்கத்தை புரியாமல் செய்யப்பட்டதாகும்) என்பதனையும் கவனத்தில் கொள்ள பின்வாங்குவதை அவதானிக்கலாம். ஏனெனில் நுண்மதி என்பது மனித ஆற்றல் என்பதே அல்லாமல் இயந்திரங்களின் ஆற்றலை குறிக்க முடியாது. இயந்திரங்களின் உருவாக்கம் கூட மனித ஆற்றலாலேயே இடம் பெறுகிறது. எனவே, அது மனித கணித, தர்க்க நுண்மதிகள் போன்றவற்றிற்குள் அடங்கும் என குறிப்பிடுகிறார்.

கார்ட்னர் மனித ஆற்றலின் துறைகளை அல்லது அவனது பன்முக நுண்மதிகளை அடையாளம் காண்பதற்கு எட்டு வகையான நிபந்தனைகளை கருத்திற் கொள்கிறார். இந்த நிபந்தனைகள் உயிரியல், உளவியல், வரலாறு, கலாச்சாரம் என பல்வேறு பகுதிகளை கவனத்தில் கொண்டதாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இந்த நிபந்தனைகளிற்குட்பட்டே அவர் மனித ஆற்றல்களை அல்லது நுண்மதிகளை வகைப்படுத்தியுள்ளார். புதிதாக முன்வைக்கப்பட்ட நுண்மதிகளை ஏற்பதற்கும் மறுப்பதற்கும் முற்பட்டுள்ளார். (Gardner, Frames of mind: The theory of multiple intelligences, 1993)

1.மூளையில் ஏற்பட்ட பாதிப்புக்களின் போது தனிப்படுத்தி அறியப்பட்ட ஆற்றல் (The potential of isolation by brain damage)

2. மானிட பரிமாண வளர்ச்சியிலும் வரலாற்றிலும் கவனத்தை பெற்றிருத்தல் (An evolutionary history and evolutionary plausibility)

இவை இரண்டும் உயிரியல் ரீதியான பின்னணியில் கவனத்திற் கொள்ளப்பட்ட நிபந்தனைகள். அடுத்த இரண்டு நிபந்தனைகளும தர்க்க(Logical) ரீதியானவை

3. அடையாளப்படுத்தப்பட முடியுமான பிரதான செயற்பாட்டை அல்லது செயற்பாடுகளின் தொகுதி ஒன்றை கொண்டிருத்தல் (An identifiable core operation or set of operations)
4. குறியீட்டு வடிவில் அடையாளப்படுத்தப்படக் கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருந்தல்.(Susceptibility to encoding in a symbol system)

அடுத்த இரண்டும் விருத்தி உளவியல் பரப்புடன் தொடர்பான நிபந்தனைகளாகக் காணப்படுகின்றன.

5. மானிட அறிவு விருத்தி வரலாற்றில் தனித்துவமான அடையாளத்தைப் பெற்றிருத்தல்(A distinct developmental history)
6. குறித்த ஆற்றல் கொண்ட ஒரு அறிவாளி, மேதை மற்றும் விதிவிலக்கான ஒருவர் இருத்தல் (The existence of idiot savants, prodigies, and other exceptional people)

இறுதி இரண்டு நிபந்தனைகளும் பாரம்பரிய உளவியல் ஆய்வுகளுடன் தொடர்புபட்டதாகப் பெறப்பட்டவை

7. பரிசோதனை உளவியல் ரீதியாக பலப்படுத்தப்பட முடியுமானதாக இருத்தல். (Support from experimental psychological tasks)
8. உளவியல் அளவீடுகளால் கண்டடையப்பட்ட முடிவுகளால் பலப்படுத்தப்பட முடியுமாக இருத்தல். (Support from psychometric findings.)

கார்ட்னர் இந்தப் பின்னணியில் இருந்து கொண்டு ஆரம்பமாக ஏழு வகையான நுண்மதிகளை அடையாளம் காட்டினார்.

1. மொழி சார்ந்த நுண்மதி(Verbal-linguistic intelligence):இது சொற்களை கையாள்வதற்கும் விளங்குவதற்கும் முன்வைப்பதற்குமான ஆற்றலைக் குறிக்கும். இவ்வகையான ஆற்றல் கொண்டவர்கள் செவிமடுத்தல், பேச்சு, கதை கூறல், கட்டுரை எழுதுதல்... போன்ற திறன்களை அதிகம் பெற்றிருப்பர்.
2. இசை சார்ந்த நுண்மதி(Musical intelligences) :இது ஓசைகளை வேறுபிரித்தறியும் இரசிக்கும் உருவாக்கும் ஆற்றல். இந்த ஆற்றல் கொண்டவர்கள் இசையில், இராகத்தில், பாடலில், இசைக் கருவிகளை கையாள்வதில்...அதிக திறன் கொண்டவர்களாக இருப்பர்.
3. தர்க்க-கணித நுண்மதி (Logical-mathematical intelligence):இது இலக்கங்களை கையாளும், காரணம் காணும், தர்க்க ரீதியாக விடயங்களை அணுகும் ஆற்றல். இந்த ஆற்றல் கொண்டவர்கள் கணித பிரச்சினைகளை தீர்ப்பதில்,

பிரச்சினைகளை தர்க்க ரீதியாக அணுகுவதில், விடயங்களை பகுத்து தொகுத்துப் பார்ப்பதில் ,ஆய்வு செய்வதில்...அதிக திறன் கொண்டவர்களாக இருப்பர்.

4. கட்புலன் சார் நுண்மதி(Spatial–visual intelligence):விடயங்களை காட்சிகளாக, வடிவங்களாக, தோற்றங்களாக விளங்குவதற்கும் , நினைவு படுத்துவதற்கும் முன் வைப்பதற்குமான ஆற்றல். இந்த ஆற்றல் கொண்டவர்கள் விடயங்களை பாரத்து விளங்குதல், தோற்றங்களை நினைவில் வைத்தல், வரைபடங்களை உருவாக்குதல், வரைதல், காட்சிப் படுத்தல், காடசியாக முன்வைத்தல்... போன்ற விடயங்களில் அதிக திறன் கொண்டவர்களாக இருப்பர்.
5. உடல்சார் நுண்மதி(Bodily–kinesthetic intelligence):இதனை உடல் ஆற்றல் என குறிப்பிடலாம். எந்த விடயத்தையும் ஓடி ஆடி செய்கின்ற, விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்ற, உடல் வலுவை, இயக்கத்தை அதிகம் பயன்படுத்தி செய்கின்ற காரியங்களை செய்கின்ற, நடிக்கின்ற... திறன்கள் அதிகம் கொண்டவர்களாக இருப்பர்.
6. ஆளுமை சார் நுண்மதி(The personal intelligences):இதனை ஒருவர் தன்னையும் பிறரையும் விளங்குவதற்கான ஆற்றல் என்று குறிப்பிடலாம். அவரது ஆரம்ப அடிப்படை நூலில் இதனை ஒரு நுண்மதியாகவும் அதன் இரு பிரிவுகளாகவுமே தன்னிலை, ஆளிடைத் தொடர்பு சார் நுண்மதிகளைக் குறிப்பிடுகிறார். இது அவரது ஆசிரயரான புரைடுடைய ஆளுமை விருத்தி குறித்த உளப் பகுப்பாய்வின் உள்ளடக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு கண்ட்டையப் பெற்ற நுண்மதியாகும். இதனை பின்னர் இரண்டாக பிரித்து விளக்குகிறார்.

1) ஆளிடைத் தொடர்பு சார் நுண்மதி(Interpersonal intelligence):இது பிறரது மனவெழுச்சி, ஊக்கம், விருப்புக்கள், இயலுமைகளை சரியாக இணங்கண்டு கையாலும் ஆற்றல். இந்த ஆற்றல் கொண்டவர்கள் சமூகத் தொடர்புகளை கையாளுதல், தலைமைத்துவம் வழங்குதல், குழுச் செயற்பாடு, அடுத்வர்களது பிரச்சினைகளில் கவனம் செலுத்துதல் போன்ற விடயங்களில் அதிக திறன் கொண்டவர்களாக இருப்பர். இவர்களை பல போது புறிமுகிகள் என்றுகுறிப்பிடுவர்.சமூகத் தலைவர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கு இத்திறன் அதிகம் அவசியப்படுகின்றது.
2) தன்னிலை சார் நுண்மதி(Intrapersonal intelligence):தனது சொந்த மனவெழுச்சிகள், ஆற்றல்கள், நம்பிக்கைகள் என்பவற்றை இனம் கண்டு செயற்படும் ஆற்றல் கொண்டவர்கள். இந்த ஆற்றல் கொண்டவர்கள் சுயமாக கருமமாற்றும், சுயமுனைப்புக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடும் திறன் பெற்றவர்களாக இருப்பர். இவர்களை பலபோது அக முகிகள் என்று குறிப்பிடுவர்.

இந்த இரண்டும் உண்மையில் எல்லா மனிதர்களிடமும் ஏதோ ஒரு விகிதத்தில் காணப்பட வேண்டிய, அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஆற்றல்களாகும். ஒருவரிடம் இந்த இரண்டும் ஏதோ ஒரு விகிதத்தில் காணப்படுகின்றது. எனவேதான் இதனை கார்ட்னர் ஒரு ஆற்றலின் இருபகுதிகள் என்றார். இது அதிகம் கொண்டவர்களை இந்த நுண்மதி பெற்றவரகள் என அழைப்போம். இவர்களைத்தான் நாம் பொதுவாக

ஆளுமை பெற்றவர்கள் என்கிறோம். இந்த இரண்டையும் தான் Daniel Goleman (1946) பேன்றோர் Emotional intelligence (மனவெழுச்சி நுண்மதி) என அடையாளப்படுத்துகின்றனர். உண்மையில் இது உளவியல் வரலாறு நெடுகிலும் ஏதோ ஒரு வகையில் கவனத்தைப் பெற்ற ஒரு விடயம். குறிப்பாக சிக்மன்ட் புரைட் இது குறித்த உளவியல் ஆய்வின் முன்னோடியாக பார்க்கப்படுபவர்.

கார்ட்னருடைய பல் நுண்மதிகள் குறித்த முதல் நூலைத் தொடர்ந்து இந்த விடயம் பல்வேறு கலந்துரையாடல்களுக்கும் வாதப் பிரதிவாதங்களுக்கும் நடைமுறைகளுக்கும் உட்பட்டது. எனவே, அது குறித்து கார்ட்னர் அந்த அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்து, அவற்றில் உள்ள சரி பழைகளை இனம் கண்டு Intelligence Reframed(1999) என்ற நுலை எழுதினார் அந்த நூலில் பன்முக நுண்மதிகள் என்று பலராலும் அடையாளப்படுத்தப்பட்ட நிறையப் பகுதிகளை, நுண்மதிகளை தனியாக இனம் காண்பதற்கான அவரது அடிப்படைகளின் நியாயங்களை கருத்திற் கொண்டு மறுதலித்து அவற்றில் மூன்றை தனியாக ஏற்கிறார். அவைதான் இயற்கை நுண்மதி, ஆன்மீக நுண்மதி, இருப்பியல் நுண்மதி என்பனவாகும். பின்னர் அவற்றை முழுமையாக ஆய்வு செய்த பின்னர் பன்முக நுண்மதிகள் குறித்து 2006 இல் வெளியிடப்பட்ட Multiple Intelligences New Horizons என்ற நூலில் ஆன்மீக நுண்மதியையும் இருப்பியல் நுண்மதியையும் ஒன்றாக அடையாளப்படுத்துவதே பொருத்தம் எனக் குறிப்பிடுகிறார். எனினும் அதனை மொத்தமாக கார்ட்னர் ஏனைய நுண்மதிகளின் அளவில் அங்கீகரிக்கவில்லை. அந்த வகையில் நுண்மதிகள் 8 ½ என்ற கருத்தை அந்த நூலில் அவர் முன்வைக்கின்றார்.

7. இயற்கை சார் நுண்மதி (Naturalist intelligence): இது இயற்கையை, தாவரங்களை, உயிர்களை இனம் காண்பதற்கும் நேசிப்பதற்கும் ஆராய்வதற்குமுரிய ஆற்றல். இந்த ஆற்றல் கொண்டவர்கள் உயிரியல், தாவரவியல், சூழலியல், விவசாயம்... போன்ற விடயங்களை கையாளும் திறன் கொண்டவர்களாக இருப்பர். இந்த நுண்மதியை மேலதிகமாக ஏற்றுக் கொள்வதில் சார்ள்ஸ் டார்வினின் உயிரியல் துறையிலான வரலாற்று வகிபாகம் காரணமாக இருந்த்தாக கார்ட்னர் குறிப்பிடுவார்.
8. இருப்பியல், ஆன்மீக நுண்மதி(Existential & Spiritual intelligence or the intelligence of big questions) : மனிதன், பிரபஞ்சம், உயிரிகளின் இருப்புக் குறித்த பெரும் வினாக்களுக்கு விடை தேடும் ஆற்றல் என குறிப்பிடலாம். ஆன்மீக நுண்மதியை தனியாக அடையாளப்படுத்திய போதும் அதனை ஆராய்ந்ததன் பின்னர் நுண்மதிகளை வேறுபிரித்தறிவதற்கான தனது வரையறைகளை வைத்து அதனை இருப்பியல் நுண்மதிக்குள் உள்ளடக்கலாம் என கார்ட்னர் பின்னர் குறிப்பிடுகிறார். இது நான் யார்? எங்கிருந்து வந்தேன்? ஏன் வந்தேன்? எங்கு செல்லப் போகிறேன்? எனது மரணத்தின் பின்னரான வாழ்வு என்ன? போன்ற பிரபஞ்சத்தின் பெரும் கேள்விகளுக்கு விடை தேடும் ஆற்றல் என குறிப்பிடலாம். எனவே கார்ட்னர் இதனை The intelligence of big questions (பெரும் கேள்விகளுக்கு விடை தேடும் நுண்மதி) என குறிப்பிடுகிறார். (Gardner, Multiple intelligences: New horizons, 2010)

9. கற்பித்தல் நுண்மதி (Pedagogical Intelligence): கற்பித்தலிலும், பிறருக்கு வழிகாட்டுவதிலும் சிலர் சிப்பான ஆற்றல் பெற்றிருக்கின்றனர். இது தனியான ஒரு ஆற்றலாக இனம் காணப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பாக தான் ஆராய்ந்து வருவதாகவும் அண்மையில்(2013) இடம் பெற்ற ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சியில் கார்ட்னர் குறிப்பிட்டுள்ளார். (Gardner, Frequently Asked Questions- Multiple Intelligences And Related Educational Topics, 2013)



பன்முக நுண்மதிகள் எப்படி விளங்க எடுக்கப்பட வேண்டும் என்பதை விளக்க வந்த கார்ட்னர் "நான் 1983 இல் முன்வைத்த நுண்மதிகளின் அடையாளம் வரையறைகள்தான் இத்துறையில் இறுதியானதல்ல. எனவே, இது தனிநபர்களை தரம் பிரிப்பதற்காக அல்லாமல் அவர்களுக்கு இதன் உள்ளடக்கங்களை அறிந்து பயன்படுத்துவதற்கு வழியமைப்பதாக அமையவேண்டும். இதனை எனது பாஷையில் குறிப்பிடுவதாயின் நான் எனது இந்த அடையாளப்படுத்தல்களின் ஊடாக இன்னுமோர் தொகை தோல்வியாளர்களை உருவாக்க விரும்பவில்லை" (The criteria I presented in 1983 do not represent the last word in the identification of intelligences. As I stress, the intelligences should be mobilized to help people learn important content and not used as a way of categorizing individuals. To use the language of one of my critics, I do not want to inspire the creation of a new set of "losers.") எனக் குறிப்பிடுகிறார். (Gardner, Intelligence reframed: Multiple intelligences for the 21st century, 2009)

உண்மையில் பன்முக நுண்மதிகள் என்ற இந்த கருது கோள் உருவானதே மேற்கில் மேற்கிழம்பிய அதி புத்திசாளிகள் என ஒரு இனத்தை, ஒரு சாராரை அடையாளப்படுத்தி வந்த முயற்சியை தகர்ப்புக்குள்ளாக்கும் செயன்முறையாகத்தான். கார்ட்னருடைய கருத்துப்படி நவீனத்துவத்துக்கு முன்னய காலம் மற்றும் மேற்கு அல்லாத அதன் ஆக்கிரமிப்பிற்கு உட்படாத கலாச்சாரங்களில் மனித ஆளுமைகள் பன்முகப்பட்டதாகவே மதிக்கப்பட்டன. ஆனால், நவீனத்தவம்தான் intellectual என்ற கருதுகோளை ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக புகுத்தியது. எனவே, அதனை பல் பரிமாணம் கொண்டதாக

மாற்றும் ஒரு பின் நவீனத்தவ முயற்சியாகவே கார்ட்னருடைய பன்முக நுண்மதிகள் கோட்பாடு பாரக்கப்பட வேண்டியுள்ளது.

இதனை கார்ட்னர் பன்முக நுண்மதிகளின் புதிய பதிப்பாகப் பார்க்கப்படும் அவரது அது குறித்த இறுதி நூலிலே விமர்சன ரீதியாக விளக்குகிறார் " எமது சமுகம் மூன்று வகையான சார்பியங்களால் பாதிப்படைந்து சிரமப்படுகிறது என நான் நம்புகிறேன் ஒன்று "மேற்கே சிறந்தது" மற்றயது "ஆராய்ந்தவையே உண்மையானவை" அடுத்தது "சிறப்பானவை" (I believe that in our society we suffer from three biases, which I have nicknamed "Westist," "Testist," and "Bestist.") இங்கு அவர் ஒரு கோணப் பார்வையில அனைத்தும் பார்க்கப்படக் கூடாது அனைத்தும் பல்கோணப்(spectrum) பார்வையில் நோக்கப்பட வேண்டும் என்பதை குறிக்கவே இந்த விமர்சனத்தை முன்வைக்கிறார். (Gardner, Multiple intelligences: New horizons, 2010)

பன்முக நுண்மதிக் கோட்பாட்டை சுருக்கமாக விளக்குவதாக இருந்தால் அதனை பின்வரும் மூன்று விடயங்களில் அடக்கலாம் என கார்ட்னர் விபரிக்கிறார்

1. எம் அனைவரிடமும் முழுமையான அளவில் நுண்மதிகள் காணப்படுகின்றன. அவைதான் எம்மை அறிவுபூர்வமாக பேசக் கூடிய மனித இனமாக மாற்றியுள்ளது.
2. இரண்டு தனிமனிதர்கள் அவர்கள் இரட்டையர்களாக இருந்தாலும் ஒத்த நுண் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கமாட்டார்கள். உயிரியல் மரபணுவில் ஒத்த தன்மை கொண்டவர்களாக அடையாளப்படுத்தப்பட்டாலும் அவர்கள் வித்தியாசமான அனுபவங்களை கொண்டிருப்பதால் வேறுபடுவர்.
3. ஒருவரிடம் பலமான நுண்ணறிவு காணப்படுகிறது என்பது அவர் நுண்ணறிவுள்ளவராக நடந்து கொள்வார் என்பதை உத்தரவாதப்படுத்தமாட்டாது. உதாரணத்திற்கு உயர் அளவில் கணித ஆற்றல் உள்ள ஒருவர் அதனை அறிவுத் துறைகளில் பயன்படுத்துகின்ற அதே நேரம் அதே ஆற்றல் கொண்ட இன்னொருவர் அதனை பத்து இலக்கங்களைத் தேடி அதிர்ஷ்ட இலாபச் சீட்டு சுரண்டுவதில் பயன்படுத்தலாம்.

உண்மையில் பன்முக நுண்மதிகள் குறித்த கோட்பாடு மனித விருத்தி உளவியலில் மாத்திரமன்றி உயிரியல் வரலாற்றில் நேர்ந்த ஒரு புரட்சி என்றே குறிப்பிட வேண்டும். இந்த கோட்பாட்டை முன்வைத்தவர்களும் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதால் இந்தக் கோட்பாடு இன்னும் விரிந்து விவாதிக்கப்பட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. கார்ட்னர் இறுதியாக நுண்மதிகளுக்கு அப்பால்: பெறுமதியான பிற மனித ஆற்றல்கள்(Beyond Intelligence: Other Valued Human Capacities) என்றொரு பகுதியை தனது Multiple intelligences: New horizons என்ற நூலிலே இணைத்துள்ளார் அதில் அவர் The Giftedness Matrix என்றொரு அட்டவணையை இணைத்துள்ளார். அதில் Giftedness (இயற்கையாற்றல்/الموهبة), Prodigiousness (மகத்தான ஆற்றல்/العظمة), Expertise (நிபுணத்துவம்/الخبرة), Creativity (புத்தாக்கம்/الإبداع), Genius (மேதமை/العبقرية)

போன்ற ஆற்றல்களை நுண்மதிகளுக்கு அப்பால் அடையாளப்படுத்துகிறார். (Gardner, Multiple intelligences: New horizons, 2010)

மனவெழுச்சி நுண்மதி (EI) கோட்பாட்டின் அடிப்படைகளும் அதன் கூறுகளும்

மனவெழுச்சிகள் மனித வாழ்வில இன்றியமையாத அம்சம். அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் உளவியல் பரப்பில் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. Edward Lee Thorndike (1874 –1949), Sigismund Schlomo Freud(1856 –1939) போன்றோர்களை நோக்கி இதன் வேர்கள் நீண்டு செல்கின்றன. அதனையும் தாண்டி ஆரம்ப தத்துவாசிரியர்களான பிளேட்டோ அரிஸ்டோடில் போன்றோரிடமும் இது கவனத்தைப் பெற்றிருந்தது. ஏனெனில் மனவெழுச்சிகள் என்பது உளவியலில் பிரதான கவனத்தைப் பெற்று வந்த ஒரு விடயம். (Plucker, Human Intelligence: Biographical profiles, current controversies, resources for teachers, 2016)

மனவெழுச்சியை கையால்வதை ஒரு ஆற்றலாக, நுண்மதியாக நோக்கி அது குறித்து முதலில் பேசியவராக Michael Beldoch (1931) கருதப்படுகிறார். 1964 இல் Sensitivity to expression of emotional meaning in three modes of communication என்ற தனது கட்டுரையில் இது குறித்துப் பேசினார். B. Leuner என்பவர் 1966 இல் Emotional intelligence and emancipation என்ற தனது கட்டுரையில் இது குறித்துப் பேசுகிறார். 1983 இல் Howard Earl Gardner (1943) இது குறித்து தனது பன்முக நுண்மதிகள் நூலிலே Personal Intelligence என அடையாளப்படுத்திப் பேசினார். 1985 இல் Wayne Payne இன் கலாநிதிப்பட்ட ஆய்வு A Study Of Emotion: Developing Emotional Intelligence என்ற தலைப்பில் அமைந்திருந்தது. 1987 இல் Keith Beasley என்பவர் Emotional Quotient (EI) என்ற பிரயோகத்தை பயன்படுத்தினார். 1989 Stanley Greenspan மற்றும் Peter Salovey , John Mayer போன்றோர் இது குறித்துப் பேசினர்.

எனினும் விஞ்ஞான ஊடகவியலாளரும் எழுத்தாளருமான Daniel Goleman (1946) தனது Emotional Intelligence – Why it can matter more than IQ என்ற நூலை 1995 இல் எழுதும் வரை இந்த விடயம் உலகின் கவனத்தை ஈர்க்கவில்லை. அதன்பின்னர் ஆய்வாளர்களதும் பொதுமக்களதும் கவனத்தை மனவெழுச்சி நுண்மதி என்ற விடயம் ஈர்த்தது.

மனவெழுச்சி நுண்மதி என்றால் என்ன என்பதனை வரையறை செய்வதில் பொதுவான ஒரு வரைவிலக்கணத்தைக் காணமுடியாதுள்ளது. மனவெழுச்சியை கையாள்வதை நுண்ணறிவாக பாரக்க முடியுமா? முடியாதா என்ற வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து வருகின்ற ஒரு சூழலில் அது குறித்த பொதுவான ஒரு வரையறையை இன்னும் காணமுடியவில்லை. அதனை வரையறை செய்யும் சில வரைவிலக்கணங்களை அவதானிப்போம். "மனவெழுச்சி நுண்மதி என்பது உணர்வுகளை விளங்கிக் கொள்வதற்கும் முகாமை செய்வதற்கும் பயன்படுத்துவதற்குமான திறன்களை பகுத்தறிவதற்காக ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பாகும்" (Emotional intelligence is an organizing

framework for categorizing abilities relating to understanding, managing and using feelings) (P Salovey & J Mayer 1994)

மணவெழுச்சி நுண்மதி என்பது நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்ட மன ஆற்றல்களின் முக்கிய கூறு அல்லது இலக்ககரமாகவும் சிக்கலாகவும் வணிகமயப்படுத்தப்பட்ட ஒரு யோசனை" (Emotional Intelligence: long neglected core component of mental ability or faddish and confused idea massively commercialized) (A. Furnham 2001)

A Dictionary of Psychology மனவெழுச்சி நுண்மதி என்பதை "ஒருவருடைய தனிப்பட்ட மற்றும் பிறருடைய மனவெழுச்சிகளை அவதானிப்பதற்கும் வேறுபிரித்தறிந்து அடையாப்படுத்துவதற்கும் நடத்தைகளையும் சிந்தனையையும் வழிநடாத்துவதற்காக மனவெழுச்சிகள் குறித்த அந்த தகவல்களை பயன்படுத்துவதற்குமான ஆற்றல்" என வரைவிலக்கணப்படுத்துகிறது. (The ability to monitor one's own and other people's emotions, to discriminate between different emotions and label them appropriately, and to use emotional information to guide thinking and behavior). (Colman, Andrew 2008)

மனவெழுச்சி நுண்மதி என்பது நுண்மதியையும் பிறர் உணர்வுகளை விளங்கும் திறன் மற்றும் மனவெழுச்சிகளை மேன்படுத்தல் சக மனிதர்களுடனான உறவுகளின் தன்மையை புரிந்துகொள்வதற்கான இயலுமையை(ஒத்துணர்வு)யும் ஒன்றிணைக்கும் ஆற்றல்கள்" (Emotional intelligence is abilities to join intelligence, empathy and emotions to enhance thought and understanding of interpersonal dynamics.) (Mayer, John D 2008)

கோல்ட்மன் மனவெழுச்சி நுண்மதியை" ஒருவர் தன்னை ஊக்கப்படுத்திக் கொள்வதற்கும் ஏமாற்றங்களை துணிவோடு எதிர்கொள்ளவும் சந்தோசமான, மகிழ்ச்சியான எழுச்சிகளை கட்டுப்படுத்தவும் சாந்தப்படுத்தவும் தனது மனோநிலையை கையாள்வதற்கும் சிந்திப்பதற்கும் எதிர்பார்க்கை வைப்பதற்கும் பிறர் மனோநிலையை புரிவதற்குமான ஆற்றல்களை குழைக்கும் நிலையிலிருந்து தூரப்பட்டிருப்பதற்குமான ஆற்றல்கள்" என வரைவிலக்கணப்படுத்துகிறார். (Emotional intelligence: abilities such as being able to motivate oneself and persist in the face of frustrations; to control impulse and delay gratification; to regulate one's moods and keep distress from swamping the ability to think; to empathize and to hope.) (Goleman, 2010)

இந்த துறையில் பிராதனமாக கவனம் செலுத்தியவர்களது வரைவிலக்கணங்களையே நாம் மேலே நோக்கினோம். மனவெழுச்சிசார் நுண்மதியை வரையறை செய்வதிலே பல்வேறு போக்குகள் காணப்படுவதால்

மனவெழுச்சி நுண்மதியின் மாதிரிகள் என்றொரு பகுப்பை செய்து மனவெழுச்சி நுண்மதியை அணுகும் போக்கை அவதானிக்கலாம். இந்த வகையில் மனவெழுச்சி நுண்மதியை அணுகுவதற்குரிய நான்கு பிரதான மாதிரிகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

1. Bar-on Model
2. Mixed Model
3. Four branch Model
4. Ability Model

1. Bar-on (1998) Model

இந்த மாதிரியில் மனவெழுச்சி நுண்மதி என்பது ஒருவரது உள்ளார்ந்த மனவெழுச்சிகள், சமூகத் திறன்கள் ஆற்றல்களுடன் தொடர்பானதாகும். அவற்றை எவ்வாறு விளங்க எடுப்பது? எம்மை எவ்வாறு வெளிப்படுத்துவது? பிறரை விளங்கி அவர்களுடன் உறவை கட்டியெழுப்பி, அன்றாட சவால்கள், தேவைகள், அழுத்தங்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பதுடன் தொடர்பான ஆற்றல்களை குறிப்பதாகும் என விளக்கப்படுகிறது.

இந்த மாதரியில் மனவெழுச்சி நுண்மதி என்பதுபிரதானமாக ஐந்து விடயங்களுடன் தொடர்புபட்டிருப்பதை அவதானிக்கலாம்.

1. தன்னிலை அல்லது தன்விளக்கம் பெறுதல் (Intrapersonal EQ)
2. ஆளிடத் தொடர்பு (Interpersonal EQ)
3. அழுத்த முகாமைத்துவம்(Stress management EQ)
4. ஒருங்கிசைந்து போதல்(Adaptability EQ)
5. பொது மன நிலை (General Mood EQ) (Furnham, 2012)

2. Mixed Model

இந்த மாதிரியில் மனவெழுச்சி நுண்மதி என்பது ஒருவர் தனதும் பிறரதும் மனவெழுச்சிகளை விளங்கி கையாள்வதற்கான ஆற்றல் எனப் பார்க்கப்பகிறது. இதன் கீழ் நான்கு திறன்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

1. சுய புரிதல் Self -Awareness
 i. தனது சொந்த மனவெழுச்சி குறித்து புரிதல்
2. சுய முகாமை அல்லது ஒழுங்குபடுத்தல் Self -Management or Regulation
 i.மனவெழுச்சியை சமநிலையாகப் பேணுதல்
 ii.அடைவை இலக்காகக் கொண்டு காரியமாற்றல்
 iii.ஒத்திசைவாக நடந்து கொள்ளல்
 iv.உடன்பாடான வெளி நோக்கு
3. சமூகப் புரிதல் Social Awareness
 i.சக மனிதர்களின் மன எழுச்சிகளை புரிந்து கொள்ளல்(ஒத்துணர்வு) Empathy
 ii.நிறுவனத் தொடர்புகளைப் புரிதல் Organizational awareness

4. ஆளிடைத் தொடர்பு முகாமை Relationship Management
i.செல்வாக்குச் செலுத்துதல் Influence
ii.வழிகாட்டலும் பயிற்சியளித்தலும் Coach and Mentor
iii.குழுச் செயற்பாடு Team Work
iv.முரண்பாட்டு முகாமை Conflict Management
v.ஆகர்ஷணம் மிக்க தலைமைத்துவம் Inspirational Leadership (Goleman, 2010)

4. Four branch Model

இந்த முறையின் கீழ் மனவெழுச்சி நுண்மதி என்பது மனவெழுச்சியுடன் தொடர்பான நான்கு திறன்களின் கூட்டாக நோக்கப்படுகிறது.

1. மனவெழுச்சிகளை சரியாக புலக்காட்சி பெறுதல் Accurately Perceiving Emotion
2. சிந்திக்க வசதியளிக்கும் வகையில் மனவெழுச்சிகளை பயன்படுத்தல் Using Emotions To Facilitate Thought
3. மனவெழுச்சிகளை புரிந்து கொள்ளல் Understanding Emotion
4. மனவெழுச்சிகளை முகாமை செய்தல் Managing Emotion (John D. Mayer,Richard D. Roberts,Sigal G. Barsade, February 2008)

5. Ability Model

இந்த மாதிரியில் மனவெழுச்சிகளை புலக்காட்சி காண்தல், சிந்திப்பதற்கு வசதியளிக்கும் வகையில் மனவெழுச்சிகளை ஒருங்கிணைத்தல், மனவெழுச்சிகளை புரிந்து கொள்ளுதல், தனியாள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மனவெழுச்சிகளை கையாளுதல் என்பவற்றுக்கான ஆற்றலாகவே மனவெழுச்சி நுண்மதி நோக்கப்படுகிறது. இந்த மாதிரியில் நான்கு விடயங்கள் உள்ளடங்குகின்றன.

1. மனவெழுச்சியை புலக்காட்சி பெறுதலும் அடையாளம் காணுதலும் Emotional perception and identification.
2. மனவெழுச்சி குறித்த தகவல்களை சிந்தனைக்காக பயன்படுத்தல் Use of emotional information in thinking.
3. மனவெழுச்சிகள் குறித்து காரணம் காணுதல்: மனவெழுச்சிகளை மதிப்பிடல், வகைப்படுத்தல் தெரிவு செய்தல் Reasoning about emotions: emotional appraisal, labeling, and language.
4. மனவெழுச்சிகளை முகாமை செய்தல் Emotion management. (John D. Mayer,Richard D. Roberts,Sigal G. Barsade, February 2008)

இவற்றை வைத்து நோக்கும் போது மனவெழுச்சி நுண்மதியினுடைய கோட்பாட்டுப் பின்னணியை புரிந்து கொள்ள முடியுமாக இருக்கின்றது. இந்த துறை அண்மைய வளர்ச்சியைக் கொண்ட மிக சிக்கலான பரப்பைக் கொண்டதாக இருப்பதால் பொது வரையறைக்குள் நின்று இது குறித்துப்

பேசுவது சிரமமானது. இங்கு மனவெழுச்சி என்பது அறிவு விருத்திசாரந்த ஒன்றா? அதனை அறிவு விருத்தியுடன் தொடர்பான நுண்மதியுடன் எவ்வாறு பொருத்திப் பார்ப்பது? நுண்மதியால் மனவெழுச்சியை வெல்வதுவா மன எழுச்சி நுண்மதி? அல்லது அது அறிவாற்றல் போன்று மன ஆற்றல் சார்ந்த விடயமா என்பன குறித்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்த வண்ணமே காணப்படுகிறது.

எனினும் மனவெழுச்சி என்ற ஒன்று காணப்படுகிறது. அதனை கையாள்வதற்கான ஆற்றலும் மனிதனில் இருக்கின்றது. அதனை அவன் வளர்த்துக் கொள்ளலாம் என்பதில் உடன்படுகின்ற அனைவரும் இது குறித்து எவ்வாறு விளக்குவது? அதனை எந்த வகையராவுக்குள் சேர்ப்பது என்ற இடத்திலேயே இதுவரை ஒத்த மாதிரிக்கு உடன்படவில்லை.

பன்முக நுண்மதி(MI), மனவெழுச்சி நுண்மதி(EI) ஆகியவற்றை பிரயோகம் செய்யக் கூடிய கற்பித்தல் உத்திகள்

பன்முக நுண்மதிகள் கோட்பாட்டினுள் மனவெழுச்சி நுண்மதி பற்றிய விடயமும் உட் பொதிந்துள்ளது என்பதனை மேலே நோக்கினோம். அந்த வகையில் இங்கு பன்முக நுண்மதிகளின் பிரயோகம் குறித்து நோக்குவோம். அதில் விஷேடமாக மனவெழுச்சி நுண்மதியின் பிரயோகம் குறித்து விளங்கிக் கொள்ளலாம்.

பன்முக நுண்மதியை கல்வியில் பிரயோகிப்பது தொடர்பாக அந்த கோட்பாட்டை முன்வைத்த கார்டனரிடம் வினவப்பட்ட போது அவர் அளித்த பதிலினை விளங்குவதில் இருந்து அதன் பிரயோகத்திற்குரிய கற்பித்தல் உத்திகள் குறித்து நோக்கலாம்.

பல் நுண்மதிகள் குறித்த கோட்பாடு ஒரு உளவியல் கொள்கையாக முன்வைக்கப்பட்டாலும் அது அடிப்படையில் உயிரியலுடன் தொடர்பானதாக காணப்படுகிறது. மனிதனது மூளையோடும் அவனது மரபணு(Genetic)வுடனும் தொடர்பு பட்டதாக அமைகின்றது. எனினும் இந்த கோட்பாடு முன்வைக்கப்பட்ட பின்னர் இதில் உளவியலாளர்கள் அல்லது ஏனைய துறையினர் கவனம் செலுத்தியதைப் பார்க்கிலும் கல்வித்துறை சார்ந்தோரே அதிக கவனம் செலுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால், கல்வியில் பன்முக நுண்மதிகள் கோட்பாட்டை எப்படி பிரயோகிப்பது என்பது தொடர்பாக என்னிடம் உறுதியான எந்த யோசனையும் கிடையாது. அதே நேரம், கல்வி என்பது விழுமியங்களுடன் தொடர்பு பட்டு இயங்குவதால் ஒரு விஞ்ஞானக் கோட்பாட்டை நேரடியாக கல்வி நடவடிக்கைகளில் பிரயோகிக்க முற்பட முடியாது. எனவே, இதனை பிரயோகிப்பது குறித்து சிந்திக்கின்ற போது இரண்டு அடிப்படைகள் குறித்து கவனம் செலுத்துவது பொருத்தம் என்று கருதுகின்றேன். அவை ஒவ்வொருவருக்கும் அவர்களது தனியாள் வேறுபாடுகளை கவனத்திற் கொண்டு தனித்தனியா கற்பிப்பது. (Individuation) மற்றயது கற்பித்தலை பன்முகப்படுத்துவது (Pluralization).

இவை இரண்டையும் சுருக்கமாகச் சொல்வதாயின் பிள்ளைகளுக்கு தனித்தனியாகவே கற்பிக்கவும் வழிகாட்டவும் வேண்டும். அவர்களுக்கு இப்படி வழிகாட்டுவதற்கு பாடசாலைகளுக்கு சிரமமாக அமையலாம் .குடும்பங்களே அவற்றுக்கு பொறுத்தமான இடமாகும். எனினும், தொழிநுட்பப் பயன்பாட்டுடன் இதனை சாத்தியப்படுத்துவது குறித்து சிந்திக்க முடியும்.

அடுத்து, பன்மைப் படுத்துவது என்பது ஒரு விடயத்தை பல் முறையில் முன்வைப்பதாகும். அப்போது ஒவ்வொருவரும் அவரவருக்குரிய ஆற்றல்கள், கற்றல் இயலுமைகளுக்கேற்ப குறித்த விடயத்தை விளங்கிக் கொள்ளலாம் அத்தோடு ஒருவர் தன்னிடமுள்ள பல் ஆற்றல்களூடாக குறிப்பிட்ட விகிதங்களில் குறித்த விடயத்தை விளங்கிக் கொள்ளவும் முடியும். இது குறித்த பாடப் பரப்பில் ஆசிரியர் ஆழமான தெளிவுடன் காணப்பட்டால் மாத்திரமே சாத்தியமாகும். (Gardner, Frequently Asked Questions– Multiple Intelligences And Related Educational Topics, 2013)

இந்தப் பின்னணியில் இருந்து கொண்டு பன்முக நுண்மதிகளை பிரயோகம் செய்யக் கூடிய கற்பித்தல் உத்திகளை நோக்குவோம்.

வகுப்பறையில் உள்ள மாணவர்களது தனியால் ஆற்றல் வேறுபாடுகளுக் கேற்பவே இந்த கற்பித்தல் உத்திகள் திட்டமிடப்பட வேண்டும். கல்வித்துறையில் இது குறித்து நிறைய ஆய்வுகள் இடம்பெற்ற வண்ணம் காணப்படுகின்றன. (Gouws, 2007) பிரயோக அனுபவ ரீதியான முன் மொழிவுகளும் நிறையவே காணப்படுகின்றன. இவற்றை பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற முன்மாதிரிப் பாடசாலைகளும் உலகின் பல பாகங்களிலும் இயங்கி வருகின்றன. அத்தோடு இந்த நுண்மதிகளை மதிப்பீடு செய்வதற்கான மதிப்பீட்டு முறைகளை விருத்தி செய்வதில் கல்வியலாளர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள். (Gardner, Multiple intelligences: New horizons, 2010)

பன்முக நுண்மதிகளை கற்பித்தலில் பிரயோகிப்பதற்காக அந்த ஒவ்வொரு நுண்மதியினாலும் சுட்டப்படும் ஆற்றல்களுக்கேற்ப மாணவர்களை வகைப்படுத்தி விளங்கிக் கொள்ள வேண்டும்.



1. மொழி சார்ந்த நுண்மதி Verbal–linguistic intelligence:

இந்த நுண்மதி ஆற்றல் கூடியவர்கள் Verbal Learners (வார்தையாள் கற்பவர்கள்) என்பது போலவே Auditory Learners (செவி வழியாக கற்பவர்கள்) ஆகவும் காணப்படுவார்கள். அத்தோடு இவர்கள் Word Smart (வார்த்தை தேர்ச்சியுள்ளவர்கள்) எனவும் அடையாளப்படுத்தப்படுகிறார்கள் இத்தகையவர்களுக்கு கற்பிக்கின்ற போது விரிவுரை, கலந்துரையாடல், கதை சொல்லுதல், சஞ்சிகையாக்கம்… போன்ற கற்பித்தல் உத்திகளை பயன்படுத்தலாம்.

2. இசை சார்ந்த நுண்மதிMusical intelligences:

இந்த ஆற்றல் மிகைத்தவர்களை Musical Learners (இசை வழி கற்பவர்கள்) Auditory Learners (செவி வழி கற்பவர்கள்) என அடையாளப்படுத்துவார்கள். அத்தோடு இவர்களை Music Smart (இசைத் தேர்ச்சியுள்ளவர்கள்) Listening Smart (செவிமடுத்தல் தேர்ச்சியுள்ளவர்கள்) எனவும் அடையாளப்படுத்துவார்கள். இவர்களுக்கு கற்பிக்கின்ற போது விரிவுரை, இசை, பாடல், கவிதை வடிவ செய்யுள்கள் போன்ற கற்பித்தல் உத்திகளை பயன்படுத்தலாம். இவர்களை பாடச் செய்தல், ஒன்றை செவிமடுக்கச் செய்தல், பிறர் முன்வைக்கும் போது அதனை அவதானித்து கருத்துக் கூறச் செய்தல் என்பன போன்ற உத்திகளும் இவர்களுக்கு கற்பிக்க பயன்படுத்தப்படலாம்.

3. தர்க்க-கணித நுண்மதி Logical–mathematical intelligence:

இந்த நுண்மதி ஆற்றல் அதிகம் உள்ளவர்கள் Logical/Mathematical Learners (தர்க்க ரீதியாக, கணித அடிப்படையில் கற்பவர்களாக) இருப்பர். இவர்களை Logical Smart or Maths Smart (தர்க்க அல்லது கணிதத் தேர்ச்சியுள்ளவர்கள்) எனவும் அழைப்பர். இவர்கள் பிரச்சினை தீர்த்தல் , விஞ்ஞான ரீதியான பரிசோதனை, எதையும் தொகுத்து, பகுத்து, பெருக்கி சொல்லும் ஆற்றல் கொண்டவர்களாக இருப்பர். இவர்களுக்கு கற்பிக்கும் போது குறியீடகளை பயன்படுத்தல், பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை, தர்க்க ரீதியான முன்வைப்பு, குறியீட்டுப் பயன்பாடு, அட்டவணைப் பயன்பாடு, சூத்திரங்கள் பயன்பாடு, எண்களின் பயன்பாடு போன்ற கற்பித்தல் உத்திகளைக் கையாளலாம்.

4. கட்புலன் சார் நுண்மதி Spatial–visual intelligence:

இந்த நுண்மதி உள்ளவர்கள் Visual Learners (பார்வையால் கற்பவர்கள்) எனப்படுகின்றனர். இவர்களை Picture or Visual Smart (காட்புள தேர்ச்சியுள்ளவர்கள்) என அடையாளப்படுத்துவர். இவர்கள் விடயங்களை பார்த்து நினைவில் வைத்திருப்பர். இவர்கள் மனக் காட்சி அல்லது அதிகம் புலக்காட்சி பெறுபவர்களாகவும் இருப்பர். இவர்களுக்கு கற்பிக்கின்ற போது காட்சிகள், வரைபுகள், மனச் சித்திரம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

இத்தகையவர்கள் எப்போதும் வகுப்பறையில் காண்பிக்கப்படுபவை, எழுதப்படுபவற்றை பார்க்கும் வகையில் அமரச் செய்யப்பட வேண்டும். ஒன்றை வரைதல், காண்பித்தல், நிறம் தீட்டுதல் போன்ற உத்திகளால் இவர்களுக்கு கற்பிக்கலாம்.

5. உடல்சார் நுண்மதி Bodily–kinesthetic intelligence:

இந்த நுண்மதி அதிகம் பெற்றவர்கள் Tactile/Kinesthetic Learners (தொட்டுணர்ந்து,செய்துபார்த்து கற்பவர்களாக) இருப்பர். இவர்களை Body Smart (உடலியக்கத் தேர்ச்சி பெற்றவர்கள்) என்று அறியப்படுகின்றனர். இவர்கள் அதிக உடல் இயக்கத் திறன் பெற்றவர்களாக இருப்பர். ஒன்றை செய்து பார்க்க, உடலை அசைத்து செயற்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பர். இவர்கள் அதிக நேரம் வகுப்பறையில் அமர்ந்திருக்க விரும்பமாட்டார்கள். இவர்களுக்கு கற்பிக்கும் போது வகுப்பில் எழுந்து செய்கின்ற வேலைகளை கொடுக்க வேண்டும். ஒரு விடயத்தை நடித்துக் காட்டுதல், செய்து காண்பித்தல், தொட்டுணர்ந்து பார்த்தல் போன்ற உத்திகளை கையாள வேண்டும்.

6. மனவெழுச்சி நுண்மதி Emotional intelligences:

இவர்கள் பொதுவாக மனவெழுச்சிகளை சிறப்பாக விளங்கி கையாளத் தெரிந்தவர்களாக இருப்பர். இவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இவர்களுக்கும் சக மாணவர்களுக்கும் இடையிலான உறவு சிறப்பாக அமையப் பெற்றிருக்கும் என்பதாக மனவெழுச்சி நுண்மதியை தனியாக விளக்குபவர்களின் விளக்கப் பின்னணியிலிருந்து குறிப்பிட முடியும். ஆனால், மனவெழுச்சியை கார்ட்னரைப் போன்று ஒரு ஆற்றலாக நோக்கின் இவர்கள் அதிகம் மனவெழுச்சி பெற்றவர்களாக இருப்பர். ஆனால் அது உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ அமையலாம். அது இத்தகையவர்களிடம் அதிகமாகக் காணப்படும். இவர்களை எமது நாளாந்த வாழ்வில் Sensitive Smart (உணர்வு பூர்வமானவர்கள்) என்று குறிப்பிடுவோம். இவர்களுக்கு கற்பக்கின்ற போது விடயங்களை உணர்வு பூர்வமாக , மனவெழுச்சிகளை கவனத்தில் கொண்ட வண்ணம், நல்ல மனவெழுச்சிகளை தூண்டும் வகையில், மோசமான மனவெழுச்சிகளை தவிர்க்கும் வகையில் கற்பிக்க வேண்டும். இவர்கள் இரு வகையானவர்களாக இருப்பர் அதனை கீழே நோக்குவோம்.

மறுபக்கம் மனவெழுச்சிகளை மேம்படுத்தும் வகையில் வகுப்பறைச் சூழலை , தனியாட்களை கையாளுவதற்கு ஆசிரியர் முயற்சிக்க வேண்டும். குழுச் செயற்பாடு, கற்றலில் பரஸ்பரம் உதவி செய்தல், உணர்ச்சி வெளிப்பாட்டுகளுக்கு உடன்பாடான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல், புறிக்கணிப்புக்கள், இழிவுபடுத்தல்கள் என்பவற்றை தவிர்த்தல். அதிகமான ஊக்கல உத்திகளை பயன்படுத்தல் மற்றும் வகுப்பறையை மகிழ்சிகரமானதாகவும் கூட்டுப் பொறுப்புள்ளதாகவும் அமைத்தல் என்பன மனவெழுச்சி சார் நுண்மதியினை கற்பித்தலில் பிரயோகிப்பதற்கான உத்திகளாகும்.

1) ஆளிடைத் தொடர்பு சார் நுண்மதி Interpersonal intelligence:

இந்த ஆற்றல் மிக்கவர்கள் Interpersonal Learners (ஆளிடைத் தொடர்பால் கற்பவர்கள்) என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் Social Learners (சமூக ஆற்றல் பெற்ற கற்போர்), Group/Cooperative Learners (குழுவாக/ இணைந்து கற்போர்), People Smart (மக்களுடன் ஊடாடும் திறன் பெற்றவர்கள்) என பல வகையில் அறியப்படுகின்றனர் .

இவர்களுக்கு கற்பிக்கும் போது இவர்களது சமூக, குழு ஊக்கத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். அந்த வகையில் குழுச் செயற்படுகள், சமூக ஊடாட்டம் கொண்ட நிகழ்ச்சிகள், சக மாணவருக்கு உதவும் வகையிலான ஏற்பாடுகள் கொண்ட கற்பித்தல் உத்திகள் பயன்படுத்தப்பட வேண்டும். இவர்களுக்கு கற்பிக்கின்ற போது விடய உள்ளடக்கங்களை சமூக யதார்த்தங்களுடன் இணைத்து விளக்குவது பொறுத்தமானது. வெளிக்கள செயற்பாடுகளும் இவர்களுக்கு கற்பிப்பதற்கு பொருத்தமான உத்தியாகும்.

2) தன்னிலை சார் நுண்மதிIntrapersonal intelligence:

இந்த ஆற்றல் உள்ளவர்கள் Intrapersonal Learners (தன்னிலை சார்ந்து கற்போராக) இருப்பர். இவர்களை Solitary Learner (தனியாகக் கற்போர்), Self Smart (தற் திறனுள்ளவர்கள்) என அழைப்பர். இவர்கள் எப்போதும் தனித்து செயற்படுபவர்களாகவும் சுய ஊக்கம் பெற்றவர்களாயும் இருப்பர். இவர்களுக்கு கற்பிக்கும் போது தனிநபர் செயற்பாடுகளினூடாக கற்பிப்பதே பொறுத்தமானது. பாட உள்ளடக்கங்களை தனி நபர் நலன் சார்ந்து விளக்க வேண்டும். விடயங்கள் தொடர்பான சொந்தப் பார்வை, விமர்சனங்களை இவர்களிடம் கேட்க முடியும்.

7. இயற்கை சார் நுண்மதி Naturalist intelligence:

இந்த ஆற்றல் பெற்றவர்கள் Natural Learner (இயற்கை விரும்பிகள்) எனப்படுகின்றனர். இவர்கள் இயற்கையுடனும் உயிரினங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இவர்களை Neuter Smart (இயற்கை சார்ந்தவர்கள்) என அடையாளப்படுத்துவர். இவர்களுக்கு கற்பிக்கும் போது இயற்கையுடன் தொடர்பான வகையில் வகுப்பறை சூழல் முதல் பாடச் செயற்பாடுகள் வரை அமைவது அவசியமாகும். பாட உள்ளடக்கங்கள் இயற்கையுடன் தொடர்பு படுத்தி விளக்கப் பட வேண்டும்.வெளிக்கள வேலைகள், கள ஆய்வுகள், உயிரிகள் பற்றிய ஆய்வுகள் போன்றன இவர்களுக்கு பொறுத்தமான விடயங்கள்.

8. இருப்பியல், ஆன்மீக நுண்மதி Existential & Spiritual intelligence or the intelligence of big questions:

இவர்களை Philosophical Learners (தத்துவார்த்த அடிப்படையில் கற்போர்) என அழைப்பர். இவர்களை Thinking smart (சிந்தனை ஆற்றல் கொண்டவர்கள்) எனவும் வழங்குவர். இவர்கள் அதிகம் கேள்வி கேட்போராக, எதையும் தீர விசாரிப்போராக இருப்பர். பௌதீகத்துக்கப்பால் சிந்திக்கும் திறன்

கொண்டோராய் இருப்பர். இவர்கள் சுதந்திரமாகக் கற்பதை விரும்புவர். இவர்களிற்கு கற்பிக்கும் போது கற்பித்தல் ஒரு வசதியளிப்பாக மாத்திரம் இருப்பது பொறுத்தமானது. இவர்களது வினாக்களுக்கு விடை கண்டடைய உதவி புரிதல் அவசியம்.

8. கற்பித்தல் நுண்மதி Pedagogical Intelligence:

இந்த ஆற்றல் கொண்டவர்கள் Pedagogical Learners (கற்பிப்பதன் ஊடாக கற்போர்) என அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் கற்பிப்பதில் பிறருக்கு ஆலோசனை வழங்குவதில் வழிகாட்டுவதில் ஆர்வம் கொண்டவர்கள். இவர்களுக்கு பிறருக்கு சொல்லிக் கொடுத்தல், உதவுதல், வழிகாட்டல் என்பவற்றினூடாக கற்பிக்க வேண்டும். இது ஆரம்ப நிலையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஆற்றலாகும்.

பன்முக நுண்மதி(MI), மனவெழுச்சி நுண்மதி(EI) ஆகியவற்றை வலுப்படுத்தக் கூடிய கற்றல் உத்திகள்

1. மொழி சார்ந்த நுண்மதி Verbal-linguistic intelligence:

- குறிப்பிட்ட விடயத்தை வாசித்தல், அதனை செவிமடுத்தல், எழுத வைத்தல் அது குறித்து பேசச் செய்தல்
- வகுப்பறையில் சொல் அகராதிகள் பயன்பாட்டை வலியுறுத்தல்.
- எழுத்தாக்கங்களை செய்து பிரசுரிக்கத் தூண்டுதல்.
- மன்றங்கள், கருத்தரங்குளை நடாத்தல்.
- சொற்கள் ஆராய்ச்சியிற்கு தூண்டுதல்.

2. இசை சார்ந்த நுண்மதி Musical intelligences:

- விடயங்களை விளக்குவதற்கு பாடல், கவிதை, செய்யுள் என்பவற்றை பயன்படுத்தல்.
- பாட உள்ளடக்கத்தை ஓசை நயத்துடன் பாடச் செய்தல்.
- ஒலியமைப்பில் கற்பதை வலியுறுத்தல்.

3. தர்க்க-கணித நுண்மதி Logical-mathematical intelligence:

- தர்க்கித்து விவாதம் செய்து விடயங்களை விளங்கிக் கொள்ள வசதியளித்தல்.
- எண்களை அதிகம் பயன்படுத்தல்.
- பிரச்சினை தீர்க்கும் ஆற்றலை வளர்க்கும் வகையில் புதிர் வினாக்களை, சம்பவ பகுப்பாய்வுகளை வழங்குதல்.

4. கட்புலன் சார் நுண்மதி Spatial-visual intelligence:

- கற்பித்தலில் படங்கள் வரைபுகள் காட்சிகளை பயன்படுத்தல்.
- வர்ணங்களை கற்றலுக்காக பயன்படுத்த தூண்டல்.
- வர்ணப் பேனைகளை பயன்படுத்தி வென்பலகையில் எழுதுதல்.
- Multimedia பயன்பாட்டை அதிகரித்தல்.

5. உடல்சார் நுண்மதி Bodily-kinesthetic intelligence:

• வகுப்பறையில் எழுந்து, அசைந்து செய்கின்ற செய்றபாடுகளில் முன்னுரிமையளித்தல்.
• நடிப்பு, நடனம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு தூண்டுதல் வழங்குதல்.
• வெளிக்களச் செயற்பாடுகளில் முன்னுரிமை வழங்கள்.
• விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள ஊக்குவித்தல்.

6. மனவெழுச்சி நுண்மதி Emotional intelligences:

• குழுச் செயற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
• சிறந்த மனவெழுச்சிகளை சிறப்பாக வெளியிடுவதற்கு வாய்ப்பளித்தல்.
• மோசமான மனவெழுச்சிகளை பிறருக்கு பாதிப்பில்லாமல் அகற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
• நெருக்கடி நிலைகளில் நிதானமாக இருப்பதற்கு பயிற்றுவித்தல்.
• தியானப் பயிற்சிகளில் ஈடுபட வைத்தல்.

1) ஆளிடைத் தொடர்பு சார் நுண்மதிInterpersonal intelligence:

• இணைந்து செயற்படும் வகையில் பயிற்சிகளை வழங்குதல்.
• குழுக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து வழங்குதல்.
• நேர்காணல் வினாக்களை வழங்கி மாதிரி நேர்காணல்களை நிகழ்த்தச் செய்தல்.

2) தன்னிலை சார் நுண்மதிIntrapersonal intelligence:

• சுயசரிதை வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் ஊக்குவித்தல்
• கற்பித்த உள்ளடக்கம் தொடர்பாக விமர்சனப் பாரவையை முன்வைக்க இடமளித்தல்.
• பாட ஆரம்பத்தில் Brain Stormy வினாக்களை வழங்குதல்.

7. இயற்கை சார் நுண்மதிNaturalist intelligence:

• சூழலுடன் தொடர்பான விடயங்களில் ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொடுத்தல்.
• இயற்கை வளங்களை அறிமுகம் செய்வதற்கான சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்.
• தோட்டச் செய்கை, பராமறிப்பு என்பவற்றை ஊக்குவித்தல்.
• உயிரினங்களுடன் தொடர்புபட்டு இயங்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

பன்முக நுண்மதி(MI), மனவெழுச்சி நுண்மதி(EI) ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு

பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி என்பவற்றை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இங்கு கார்ட்னர் குறிப்பிடுவது போன்று மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களது திறமைளுக்கும் இயலுமைகளுக்கும் ஏற்ப வேறுபிரித்தறிவது ஆசிரியரின் முதற் பணியாக இருக்கும். ஏனெனில் பன்முக நுண்மதியின் பிரயோகம் என்பது தனியான ஒரு விவகாரம் என்பதனைப் பாரக்கிலும் அது மாணவர்களை அவர்களது தனியாள் வேறுபாடுகளினடிப்படையில் அணுகுகின்ற செயற்பாடாகவே அமையும். (Gardner, Frequently Asked Questions–Multiple Intelligences And Related Educational Topics, 2013)

அடுத்து மாணவர்களிற்கு முன்வைக்கும் பாட உள்ளடக்கங்களை அவர்களது தனியாள் வேறுபாட்டிற்கேற்ப விளக்குவது முக்கியமானது. அதாவது தான் எடுத்துக் கொண்ட ஒரு விடயத்தை வகுப்பறையில் காணப்படும் மாணவர்களின் நுண்மதி வகைகளைக் கருத்திற் கொண்டு, நான்கு அல்லது ஐந்து முறைகளைக் கையாண்டு விளக்குகின்ற தேவை ஒரு வகுப்பறையில் ஒரு சந்தரப்பத்தில் ஏற்படும். இதற்கு ஆசிரியர் தான் முன்வைக்கம் உள்ளடக்கம் மாத்திரமன்றி அதனை முன்வைப்பதற்கான பலதரப்பட்ட வழிமுறைகள் தொடர்பாக ஆழ்ந்த அறிவுடன் காணப்படுவதன் மூலமே சாத்தியமாகும்.

அடுத்து, மாணவர்கள் சுயமாக தமது ஆற்றல்களை இனங்கண்டு வளர்த்துக் கொள்ளும் வகையில் வழிகாட்டப்படல் வேண்டும். அதற்கு பன்முக நுண்மதியின் கோட்பாடு மற்றும் பிரயோக அறிவு முக்கியமானதாகும். இந்த அறிவு ஆசிரியர், மாணவர், பாடசாலை நிர்வாகம் மற்றும் பெற்றோர்களுக்கும் அவசியமானதாகும். அப்போதுதான் பொருத்தப்பாடான வகையில் இந்த கோட்பாட்டின் பிரயோகம் வெற்றியடையும்.

மனவெழுச்சி நுண்மதி என்பதனைப் பொருத்தவரை அது ஒரு பிள்ளை தனதும் பிறரதும் மனவெழுச்சிகளை விளங்க எடுத்து முகாமை செய்து, கையாளுதலாகும். இதற்கு அனைத்துக்கும் முதல் ஆசிரியர் அதற்கான மாதிரியாக இருப்பது அவசியமாகும்

பாடசாலைக் காலம் முழுக்க இதனது செல்வாக்கு இன்றியமையாததாகும். இதில் பிரதானமாக ஆசிரியர் அவர்களிடம் காணப்படும் சிறந்த மனவெழுச்சிகளை வளர்த்துவிடுவதிலும் மோசமான மனவெழுச்சிகளை முறையாக வெளிப்படுத்தி இல்லாமல் செய்யப்படுவதிலும் ஆசிரியரின் பங்களிப்பு முக்கியமாகும் . Dr. Meninger மனவெழுச்சிகள் ஒருவரிடையே சமநிலையடைவதற்கு இளமைக் காலம் முதல் பயிற்சி செய்வது அவசியமாகும் என விளக்குகிறார்.

உசாத்துணை

- Gardner, H. (1993). Frames of mind: The theory of multiple intelligences. New York: Basic Books.
- Gardner, H. (2009). Intelligence reframed: Multiple intelligences for the 21st century. New York, NY: Basic Books.
- Gardner, H. (2010). Multiple intelligences: New horizons. United States: Read How You Want.
- ஜெயராஜா, ச. (2009). நுண்மதி என்ற மரபு வழி எண்ணக்கருவைத் தகர்ப்புக்கு உள்ளாக்குதல் (சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரை 13). கிழக்குப் பல்கலைக்கழகம்: நினைவுப் பேருரைச் செயற்குழு.
- Cianciolo, A. T., & Sternberg, R. J. (2011). Intelligence: A brief history. Oxford: Blackwell.

- Beachner, L., & Pickett, A. (2001). Multiple intelligences and positive life habits: 174 activities for applying them in your classroom. Thousand Oaks, CA: Corwin Press.
- பொன்னையா, அரவிந்தன். (2008, January). பல்நுண்மதி பற்றிய விளக்கநிலை நோக்கும் வகுப்பறைப் பிரயோகங்களும். கூடு, 1(2), 31-40. கரவெட்டி: ஆசிரிய மத்திய நிலையம்.
- Intelligence. (2018, June 10). Retrieved June 10, 2018, from https://en.wikipedia.org/wiki/Intelligence
- Cherry, K. (2018, February 24). Alfred Binet and the History of IQ Testing. Retrieved June 20, 2018, from https://www.verywellmind.com/history-of-intelligence-testing-2795581
- Jonathan, P. (2016). Human Intelligence: Biographical profiles, current controversies, resources for teachers. Retrieved June 22, 2018, from https://www.intelltheory.com/index.shtml
- Freire, P., Ramos, M. B., & Macedo, D. P. (2005). Pedagogy of the oppressed. New York: Bloomsbury Academic.
- Gardner, H. (2013, March). FREQUENTLY ASKED QUESTIONS- MULTIPLE INTELLIGENCES AND ... Retrieved June 28, 2018, from https://www.bing.com/cr?IG=E933B5A38E9A4C709FD58BABCC035AB1&CID=33E7A5347CB562B61B78A9297D6B63BA&rd=1&h=BZbBaENe4tMFGuGLJvdSN_dFP_cPYKYUVG0JQEXzufE&v=1&r=https://howardgardner01.files.wordpress.com/2012/06/faq_march2013.pdf&p=DevEx.LB.1,5504.1
- Goleman, D. (2010). Emotional intelligence: Why it can matter more than IQ. London: Bloomsbury.
- Furnham, A. (2012). Emotional Intelligence. In Emotional Intelligence – New Perspectives and Applications. Prof. Annamaria Di Fabio (Ed.).InTech. doi:10.5772/31079
- பக்கீர், ஜ. (2010, November). மனவெழுச்சி நுண்மதி. பேராசிரியர் க.சின்னத்தம்பி-கல்விச்சேவை பொன்விழா மலர், 137-146. வவுனியா: பேராசிரியர் க.சின்னத்தம்பி-கல்விச்சேவை பொன்விழாக் குழு, வியாபார கற்கைகள் பீடம்.
- வள்ளியப்பன், சோம. (2006). எமோஷனல் இன்டலிஜன்ஸ்:இட்லியாக இருங்கள் (2nd ed.). சென்னை, இந்தியா: கிழக்கு பதிப்பகம்.
- வள்ளியப்பன், சோம. (2017). எமோஷனல் இன்டலிஜன்ஸ் 2.0 (1st ed.). சென்னை, இந்தியா: கிழக்கு பதிப்பகம்.

- Salovey, P., & Mayer, J. D. (1990). Emotional Intelligence. Imagination, Cognition, and Personality, 9, 185-211.https://doi.org/10.2190/DUGG-P24E-52WK-6CDG
- Emotional intelligence. (2018, June 25). Retrieved from https://en.wikipedia.org/wiki/Emotional_intelligence#cite_note-21
- Doug, R. (2017, February 10). Emotional Intelligence: A History and Definition. Retrieved June 10, 2018, from https://www.adventureassoc.com/emotional-intelligence-a-history-and-definition/
- Fabio, A. D. (2012). Emotional Intelligence - New Perspectives and Applications (1 vols., Furnham, A., Emotional Intelligence). InTech.
- Mayer, J. D., Roberts, R. D., & Barsade, S. G. (2008). Human Abilities: Emotional Intelligence. Annual Review of Psychology, 59(1), 507-536. doi:10.1146/annurev.psych.59.103006.093646
- Bar-On, R., & Parker, J. D. (2000). Handbook of emotional intelligence: The theory and practice of development, evaluation, education, and implementation - at home, school, and in the workplace. San Francisco, CA: Jossey-Bass.
- Matthews, G., Zeidner, M., & Roberts, R. D. (2002). Emotional intelligence: Science and myth. Cambridge, MA: MIT.
- Mayer, J. D., & Salovey, P. (1993). The intelligence of emotional intelligence. Intelligence, 17(4), 433-442. doi:10.1016/0160-2896(93)90010-3
- Mayer, J. D., Salovey, P., & Caruso, D. R. (2008). Emotional intelligence: New ability or eclectic traits? American Psychologist, 63(6), 503-517. doi:10.1037/0003-066x.63.6.503
- Gouws, F. (2007). Teaching and learning through multiple intelligences in the outcomes-based education classroom. Africa Education Review, 4(2), 60-74. doi:10.1080/18146620701652705

INAM INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES

மதிப்பிடப்பெற்றது

ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் – வேமன சதகம்)

Comparative Teaching Approaches (Thirukkural – Vamana Satakam)

முனைவர் சி.சாவித்ரி/Dr.Ch.Savithri[17]

Abstract: It is the duty of the best teacher to know what students are up to before they teach moral literature in the classroom and to adapt their teaching methods accordingly. Thus, it is best for students studying Masters of Tamil Literature to teach Indian literature. Thus, when we approach comparative methodology, students are introduced to a language they do not know, and the idea of additional linguistics is reinvented. Moreover, it is necessary to prepare them for further education by teaching charity literature in a comparative sense.

Date of submission: 2019-05-19
Date of acceptance: 2019-07-20
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: முனைவர் சி.சாவித்ரி
Email: savithritamiluniversity@gmail.com

Keywords:, Comparative Teaching Approaches (Thirukkural – Vamana Satakam), Indian literature, classroom, teaching methods, Tamil Literature, Ch.Savithri, ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள், திருக்குறள், வேமன சதகம், பழமரபுக் கதைகள், கற்பிக்கும், அற இலக்கியங்கள், இந்திய இலக்கியங்கள், மாணவர்கள், கற்பித்தல், சி.சாவித்ரி.

அற இலக்கியங்களை வகுப்பறையில் கற்பிக்கும் முன்பாகக் கற்கின்ற மாணவர்கள் எந்நிலையுடையவர்கள் என்பதை அறிந்து, அவர்களது தேவைக்கேற்பக் கற்பித்தல் முறைகளைக் கையாளுவது சிறந்த ஆசிரியரின் கடமையாகும். அவ்வகையில், முதுகலைத் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கு இந்திய இலக்கியங்களைக் கற்பிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஒப்பீட்டு முறையைக் கையாளுவது சிறந்ததாகும் எனலாம். இவ்வாறு ஒப்பீட்டு முறையை அணுகும்போது மாணவர்கள் அறிந்த மொழியில் தொடங்கி அறியாத மொழிக்கு அவர்களைக் கொண்டு செல்வதின் வாயிலாகக் கூடுதல் மொழியறிவு பற்றிய சிந்தனை புதிதாகப் புகுத்தப்படும் வாய்ப்பு அமைகிறது. மேலும், ஒப்பீட்டு நோக்கில் அற இலக்கியங்களைக் கற்பிப்பதின் வாயிலாக அவர்களை அடுத்தகட்டக் கல்விநிலைக்கு தயார்படுத்துவதும் தேவையான ஒன்றாகிறது.

மாணவர்களுக்குக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அற இலக்கியங்களைக் கற்பிப்பதற்கு முன் அவர்களுக்கு இந்திய அற இலக்கியங்களைப் பற்றியும், அவை தோன்றுவதற்கான அவசியத்தைப் பற்றியும் அறிமுகப்படுத்தி, பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட அற இலக்கியங்களை ஒப்பிட்டுக் கீழ்க்காணும் வகையில் கற்பித்து மதிப்பீடு செய்யலாம்.

---

[17] இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – தமிழ்நாடு, savithritamiluniversity@gmail.com

தமிழில் திருக்குறள், தெலுங்கில் வேமன சதகம் கற்பிப்பதற்கு முன்பாக மாணவர்களுக்கு முதலில் இந்திய அற இலக்கியங்களைப் பற்றிய ஓர் அறிமுகம் தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் அவர்களுக்குத் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னட மொழிகளின் அற இலக்கியங்களை அறிமுகப்படுத்திய பின்னர், கற்பிக்க இருக்கும் நூல்களுக்குச் செல்லலாம். எடுத்துக்கொண்ட இரு நூல்களின் ஆசிரியர்கள், அவர்கள் வாழ்ந்த காலம், அற இலக்கியம் தோன்றுவதற்கான காரணம், யாருக்காக எழுதப்பட்டது என்பன போன்ற தகவல்களை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அதன்பின்பு அட்டவணை மூலமாக இரு நூல்களின் புறக் கட்டமைப்பு மற்றும் அகக் கட்டமைப்பைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு எடுத்துக்காட்டவேண்டும்.

திருக்குறள்													
அறம்					பொருள்							இன்பம்	
பகுதி	பாயிரம்	இல்லறம்	துறவறம்	ஊழியல்	அரசியல்	அமைச்சியல்	அரணியல்	கூழியல்	படையியல்	நட்பியல்	குடியியல்	களவியல்	கற்பியல்
அதிகாரங்கள்	1-4	5-24	25-37	38	39-63	64-74	75	76	77-78	79-95	96-108	109-115	116-133
குறள்	40	200	130	10	250	110	10	10	20	170	130	70	180

1. அரசியல் = 250
2. இல்லறம் = 200
3. கற்பியல் = 180
4. நட்பியல் = 170
5. குடியியல் = 130
6. துறவறம் = 130
7. அமைச்சியல் = 110
8. களவியல் = 70
9. பாயிரம் = 40
10. படையியல் = 20
11. ஊழியல் = 10
12. அரணியல் = 10
13. கூழியல் = 10

மொத்தம் = 1330

வடிவம் :

- ஈரடி – குறட்பா
- முதலடியில் நான்கு சீர்கள், இரண்டாமடியில் மூன்று சீர்கள்
- ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறள்கள்

மேற்கூறிய அட்டவணையின் வாயிலாகப் புறக் கட்டமைப்பைக் கற்பிக்கும்போது மாணவர்கள் தாமாகவே கீழ்க்கண்ட செய்திகளைச் சிந்தித்து விடுவார்கள்.

- திருவள்ளுவர் எந்த அறத்தை அதிகம் வலியுறுத்திக் கூறுகிறார் என்பதையும்
- அவர் வாழ்ந்த காலகட்டத்தில் சமுதாயத்தில் எந்த நிகழ்வுக்கு அறம் அதிகம் தேவைப்பட்டது என்பதனையும்
- மேற்காணும் கருத்துக்கணிப்புப் பட்டியல் ஆய்வு மாணவர்கள் ஆய்வுத் தலைப்புக்களை தெரிவு செய்யவும், கருதுகோள்கள் அமைத்துக்கொள்ளவும் பயன்படுகிறது.
- மேலே கூறிய கருத்துக்கணிப்பை ஆதாரமாக்கிக் கொண்டு 'திருக்குறளில் இல்லறம்' 'திருக்குறள் காட்டும் அரசியல் சிந்தனைகள்' இது போன்ற பல ஆய்வுத் தலைப்புகளை அமைத்துக் கொள்ளலாம்.

வேமன சதகம் – புறக் கட்டமைப்பு

1. சதகம் என்றால் நூறு. வேமன சதகம் நூறு பாக்களைக் கொண்டது.
2. நான்கு அடிகளை உடையது.
3. 'ஆட்டவெலதி' என்ற பா வகையால் அமைக்கப்பட்டது.
4. அனைத்துப் பாக்களிலும் நான்காவது அடி ஒன்றாகவே இருக்கும். இதற்கு 'மகுட்டம்' என்று பெயர்.
5. இதில் பால் பகுப்போ, அதிகாரப் பகுப்போ இல்லை.
6. பாடல்களில் சொல்லப்பட்ட கருத்தினை வைத்து உரையாசிரியர்களால் பகுக்கப் பட்டன. அதனை ஆதாரமாகக் கொண்டு அட்டவனை அமைக்கப்பட்டுள்ளது.

எண்	தலைப்பு	தமிழில்	பாக்களின் எண்கள்	மொத்தம்
1	mancivastuvu	நல்ல பொருள்	1-2	2
2	cittasuddi	மனத்தூய்மை	3-4	2
3	sajjanuDu	நல்மக்கள்	5-6	2
4	alpuDu-sajjanuDu	அற்பன் – சான்றோன்	7-9	3
5	piRikivaaDu	அஞ்சுபவன்	10	1

6	guNamu	பண்பு	11	1
7	guNavantuDu–guNahiinuDu	பண்பாலன் – பண்பற்றவன்	12-15	4
8	kutsituDu	கெடுப்பவன்	16-17	2
9	hiinuDu	நீச்சன் (கல்வி)	18-19	2
10	alpuDu	தாழ்த்தப்பட்டவன்	20-23	4
11	khaluDu	மூடன்	24-28	5
12	niluva tagani cooTu	போகா இடம்	29	1
13	taamasamu	சினம்	30	1
14	Koopamu	கோபம்	31	1
15	sthaanabalimi	இடவலிமை	32-34	3
16	Kalimi	செல்வம்	35-50	16
16	Prapamcam	உலகம்	51-100	50
			மொத்தம்	100

- மாணவர்கள் ஆய்வுத் தலைப்பைத் தெரிவு செய்யலாம்.
- கருதுகோள் அமைத்துக் கொள்ளலாம்.
- திருவள்ளுவர் மற்றும் வேமன்ன வாழ்ந்த சமூகச் சூழலைப் புரிந்து கொள்ளலாம்.
- இருவருக்குமான ஒற்றுமை வேற்றுமைகளையும் கண்டறியலாம்.

அகக் கட்டமைப்பு :

அகக் கட்டமைப்பு பொருள் அடிப்படையில் அமைந்திருப்பது.

திருவள்ளுவர் :

- திருக்குறள் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பாக்களை உள்ளடக்கியது.
- அவற்றில் முதல் ஏழு குறட்பாக்கள் கருத்துக்களை நயமாகவும், இதமாகவும் கூறும் நிலையிலும்
- ஒன்பதாவது, பத்தாவது குறள்கள் அக்கருத்துக்களைச் சற்றுக் கடுமையாகவும், வற்புறுத்தும் நிலையிலும் அமைந்துள்ளன (க.த.திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம்,ப.110)
- பத்துக் குறட்பாக்களும் ஐந்து வகையான கருத்தியல்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. சான்றாக, 'பேதைமை'(84) என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் பின்பற்றிய உத்திகள் –
    - ➢ முதல் இரண்டு குறட்பாக்களில் பேதைமைக்கான இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

- ➢ மூன்று, நான்காம் குறட்பாக்களில் பேதைமையின் சிறப்பு வகைகள் சுட்டப்பட்டுள்ளது.
- ➢ ஐந்து, ஆறா குறட்பாக்களில் பயன்கள் கூறப்பட்டுள்ளது.
- ➢ ஏழு, எட்டாம் குறட்பாக்களில் அறிவற்றவன் பெற்ற செல்வத்தின் பயன்களை விளக்குகிறது.
- ➢ ஒன்பதாம் குறட்பா பேதைமைக் குணமுடையாரின் தீமையைச் சுட்டுகிறது.
- ➢ பத்தாம் குறட்பாவில் முடிவு கூறப்பட்டுள்ளது.

- திருவள்ளுவர் பல பாக்களில் உவமைகளைப் பயன்படுத்தி ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.
- பல பாக்களில் மறைமுகமாகவும், சில பாக்களில் நேரடியாகவும் தம் சிந்தனையை மக்களுக்குச் சொல்லிச் சென்றிருக்கிறார்.

வேமன :

- வேமன, நான்கு அடிகளைக் கொண்ட சதகத்தில் பல பாக்களில் முதல் இரண்டு அடியில் செய்திகளைச் சொல்லி, மூன்றாவது அடியில் உவமைகளையும், ஒப்புமைகளையும் கையான்டுள்ளார்.
- சில பாக்களில் செய்திகளைக் கூறி, அதற்கான காரணத்தையும் எடுத்துக்கூறியுள்ளார்.
- சில பாக்களில் முதல் இரண்டு அடியில் அஃறிணைப் பொருள்களைக் கூறி, மூன்றாம் அடியில் அவற்றின் பண்புகளை மானிட வாழ்வுக்கு ஒப்புமைப்படுத்திக் காட்டியுள்ளார்.

சொல் – பொருள் – இலக்கணம் கற்பித்தல்

சொற்கள் கற்பிக்கும்போது அதன் பொருளையும் சேர்த்துக் கற்பிப்பதும், அச்சொற்களுக்கான இலக்கணத்தையும், இலக்கணக் குறிப்புகளை விளக்கிக் கூறுவதினால் மாணவர்கள் எளிதில் புரிந்துக் கொள்வது மட்டுமல்லாமல் நினைவில் வைத்துக்கொள்ளவும் முடியும். அறநூல்களில் உள்ள சொற்களைக் கற்பிக்கும்போது அதில் உள்ள சொற்களை எளிதாகக் கற்பிக்க ஆசிரியர்கள் கீழ்க்கண்ட அட்டவனை வாயிலாகக் கற்பிப்பது எளிமையானதாக இருக்கும்.

சான்றாக,

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (495)

எனும் குறட்பாவினை உள்ள சொற்களைக் கற்பிக்கும்போது குறளமைப்பிலேயே பொருள் கூறாமல் அக்குறளில் உள்ள சொற்களை அசை பிரித்து நெடுக்க வரிசைப்படுத்திப் பொருளையும் சொல்லுக்கான இலக்கணத்தையும் எளிமையாகச் சொல்லி, கீழ்க்காணும் வகையில் புரிய வைக்கலாம்.

சொல்	பொருள்	இலக்கணம்
நெடுமை புனல் உள்	ஆழமான நீர்ப்பகுதி உள்ளே	பண்புப் பெயர் பொதுப் பெயர் வேற்றுமை உருபு

வெல்லும்	வெற்றி பெறும்	உம்மைத்தொகை
முதலை	நீர்வாழ் விலங்கு	பெயர்ச்சொல்
அடும்புனல்	மேடான பகுதி	இடப்பெயர்
இள்	மீது	இடப்பெயர்
நீங்கின்	பிரிந்து	வினைச்சொல்
அது	அதன்	சுட்டுப்பெயர்
ஐ	உடைமைப்	2ஆம் வேற்றுமை
பிற	பொருள்	உருபு
	மற்றவை	பதிலிடு பெயர்

இலக்கணம் கற்பிப்பதில் மற்றொரு முறை :

சொற்களைத் தனியாகப் பிரித்துக்காட்டி, அவற்றுக்கான விளக்கங்களைக் கீழ்க்கண்ட வரைபடம் மூலம் கற்பிக்கலாம்.



சொல்	ஒலிபெயர்ப்பு	பொருள்	இலக்கணம்
నీళ్ళు	niLLu	நீர்	பொதுப் பெயர்
లోన	loona	உள்	வேற்றுமை உருபு
మొసలి	mosali	முதலை	பெயர்ச்சொல்
నిగిడి	nigiDi	மறைந்திருந்து	வினை
ఏనుగు	eenugu	யானையை	பெயர்ச்சொல்
తీయు	tiiyu	இழுக்கும்	வினைச்சொல்

బయట	bayaTa	வெளியில்	இடப்பெயர்
కుక్క	kukka	நாய்	அஃறிணைப் பெயர்ச்சொல்
చేత	ceeta	ஆல்	மூன்றாம் வேற்றுமை உருபு
భంగపడును	bhangapaDunu	சேதமடையும்	வினைச்சொல்
స్థానం	sthaanam	இடம்	இடப்பெயர்
బలిమి	balimi	வலிமை	அடைமொழி
ఏ	ee	தான்	உறுதிப் பொருளுக்கான உருபு
కాని	kaani	தவிர	தொடர்புச்சொல்
తన	tana	தன்	பதிலிடு பெயர்
బలిమి	balimi	வலிமை	அடைமொழி
కాదయా	kaadayaa	அல்லவே	எதிர்மறைச்சொல்

மேற்கூறிய அட்டவணை வாயிலாகச் சொற்களுக்குப் பொருள் கூறுவது மட்டுமல்லாமல், இலக்கணம் தொடர்பான செய்திகளையும் மாணவர்கள் அறிய முடிகின்றது. திருவள்ளுவரின் குறட்பாவோடு வேமன்ன பாடல்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இருவரும் இலக்கண, இலக்கிய, உவமைகளை எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதையும், எந்த வகை இலக்கணக் கூறுகளை அதிகம் பயண்படுத்தியுள்ளார் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது எனலாம். இதுபோலவே மற்றவைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

சொற்களுக்கு நேரடிப் பொருளைக் கூறியபிறகு அச்சொற்களை மீண்டும் நான்கு வகையாகப் பிரித்துப் பொருளைக் கற்பிக்கலாம்.

1. பாவில் உள்ள சொல் மீண்டும் மீண்டும் வந்து பல பொருள்களில் வரும் நிலை
2. பாவில் உள்ள சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளில் வரும் நிலை
3. பாவில் உள்ள சொல் அந்நியப் பொருள்களை உணர்த்தும் நிலை
4. பாவில் உள்ள சொல்லுக்கு நிகரான பல சொற்களை அறிமுகப்படுத்துதல்

1. பாவில் உள்ள சொல் மீண்டும் மீண்டும் வந்து பல பொருள்களில் வரும் நிலை

ஒரு குறளில் உள்ள சொல் அதே குறளில் பல பொருள் தரும் நிலையில் பல முறைப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் குறளில் மட்டுமே பார்க்கமுடிகிறது. ஒரு செய்யுளில் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருமாயின் அது சொற்பொருள் பின்வரு நிலைஅணி என்ற அணி தொடர்பான கூடுதல் செய்தியினையும் மாணவர்களுக்கு இங்குக் கற்பிக்கலாம்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉம் மழை (குறள் : 12)

துப்பு → உண்பவர், உணவு, மழை

மேற்கூறிய குறளில் 'துப்பு' என்ற சொல் விகுதிகளைச் சேர்த்து ஐந்து முறை வந்துள்ளது. ஆனால் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பொருளை உணர்த்துவதாக உள்ளது. இதுபோலவே மற்ற குறள்களிலும் பார்க்கலாம்.

வேமன சதகத்தில் இந்த மாதிரியான சொல் பயன்பாடு இல்லை.

2. பாவில் உள்ள சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளில் வரும் நிலை :

திருக்குறள் மற்றும் வேமன சதகத்திலும் ஒரே பாவில் மீண்டும் மீண்டும் வரும் சொற்கள் அனைத்து இடங்களிலும் ஒரே பொருளை தருகிறது. இதைச் சொற்பொருள் நிலை அணி எனபர்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை (குறள் : 411)

இந்தக் குறளில் 'செல்வம்' என்ற சொல் 'சொத்து' என்கிற ஒரே பொருளில் வந்துள்ளது. இது போன்று பல பாக்கள் குறளில் இடம்பெற்றுள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

koopamunaku ghanata konjamaipoovunu

koopamunaku migula gooDu galugu
koopa maNaceneeni koorika liiDeeru
vis'vadhaabhiraama vinuraveemaa! – வேமன சதகம்

இதில் 'கோபம்' என்ற சொல் 'சினம்' என்ற ஒரே பொருளில் மூன்று முறை பயன்படுத்தப் பட்டுள்ளது.

3. பாவில் உள்ள சொல் அந்நியப் பொருள்களை உணர்த்தும் நிலை :

பாக்களில் வரும் சொற்கள் பாக்களுக்குத் தொடர்பில்லாத அந்நியப் பொருள்களைப் பற்றியும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

நெடும்புனலுள் வெல்லும் முதல் அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (குறள் : 495)

புனல் → ஆறு, குதலை, நீர், குளிர்ச்சி, கருவி

வெற்றி அடைதல் → ஒழித்தல், வெல்லும், ஒத்தல்

நீக்கல் –
- பிரிதல்
- நீக்கம்
- நீட்டல்
- நீளல்
- மாறுபாடு
- மாற்றம்

நீக்கு –
- நீக்கல்
- பிளப்பு
- மீதி
- விலங்கு

வேமன :

Vaana kuriyakunna caccunu ***kshaamambu***
Vaana kuriceneeni varada baaru
Varada karuvu reNdu varusoloo neruguDi

க்ஷாமமு –
- பேதரிகம் (வருமை)
- கருவு (தும்பம்)
- கஷ்டம் (துன்பம்)

4. பாவில் உள்ள ஒரு சொல்லுக்கு நிகரான பல சொற்களைக் கற்பித்தல் :

மாணவர்களுக்கு பல சொற்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்றால் கற்பிக்கப் படும் பாடத்தில் உள்ள சொற்களுக்கு நிகரான சொற்களையும் கற்பிக்க வேண்டும். அந்த வகையில் இரு மொழியில் உள்ள சொற்களுக்கு நிகரான சொற்களை இவ்வாறாகக் கற்பிக்கலாம்.

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார் (குறள்.922)

கள் –
- தென்னை மரத்திலிருந்து எடுக்கப்படும் நீர்
- பனை மரத்திலிருந்து எடுக்கப்படும் நீர்
- மதுபானம்
- கள்ளச் சாராயம்
- உண்டாக்கு (புறப்பொருள் வெண்பாமாலை)

Kulamu galuguvaaDu gootrambugalavaadu
Vidyaceeta virraviiguvaaDu
pasiDi galuguvaani baanisa koDukulu
vis'vadhaabhiraama vinuraveemaa! – வேமன சதகம்

பஸிடி (தங்கம்) –
- கனகம்
- பங்காரம்
- புத்தடி

தனம்

மேலிமி

கருத்தியல் ஒற்றுமை

இரு மொழிக் கவிஞர்களும் வாழ்ந்த சமுதாயத்திற்கேற்ப அறக் கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் அவர்களுக்கிடையே பல நிலைகளில் கருத்தியல் சிந்தனைகளில் ஒற்றுமை காணப்படுவதற்குப் பல பாடல்கள் சான்றாக அமைந்துள்ளன. அவற்றில் சில –

தலைப்பு	திருக்குறள்	வேமன்ன சதகம்
இடமறிதல்	1. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற (50/495) 2. கால்ஆழ் களரில் நரிஅடும் கண்அஞ்சா வேலாள் முகத்த களிறு (50/500)	1. niiLLaloona mosali nigiDi yeenug diiyu bayaTa kukka ceeta bangapaDunu sthaana balimigaani tana balimi kaadayaa 2. niiLLaloona miinu nigiDi duuram bayaTa muuraDaina paaraleedu staana balimigaani tana balimi kaadayaa
வாழ்க்கைத் துணை நலம்	1. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை (6/57) 2. புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை (6/59)	1. aapadainaveLa arasi bandhuvu ju bhayamuveeLa juuDa baNTutanamu peedaveeLa juuDu peNDlaamu guNamu 2. aalimaaTalu vini yannadammula veerepoovuvaaDu verrivaaDu kukkatooka baTTi goodaavariidunaa?

கல்வி	1. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரப்பிய நூலின்றிக் கோட்டி கொளல் (41/401) 2. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லா தவர் (40/395)	1. hiinuDu enni vidyalanu neercina ghanuDugaaDu hiinajanuDe kaani parimaLamulu mooyu kharamu gajamaunee? 2. Vidyaleeni vaaDu vidyaadhikula uNdinanta paNDituDu kaaDu kolani hamsalkaDa kokkera lunnaTlu
நன்றிஇல் செல்வம்	1. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம் பெற்றாள் தமியள்மூத் தற்று (1007) 2. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம்பழுத் தற்று (1008)	1. dhanamu kuuDabeTTi dharmam ceeyaka taanu tinaka lessa daacu gaaka teeneTiiga kuurci teruvari kiyyad

மேற்கூறிய கருத்து ஒற்றுமையில் ஒன்றை மட்டும் விளக்கிக் கூறலாம்.

உலகில் பலருக்கு அதிக செல்வங்கள் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். இவ்வாறாகச் சேர்த்து வைத்த செல்வங்களை ஒரு சிலரே அறவழிச்சென்று பல நல்ல காரியங்களுக்குச் செலவு செய்பவராகத் திகழ்வர். மாறாக, செல்வங்கள் கோடியிருந்தும் பிறருக்கு உதவாமல் தனது தேவைகளுக்குக்கூடப் பயன்படுத்தாமல் வருபவரை 'கஞ்சன்' எனக் கூறுகிறோம். இப்படி யாருக்கும் எவ்விதமான பொருள் உதவியும் செய்யாமல் இருக்கும் கஞ்சனைப் பற்றி இரு கவிஞர்களும் தம் நூல்களில் பதிவு செய்துள்ளார்கள். சான்றாக, திருக்குறளில் வள்ளுவர் கஞ்சனைப் பற்றிப் பத்துக் குறட்பாக்களில் கூறியதை வேமன நான்கு பாடல்களில் கூறியுள்ளார். கஞ்சன் சேர்த்து வைத்த பொருளுக்குப் பல உவமைகளைப் பயன்படுத்தித் திருவள்ளுவர் இரண்டு குறட்பாக்களிலும், வேமன ஒரு பாடலிலும் கூறியுள்ளனர். அவற்றை மட்டும் சான்று காட்டி விளக்குகலாம்.

திருக்குறள் : நன்றிஇல் செல்வம் (101)

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்

பெற்றாள் தமியள்மூத் தற்று (1007)
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று (1008)

வேமன சதகம் : danamu kuuDabeTTi darmambuceeyaka
Taanutinak lessa daacukonaka
teeneTiika kuurci teruvari kiyyadaa

பொருள் :

தேனீ தான் சேர்த்து வைத்த தேனை வழிப்போக்கனுக்குத் தாரைவார்த்தது போல, கஞ்சன் தான் சேர்த்து வைத்த செல்வத்தைத் தனக்கும் பயன்படுத்தாமல், மற்றவருக்கும் கொடுக்காமல் இறந்து போகிறான்.

இதில் கஞ்சனைப் பற்றிய கருத்து இரு கவிஞர்களையும் ஒத்த சிந்தனையுள்ளவராகக் காட்டுகிறது.

இருப்பினும், இரு கவிஞர்களும் உவமைகளைக் கூறுவதில் வேறுபடுகின்றனர்.

உவமைப் பொருள்

திருவள்ளுவர்

1. தனிமையில் வாழும் பெண்ணின் அழகு
2. நச்சுமரப் பழம்

வேமன

1. தேன்கூட்டில் தேன்

மேற்கூறிய உவமைப்பொருள் எழுப்புவதற்குக் காரணம் யாது எனும் வினாவினை மாணவர்களிடம் கேட்டு அவர்களுக்குச் சிந்திக்கும் எண்ணத்தைத் தூண்டச் செய்யலாம். சான்றாக, கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் முதலில் ஓரிரு காரணங்களைக் கூறி, பின் மாணவர்களிடம் பதிலை வரவழைக்கலாம்.

- திருவள்ளுவருக்குத் திருமணமாகி வாசுகி என்ற மனைவி இருந்தாள் என்பதற்குச் சான்றுகள் கிட்டுகின்றன. அவ்வாறு இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும்போது பல உறவுமுறைகள் சூழ்ந்து காணப்பட்டிருப்பர். அச்சூழலிலேதோ ஒரு பெண் திருமணம் செய்யாமல் தனிமையான வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அவ்வாரு வாழ்ந்து கொண்டிருந்த பெண்ணை வள்ளுவர் கண்டுகொண்டு, அவளின் தனிமையான வாழ்க்கையினை 'கஞ்சன்' வாழ்க்கைக்கு ஒப்பிட்டிருக்கலாம்.
- இரண்டாவது குறளில் ***ஊர் நடுவில் பழுத்த நச்சுமரம்*** என்று பயன்படுத்தியுள்ளார் திருவள்ளுவர். இதற்குக் காரணம் ஏற்கனவே சொன்னது போல வள்ளுவர் குடும்பம் என்ற அமைப்பில் உள்ளவர். பல குடும்பங்கள் சேர்ந்தால் ஊராகும். அந்த ஊருக்கு நடுவில் நல்ல நிகழ்வுகள் இருந்தால் அது அந்த ஊர் மக்களுக்கு நல்ல விதத்தில் பயண்படும். கெட்ட நிகழ்வுகள் இருந்தால் யாருக்கும் பயன்படாது. அதனால்தான் திருவள்ளுவர் நச்சு மரத்தை ஊரின் நடுவில் கொண்டு வந்து வைத்துள்ளார்.
- மற்றொரு காரணம் நான்கு திணைகளுள் மருதத்திணைதான் மக்கள் விரும்பி வாழும் இடமாகும். மக்கள் வாழ்கின்ற இடத்தை **ஊர்** என்பார். அறம் என்பது மக்களுக்குச் சொல்லப்படுகின்ற ஒன்று என்பதால் வள்ளுவர் **ஊர்** என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

அதுமட்டுமல்ல, நச்சுமரம் ஊரில் எந்த இடத்தில் இருக்கவேண்டும் என்பதனையும் உனர்ந்து இருப்பதினால் **ஊர் நடுவில்** என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது ஊருக்கு நுழைவாயில் இருந்தாலும், ஊர்க் கோடியில் இருந்தாலும் அந்தப் பொருள் ஊரில் உள்ள அனைவராலும் அறிய முடியாது. ஊருக்கு நடுவில் உள்ளதை ஊர் முழுக்க அறிய முடியும். எல்லாரும் அறிய வேண்டும் என்பதற்காகத்தான் நச்சுமரத்தை ஊர் நடுவில் வைத்திருக்கிறார்.

- வேமன்ன ஒருயோகி. முற்றும் துறந்த முனிவர். இவர் காடுகள், மலைகள் என்று சுற்றித் திரிந்தவர். காட்டுவழியாகப் போகின்றபோது வழிப்போக்கர்களால் தேன் எடுப்பதைப் பார்த்து, தேனீக்களால் உருவான தேனானது அத்தேனீக்களுக்குப் பயன்படாமல் மற்றவர்ககளுக்குப் போகிறதே என்று வேமன நினைத்திருக்கலாம். அந்த நினைப்பை வைத்து இந்த உவமையைக் கையாண்டு இருக்கலாம்.
- வேமன காடு கழனிகளில் போகும்போது பல நிகழ்வுகள் அவர் பார்த்திருக்கக்கூடும்.. காட்டில் பல வண்ணமலர்கள் பூத்து மடிவதைப் பார்த்திருக்கலாம். பௌர்ணமி நிலவு காய்ந்து யாருக்கும் பயன்படாமல் போவதையும் உணர்ந்திருக்கலாம். இவற்றையெல்லாம் உவமைகளுக்குப் பயன்படுத்தாமல் ஏன் தேன்கூட்டில் உள்ள தேனை உவமையாகப் பயன்படுத்தினார் என்ற கேள்வி எழுகிறது.
- காட்டில் காய்கிற நிலவு தேயும் மீண்டும் வளரும், காட்டில் பூத்த மலர்கள் உதிர்ந்தாலும் மீண்டும் காலம் வரும்போது பூக்கும், ஆனால் ஒரு முறை கூட்டில் சேர்க்கப்பட்ட தேன் பறிபோய்விட்டால் அந்தக் கூட்டில் எக்காலத்திற்கும் மீண்டும் தேன் உருவாகாது.
- கஞ்சன் செல்வத்தைச் சிறுகச்சிறுகச் சேர்த்து வைக்கிறான். அப்படிச் சேர்த்துவைத்த செல்வமானது மற்றவர்களால் களவாடப்படும்போது அந்தச் செல்வம் திரும்பக் கிடைக்காமலே போகிறது.

மதிப்பீடு :

- இருவரும் கருத்தில் ஒத்துப் போனாலும் சொல் பயன்பாட்டில் வேறுபட்டு நிற்கின்றனர்.
- உவமைகள் பயன்பாட்டிலும் வேறுபட்டு நிற்கின்றனர். அதற்குக் காரணம் வள்ளுவர் குடும்பச் சூழலில் வாழ்ந்தவர். வேமன துறவியாக இருந்து ஊர்ஊராகச் சுற்றித் திரிந்தவர்.
- அதனால் வேமன்ன பல மொழிகள் அறிந்தவர் என்பதற்கு அவருடைய ஒரு பாட்டு சான்றாக இருக்கிறது –

kuNDa kumbha manna koNDa parvatamanna
uppu lavaNa manna voNTi gaadee?
Bhaasha liTTe veeru paratattva mokkaTee
viswathaabhiraama vinura veemaa!

[பானையைக் கலசம் என்று சொன்னாலும், மலையைப் பர்வதம் என்று சொன்னாலும், உப்பை லவணம் என்று சொன்னாலும் ஒன்று தானே?

மொழிகளும் இவ்வாறே வேறுபடுகின்றன, ஆனால் அவற்றில் சொல்லப்படுகின்ற பரமனின் தத்துவம் ஒன்றுதான்].

- திருவள்ளுவர் சொன்ன உவமைகள் வாயிலாகக் கஞ்சனின் செல்வம் யாருக்கும் பயன்படாது என்று கூறியுள்ளார். எந்த ஒரு பொருளும் தனக்குப் பயன்படாவிட்டாலும் யாரோ ஒருவருக்கோ, அல்லது ஏதோ ஒன்றுக்கோ நிச்சயம் பயன்படும். அந்தவகையில் வேமன கூறிய உவமைப்பொருளான தேன் தேனீக்களுக்குப் பயன்படாவிட்டாலும் அது யாரோ ஒருவருக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. அதுபோலத்தான் கஞ்சனின் செல்வமும் அவனுக்குப் பயன்படாமல் போனாலும் அரசுக்கோ அல்லது, மற்றவர்களுக்கோ அது பயன்படுகிறது.
- இதுபோல, பல கருத்துக்கள் ஒத்துப் போனாலும் பல பாடல்களில் சொல்லாட்சியில், பொருள்விளக்க நிலைகளில் வேறுபட்டுத்தான் இருக்கின்றன.

துணை நின்றவை

❖ சிவசங்கரன் வ., 2014(ஆ.ப.), திருக்குறள் தெளிபொருள், பொதிகை வெளியீடு, சென்னை.

❖ திருமலை. ம., 2011, ஒப்பிலக்கியம், செல்லப்பா பதிப்பகம், மதுரை.

❖ செல்வகணபதி சண்முக., 2014(மு.ப.), ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம், ராஜா பதிப்பகம், திருச்சி.

❖ ...., 2014, ஒப்பிலக்கிய வரம்பும் செயற்பாடும், ராஜா பதிப்பகம்,
  - திருச்சி.

❖ வேங்கட சேஷகவி. அனுமுல., 1983, வேமன சதகமு உறை, பாலசரஸ்வதி புக் டிப்போ, சென்னை.

❖ சாஸ்திரி த்வா.நா., 2001, தெலுகு சாகித்ய சரித்ர, விசாலாந்திர பதிப்பகம், ஹைதராபாத்.

2019 (AUGUST)

பத்தொன்பதாம் பதிப்பு நவம்பர் 2019இல் வெளிவரும். தங்களது ஆக்கங்களை செப்டம்பர் 20ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்கவும். ஆய்வாளர்கள் ஆய்வுநெறியைப் பின்பற்றி ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பவும். தங்களது முகவரியையும் மின்னஞ்சலையும் செல்பேசி எண்ணையும் (புலனம்) குறிப்பிட மறவாதீர். ஆங்கிலத்தில் ஆய்வுச்சுருக்கத்தையும் (ஒரு பத்தி அளவில்) இணைத்து அனுப்பவும். முழுமையான ஆய்வுநெறியை அறிய நம் இணையப் பக்கத்தில் இருக்கும் குறிப்புகளைக் காணவும்.

மதிப்பிடப்பெற்றது

முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)

Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition

முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY[18]

Abstract: Ramanathapuram is called as Thenpandiseemai. Sathavathanam saravanaperumal kavirayar was born in this district and brought fame to the city his grandfather is Attavathanam saravanaperumal kavirayar he is from poet dynastic. He is known for singing poems. His poetic talent and his friendship with the king are portrayed in this research paper.

Date of submission: 2019-06-25
Date of acceptance: 2019-07-20
Date of Publication: 2019-08-03
Corresponding author's
Name: முனைவர் சே.முனியசாமி
Email: muniyasethu@gmail.com

Keywords: Ramanathapuram, Thenpandiseemai, Tamil Literature, Sathavathanam saravanaperumal kavirayar, poetic, MUNIYASAMY, முதுகுளத்தூர் சதாவதானம், சரவணப்பெருமாள் கவிராயர் ,பேரர், சே.முனியசாமி, உரைமுடிவு காணான், சோழன்.

> **உரைமுடிவு காணான் இளமையோன் என்ற**
> **நரைமுது மக்கள் உவப்ப.. நரை முடித்துச்**
> **சொல்லால் முறை செய்தான் சோழன் – குலவிச்சை**
> **கல்லாமல் பாகம் படும்"** (பழமொழி நானூறு:6)

எனும் பாடலில், கல்லாமலேயே தலைமுறை தலைமுறையாக அறிவு ஒருவருக்கு வந்து சேரும் எனும் கருத்தை முன்றுரையரையனார் முன் வைக்கின்றார்.

மேற்சுட்டிய பாடலடியின் கருத்து சதாவதானம் சரவணப் பெருமாள் கவி ராயருக்குப் பொருந்தும். இவரது குடும்பத்தினர் கவிபாடுவதில் புலமை யுடையவர்கள் இவரது தாத்தா அட்டா வதானம் சரவணப்பெருமாள் கவியார், இவரது தந்தையார் அருணாச்சலக் கவிராயர். இத்தகு புலமைமிக்க குடும்பத்தில் பிறந்த சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரின் கவிப்புலமை குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. இனிவரும் பகுதியில் புலவரின் பெயர் சுருக்கமாய் '**சரவணார்**' எனத் தாங்கி நிற்கும்.

புலவர் பரம்பரை

தென்பாண்டிச்சீமை என அழைக்கப்பெறும் இராமநாதபுரத்தி லுள்ள முதுகுளத்தூர் எனும் ஊரில் பிறந்தவரே சரவணார். சேதுநாட்டு மன்னராக திகழ்ந்த இரண்டாம் முத்துராமலிங்க சேதுபதியின் (கி.பி 1851–1873) காலத்தில்

---

[18] உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஜெ.பீ. கலை அறிவியல் கல்லூரி, அகரக்கட்டு, ஆய்க்குடி, தென்காசி - 627852. மின்னஞ்சல்: muniyasethu@gmail.com

வாழ்ந்தவர். **"இவர் சேதுநாட்டிற் பிறந்தவர் அருணாசலக் கவிராயருடைய மகன். இவர் பெயர் அவதானி"**[1] எனவும், இவரது தந்தை **"இராமநாதபுரம் சமத்தானத்து அரசவைப் புலவர்களில் ஒருவராக இருந்தவர்"**[2] எனும் செய்தி மூலம் இவரையும் இவரது தந்தையையும் பற்றி அறிய முடிகிறது.

இவரைப் போல இவரது மகனும் புலமையுடையவர் என்பதை**'இவர் தந்தை இராமநாதபுரம் சமத்தானப் புலவராக இருந்தவர். தந்தையைப் போலவே இவரும் புலமை பெற்று இராமநாதபுரம் சமத்தானப் புலவராக விளங்கினார். மதுரகவி என்று அழைக்கப்பெற்றார்"**[3] என்பதைத் தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

முதுகுளத்தூரில் இவரைப்போலச் சில புலவர் பரம்பரையினர் வசித்து வருகின்றனர் என்பதை உறுதிபடுத்தும் வாயிலாக, **"இன்னுஞ் சில புலவர் பரம்பரையினர் கமுதியினும், முதுகுளத்தூரினும், ஊருணிக் கோட்டையினும், மாடம்பூரினும், பிறவிடங்களினும் உள்ளார்கள்"**[4] என்று ரா.இராகவய்யங்கார் குறிப்பிடு கின்றார்.

சரவணாரின் மைத்துனர் அட்டாவ தானம் வேலாயுதக் கவிராயர் ஆவார். இவ்விருவரும் திருட்டுக்கும்மி பாடியுள்ளனர்.

அவதானங்கள் – விளக்கம்

பழங்காலத்தில் நினைவாற்றல் திறன் என்பது ஒரு கலை. மாந்தராய்ப் பிறந்த அனைவரிடமும் இக்கலை காணப்படுவதில்லை. முந்தைய காலக் கல்வியில் பாடம் நடத்தும் ஆசான் குறிப்பிடும் பாடல்களை மனனம் செய்து ஒப்புவிப்பதில் சிறந்துள்ளனர். காலப்போக்கில் ஏடும் எழுதுகோலும் கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி வந்துவிட்ட பிறகு மனனம் செய்யும் திறன் மலிவான நிலைக்குத் தள்ளப்பட்டது. தொழில்நுட்ப வளர்ச்சியால் நினைவாற்றல் திறன் குறைய ஆரம்பித்தது. நினைவாற்றல் திறன் பற்றி புலவர்களின் நிலையினை அறிய முற்படுகையில், **"அவதானம் என்பது நினைவாற்றலையும் ஊன்றிய கவனத்தையும் குறிக்கும். இதிலிருந்து அது ஒரே சமயத்தில் பல செயல்களைக் கவனித்துச் செய்யக் கூடிய ஞாபகத் திறமைக்குப் பெயராயிற்று. அவ்வாறு எத்துணைச் செயல்கள்களைக் கவனிக்கக் கூடுமோ, அவற்றிற்கேற்றவாறு இது அஷ்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம் எனப் பலவாறு சொல்லப்படும்.**

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவரெனக் கருதப்படும் அஷ்டாவதானம் ஆதி சரவணப்பெருமாள் கவிராயர் இலக்குமணப் பிள்ளை என்பவருக்கு எழுதிய சீட்டுக்கவியிலே அஷ்டாவதான முறையைக் குறிப்பிட்டுள்ளார்.

வாய் வேலுமயிலும் என்று கூறிக்கொண்டேயிருத்தல், நால்வரை அமர்த்தி, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு புதிய கவியின் அடியைக் கூறிப் பாட்டை முற்றும் சொல்லி எழுதச் செய்தல், காலாலும் கையாலும் கவிதையெழுதல், கணக்குரைத்தல், இலக்கம் உரைத்தல், திரை மறைவிலே ஆடும் சூதுக்கும்

சதுரங்கத்துக்கும் இந்தக் காய்களை நகர்த்துக என்று கூறுதல், குதிரையடி கூறல், முதுகில் எறியும் பருக்கைக் கற்களையாவது நெல்லையாவது எண்ணிக் கூறுதல் ஆகியவை அஷ்டாவதானம் எனப்படும். இவற்றில் சில மாறி வழங்கியும் இருக்கக்கூடும். பத்துச் செயல் தசாவதானம், பதினாறு செயல் சோடசாவதானம், நூறு செயல் சதாவதானம், இக்காலத்திலே இலாடசங்கிலி சேர்த்தல், பத்திரிக்கை கூறல் போன்ற தம் திறமைக்கேற்ற செயல்களையும் அமைத்துக் கொண்டுள்ளனர்"[5] என்று களஞ்சியம் அரேபியா ஆக்டினோமைகோசிஸ் குறிப்பிடுகிறது.

பாடங்கேட்டலும் சமகாலப் புலவர்களும்

சரவணார் திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களிடத்துப் பாடங்கேட்டுக் கல்விப் புலமையை வளர்த்துக் கொண்டார்.

துவாத்ரிம் சதாவதானி முத்துராமலிங்க சேதுபதியவர்கள் காலத்தில் சமத்தான வித்துவானாகத் திகழ்ந்தவர். அஷ்டா வதானி கிருஷ்ணையங்கார், முத்துவீரப் பப்பிள்ளை, தேவிபட்டணம் முத்துச் சாமி பிள்ளை, கிருஷ்ண ரெட்டியார் ஆகியோர் இவர் காலத்தில் வாழ்ந்த வித்துவான்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

மன்னரின் உறவுநிலை

பொன்னுச்சாமித் தேவர், முத்து ராமலிங்க சேதுபதி, ஊற்றுமலை ஜமீன், சேற்றூர் ஜமீன், ஆற்றங்கரை ஜமீன் போன்றோர் மீது பாடல் பாடியுள்ளார்.

சரவணார் இரண்டாம் முத்துராமலிங்க சேதுபதியின் அவைக்களப் புலவராக விளங்கியுள்ளார் என்பது நாம் அறிந்ததே. இருப்பினும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பொன்னுச்சாமித் தேவரின் ஆதரவும் இவருக்கு இருந்தது. அதுமட்டுமின்றி சேதுபதியின் உறவினர்களுள் ஒருவராகிய சிவசாமி சேதுபதியின் ஆதரவும் இவருக்கு இருந்துள்ளது. இதனை 'விறலிவிடுதூது' எனும் நூலில் பாட்டுடைத் தலைவனாகச் சிவசாமி சேதுபதி இடம்பெறுதல் மூலம் அறிய முடிகிறது.

மேலும் இவர் பரிசு பெற்றுள்ளார் என்பதைச் **சேதுபதியிடம் பல்லக்கு முதலிய வரிசைகள் பெற்றவர்** எனும் செய்தி கொண்டு அறியலாம்.

சரவணார் முத்துராமலிங்க சேதுபதியின் '**காயகப்பிரியா**' எனும் இசை நூலிற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார் எனும் செய்தியும் காணக் கிடைக்கிறது. இதன்மூலம் இவர் இசையில் புலமையுடையவர் என்பதை நன்கு உணர முடிகிறது.

இயற்றிய பாடல்கள்

கவிபாடுவதில் புலமையுற்ற இவர் ஐம்பத்தாறு தனிப் பாடல்களும், ஒன்பதிற்கும் மேற்பட்ட நூல்களும் எழுதியதோடு, ஒரு நூலைப் பரிசோதித்தும் உள்ளார். இவர் பாடிய தனிப்பாடல்கள் தனிச்செய்யுள் சிந்தா மணியிலும், கா.சு.பிள்ளையின்

தனிப்பாடல் திரட்டிலும் இடம்பெற் றுள்ளன. இவர் பாடிய பாடல்களை, செ.கந்தசாமி பட்டியலிட்டுள்ளார். அவையாவன:

பாடல் பாடிய விவரம்	பாடல்
பொன்னுச்சாமித்தேவர்	4
மாத்திரைச் சுருக்கம்	1
நடுவெழுத்தலங்காரச் செய்யுள்கள்	3
மாத்திரை வருத்தனை	1
முத்துராமலிங்க சேதுபதி	6
முத்திர வருணனை	10
ஊற்றுமலை ஜமீன்தார்	20
எட்டயபுரம் அரசர்	4
ஆற்றங்கரை ஜமீன்	3
சேற்றூர் ஜமீன்	1
சேற்றூர் இராமசாமிக் கவிராயரின் உதவிக்கு	1
ஷ கவிராயர் கட்டிய விநாயகர் கோவில்	1
ஷ கவிராயர் வீட்டில் மாங்கனி உண்டபோது	1

மேலும் **"சேதுபதிக்கு ஈற்றடி கொடுத்துப் பாடிய பாடல்களும், சேதுபதியின் ஈற்றடிக்குச் சரவணார் பாடிய பாடல்களும் 'வினாவிடை' என்ற நூலில் இடம்பெற்றுள்ளன."**[6] எனச் செ.கந்தசாமி குறிப்பிடுகின்றார்.

பாடிய நூல்கள்

சரவணார் இயற்றிய நூல்களைக் கீழ்க்காணும் வரிசைப்படிக் காணலாம்.

1. மதுரைச் சிலேடை வெண்பா
2. குன்றக்குடிச் சிலேடை வெண்பா
3. கந்தவருக்கச் சந்த வெண்பா
4. திருச்சுழிகைப் பூமி நாதேசுரர் மீது ஓரெழுத்தந்தாதி
5. மகரவந்தாதி
6. கழுகுமலை ஓரெழுத்தந்தாதி

7. பனசைத் திரிபந்தாதி
8. மதுரை கயற்கண்ணிமாலை
9. சிவசாமி சேதுபதி பேரில் விறலிவிடுதூது
10. புவனேந்திர அம்மானை
11. சிவசாமி சேதுபதி பேரில் விறலிவிடுதூது
12. பழனி சிலேடை வெண்பா
13. இராமாயண வண்ணம்
14. நாட்டரசன் கோட்டைக் கண்ணுடையம்மை யமக அந்தாதி

வேலாயுதக் கவிராயரும் சரவணாரும்

திருட்டுக்கும்மியைப் பாடியவர் அஷ்டாவதானம் வேலாயுதக் கவிராயர் சரவணாரின் மைத்துனர். இருவரும் இணைந்து கவிபாடிச் சிறப்புப் பெற்றுள்ளனர். அதுமட்டுமின்றித் தனது மைத்துனரான வேலாயுதக் கவிராயருக்காக வெண்பா ஒன்றைப் பாடியுள்ளார். இதனை

"கற்ற புலவோர் கலியிருளை மாற்றிசை
பெற்றபுகழ்க் கோட்டைமன்ன பேசக்கேள் – சிற்றறிவை
யெங்கே படித்தாய் எவருனக்குப் புத்தி சொன்னார்
தூங்காநீ வாழ்ந்ததுபோ தும்"[7]

எனும் அடிகள் மூலம் அறியலாம். மேலும் இப்பாடல் பாடுவதற்கான காரணத்தை அறிய முற்படுகையில், **"இவரும் வேலாயுதக் கவிராயரும் இராமநாதபுரத்தில் பருவதவர்த்தினி நாச்சியாரவர்களாகிய இராணி நாச்சியாரவர்கள் அரசு புரியுங்காலத்தில் மானேசர் வேலை பார்த்து வந்த கோட்டைச்சாமித் தேவரவர்கள் நவராத்திரியில் பிற வித்துவான்களைப் போலச் சமத்தி கொடுத்துப் பூரணஞ் செய்யச் சொல்லச் சமஸ்தான வித்வான்களாகிய நாங்கள் பரீஷகர்களின் வரிசையினிற்ற லொழிந்து இங்ஙனம் பாடோமென்று சொல்ல மேற்குறித்த தேவரவர்கள் பாடவே வேண்டுமென்று வற்புறுத்திய பொழுது"**[8] எனும் விளக்கத்தின் வாயிலாக காணமுடிகிறது.

வேலாயுதக் கவிராயரும், சரவணாரும் இடைக்காட்டூர்ப் பாதிரியாரால் சிவகங்கையில் இருந்த ஓர் உயர் நிலைப்பள்ளியில் தமிழ்ப்பண்டி தராகத் திகழ்ந்துள்ளனர்.

கட்டளைக் கலித்துறையால் அமைந்த பாடல் ஒன்றைப் பாடி அதற்கு விடை சொல்லும் முகமாகக் கீழ்க்காணும் பாடல் அமைகிறது.

"வேலையில் வேல்விட்ட வேள்சோம சுந்தர வேந்தன்வெற்பில்
காலையிற் செவ்வந்தி மாலைகண் டேன்றென்னங் காயின்கரும்
பாலையின் சுண்டலில் வேலவன் றாரமு மாலைப்பெண்ணின்
மூலமுங் கண்டனன் மக்கள் படுக்கையென் முன்வைக்கவே"[9]

எனும் அடிகள் மூலம் உணரலாம்.

சரவணார் பல நூல்கள் எழுதியிருப்பினும் அவை அனைத்தும் கிடைக்கப் பெறா. இருப்பினும் பல தேடலுக்குபின் **சேதுபதி விறலிவிடு தூது'** எனும் நூலிலும்,

கா.சு.பிள்ளையால் வெளியிடப்பட்ட **தனிப்பாடல் திரட்டு**' எனும் நூலிலும், செ.கந்தசாமி என்பவரால் இயற்றிய **சேது மன்னர்களின் தமிழ்ப்பணி**' எனும் நூலிலும் தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. மேற்சுட்டிய நூல்கள் வாயிலாகக் கிடைக்கும் பாடல்கள் மூலம் சரவணாரின் புலமைத் திறத்தை அறிய முடிகிறது.

(அ) சேதுபதி விறலிவிடு தூது

காரைக்குடி இலக்கியப் பதிப்பகம் 1947 ஆம் ஆண்டு சேதுபதி விறலிவிடு தூது எனும் நூலினை ராய.சொக்கலிங்கம் பதிப்பித்துள்ளார்.

சிற்றிலக்கியங்கள் 96 வகைகளில் தூதும் ஒன்று இந்நூல் 'கலிவெண்பா' என்னும் யாப்பினால் கட்டப்பட்டுள்ளது. நூல் முழுவதும் வெண்தளை விரவி வெண்பா இலக்கணத்துடன் ஒரே சங்கிலித் தொடராக அமைக்கப்பட்டு 1245 கண்ணிகளால் அமைக்கப்பட்டுள்ளது. கண்ணி என்பது இரண்டிரண்டு அடிகள் எதுகையால் தொடுக்கப்படுவதாகும்.

விறலி

விறலி என்பவள் தூது செல்லும் இளங்குமரி. அவளைத் தூது விடுவதாக விறலிவிடு தூது அமைந்துள்ளது. விறலியைத் தூதுவிடும் எந்த நூலும் விறலிவிடு தூது என்னும் பெயர் பெறலாம்.

விறலிவிடு தூது

தமிழில் பல்வேறு வகைகளான விறலிவிடு தூது நூல்கள் காணலாகின்றன. அவை:

வ.எண்	விறலிவிடு தூது	ஆசிரியர்
1	கூளப்ப நாயக்கன் காதல்	சுப்பிரத் தீபக்கவிராயர்
2	மூவரையன்	மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர்
3	தெய்வச்சிலையார்	குமாரசாமியவதானி
4	சிதம்பரேசர்	தில்லை விடங்கன் மாரிமுத்து
5	சின்னனைஞ்சித்துரை	தென்காசி கவிராச பண்டாரம்
6	செண்டலங்காரன்	பரமானந்த நாவலர்
7	நண்ணவூர் சங்கமேசுவரி	பாரதி முத்திஅயர்
8	நாதை	தெரியவில்லை
9	பழனியாண்டவர்	வே.முத்தனாசாரியார்
10	வையாபுரிப் பிள்ளை	சிவப்பிரகாசப்புலவர்

விறலிவிடு தூதியின் முக்கியப் பகுதியாக **"என் செய்தியாகத் தொடர்ந்த தெல்லாம் உனக்குரைத்தேன் பொன் செய்த எம்மூர்க்குப் போயினி நீ – பின் செய்த சிறிடையாள் ஆகிய என தேவியாரைக் கண்டு நற்றிறம் சேர் வீணை நயம்பாடி– மற்றவளுக்கு என் குறையை மெள்ள இயம்பி எதிர் சொல்லு மந்த கேட்டுடல் போக்கியே நன்குறும்ள ஆசைமனியாட்டி தனக்கு ஐயங்கள் இன்னுமொரு வேசை மனைக்கே குவரோ விட்டெனவால் – ஓசனையுட் கொள்ளாமல் என சபதம் கூறி முன்னைக் குற்றம் நினைந்து எள்ளாமல் கற்பின் இயல்போதி – உள்ளாரப் பண்பாடி உட்காம பாணம் படச் செய்து நண்பாடி என்பவரை நன்கேற்றுக் கண்பார்க்க"**[10] என சுப்பிர தீபக் கவிராயர் கூறுகின்றார்.

சேதுபதி விறலிவிடு தூது, கூளப்ப நாயக்கன் மீது சுப்பிரதீபக் கவிராயர் பாடிய விறலிவிடு தூதைப் பெரிதும் பின்பற்றியே செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி காலத்தால் முறபட்டதாகவும் அமைகிறது. இதனை உறுதி செய்யும் வாயிலாக,

**"ஞானி ஐயன் சொன்னவுத்தி
நாடிநட வாமல், அவ
தானியையன் போன துவும்
தான் அறிவீர்"**[11]

எனும் செய்தியைச் சுப்பிரதீபக் கவிராயர் கூறுகின்றார்.

சேதுபதி விறலிவிடு தூது – சுருக்கம்

சேதுபதி விறலிவிடு தூதின் நிகழ்ச்சிகள் தென்பாண்டி நாட்டில் நடந்தவை. திருவாடானையில் (இராமநாதபுரம்) ஆதிரத்னம் ஐயர் என்பவர்க்கு மகனாகப் பிறந்தவர் சுந்தரம் ஐயன். இவர் நல்ல கல்வியும் புலமையுமிக்கோர். சோடச அவதானி. அதாவது பதினாறு செயல்களை ஒரே சமயத்தில் நினைவோடு செய்ய வல்லோன். தம் வாழ்வில் **'துணைமாலை'** என்னும் மங்கையை மணம்முடித்து இல்வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தார். இவரது மனைவியான துணைமாலையைச் சிறப்பிக்கும் விதமாய்,

**நீடு திருமால் இருக்கும் புல்லாணி மங்களையன்
பெற்றெடுத்த சேல் இருக்கும் கண்ணாளை, தேன்
மொழியை, கோலத் 'துணை மாலை' என்னும் ஒரு
தோகை மயிலை, மணமாலை இட்டு வாழ்ந்தான்"**[12]

என ராய.சொக்கலிங்கம் குறிப்பிடுகின்றார்.

ஒருநாள் உத்தரகோசமங்கை ஊரிலே திருநாள் பார்ப்பதற்காகச் சுந்தரம் ஐயன் சென்றுள்ளார். அவ்வூரில் ஒரு வேசி மங்கையைத் தழுவி விட்டார். அவரோடு உடன்சென்ற உள்ளூர்ப் பையனொருவன், சோடவதானியின் மனைவி துணைமாலையிடம் இச்செய்தியைச் சொல்லி விட்டார். செய்தியறிந்த மனைவிக்கும் இவருக்கும் சண்டை மூண்டது. "சீ... நீ உன் தாசியிடம் செல்..." என்று துணைமாலை கூறிவிட்டாள். இதைத் தாங்காத சுந்தரம் ஐயன்

குடும்பத்தை வெறுத்து பொன் முதலியவற்றை எடுத்துக் கொண்டு வெளியேறினார். பல கோவில்களுக்குச் சென்று இறுதியாக திருமருதூர் என்னும் ஊரை அடைந்தார். அங்கு மோகனமுத்து என்னும் ஓர் தாசியின் வலையில் சிக்கி, எல்லாவற்றையும் இழந்து அவளால் புறந்தள்ளப்பட்டார்.

கையில் எடுத்துச் சென்ற அனைத்துப் பொருட்களையும் இழந்து, வீடு திரும்ப மனமில்லாமல் நின்று கொண்டிருந்தார். அதன்பின் சேதுபதியிடம் சென்றார். சிவசாமி என்னும் பெயர்பூண்ட சேதுபதிமீது புகழ்பாடி எண்ணற்ற பரிசுப்பொருட்களைப் பெற்று வீடு திரும்பினார். தன் கதை முழுவதும் சொல்லி முதலில் போய்த் தன் மனைவி துணைமாலையைத் தேற்றுமபடித் தூதாக விறலியை விடுகின்றார். இவ்வாறாகக் கதை நிறைவு பெறுகின்றது.

தன்னை அறிமுகப்படுத்தல்

இந்நூலில் சரவணார் தம்மைப் பற்றியும் தம் ஊரைப் பற்றியும் அறிமுகம் செய்ததைக் காணமுடிகிறது. இதனை,

... ஆதிமுது குளத்தூர்
மேவுவடி வேலன்அருள் மேவிவளர் நாவலவ
தீர அவதானம் செய்சரவ ணப்பெருமாள்
பேரன்என வந்த பிரபலவான் – சாரம்
தரும்துவாத் ரிம்சதாவ தானிபுல வோர்யா
வருந்துதிக்கும் பூங்கணைவில் மாரன் – திருந்தும் எழில்
நாடுபுகழ் சரவணப் பெருமாள்"[13]
எனத் தன்னை அறிமுகம் செய்ததாக ராய.சொக்கலிங்கம் குறிப்பிடுகின்றார்.

தமிழ்ப்பற்றும் அறப்பற்றும்

சரவணார் தமிழ்ப்பற்றும் அறப்பற்றும் பெரிதும் விருப்பமுடையவராகத் திகழ்ந்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

இறைப்பற்று

சரவணார் கடவுளர் பற்றிப் பல இடங்களில் பேசுவதனைக் காண முடிகிறது.

"ஆகம் பசந்த அழகிய நாயகியோர்
பாகம் சுமந்த பரஞ்சுடரை – மோகமுள்ள
தொண்டர் உள்ளத் தேவி விளங்கும் தூண்டா மணிவிளக்கை
அண்டருக்கும் தேடரிய ஆரமுதை – முண்டகத்தாள்
நித்தம் துதிதுமுத்தி நீள்நெறிசேர் மூவர் அன்புச்
சித்தம் தழைத்த சிவக்கொழுந்தை...
விவத்தின் பால்முளைத்து வேதமுத லாக்கிளைத்த
செல்வத்தைக் கண்டு தெரிசித்து"[14]
எனவும்,

"அன்னை மருதூர் அழகிய நாயகியைச்

சந்நிதிமுன் நின்று தரிசித்தேன்" [15]
என அம்பிகையைக் குறிப்பிடுகின்றார்.

" ... வானுலவும்
கம்பத்தின் முன்நின்று கண்டேன்கோ தண்டமெனச்
செம்பொற் கிரிவளைத்த சேவகனை –நம்புமன்பர்

உள்ளத் திருக்கும் உரவோன் உருவிலான்
கள்ளத்தை மாற்றும்நெற்றிக் கண்ணவனை –வள்ளமுலைப்
பாலுண்ட பிள்ளை பதிகத்துக் காப்பிறவி
மேலுண்டோ இல்லைஎன்ற வேதியனை –சேலுண்ட

கண்மணியைத் தென்னவர்கோன் கண்மணியை நன்மணியைப்
பெண்மணியை மாலையிட்ட பெம்மானை"[16] என சிவபிரானைப் பற்றி பாடிய விதம் இறைப்பற்று மிக்கவர் என்பதை உணர்த்துகின்றது.

(ஆ) தனிப்பாடல் திரட்டு

1939 ஆம் ஆண்டு'**பல வித்து வான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு**' (இரண்டாம் பாகம்) எனும் நூலினை திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலிற்கு உரை எழுதியவர் கா.சு.பிள்ளை. ஐம்பதெட்டுப் புலவர்களின் தனிப் பாடல்கள் தொகுத்து அப்பாட லுக்கான உரையும் கொடுக்கப் பட்டுள்ளது. இத்தொகுதியில் ஏழா வதாக சரவணாரின் தனிப்பாடல்கள் (30) இடம் பெற்றுள்ளன. இதில் காணலாகும் பாடல்கள் அனைத்தும் வினா எழுப்பி அவ்வினாவிற்கு பதில் கூறும் முகமாக அமைந்துள்ளன.

சேதுநாட்டை ஆண்ட மன்னர்களில் ஒருவரான முத்துராமலிங்க சேதுபதி, சரவணாரின் புலமையை சோதிக்கும் விதமாக வினாக்களை எழுப்பியுள்ளார். அவர் எழுப்பிய வினாக்களுக்கு சரவணார் கூர்ந்த மதி, செறிவான நுட்பம் அறிவியல் சிந்தனை போன்றவைகளோடு நேர்த்தியாக பதில் அளித்துள்ளார். அட்டாவதானம் எனும் பட்டத்திற்கு பொருத்தமானவர் என்பதை தாமளித்த பதில் வாயிலாக சேதுபதி மன்னரிடம் நிருபித்து உள்ளார். மன்னருக்கும் புலவருக்கும் இடையிலான கவித்திறனை பாடல் வாயிலாகக் கீழே காணலாம்.

ஐந்தறிவின் விந்தை

பூமியில் காணலாகின்ற புல், மரங்கள் ஆகியன பச்சை நிறத்தைத் தவிர வேறு நிறத்தைப் பெறாமைக்கு காரணம் யாதென வினவும் முத்துராமலிங்க சேதுபதிக்கு , தாவரங்கள் யாவும் ஓரறிவுடைய உடம்பைப் பெற்றிருப்பதால் அதற்கு ஒரே நிறம்தான் உண்டு. இயங்கும் உயிர்கள் ஐந்தறிவு உடமையால் அவற்றின் உடல்கள் பல நிறத்தைப் பெறுகின்றது என விடையளிக்கிறார். இதனை,

"பூவயனாற் பூவிலுண்டாம் புன்மரங்கள் வேறுநிற
மேவாதொன் றாயதென்ன விள்ளுவீர் – தாவசர

மெய்யறிவொன் றானமையால் வேறுநிற மின்றுசர
மையறிவாற் பன்னிற மாதம்"[16]
எனும் அடிகள் வாயிலாக அறியலாம். இப்பாடல் மூலம்

"புல்லும் மரனும் ஓர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[17]
எனும் நூற்பாவையும்,

"மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[18] எனும் தொல்காப்பியர் இயற்றிய நூற்பாவையும் சரவணார் படித்துணர்ந்து பதில் அளித்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

ஆன்மீக அறிவு

நஞ்சுண்ட கழுத்தை உடைய ஈசன் தன் சடைமுடியில் பிறைநிலாவை மறைத்து வைத்திருப்பது ஏன் என வினவும் சேதுபதிக்கு, விநாயகப் பெருமான் தனது யானைமுகத்தில் உடைந்த தந்தம் தான் அந்தப் பிறைநிலவெனக் கருதி சிவனிடம் கேட்பாரோ எனக் கருதி அதை சிவன் ஒளித்து வைத்திருப்பதாகப் பதில் கூறுகிறார் சரவணார். இதனை,

"நஞ்சுடைய கண்டத்து நாதன் முடிமீது
குஞ்சுமதி யணிந்து கொள்வானே -னஞ்சாமன்
மூத்தபிள்ளை யன்றுமுறித்த கொம்பைக் கேட்குமென்று
சேர்த்துவைத்துக் கொண்ட திறம்"[19]
எனும் அடிகள் மூலம் அறியலாம். சமயம் தொடர்பான வினாக்களுக்கு நகைச்சுவையாகவும், யாவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இவரது பதில் அமைகின்றது. இதன்மூலம் சரவணாரின் ஆன்மீக அறிவிற்குத் தக்க சான்றாக இப்பாடல் விளங்கும்.

மேற்சுட்டிய பாடல்கள் போல இன்னும் 28 பாடல்களில் இது போன்ற சேதுபதி மன்னரின் வினாவிற்குத் தம் புலமைத்திறனால் பதில் அளிப்பவராக சரவணார் திகழ்வதைக் கீழே காணலாம்.

முத்துராமலிங்க சேதுபதி மன்னரின் வினா	சரவணப்பெருமாள் கவிராயரின் பதில்	பாடல் எண்
உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் இன்ப துன்பங்களை அனுபவித்தே ஆக வேண்டுமென பிரம்மன் படைத்துள்ளானே அது	உலகத்தில் பிறந்த ஒரு மாட்டு மந்தையில் உள்ள பல பசுக்களுள் தனது தாய்ப்பசுவைத் தேடிச் சேர்வது போல நாம் செய்கின்ற நல்வினை, தீவினையின் பயன்கள் நம்மை அடையும்.	3

எவ்வாறு?		
உலகத்தைத் தாங்குவதாகக் கருதப்படும் ஆதிசேடனோடு வாயு (காற்று) சண்டையிட்டால் உலகை யாரால் தாங்க முடியும்?	இவ்வுலகைத் தாங்குகின்ற மன்னராம் (சேதுபதி) உம்மைப் போல் உன் குலத்தினரால் தாங்க இயலுமோ?	**4**
சந்திரனைக் கண்டு கூம்பாத தாமரை மலர் இவ்வுலகில் உண்டா?	பெண்களின் நிலவு போன்ற முகத்தைக் கண்டு விரிகின்ற தாமரை மலர் போன்ற கண்கள் (ஆண்களின் கண்கள்) உலகில் உண்டு	**5**
தூங்குகின்றவர்களை மூட்டைப்பூச்சி கடித்தால், சுகந்தரும் பஞ்சணையை அடித்துத் துவைக்கிறோம் ஏன்?	வஞ்சகர்களோடு சேர்ந்து உலவுபவரும் வஞ்சகனோடு சேர்ந்து தண்டனை அனுபவிப்பது போல் தலையணை மூட்டைப் பூச்சியோடு சேர்ந்தமையால் அடித்து துவைக்கப் பெறும் தீவினைக்கு உள்ளாகிறது?	**6**
குமாரப் பெருமானை (முருகன்) தரிசித்த மனமும் கண்ணும் அவ்விடத்தை விட்டு நீங்குவதில்லையே ஏன்?	நான்கு வேதங்களும் நாதத்தை விட்டு விலகுவதில்லை. பூவை விட்டு வண்டு விலகுவதில்லை. அதுபோன்று தான் முருகனைத் தரிசித்த கண்ணும் மனமும் விலகுவதில்லை.	**7**
உமையம்மையின் கணவன் சிவபெருமானை மூங்கிலில் உதித்தவன் என்று கூறுகிறார்களே ஏன்?	தாய் தந்தை இல்லாதவர்களை அனாதை என்று கூறுவார்கள். சிவனுக்கு அந்த பழிச்சொல் வரக்கூடாது என்பதற்காக அவ்வாறு கூறுகிறார்கள்.	**8**
நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமான் ஒருநாள் பிள்ளைக் கறியை உண்டானாமே? ஏன்?	தேவர்களுக்காக பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு, பைத்தியம் பிடித்து, பிரம்ம தேவனுடைய கண்ணிற்கும் அகப்படாமல் மறைந்து வாழ்ந்ததால் சோறு அறியாது பிச்சை பெற்று வாழ்ந்ததால், பசியில் பிள்ளைக்கறி உண்டிருப்பார் .	**9**

ஞானத்தை வழங்கும் ஈசன் பெண் மோகம் கொண்டு மேனி தளர்ந்து போகக் காரணமென்ன?	அவன் அசையாமல் நின்றால் ஓரணுவும் அசையாது. எல்லா உயிர்களுக்கும் சிற்றின்பம் தருபவனும் அவனே! பேரின்பம் தருபவனும் அவனே.	10
சிவன் காளை வாகனத்தைக் கொண்டிருக்கக் காரணம் என்ன?	தனது கண்மலரை சிவன் அர்ச்சனையாக ஏற்றுக் கொண்டதால் அவரது திருவடிகளை நான் காளையாகத் தாங்குவேன் என திருமால் வேண்டிக்கொண்டதே.	11
சந்திரன் தேய்தல், வளர்தல், களங்கமுடையமை முதலிய குற்றங்கள் உடையனவாகத் திகழ்ந்தும் பாம்பினால் விழுங்கப் பெருகிறதே ஏன்?	யோசிக்காமல் தவறு செய்தவர்கள் யாரக இருந்தாலும் அதனால் வரும் துன்பத்தை அடைந்தே தீர வேண்டும்.	12
தெய்வத்திற்குத் தேங்காய், பழம், வெற்றிலை படைக்கிறோம். இறைவன் அதை உண்டார் என்பதை எப்படி அறிவோம்?	தெய்வத்தை உண்மையாக உணர்ந்தவர்கள், அதன் திருமுகக் குறிப்பை வைத்தே உண்டதை அறிந்து கொள்வர்.	13
தன்னை வணங்கியோருக்கு மோட்சத்தைத் தரும் ஈசன் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தாழ்ந்தது ஏன்?	தாருகாவனத்து முனிவர்களின் கற்பை அழிக்கும் பொருட்டு செய்த குற்றத்தை ஈசன் செய்ததால் தான். பாவம் யார் செய்தாலும் பழியை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.	14
சந்திரனும் சூரியனும் எதிரெதிரே நிற்கும் போது இருள் எந்நிலை அடையும்?	திங்களை பாம்பு தீண்டும் போது மட்டுமே இருள் அதிகப்படும் என்று தெரியாதவர் யார் உளர்?	15
எல்லா உயிர்க்கும் வரங்கள் தரும் திருமால் குரங்குகளின் துணையைப் பெற்று அணை கட்டியதேன்?	வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்	16
ஈசன் தனது நெற்றிக்கண்ணால் மன்மதனை அழித்தது ஏன்?	நெருப்பில் வீழ்ந்த விட்டில் பூச்சி பிழைக்குமோ? நெற்றிக்கண்ணம்	17

	நெருப்பில் வீழ்ந்தவர் பிழைப்பாரோ?	
பெண்களின் இதழில் தங்கும் நீரை எச்சில் என்று யாரும் வெறுப்பதில்லையே ஏன்?	பெண்களின் உதட்டு நீரை, தேன், பால் என்று பலர் புகழ்ந்துள்ளதாலும், பெண் மயக்கத்தோடு அவர்களை நோக்குவதாலும் அவ்வாறு கருதுகின்றனர்.	18
பவள இதழ், அம்பு போன்ற விழி, அரும்பு போன்ற பல், மலை போன்ற தனமுடைய பெண் உலகில் யார்?	குமரப்பெருமானின் மனம் கவர்ந்த வள்ளி.	19
முருகப் பெருமானுக்கு இரண்டு மனைவியர். ஆனால் அவரின் அண்ணன் விநாயகர் ஏன் இன்னும் திருமணம் செய்யவில்லை?	கொம்பு என்றால் பெண் என்று பொருள். யானைமுகக் கடவுளுக்கு இரண்டு கொம்புகள் (மனைவியர்) உள்ளனர். ஒன்று திருமுகக் கொம்பு, மற்றொன்று திருக்கரக் கொம்பு	20
திரௌபதியை காதலித்து மணந்தவர்கள் ஆறு பேரோ?	ஆம் குந்தி தேவி சூரியனை அழைத்ததால் பெற்ற கர்ணனையும் சேர்த்து ஆறு பேர்தான்	21
தேனை விட இனிமையுள்ளது, புலியை விட வலிமையானது எது?	பெண்களின் அதரபானம் தேனை விட இனிமையானது. வறுமை புலியை விட வலிமையானது.	22
கடலின் எல்லையை கண்டாலும், நட்சத்திரங்களின் அளவைக் கண்டாலும், வானத்தின் வரையை கண்டாலும் எதை காணமுடியாது?	விலைமாதர் மனம் தான் அளவிட அரியது.	23
விடத்தை விடக் கொடுமையானது எது?	இரக்கமில்லாதவர் படைக்கும் சோறு.	24
எமனை விடக் கொடூரமானது யார்?	கொடுமை செய்யும் பெண்டிர்	24
கடலின் உப்புநீரை நுகர்ந்த மேகம் மழையாகப்	புகழ்மிக்க மேலோர்களைச் சேர்ந்த கீழ்மக்களும் நல்லோராகக்	25

பெய்யும்போது நன்னீரைத் தருவது எவ்வாறு?	கருதப்படுவர்.	
தலைவனுடன் ஊடும்போது தலைவி புன்சிரிப்பு கொள்வதேன்?	கணவன் போய்ச் சேர்கின்ற தனக்கெதிரியாகிய பெண்ணை அவன் பிரிந்து வந்து விடுவான் என்பதால் வந்த புன்சிரிப்பு	**26**
தலைவனுடன் ஊடும்போது தலைவி நெட்டுயிர்ப்பு கொள்வதேன்?	முன்னாளில் அடைந்த இன்பம் போதாமையால்.	**26**
தெய்வானையைத் திருமணம் செய்த பிறகு வேடவர் குல வள்ளியை மணம் புரிந்தது ஏன்?	பூமியில் உள்ள மனிதர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு.	**27**
திருப்பாற்கடல் திருமாலுக்கு இரத்தினம், கௌத்துவமணி, இலக்குமி தேவி ஆகியவற்றை அளித்தது. ஆனால் சிவனுக்கு மட்டும் விஷத்தைத் தந்தது ஏன்?	சிவன், யானைத்தோல், இளஞ்சந்திரன், பாம்பு, ஆபரணம், தோடு அணிந்தவன் தானே என்று அர்ப்பமாய் எண்ணியதால் ஆகும்.	**28**
ஒரு பெண் தன் பெற்ற மகனைக் கோபித்து நீ போய்த் தூங்கு என்று துரத்திக் கூறுவாளோ? அப்படிக் கூறுவது ஆச்சரியமல்லவா?	ஒரு மாதமாக வராத தன் கணவன் வந்து சோர்ந்திருக்கும் வேளையில் அந்தப் புதல்வன் பால் வேண்டுமென்று அழுதிருப்பான் எனவே அப்படிச் செய்திருப்பாள்	**30**

பரம்பரைப் புலவரான சரவணார் பற்றிய செய்தியோ, பிற குறிப்போ மிகுதியும் கிடைக்கப் பெறா. ஆங்காங்கே ஒரு சில நூல்கள் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற பாடல்களை வைத்து இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

அவரது சந்ததியினரையாவது கண்டுகொள்ள வேண்டுமென்ற முயற்சியும் தோல்வியில் முடிந்தது. பிறந்த மண்ணில் வசிக்கும் அகவை நிறைந்தோர் பலரைக் கண்ட போதிலும் எவ்வகைத் தகவலும் கிடைக்காமையும் சற்று வருத்தம். முத்துராமலிங்க சேதுபதி மன்னருக்கும் இவருக்குமுள்ள உறவுநிலையை வினா/ விடை வாயிலாக வெளிப்படுத்தும் இருவரின் புலமைத்திறன் யாவரையும் வியக்க வைக்கின்றது.

சான்றெண் விளக்கம்

1.தமிழ்ப்புலவர் அகரவரிசை, இரண்டாம் பகுதி, 449
2.தமிழ்ப்புலவர் அகரவரிசை, முதற்பகுதி, ப.47
3.தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் (தொகுதி –நான்கு), ப.131
4.தமிழகக் குறுநில வேந்தர்கள், ப127
5.களஞ்சியம் அரேபியா ஆக்டினோமைகோசிஸ், இணையம்.
6.சேது மன்னர்களின் தமிழ்ப்பணி,
7.பிற்காலப் புலவர்கள், ப.401
8.பிற்காலப் புலவர்கள், ப.401
9.பிற்காலப் புலவர்கள், ப.401
10. விறலிவிடு தூது, ப.95
11. சேதுபதி விறலிவிடு தூது முன்னுரை
12. சேதுபதி விறலிவிடு தூது, முன்னுரை vi
13. சேதுபதி விறலிவிடு தூது, முன்னுரை ப.vii
14. சேதுபதி விறலிவிடு தூது, முன்னுரை ப.viii
15. சேதுபதி விறலிவிடு தூது, முன்னுரை ப.viii
16. சேதுபதி விறலிவிடு தூது, முன்னுரை ப.viii
17. பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு' (இரண்டாம் பாகம்) ப.90
18. தொல்காப்பியம், 1527
19. தொல்காப்பியம், 1531
20. பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு' (இரண்டாம் பாகம்) ப.91

துணைநூற்பட்டியல்

- இராமசாமிப் புலவர் சு.அ, 1956, தமிழ்ப் புலவர் வரிசை (ஐந்தாம் பகுதி), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- கந்தசாமி செ, 2012, சேதுபதி மன்னர்களின் தமிழ்ப்பணி, நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை.
- கந்தையா ந.சி, 2009, தமிழ்ப் புலவர் அகராதி, அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
- கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2006, தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை.
- பிள்ளை கா.சு. (உ.ஆ), பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு (பகுதி –2), கழக வெளியீடு, சென்னை.
- ……., தமிழ்ப் புலவர் சரித்திரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- புலியூர்க்கேசிகன், (உ.ஆ), 2012, பழமொழி நானூறு, சாரதா பதிப்பகம், சென்னை.
- வைத்தியநாதன். எச், (ப.ஆ), 2000, பிற்காலப் புலவர்கள், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், பெசண்ட் நகர், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

சிந்துவெளி – பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்

(Pandiyas myth based on the Indus civilization – Megalithic evidences)

முனைவர் க. பாலாஜி / Dr.G.Balaji[19]

Abstract: *The myths of the Pandya's are prevalent in Indian literature. The Pandya's myths are explicitly represented in the Chinnamanur copper plate, the Shatapathapramana, Mahabharata, and the Tamil Talapuranas. The references to the tsunami reported in the Tamil literature can be considered as oral myths. The Pandiya's are the symbolic fish symbols found in the Indus Valley script and the Tamil Nadu megalithic Pottery. The above two archaeological places are directly related to the same linear codes. These codes are still available in excavations in Sri Lanka and Tamil Nadu. In his excavations, Harappa archaeologist Vasant Shinde has clearly established that the genomes of the irulas and thodas ethnic groups living in South India match the bones found in Harappa. The Pandya's have migrated north due to a tsunami that occurred around the same time. The event has become a mythical stories in Indian literature and mythology.*

Date of submission: 2019-06-25
Date of acceptance: 2019-07-23
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: முனைவர் க.பாலாஜி
Email: balajiand@gmail.com

Keywords: irulas and thodas, ethnic groups, South India, bones found, Harappa, G.Balaji, இந்திய மரபில், பழமரபுக் கதைகள், சமற்கிருத வேதபுராணக் கதைத் தொன்மங்கள், பிரளயம்-பெருஞ்சுனாமி, தோணி(மீன்), தொன்மக் கூறுகளோடு, பாண்டிய மன்னர், வரலாற்றுத் தரவுகள், சிந்துவெளி, பெருங்கற்காலத் தரவு, இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வகுடிகள், பாண்டியர்கள், க.பாலாஜி.

ஆய்வுமுகம்

இந்திய மரபில் தங்களின் இருப்பை முதன்மைப்படுத்திக் கொள்ள முனையும் பெரும்பாலான இனங்கள் தங்களுக்கான வரலாற்றாவணங்களாகத் தொன்மக் கதையாடல்களை முன்னிறுத்துகின்றன. குறிப்பிட்ட தேசிய இனங்கள் அல்லது சிறிய அளவிலான இனக்குழுக்களின் வரலாற்றைக் கட்டமைக்கத் துணைபுரியும் சான்றுகளில் இத்தொன்மங்கள் மட்டும் தற்காலத்திலும்

[19] தமிழ் உதவிப் பேராசிரியர், பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641 014.
balajiand@gmail.com

வாய்மொழிக் கதைகளாக வழங்கப்பெற்று வருகின்றன. இசுலாமிய மற்றும் கிறித்தவ வேதாகமங்களின்வழி அறியப்படுகின்ற பழமரபுக் கதைகள், சமற்கிருத வேதபுராணக் கதைத் தொன்மங்கள் ஆகியன பிரளயத்திலிருந்து மனித இனத்தைக் காத்துநின்ற தத்தம் கடவுளர்களில் இருந்து உலகம் தொடங்குவதாகக் குறிப்பிடுகின்றன. இவ்வகையான தொன்மக் கதையாடல்களின் மூலத்தில் அடர்த்திகுறைந்த ஓர் உண்மையான வரலாற்று நிகழ்வொன்றும் அமைந்திருக்கும். அதேவேளையில் தொன்மங்கள் அவ்வுண்மையான வரலாற்று நிகழ்வினை முழுமையாக விழுங்கிக் கொண்டிருக்கும் பேராபத்தும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு விழுங்கப்பெற்ற ஆதியினங்களின் வரலாறு இந்தியத் துணைக்கண்டத்தில் மிகுதி. அவ்வரிசையில் பாண்டியர் என்ற தொல்லினக் குழுவினர் தவிர்க்கவியலாதவர்களாய் அமைகின்றனர். வரலாற்றுக் கட்டமைப்பின் மூலப்பொருள்களாகக் கருதப்பெறும் எழுத்தாவணங்கள், இலக்கியச் சான்றுகள், தொன்மங்கள் ஆகியனவற்றின் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்டத்தின் மிகுதொன்மையுடைய மரபினர்களாய்ப் பாண்டியர்களை முன்னிறுத்த முடியும். ஏனெனில் வரலாற்றின் பழமையான எழுத்தாவணங்களும் வரலாற்றிற்கு முந்தைய எழுத்தற்ற வாய்மொழி ஆவணங்களும் பாண்டியர்களோடு மட்டும் பெரிதும் தொடர்புடையனவாகக் காணப்பெறுகின்றன. பழமரபுக்கதைகள் குறிப்பிடும் கடல்கோள் (பிரளயம்-பெருஞ்சுனாமி), தோணி(மீன்) குறித்த தொன்மக் கூறுகளோடு பாண்டிய மன்னர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதனை வரலாற்றுத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றைச் சிந்துவெளி மற்றும் பெருங்கற்காலத் தரவுகளுடன் ஒப்பிட்டு இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வகுடிகளாக விளங்கியவர்கள் பாண்டியர்கள் என்பதை நிறுவுவதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

பாண்டியரின் நெடிய மரபும் தொன்மங்களும்

'நெடியோன்' என்ற 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன்' பற்றிய குறிப்புகள் சங்கநூல்களின் பலவிடங்களில் காணப்பெறுவதாகச் சதாசிவ பண்டாரத்தார் தம் நூலில் குறிக்கின்றார்.

'இவன் கடல்பிரளயத்தால் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த குமரிநாடு முதலியன அழிதற்கு முன்னர் அக்குமரிநாட்டில் ப∴றுளி என்றதோர் ஆற்றை வெட்டுவித்துக் கடற்றெய்வத்திற்கு விழவெடுத்தனன். இச்செய்தி புறநானூற்றிலுள்ள ஒன்பதாம் பாடலால் நன்கறியப்படுகின்றது. ஆகவே இவன் தலைச்சங்கத்தி னிறுதியில் வாழ்ந்தவ னென்க'(பாண்டியர் வரலாறு,பக்.12).

இதன் அடிக்குறிப்பில் மூன்று வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றார்.அவை வருமாறு:

1. நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோ னும்பல்(மது.60-61)

2. முந்நீர் விழவின் நெடியோன், நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே(புறம்.9)

3. சின்னமனூர்ச் செப்பேடுகள் பாண்டியனொருவன் கடல் சுவற வேல் எறிந்த கதையையும் ஒரு பாண்டியனிடத்துக் கடல் அடைக்கலம் புகுந்த கதையையும் குறிக்கின்றன. கடற்பிரளயத்தால் உலகங்களெல்லாமழிய, ஒரு பாண்டிய அரசன் மாத்திரம் உயிர் வாழ்ந்திருந்த செய்தி வேள்விக்குடிச் செப்பேடுகளில் வரையப் பெற்றுள்ளது. இம்மூன்று கதைகளும் வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றியனவே யாமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். (பாண்டியர் வரலாறு,பக்.13)

சின்னமனூர்ச் செப்பேட்டில் பாண்டிய மன்னன் ஒருவன் மட்டும் பிரளயத்தில் இருந்து தப்பித்த செய்தியும் தன் கைவேலினை எறிந்து கடலை விலக்கி அடிபணிய வைத்த செய்தியும் இடம்பெற்றுள்ளன. இவற்றைச் செப்பேட்டில் இடம்பெற்றுள்ள பாண்டிய மரபினரின் தொன்மமாகக் கருதமுடியும். இவ்வாறே சதபதபிரமாணத்தில் இடம்பெற்றுள்ள பிரளயத் தொன்மக்கதையிலும் பாண்டியமரபினர் குறித்த செய்தியும் மீன் தோணியாக மாறிய செய்தியும் இடம்பெற்றுள்ளன. மீன் தோணியாக மாற்றமடைந்து நிலத்தில் கரையேறிய தொன்மம் பிற்காலத் தலபுராணங்கள் பலவற்றிலும் விரவிக் கிடக்கின்றது. பாண்டியர்களின் குறியீடாக மீன் தொன்றுதொட்டு வழங்கி வருதலை இனக்குழுச் சமூகவரலாற்றுப் பின்புலத்தில் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. பஃறுளியாறு கடல்கோளில் மூழ்குவதற்கு முன்பே பாண்டிய இனக்குழுக்களின் குலக்குறியீடாக மீன் விளங்கியிருத்தல் வேண்டும். இன்றளவும் மீன் பாண்டியர்களின் குறியீடாகக் வழங்கப்பெற்று வருகின்றது. குறியீடுகள் எழுத்துவடிவங்களாக மாறத்தொடங்கிய பெருங்கற்காலத்தில் கிடைக்கப்பெறும் மீன்குறியீடுகள் தவிர்த்த பிறகுறியீடுகள் எதுவும் பிற்காலம் வரையில் தொடர்ந்து வழங்கப்பெற்று வருவதாகத் தெரியவில்லை. ஆனால் வரலாற்றெழுதியலுக்கு முன்பான தொன்மக்கதைகளில் தொடங்கி மிகப் பிற்காலம் வரையில் பாண்டியர்களுக்கு மீன் குறியீடாக இருந்து வருகின்றது. இது இந்தியப் பண்பாட்டு மரபில் வேறெந்த இனத்திற்கும் இருப்பதாக அறிய இயலவில்லை.

'சதபத பிரமாணத்தில்(1.8.1-10) பிரளயத் தொன்மம் இடம்பெற்றிருக்கின்றது. மனு வைகறை வழிபாட்டிற்காக ஆற்றுநீரில் அங்கசுத்தி செய்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய கையில் ஒரு மீன் அகப்பட்டது. அந்த மீன் மனுவிடம், 'ஒரு பெரிய பிரளயம் வரப்போகின்றது. அதில் உயிர்களெல்லாம் அழிந்துவிடும். இப்போது நீ என்னைக் காப்பாற்றினால் அப்போது நான் உன்னைக் காப்பாற்றுவேன்' என்றது. மீனை ஒரு கலயத்தில் விட்டார் மனு. அது பெரிதாயிற்று. மனு அதைக் குளத்தில் விட்டார். அது குளத்தளவு பெரிதாயிற்று. எனவே அதைக் கடலில் விட்டார். 'நீ ஒரு தோணியைச் செய். நான் தக்க நேரத்தில் வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று அந்த மீன் கூறியது. குறிப்பிட்ட நாளில் பிரளயம் வந்தது. அது பிரம்மாண்டமாக இருந்தது. அதன் தலையில் ஒற்றைக்கொம்பு இருந்தது. தோணியைக் கொம்பில்

கட்டச் சொன்னது மீன். மனு அவ்வாறே செய்தார். தோணியை மீன் இழுத்துக் கொண்டுபோய் வடமலையில் சேர்த்தது என்று சதபதபிரமாணம் கூறுகின்றது. மகாபாரதத்தில் இக்கதை சிறிது மாற்றத்துடன் காணப்படுகின்றது. அதில் வைவசுத மனு வைசால வனத்தில் தவம் செய்யும் போது அருகில் இருந்த ஆற்றில் வந்த மீன் பிரளயம் பற்றி எச்சரித்துத் தோணி செய்யச் சொன்னது. பிரளயம் வந்தபோது வைவசுத மனு ஏழு முனிவர்களோடும் பலவகை விதைகளோடும் தோணியில் ஏறியதாகவும் தோணியை மீன் இமயமலையில் சேர்த்ததாகவும் அக்கதையில் சொல்லப்படுகின்றது. பாகவத புராணம் பிரளய காலத்தில் மனு தோணி ஏறிய இடம் தென்னிந்தியா என்றும் அந்த மனுவின் பெயர் சத்தியவிரதன் என்றும் அவன் திராவிட வேந்தன் என்றும் மனுவின் கையில் மீன் சிக்கிய இடம் மலையமலையில் ஊற்றெடுத்து வரும் கிருதமாலை என்னும் நதி என்றும் கூறுகின்றது(8.24.13). வைகை நதிக்குக் கிருதமாலை என்ற பெயரும் உண்டு. இச்சான்று பிரளயத் தொன்மத்தைத் தமிழர்களோடு மிக நெருக்கமாக வைத்திருக்கின்றது. மச்சபுராணத்திலும் இத்தொன்மம் சிறு வேறுபாடுகளுடன் காணப்படுகின்றது………….. தொன்மத்தின்படி மீனால் தப்பித்தவர்கள் என்பதால் அவர்கள் மீனைக் குலக்குறியாகக்(Totem) கொண்டிருக்கலாம். மீனைக் குலக்குறியாகக் கொண்ட பாண்டியர்கள் அவர்கள் வழிவந்தவர்களாக இருக்கலாம். இதனாலேயே சேர, சோழ, பாண்டியர் மூவரிலும் பாண்டியர்களே பழமையானவர்கள் என்று சிலர் கருதுகின்றனர் (கார்த்திக் செயராம்:2016).

இத்தொன்மக் கதைகளின்வழி அறியப்பெறும் சில கருத்தியல்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1.பாண்டியன் தன் கைவேல் கொண்டு கடலைப் பிளந்து அடிபணிய வைத்தல்.
2.கடல்கோளில் இருந்து பாண்டியமன்னன் ஒருவன் தப்பிச்சென்ற நிகழ்வு.
3.முதற்கடல்கோள் இந்தியத் துணைக்கண்டத்தில் நிகழ்ந்தபொழுதே இங்கு பாண்டியன் ஒருவன் ஆட்சி புரிந்திருந்தது.
4.மீன் தோணியாக உருமாற்றம் பெறுதல் (தொன்மத்தின் இயல்பு).
5.மீனின் தலையில் கொம்பிருத்தல் (கொம்புச்சுறா வழிபாடு).
6.மீன் இமயமலை அல்லது வடமலைக்கு எல்லோரையும் அழைத்துச் செல்லுதல் (பாண்டியரின் புலம்பெயர்வு).

மீன் குறித்த தொன்மங்களும் மானிடவியல் ஆய்வுகளும்

மீன் குறித்த தொன்மங்கள் வேதங்களிலும் இந்திய இலக்கிய மரபிலும் பரவலாகக் குறிக்கப்பெற்று வந்துள்ளன. இவற்றின் தாக்கம் வேத, புராணங்களை அடியொற்றி எழுந்த தமிழ் பக்தியிலக்கிய மரபிலும் தொடர்ந்து வந்துள்ளது எனலாம். ஆதியில் இருந்த மனுக்குலத்தின் தந்தையினை மனு என்று இந்திய மரபு முன்வைக்கின்றது. இஸ்லாமியத் தொன்மக் கதைகளின்படி 'ஆதம்' மனுக்குலத்தின் முதல் மனு எனக் கருதப்படுகின்றார். ஆதம் வழிவந்தவர்களில் நோவாவுடன் தப்பிவந்தவர்கள் தவிர யாவரும் பிரளயத்தில் அழிந்துவிட்டனர்.

தென்னிந்தியாவில் நிகழ்ந்த முதற்கடல்கோளே(பிரளயம்) மிகப்பெரும் தொன்மமாக அனைத்து இந்திய இலக்கியங்களிலும் உருப்பெற்றதெனலாம். சதபதப் பிரமாணத்தில் (Shatapatha Bramana,1:8.1-10) பிரளயத் தொன்மம் இடம்பெற்றுள்ளது.

மீனைக் குலக்குறியாகக் கொண்ட பாண்டியர்களுக்கும் இத்தொன்மக் கதையாடலுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை இதன்மூலம் அறிய முடிகின்றது. ஆ.தனஞ்செயன் குறிப்பிடும் வேடன் மீனாக இது அமைந்து அவர்களின் சுறாக்கொம்பு வழிபாட்டில் முதன்மை பெற்றிருக்கலாம். சைவ சமயம் இத்தொன்மக்கதையினைச் சிவனுக்கு ஏற்றி சிவன் மக்களைக் காப்பாற்றத் தோணி ஏறிய இடம் 'தோணிபுரம்' (சீர்காழி தலவரலாறு: சம்பந்தர் தேவாரம்) என்றும்; அதன் காரணமாகத் தோணியப்பர் என்ற பெயர் சிவனுக்கு ஏற்பட்டதாகவும் கருதுகின்றனர். எமிலி தர்க்கைம் குறிப்பிடும் குலக்குறிக் கோட்பாடு இங்கு இத்தொன்மக் கதையாடலுடன் பொருந்துவதை அறிய முடிகிறது.

தமிழகக் கடற்கரையோர மீனவர்களின் குலக்குறியீடான மீன் பண்பாட்டசைவில் புனிதமடைந்து வழிபாட்டு உச்சத்தை அடைந்தது எனலாம். கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்குத் துன்பம் தரும் வேடன் மீன், கொம்புச்சுறா முதலிய மீனினங்கள் (ஆ.தனஞ்செயன் : 2017) வழிபாட்டிற்குரிய உயரிய இடத்தைப் பெறுகின்றன. இதனால் அவற்றின் கொம்புகள் கரையில் வைத்து வழிபடப் பெறுகின்றன. அக்கொம்புகளின்மீது கடற்றெய்வங்கள் இறங்கி ஆற்றல் தருவதாக அம்மக்களால் நம்பப்படுகின்றது. உலகின் மூத்த இனங்கள் சிலவற்றில் கடல்தேவதை வழிபாடு முதன்மை பெறுகின்றது. கிரேக்கத் தொன்மத்தில் 'கலிப்சோ' கடல்தேவதையாகக் கருதப்பெறுகின்றாள். சங்கச்செவ்வியல் நூல்கள் 'கடல்கெழு செல்வி' (தொ.பரமசிவன் : 2018) எனப் பதிவு செய்துள்ளது. மீன்குறியீடு என்பது இங்குக் கடல்கெழு செல்வியாகிய பெண்தெய்வத்துடன் இணைத்துக் கூறப்பெற்றதெனலாம். அல்லது அச்சம் தரும் மீன் பெண்தெய்வத்தின் வாகனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். இத்தகைய குறியீட்டுப் படிநிலைவளர்ச்சி பாண்டியர்களின் குலதெய்வமாகப் பிற்காலத்தில் மீனாட்சியினைக் (அங்'கயற்'கண்ணி) கட்டமைத்தது எனலாம். இதனைத் தாய்த்தொன்ம நிலையில் கொற்றவை வழிபாடாக நோக்கும்பொழுது பாண்டியர்களின் போர்த்தெய்வமாகி இந்தியத் துணைக்கண்டத்தில் பரவலாக்கம் அடைந்ததென நிறுவ இயலும். தாய்த்தொன்மம் தென்னிந்திய நிலப்பரப்பில் உருக்கொண்டமைக்கான சான்றாதாரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

மத்திய ஆசியாவிலிருந்து சிந்துவெளி நோக்கிய ஆரியர் படையெடுப்பினை உறுதிப்படுத்தும் விதமாகப் பல தொன்மக் கருத்தியல்கள் கண்டறியப் பெற்றுள்ளன. ஆரியர்கள் இந்நிலத்திற்கானவர்கள் அல்லர் என்பதையும் சிந்துவெளி நாகரிகம் தமிழர்களுக்கானது என்பதையும் மானிடவியல் பின்புலத்தில் பக்தவத்சல பாரதி, தொ.பரமசிவன் உள்ளிட்ட ஆய்வாளர்கள் தம் ஆய்வுகளில் தொடர்ந்து பதிவுசெய்து வருகின்றனர். தாய்த்தெய்வமாகிய 'கொற்றவை' வடக்குநோக்கி அமர்ந்த தொன்மச் சான்றுகளைப் பெண்தெய்வ வழிபாட்டுப் பின்னணியுடன் தொ.பரமசிவன் சுட்டுகின்றார்.

'பழந்தமிழர்களின் தாய்த்தெய்வக் கோயில்களான அம்மன் கோயில்கள் 99 விழுக்காடு வடக்கு நோக்கியே அமைந்துள்ளன என்பதையும் நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் முப்புறமும் கடல் சூழ்ந்த நாடாகவே(அதாவது இன்றைய கேரளத்தை உள்ளிட்டு) தமிழகம் இருந்துள்ளது. எனவே பகைப்படை வட திசையிலிருந்து மட்டுமே வரமுடியும். தெய்வம் வடக்குத்திசை நோக்கித் தன் மக்களைக் காக்க ஆயுதம் ஏந்தி நிற்கின்றது என்பதே தொல் வரலாற்று உண்மையாகும். பழந்தமிழர்களின் தாய்த்தெய்வம், அரசுகள் உருவானபோது போர்த்தெய்வமாக மாற்றப்பட்டு 'கொற்றவை' என்ற பெயரோடு வழங்கப் பெற்றது. இப்பெயருக்கான வேர்ச்சொல் 'கொல்' என்பதாகும். பெருந்தெய்வக் கோயில்களில் ஆண் தெய்வத்திற்கு அருகில் நின்று கொண்டு அல்லது அமர்ந்து கொண்டிருக்கும் உமை, திருமகள் ஆகிய தெய்வப் படிமங்களின் கையில் நீலம், தாமரை ஆகிய மலர்களே காட்டப் பெற்றிருக்கும். ஆனால், தாய்த்தெய்வங்களோ பெரும்பாலும் சிங்கத்தின் மீது அமர்ந்த கோலத்தில் நான்கு அல்லது எட்டுக் கைகளுடன், எல்லாக் கைகளிலும் ஆயுதங்கள் ஏந்தியபடி போருக்கு ஆயத்தமான நிலையில் உள்ளன. இவை இரத்தப்பலி பெறுகின்ற தெய்வங்களாகும். எனவே இவற்றின் பூசாரிகளாகப் பண்டாரம், வேளார்(குயவர்), உவச்சர்(கம்பர்) போன்ற பார்ப்பனரல்லாத சாதியாரே உள்ளனர்'(தொ.பரமசிவன்,18 : 2018).

பெருங்கற்காலக் கோட்டு வடிவ மீன்குறியீடுகளும் சிந்துவெளிப் பரவலும்

சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டியர் காசுகளில் மட்டுமல்லாது அதற்கு முன்னதான முத்திரைக்காசுகள், பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பானையோடுகள், புழங்குபொருட்கள் ஆகியனவற்றிலும் மீன்குறியீடுகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் கிடைக்கப்பெறும் குறியீடுகளில் கோட்டுவடிவ மீன்குறியீடுகளை மிகத்தொன்மையானதாகக் கருதலாம். சிந்துவெளி எழுத்துகளிலும் மீன்குறியீடுகள் பல படிநிலைகளில் அசைநிலையாகக் காணப்பெறுகின்றன. உலகின் மூத்த நாகரிகங்களனைத்தும் நீரிடங்களை மையமிட்டு உருவாக்கம் பெற்றுள்ளமையின் காரணமாக மீன்குறியீடுகள் தொல்குடிகளின் பண்பாட்டில் தவிர்க்க முடியாததாயிற்று. இக்குறியீடுகள் பெருங்கற்காலப் பழம்பானையோடுகளில் கிடைக்கப் பெறுகின்றன. வைகை ஆற்றங்கரை நாகரிகமான கீழடியில் நிகழ்ந்த அகழாய்வில் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் புழங்குபொருட்களில் (பழம்பானையோடுகள்) கிடைத்துள்ளன.

ஆய்வுச் சிந்தனைகளை அனுப்ப – inameditor@gmail.com

புலனம் – இனம் வாசகர் வட்டம்

வலைக்காட்சி – இனம் வலைக்காட்சி

சிறந்த ஆய்வு நூல்கள் குறைந்த செலவில் அச்சிட்டுத் தரப்பெறும். மின்னூல் வடிவிலும்....

நன்றி : தமிழகத் தொல்லியல் துறை,
(அமர்நாத் இராமகிருட்டிணன்) கீழடி அகழாய்வுக்குழு, சிவகங்கை மாவட்டம்.

கீழடியில் கிடைக்கப்பெற்ற கருப்பு-சிவப்பு வண்ணம் கொண்ட மூன்றுதரமான பானையோடுகளில் மீன் குறியீடுகள் வரையப்பெற்றுள்ளன. முதல் பானையோட்டில் மீன்குறியீடு கோட்டுவடிவில் கீறப்பெற்றுள்ளது. இரண்டாவது பானையோட்டில் மீன்குறியீடு வளைகோடுகளால் வரையப்பெற்றுள்ளது. மூன்றாவது பானையோட்டில் மெல்லிய கீறல்களாக வளைகோட்டு முறையில் வரையப்பெற்றுள்ளது. இக்குறியீடுகள் அடித்தட்டுமக்கள் பயன்படுத்தும் புழங்குபொருட்களில் கிடைத்துள்ளன. இதன்மூலம் இக்குறியீடு அரசுருவாக்கத்திற்கு முன்னதான தொன்மையான பாண்டிய இனக்குழுக்களின் இயல்பான வழக்கத்தில் இருந்துள்ளது புலப்படுகின்றது. கோட்டுவடிவம், கீறல்முறை, வளைகோட்டு வடிவம் என்ற மூவகை நிலையிலும் மீன்குறியீடுகள் பொறிக்கப்பெற்றுள்ளன. இது குறியீட்டு வடிவங்களிலிருந்து எழுத்துவடிவங்கள் வளர்ச்சிபெற்ற நிலையினை ஒப்பிடத்தக்கதாக உள்ளது. கீறல்-கோடு-வளைகோடு என்ற மூன்று படிநிலையும் கீழடி அகழ்வாய்வில் கிடைத்திருப்பது கவனத்திற்குரியது. வைகை நதிக்கரைப் (கீழடி நாகரிகம்) பண்பாட்டில் மூன்றுவிதமான தன்மையில் அமைந்த மீன்குறியீடுகளுக்கும் தேவையிருந்திருப்பதை உணரமுடிகின்றது. குறியீடு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு வளர்ச்சியடைய நீண்ட காலஇடைவெளி தேவைப்படும். இவ்விடைப்பட்டதான காலங்களில் வேற்றரசுகள் அல்லது வேற்றினக்குழுக்களின் படையெடுப்புகள் முதலான எவ்விதத் தலையீடுமின்றி இருந்திருத்தல் வேண்டும். இம்மீன்குறியீடுகளின் தொடர்வளர்ச்சிமுறை என்பது பாண்டிய இனக்குழுக்களின் அறுந்துபடாத தொன்மையான மரபுத்தொடர்ச்சியினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளத்தில் செய்யப்பெற்ற அகழாய்விலும் பானையோட்டுப் பொறிப்புகளாகக் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் கிடைத்துள்ளன. கா.ராஜன் (*Early Writing System-A journey from Graffitti to Brahmi : 2015*) இக்குறியீடுகளைத் தொகுத்துள்ளார். இருவேறுபட்ட நிலைகளில் அமைந்த கீறல்களாக இக்குறியீடுகள் இங்குக் கிடைத்துள்ளன.



நன்றி : தமிழகத் தொல்லியல்துறை, அழகன்குளம்(இராமநாதபுரம் மாவட்டம்)
(K.Rajan, *Early Writing System–A journey from Graffitti to Brahmi: 2015*)

திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் நிகழ்ந்த அகழாய்விலும் பானையோட்டுப் பொறிப்புகளில் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் கிடைத்துள்ளன. இங்குக் கிடைக்கப்பெற்ற மீன்குறியீடுகள் அனைத்தும் கீறல்முறையில் அமைந்த நேர்கோட்டு வடிவிலானவை. வடிவ ஒப்புமையில் சிந்துவெளிக் குறியீட்டு வடிவங்களை ஒத்ததாக இவை அமைகின்றன.

நன்றி : தமிழகத் தொல்லியல் துறை வெளியீடு.

கா.ராஜன் கொடுமணல் அகழாய்வில் பல்வேறுபட்ட நிலைகளில் அமைந்த 12 கோட்டுவடிவ மீன்குறியீடுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார். ஒற்றைக்கோட்டு வடிவில் அமைந்த மீன்குறியீடுகள் 11 கிடைத்துள்ளன. தலைப்பகுதியில் இரட்டைக்கோட்டு வடிவில் அமைந்த மீன்குறியீடு 1 கிடைத்துள்ளது. இது 'குறியீடு' என்ற நிலையில் இருந்து 'கருத்தெழுத்து' வடிவம் என்ற நிலைக்கு மாற்றம் பெற்றமையினைச் சுட்டுவதாக அமைகின்றது. ஒற்றைக்கோட்டு வடிவ மீன் குறியீட்டை 'மீன்' (குறியீடு) என்பதாக மட்டும் பொருண்மை கொள்ளும்பொழுது, இரட்டைக்கோட்டு வடிவ மீன்குறியீட்டைப் (sign.17.0, k.Rajan,*Early Writing System–A journey from Graffitti to Brahmi:2015*) பொருள் மாற்றம் கொண்ட கருத்தெழுத்து நிலையில் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

நன்றி : (k.Rajan, *Early Writing System–A journey from Graffitti to Brahmi: 2015*)

கொடுமணலில் கிடைத்த இரட்டைக் கோட்டுடைய மீன்குறியீடு (K.Rajan,sign.17.1:2015) போன்று சிந்துவெளி முத்திரையிலும் (The Indus Script,Sign.No.65,66,75:1977) காணப் பெறுகின்றது.

The Indus Script (Texts concordance and Tables)
Irawatham Mahadevan:1977



இதே போன்று தலைப்பகுதியின் மேற்பகுதியில் கோடுடைய மீன்குறியீடு இலங்கையில் கிடைத்த பாண்டியர் காசிலும் காணப்பெறுகின்றது.

இலங்கையில் கிடைத்த பாண்டியர் காசு

நன்றி : இரா.கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய நாணயவியல் கழகம்.

மோதிரத்தில் கிடைத்த பாண்டியன் பெருவழுதியின் பெயரும் கோட்டுவடிவ மீன்குறியீடும்

நன்றி : திருமதி பீனாசரசன், தென்னிந்திய நாணயவியல் சங்கம்.

இதன்மூலம் தமிழகம் மற்றும் இலங்கைப்பகுதியில் கிடைக்கப்பெறும் கோட்டுவடிவ மீன்குறியீடுகளுக்கும் சிந்துவெளியில் கிடைக்கப்பெறும் கோட்டுநிலை கொண்ட மீன்வடிவ அசையெழுத்துகளுக்கும் நேரடித்தொடர்பு இருப்பதனை அறிய அறியமுடிகின்றது.

பெருங்கற்காலக் களஆய்வு

ஈரோடு அருகிலுள்ள கொடுமணல் கிராமத்தில் மேற்பரப்பாய்வு செய்த பொழுது இக்கட்டுரையாசிரியரால் குறியீடுகள் (கோட்டுவடிவ மீன்குறியீடு, சிந்துவெளிக் குறியீடு), 'தமிழி' எழுத்துகள் பொறிக்கப்பெற்ற பெருங்கற்காலப் பானை ஒன்று கண்டறியப்பெற்றது. பானையின் நடுப்பகுதியில் இரு எழுத்துப்பொறிப்புகள் காணப்பெறுகின்றன. முதல் எழுத்தைச் சிந்துவெளிக் குறியீடாகவும் இரண்டாம் எழுத்தைத் தமிழி எழுத்தான 'தி' அல்லது அசோகர்–பிராமியின் 'மா' என்பதாக வாசிக்க முடியும்.

பானையின் அடிப்பகுதி(கோட்டுவடிவ மீன்குறியீடு, மீனின் நடுப்பகுதி முள் குறியீடு)

பானையின் நடுப்பகுதி(சிந்துவெளிக்குறியீடு, தமிழி எழுத்தான 'தி')

பானையின் அடிப்பகுதியில் இரு குறியீடுகள் காணப்பெறுகின்றன. முதல் குறியீடு கோட்டுவடிவ மீன்குறியீடாகவும் இரண்டாவது குறியீடு மீனின் நடுப்பகுதி முள் போன்றும் அமைந்துள்ளது. மீனின் முள் போன்ற குறியீட்டின் மீது கோட்டுவடிவ மீன்குறியீடு கீறல்முறையில் அமைந்துள்ளது. இவ்விரு குறியீடுகளும் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்பெறும் குறியீடுகளோடு பொருந்தி அமைகின்றன. நார்டிக் மொழியின் தொல்குறியீட்டு வடிவம் (Ancient Nordic language), சுவீடன் நாட்டுப் பாறை ஓவியக்குறியீடுகள் (kylver Rune stone, sweden), சுமேரியர்களின் கியூனிஃபார்ம் எழுத்துமுறை (sumerian cuniform) ஆகியனவற்றோடு தொடர்புடையதாக அமைகின்றது. (காண்க: *பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் கீழிருந்து மேலெழும் வரலாறு : 2019*).

பழைய 'நார்டிக்' மொழியின் மீன் குறியீடு (கீழே அமைந்த படத்தில் இரண்டாம் குறியீடு) கொடுமணல் மீன்குறியீட்டினை ஒத்துள்ளது. இம்மொழியில் 'othala' என்ற பெயர்க்குறியீடாகக் கொள்ளப்பெறுகின்றது. இது நார்டிக்மொழி பேசும் இனக்குழு மக்களின் பூர்வீகப் பிறப்பிடம், வளமை, குழுக்களின் கட்டளை, இறைவழிபாட்டுத் தொன்மை ஆகியனவற்றின் குறியீடாகக் கருதப்பெறுகின்றது. இது வரலாற்றிற்கு முந்தைய பாண்டிய இனக்குழுக்களின் தன்மையினை ஒத்துள்ளதாகக் கருதலாம். மீன்குறியீடு புலம்பெயர்ந்த பாண்டியர்களின் (இலங்கை-சிந்துவெளி) குறியீடாகப் பிற்காலம் வரையில் தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மீன் குறியீடு வளமையோடு தொடர்புடையது. கடற்கரையோரங்களில் வாழும் தமிழினக்குழுக்களின் குலக்குறி வழிபாட்டில் மீன்குறியீடு முதன்மை பெறுகின்றது. மீன்குறியீடு குலக்குறி (Totemism) வழிபாட்டில் புனிதத்தன்மையடைந்து உணவிலிருந்து விலக்குப்பெறுவதாக ஆ.தனஞ்செயன் பதிவுசெய்கின்றார். (குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும்: 2012)

பழைய நார்டிக் மொழிக்குறியீடுகள்

நார்டிக் மொழியில் மீன்குறியீடு பூர்விகப் பிறப்பிடத்தைக் குறித்து அமைவதை இங்குக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இதனடிப்படையிலும் பாண்டியர்களின் பூர்விகப் பிறப்பிடமான இந்நிலத்தில் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் தொடர்ச்சியாகக் கிடைத்துவருவதனைக் கருத்திற் கொள்ளலாம். தமிழ் வழங்கும் நிலம் மற்றும் சிந்துவெளி, ஹரப்பா அகழாய்விடம் தவிர்ந்து வேறு எங்கும் மீன் குறியீடுகள் கிடைக்கவில்லை. தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டம் நாங்கூரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை இணைப்பேராசிரியர் வீ.செல்வகுமார் தலைமையில் செய்யப்பெற்றுக் கொண்டிருக்கும் அகழ்வாராய்ச்சியில் கோட்டுவடிவ மீன்குறியீடு கிடைத்துள்ளது.

நாங்கூரில் கிடைக்கப்பெற்ற கோட்டுவடிவ மீன் குறியீடு

நன்றி: முனைவர் வீ.செல்வகுமார்.

பாண்டியர்களின் மீன் குறித்த (சின்னமனூர்ச் செப்பேடு, சதபத பிரமாணம், மகாபாரதக் கதை) தொன்மச் செய்திகளையும் பாண்டியர்களின் கோட்டுவடிவ மீன் குறியீடுகள் கிடைக்கும் (இலங்கை உள்ளிட்ட தமிழகப்பகுதி, சிந்துவெளி, ஹரப்பா) நிலங்களையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது இந்தியத்துணைக் கண்டத்தின் பூர்வகுடியினராகப் பாண்டியர்களை முன்னிறுத்த முடியும்.

பாண்டியர்களின் புலம்பெயர்வு குறித்த இலக்கியப் பதிவுகள்

வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் நிகழ்ந்த கடல்கோள், பாண்டியர்களின் புலம்பெயர்தல் ஆகியன குறித்துத் தமிழ்ச்செவ்வியல் இலக்கியப்பதிவுகளும் உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளும் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றை மையமிட்டுச் சில கோட்பாடுகளைக் கருதுகோள் நிலையில் முன்வைக்க முடியும். சங்ககாலத்தில் வாழ்ந்த பாண்டியன் நெடியோன் பற்றிய குறிப்பு புறநானூற்றுப் பாடலொன்றில் காணப்பெறுகின்றது.

'முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம்.9:9-11)

கடல்கோளினால் குமரிமலையும் பஃறுளியாறும் அழிந்துபட்டதெனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பமைந்துள்ளது.

'வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி' (சிலம்பு.காடு.17-22) .

இமயமலை, கங்கைச்சமவெளி முதலிய பகுதிகளில் பாண்டியர்களின் ஆட்சி இருந்தமையினை இப்பதிவு சுட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் அமைந்த இப்பதிவு கண்ணகி-திருமாவுண்ணி வாய்மொழிக்கதை போல் (நற்றிணை காலத்திலிருந்து சிலம்பு காலம் வரை) பாண்டியனின் பெருமையினை வாய்மொழியாகச் சுமந்து வந்திருக்கலாம். கடல்கோள் நிகழ்ந்தபொழுது தப்பிய பாண்டியமன்னன் தம்குடிகளுடன் சேரசோழ நாடுகளில் போரிட்டுப் புலம்பெயர்ந்தமையினைத் தொகைநூல்களுள் ஒன்றான கலித்தொகை பதிவுசெய்துள்ளது.

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்' (கலி.104 :1-4).

இத்தரவுகளை ஆய்விற்கு உட்படுத்தி சு.கி.ஜெயகரன் தமது நூலில் குமரிக்கண்டம் குறித்த ஆய்வினை நகர்த்திச் சென்றுள்ளார்.

'குமரித் தெய்வத்தின் வழிபாடு காரணமாக இந்நிலப்பரப்பிற்கு குமரி என்ற பெயர் ஏற்பட்டது. இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் பழமையை உணர்த்தும் பண்டு எனும் பதத்திலிருந்து உண்டான பாண்டியன் எனும் பெயரால் அழைக்கப்பட்டனர். குமரிப்பரப்பின் வடகோடியில் ஓடிய குமரி ஆற்றுக்கும் தென்கோடியில் இருந்த பஃறுளி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதி எழுநூறு காதம் நீளமானது. இப்பகுதியில் ஏழ்தெங்கநாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணக்கரை நாடு,

ஏழ்குறும்பனை நாடு போன்ற நாற்பத்து ஒன்பது நாடுகளும் குமரி, கொல்லம் போன்ற பன்மலை நாடுகளும் இருந்தன என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்றார்' (குமரிநில நீட்சி, 2004:23).

ஹராப்பா (ராகிகர்கி) அகழாய்வும் மரபணு ஆய்வு முடிவுகளும்

இந்நிலத்தின் பூர்வகுடிகள் யாரென்பது அண்மையில் 'ராகிகர்கி' (ஹரியானா - ஹராப்பா அகழ்வின் தொடர்ச்சி) மாவட்டத்தில் கண்டறியப்பெற்ற மனித எலும்பின் மரபணு ஆய்வில் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது. தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பெற்றுவரும் இவ்வாய்வு சமூகவியல், மானிடவியல் ஆய்வாளர்களால் தொடர்ந்து விவாதத்திற்குள்ளாக்கப் பெற்றும் முன்மொழியப் பெற்றும் வருகின்றது. அங்கு அகழாய்வு செய்த வசந்த் ஷிண்டே தலைமையிலான ஆய்வுக்குழு அகழ்வாராய்ச்சியில் கண்டறியப் பெற்ற எலும்புகளின் மரபணு பெரிதும் பொருந்துகின்ற இனக்குழுவினர் யார்? அவர்களின் மொழி எது? திராவிட இனங்களின் புலம்பெயர்வுக்(*Dravidains Migration*) காலம் முதலானவை குறித்துச் சில முடிவுகளை வெளியிட்டுள்ளது. அவை வருமாறு :

'*Dr.vasanth shinde, vice-chancellor of the college and director of the rakhigarhi excavation, on Saturday announced and as reported by Indian news paper: we want to study the DNA of the harappan people and try to find out who they were. So we excavated the skeletons scientifically at rakhigarhi. There was no contamination. All the four skeletons are in good condition……………First is the accepted theory: this states that two major migrations in history, the Mediterranean-Australiods(**Dravidians**) almost 20,000 years ago, and the Aryan movement of people almost 7,000-4000 years ago, were both east eastward movement of populations under varying circumstances. The entire work by all the greats of harappan archaeology have stated this............. Secondly , there is the irrefutable evidence of excavated sites in Pakistan and Afghanisthan. Take mehrgarh in balochistan as an example. This site is clearly 9,500 years old. New carbon - dating technology has suggested a 12,000-10,000 year timeline for mehrgarh. Did mehrgarh and Mohenjo-Daro come after Rakhigarhi? Surly no one is going to buy such an assumption in a hurry*' *(Majid sheikh,may 05 : 2015).*

'*R1a1 is a gene that is commonly observed in high frequency in the modern Indian subcontinent. This particular gene, which is loosly called the "Aryan gene",is usually used as evidence for the Indo-Aryan migration. The theory describes the movement of Aryans from out side the Indian subcontinent from the north of india to the south. But the skeleton found in a particular site shares more affinity with south Indian tribal populations, the early draft of the paper reads. The draft suggests that the rakhigarhi remains is more closely related to the **Irula**, a south Indian tribal community from the **Nilgiri** highlands*' ***(Ahmed sherrif, shruti singhal(edit.)THE BETTER INDIA:2018).***

'*DNA Study suggests that the Indus vally culture spoke an early **Dravidian** language*' ***(kai friese,Aug.31,INDIA TODAY :2018).***

வசந்த் ஷிண்டே உள்ளிட்ட அவ்வாய்வுக்குழு அண்மையில் ராகிகர்கி (*vasanth s.shinde,PLOSone,feb.21:2018*) பகுதியில் நிகழ்த்திய அகழ்வாராய்ச்சியில் இந்நிலத்தின் தொன்மையான இனக்குழுக்கள் என்று தென்னிந்தியாவின் இருளர்கள், தோடர்களைச் (*Irulas&Todas – Nilgris tribal*) சுட்டியிருப்பது மேற்கத்திய ஆய்வாளர்களைத் தொல்தமிழகத்தின் பக்கம் திருப்பியுள்ளது. மரபணு ஆய்வில் அங்குக் கண்டறியப்பெற்ற மனிதஎலும்பு (*classified as No.14411*) ஆரியர்களுக்கானது அன்று என உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இவற்றைக் காணும்பொழுது இந்திய வரலாற்றுக் கதையெழுதலில் இத்தன்மையதான நுண்ணரசியல் பின்புலத்தைத் தவிர்த்துத் தரவுகள் அடிப்படையில் வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்யவேண்டிய கடமை ஆய்வுலகத்திற்கு உண்டு எனப் புலப்படுகின்றது. இருளர், தோடர், பாண்டியர் முதலான தென்னிந்திய இனக்குழுக்கள் நிலம்சார்ந்தும் பண்பாட்டடிப்படையிலும் ஒற்றுமைப் பண்புடையவர்கள். இவ்வினக்குழுக்களே கடல்கோள் காரணமாகச் சிந்துவெளி நோக்கிப் புலம்பெயர்ந்தவர்கள் என்ற கருத்தியலை இத்தரவுகள் வழியாக நிறுவ முடிகின்றது.

நிறைவுரை

பாண்டியர்களின் மரபு குறித்த தொன்மக்கூறுகள் சின்னமனூர்ச் செப்பேடு, சதபதபிரமாணம், மகாபாரதக் கதை, தலபுராணங்கள் ஆகியனவற்றில் காணப்பெறுகின்றன. அவை பெரும்பாலும் கடல்கோள், மீன், தோணி குறித்தனவாக அமைகின்றன. கடல்கோள் நிகழ்ந்தமைக்குத் தமிழிலக்கியங்களில் தெளிவான குறிப்புகள் அமைந்துள்ளன. இவற்றின் வழியாக வரலாற்றுக் காலத்திற்கு முன்பு கடல்கோள் ஒன்று நிகழ்ந்தமை உறுதிப்படுத்தப் பெறுகின்றது. தொன்மக்கூறுகளில் இடம்பெறும் கடல்கோள்(பிரளயம்), மீன் , தோணி ஆகியன பாண்டிய மரபினரோடும் அவர்களது மீன்குறியீடுகளுடனும் நேரடியாகப் பொருந்தி அமைகின்றன. கடல்கோள் நிகழ்ந்தபொழுது இலங்கை உள்ளிட்ட தென்பகுதியில் பரவி வாழ்ந்திருந்த பாண்டியர்கள் வடக்குநோக்கிப் புலம்பெயர்ந்துள்ளனர். இவை நில அடிப்படையில் இமயமலை, வடமலை எனத் தொன்மங்களாகச் சுட்டப்பெற்றுள்ளன. "*மீன் தனது கொம்பின் மூலம் அவர்களை வடபுலம் நோக்கி இழுத்துச் சென்றது*" என்ற தொன்மச்செய்தியானது பாண்டியர்கள் மிகப்பெரும் கலங்களின் வழித் தப்பித்து மெல்லமெல்ல இமயமலை அடிவாரப்பகுதிகளில் (சிந்துவெளி, ஹராப்பா) புலம்பெயர்ந்தமையினை உறுதிப்படுத்துகின்றது. இது மீனவர்களின் குலக்குறி மற்றும் கொம்புச்சுறா வழிபாட்டுடன் தொடர்புடையது. பாண்டியர்கள் வடக்குநோக்கிப் புலம்பெயர்ந்த நிகழ்வு வாய்மொழிப்பதிவாகவும் தொன்மப்பதிவாகவும் பன்னெடுங் காலமாக இந்திய இலக்கியங்களிலும் புராண இதிகாசங்களிலும் சுட்டப்பெற்று வந்துள்ளன எனக் கருத முடிகின்றது. வசந்த் ஷிண்டேயின் அகழ்வாராய்ச்சி முடிவு சிந்துவெளி, ஹராப்பா பகுதிகளில் முதலில் குடியேறியவர்கள் இருளர், தோடர் முதலான தென்னிந்தியக்குழுவினர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இன்று நீலகிரி மலைக்குன்றுகளில் வாழும் இவ்வினக் குழுவினரும் பாண்டிய இனக்குழுவினரும் வெவ்வேறு இனங்களைச்

சார்ந்தவர்களாக இருந்திருக்க முடியாது. கடல்கோள் நிகழ்ந்த நில அடிப்படையில் இவர்கள் ஓரினத்தவரேயாவர்.

வரலாற்றிற்கு முந்தைய பாண்டியர்களின் குலக்குறியீடாக விளங்கிய மீன் கோட்டு வடிவம் பெற்று எழுத்துவழக்கம் உருவாகத் தொடங்கிய பெருங்கற்காலத்தில் எழுத்து வடிவங்களுடனும் கலந்து குறிக்கப்பெற்று வந்திருக்கின்றது. இக்கோட்டு வடிவ மீன்குறியீடுகள் தமிழ்வழங்கும் நிலங்களில் நாணயங்கள், பெருங்கற்காலப் புழங்குபொருட்கள், அணிகலன்கள் ஆகியனவற்றில் தொடர்ந்து கிடைத்து வருவதற்கும் தொன்மங்களாக வாய்மொழி மரபில் நிலைத்திருப்பதற்கும் இந்நெடிய மரபுத்தொடர்ச்சியே காரணமாக அமைகின்றதெனலாம். இந்திய இலக்கியங்களில் கிடைக்கப்பெறும் பாண்டியரின் தொன்மங்கள் மற்றும் தொல்பொருள் ஆவணங்களில் கிடைக்கப்பெறும் மீன்குறியீடுகள் ஆகியனவற்றின் அடிப்படையில் இந்நிலத்தின் பூர்வகுடியினராகப் பாண்டியர்களை முன்வைக்க முடியும்.

துணைநூற்பட்டியல்

- **அஞ்சரன்,** "நாம் யார்? ஆதித் தமிழன் யார்? வரலாற்றில் எது உண்மை?", பொங்கு தமிழ்(யாழ்-இணைய இதழ்),நவம்பர் 30,2014.
- **அருள்மொழி க.,** *இராசராசன் வரலாற்றுக் கூடம்,* தஞ்சாவூர் கையேடு, தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை,2007.
- **ஆறுமுக சீதாராமன்,** *சங்ககால முத்திரைகள்,* தனலட்சுமி பதிப்பகம் , தஞ்சாவூர்,2008.
- **ஆனந்தகுமார் பா.,** "சங்க இலக்கியத்தில் குலக்குறிப் பண்பாட்டு மரபு", கீற்று இதழ்(ஆகஸ்ட்-02),2011.
- **இராசமாணிக்கனார் மா.,** *கல்வெட்டுகளும் தமிழ்ச்சமூக வரலாறும்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2008.
- **இராசவேலு சு.,***தொல்லியல் சுடர்கள்,*சேகர் பதிப்பகம், சென்னை,2008.
- **இராமன் கே.வி.,** *தொல்லியல் ஆய்வுகள்* , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
- **இளங்கோ சி.,** "பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் தொல்லியல் தரவுகளை முன் வைத்து" , புதியபனுவல் - தொகுதி 3, சென்னை,2011.
- **காசிநாதன் நடன.,***தொல்லியல் நோக்கில்,* பாவாணர் பதிப்பகம், சென்னை,1993.
- **காசிநாதன் நடன** , "தமிழக நில அகழாய்வுகள்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, ஆய்வுமலர் ,கோவை,2010.
- **காமாட்சி மு.,** *சங்க காலம் : தொல்பொருள் ஆய்வுகள்(தொகுதி),* சங்கரன் கி.இரா., "சங்ககாலத்தில் நீர்ப்பாசனம்", சமூக விஞ்ஞானம், மலர்-6, இதழ்-21,சென்னை,2008.
- **கார்த்திகேசு சிவத்தம்பி,** *பண்டைத் தமிழ்ச் சமூகம்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2010.
- **கார்த்திக் செயராம்,** "மீன்தோணி", ஈகரைத் தமிழ்க் களஞ்சியம், தமிழ் இந்து(மார்ச் -09),2016.

- ❖ **கிருஷ்ணமூர்த்தி இரா.,** *சங்ககாலப் பாண்டியமன்னர் பெருவழுதி நாணயம் கண்டுபிடிப்பு*, கார்னெட் பப்ளிகேசன்ஸ், சென்னை,2010.
- ❖ **குருமூர்த்தி செ.,** "பழம்பானைக் குறியீடுகளும் தமிழர் பண்பாடும்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு",ஆய்வுமலர்,கோவை,2010.
- ❖ **கோசாம்பி டி.டி.,**(தமிழ் : சிங்கராயர்), *இந்தியவரலாறு ஓர் அறிமுகம்*, விடியல் பதிப்பகம், கோவை,2013.
- ❖ **சதாசிவப்பண்டாரத்தார்**, *பாண்டியர் வரலாறு*, செண்பகா பதிப்பகம், சென்னை,2009.
- ❖ **சங்கரன் கி.இரா.,** *புதுக்கோட்டை கல்வெட்டுகளில் கோயில்களும் கடவுள்களும்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
- ❖ **சாமி, பி.எல்.,** *தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு* , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,1980.
- ❖ **சீனிவாசன் இரா.,** "சிந்துவெளிக்குறியீடுகளை ஒத்த குறியீடுகள் வேலூர் மாவட்டத்தில் கண்டுபிடிப்பு",புதியபனுவல்,தொகுதி 3, இதழ்4,2011.
- ❖ **செல்வராசு நா. சிலம்பு**, *சங்க இலக்கிய மறுவாசிப்பு*, காவ்யா பதிப்பகம், சென்னை,2009.
- ❖ **தாமோதரன் கு.,***தொல்லியல் நோக்கில் தமிழகம்*, தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு அரசு,1999.
- ❖ **திருநாவுக்கரசு க.த.,** *சிந்துவெளித்தமிழ் வடிவங்கள்*,மணியகம்,சென்னை,1982.
- ❖ **பவுன்துரை இராசு,** *பண்டைய தமிழக வரைவுகளும் குறியீடுகளும்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை,2009.
- ❖ **பரமசிவன் தொ.,***தெய்வம் என்பதோர்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2018.
- ❖ **..............,** *பண்பாட்டு அசைவுகள்*, காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்,2018.
- ❖ **..............,** *செவ்வி*,கலப்பை வெளியீடு,சென்னை,2013.
- ❖ **..............,** *அறியப்படாத தமிழகம்*, காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்,2014.
- ❖ **பார்த்திபன் த.,** "திணைவாழ்வியலுக்கு முந்தைய தமிழ்ச்சமூகத்தைத் தேடி", தினமணி(ஏப்ரல்-13),2018.
- ❖ **பாரத்வாஜர் வ.,** *ஆரியம் திராவிடம் இந்தியம்*, காவ்யா பதிப்பகம்,சென்னை, 2013.
- ❖ **பாலகிருஷ்ணன் ஆர்.,** *சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்*, பாரதி புத்தகாலயம், சென்னை,2018.
- ❖ **பாலாஜி க.,** *பெருங்கற்காலப் பண்பாடு*, காவ்யா பதிப்பகம், சென்னை,2013.
- ❖ **..............,** *பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் கீழிருந்து மேலெழும் வரலாறு*, இனம் பதிப்பகம், கோயம்புத்தூர்,2019.
- ❖ **..............,** "பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகமும் தமிழி எழுத்துப் பொறிப்புகளும்", இனம் தமிழ் இணைய ஆய்விதழ், (மலர்-1, இதழ்-2), கோயம்புத்தூர்,2015.
- ❖ **மதிவாணன் இரா.,** "சிந்துவெளித் தமிழ் எழுத்துகள்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, ஆய்வுமலர் ,கோவை,2010.

- **மதிவாணன் இரா.**, *இடைக்கழக சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி*, எழிலினி பதிப்பகம்,சென்னை,2017
- **மாதையன் பெ.**,*சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2010.
- ....,*தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2011.
- ....,*சங்க இலக்கியத்தில் குடும்பம்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2010.
- ....,*சங்க இலக்கியச் சொல்லடைவு*, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்,2007.
- **முத்துமோகன் நா.**, *இந்தியக்கதை:ஏகம்–அநேகம்–சாதியம்*, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,மதுரை,2003.
- **முத்தையா இ.**, *பழந்தமிழர்ப் பண்பாட்டு வெளிகளின் அரசியல்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
- **விசயவேணுகோபால் கோ.**, "தமிழகத்தின் எழுத்துவழக்கம் அசோகன் காலத்திற்கும் முந்தையது",மணற்கேணி(நவம்பர்–திசம்பர்) இதழ்,2011.
- **வையாபுரிப்பிள்ளை ச.**,*சங்க இலக்கியம் பாட்டும் தொகையும்*, பாரிநிலையம், சென்னை,1967.
- **ராகுல சாங்கிருத்தியாயன்** (தமிழ்:யூமா வாசுகி), *வால்கா முதல் கங்கை வரை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2019.
- **ராஜன் கா.**, *தொல்லியல் நோக்கில் சங்ககாலம்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை,2010.
- **ராஜ்கௌதமன்**, *ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும்*, தமிழினி பதிப்பகம், சென்னை,2009.
- **ரொமிலா தாப்பர்**(தமிழ்:அ.முதுகுன்றன்), *முற்கால இந்தியா தொடக்கத்திலிருந்து கி.பி.1300 வரை*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2017.
- **ரொமிலா தாப்பர்**(தமிழ் : கே.என்.பணிக்கர்),*வரலாறு – பண்பாடு*, சவுத் விசன், கோபால புரம், சென்னை,2012.
- **தமிழண்ணல்**, *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,2008.
- **தர்ஸ்டன், எட்கர்,** 1909 (தமிழ் : க.ரத்னம்), *தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005.
- ....,1909 (தமிழ்:க.ரத்னம், காதம்பி ரங்காச்சாரி), *தமிழகத் தொல்குடிகள்*, அடையாளம் பதிப்பகம், திருச்சி,2017.
- **பக்தவத்சல பாரதி**,*தமிழர் மானிடவியல்*, அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2002.
- ....,*மானிடவியல் கோட்பாடுகள்*, அடையாளம் பதிப்பகம்,திருச்சி,2005.
- ....,*தமிழகப் பழங்குடிகள்*(இ.ப.), அடையாளம் பதிப்பகம், திருச்சி,2008.
- ....,*பண்பாட்டு மானிடவியல்*, அடையாளம் பதிப்பகம், திருச்சி,2011.

- ....*இன்றைய தமிழ்ச் சமூகம்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை,2013.
- ...., *இலக்கிய மானிடவியல்*,அடையாளம் பதிப்பகம், திருச்சி,2014.
- **பவுல்பான்**(தமிழ் : கோ.சுந்தர்),*தொல்லியல் மிகச் சுருக்கமான அறிமுகம்*, அடையாளம் பதிப்பகம், திருச்சி,2007.
- **ஜா டி.என்.**(தமிழ் : அசோகன் முத்துசாமி),*பண்டையக் கால இந்தியா*, பாரதி புத்தகாலயம்,சென்னை,2017.
- **ஜான் சாமுவேல் ஜி.**, *பண்பாட்டுப் பயணங்கள்*, ஹோம்லேண்ட் பதிப்பகம், சென்னை,2010.
- **ஜெயகரன் சு.கி.**, *குமரிநில நீட்சி*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்,2004.
- **Amit Arora**, "Aryans who? Haryana says archaeology finds will disprove mueller's theory", Times of India (jul.7), 2018.
- **Asko parpola**,*The Roots Of Hinduism(The Early Aryans and the Indus Civilization)*, Oxford Unversity Press,2015.
- **Brij mohan**, "history of plus and minus signs", central hindu college, banaras, Varanasi,2009.
- **Emile Durkheim**,The Elementary Forms of the Religious Life,University of Paris,France,1912.
- **Iravatham Mahadevan**, *Early Tamil Epigraphy: From the Ealiest Times of Sixth Century A.D.,Journal of the American Oriental Socity*,2004.
- ………., *The Indus script(Texts,condordance and Tables)*, The TATA Institute of Fundamental Research,Bombay,1977.
- **Kai friese**, "Indus valley vedic or not?:why DNA findings from Rakhigarhi site are controversial,India today",Aug,31,2018.
- **Majid Sheikh**, "Haryana discovery that promises to challenge our ancient history",DAWN(may,05),2015.
- **Rajan k.**,*Early Writing System(A journey from Graffitti to Brahmi)*,pandya nadu centre for Historical Research,Madurai,2015.
- **Romila Thaper**, *Anicient Indian social history some interpretations*, orient longman limited, Newdelhi, 1996.
- **Max Muller**, **Egelling**,*Satapatha Brahmana*,sacred books of the east,vol.12-47,1882.
- **Vasanth s. shinde**, **yong jun kim**,**Eun jin woo**,**Nilesh jadhav**, **etc.**, "Archaeological and Anthropological studies on the Harappan cemetery of Rakhigarhi",PLOS(feb.21),2018.